# சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்



இலக்கிய கலாநிதி பண்டிதமணி
**மு. கந்தையா பி.ஏ.**
ஏழாலை, யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
**மு. கந்தையா பி. ஏ.,**
*ஏழாலை, யாழ்ப்பாணம், இலங்கை.*

**பண்டிதர் அவர்களின் மூன்றாவது நினைவுதின வெளியீடு**

இலக்கிய கலாநிதி பண்டிதமணி
மு. கந்தையா B.A. அவர்கள்
நூல் வெளியீட்டுக் கழகம்,
2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முதற்பதிப்பு: | காலயுத்தி ஆண்டு. 1978. |
| வெளியீடு: | மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கம். யாழ்ப்பாணம், இலங்கை. |
| இரண்டாம் பதிப்பு: | விசு ஆண்டு, 2001 |
| மூன்றாம் பதிப்பு: | பார்த்திப ஆண்டு, 2005.07.07 |
| பக்கம்: | 192 + XXXII = 224 |
| வெளியீடு: | இலக்கியகலாநிதி, பண்டிதமணி மு. கந்தையா B. A. நூல் வெளியீட்டுக் கழகம் |
| அச்சிட்டோர்: | பாரதி பதிப்பகம். 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| நூல் கிடைக்கும் இடம்: | "சத்தி முற்றம்" ஏழாலை மேற்கு. சுன்னாகம். |
| விலை: | ரூபா: 250.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



ஆனந்தத் தாண்டவம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

- சேக்கிழார். திருத்தொண்டர் புராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | VII |
| முகவுரை (முதற்பதிப்பு) | IX |
| ஆசியுரை (முதற்பதிப்பு) | XIII |
| பதிப்புரை (முதற்பதிப்பு) | XV |
| மதிப்புரை (முதற்பதிப்பு) | XIX |
| அணிந்துரை (முதற்பதிப்பு) | XXIV |
| முகவுரை (இரண்டாம் பதிப்பு) | XXVIII |
| முன்னுரை (இரண்டாம் பதிப்பு) | XXX |
| சிவாலயக் கிரியைகள் 1 | 01 |
| சிவாலயக் கிரியைகள் 2 | 33 |
| விரதமும் பிறவும் | 62 |
| பூர்வக் கிரியைகள் | 90 |
| பூர்வக் கிரியைகளின் பண்பும் பயனும் | 114 |
| அபரக் கிரியைகள் | 118 |
| அபரக் கிரியைகளும் நாங்களும் | 145 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபந்தம்


1. சிவாலய உற்சவங்கள் 149

2. வழிபாடு 154

3. சைவவிவேகம் 157

4. முப்பொருளும் பூசையும் 162

5. பூதசுத்தி 163

6. பூதசுத்திப் பலன் சார்பான விளக்கம் 166

7. சுத்தியின்றிச் சித்தியில்லை 167

8. சிவோகம் பாவனை 170

9. அர்ச்சனை 173

10. மந்திரம் 178



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பதிப்புரை

## (மூன்றாவது பதிப்பு)

ஏழாலை இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா B.A அவர்கள் வாழுங்காலத்திலேயே இந்நூல் வெளியீட்டுக்கழகம் தொடங்கப்பட்டது. அவர் வாழுங்காலத்திலேயே **'திருக்குறள் ஒழிபியல் பரிமேலழகர் உரைக்குறிப்பு'** எனும் நூல் வெளியிடப் பட்டது.

பண்டிதமணி ஐயா அவர்கள் மறைந்து முதலாவது ஆண்டு நினைவு விழாவில் (30.06.2003) **'சித்தாந்த ஞானக் களஞ்சியம்'** எனும் அவரது ஆக்கங்களையும் அவரைப்பற்றிய ஆக்கங்களி னையும் கொண்ட நினைவு நூல் வெளியிடப்பட்டது.

இரண்டாவது ஆண்டு நினைவு விழாவில் (18.06.2004) கையெழுத்துப் பிரதியாயிருந்த அவரது ஆக்கமான **'அரியவும் பெரியவும் பகுதி மூன்று'** எனும் நூல் அவரது துணைவியாரின் நிதியுதவி கொண்டு வெளியிடப்பட்டது.

மூன்றாவது ஆண்டு நினைவு விழாவில் (07.07.2005) அமரரின் 'சிந்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்" எனும் இந் நூல் வெளிவருகின்றது. இந்நூல் முதற்பதிப்பு 1978 இல் மானிப் பாய் இந்துசமய விருத்திச்சங்க வெளியீடாகவும், இரண்டாவது பதிப்பு 2001 இல் அமரர் முருகேசு கந்தப்பிள்ளை நினைவு வெளியீடாக கோலாலம்பூர் மலேசியா சிவத்திரு. ஐ. குலவீர சிங்கம் அவர்களாலும் வெளியிடப்பட்டது.

இந்நூலின் அருமையையும், பெருமையையும் கருத்திற் கொண்டு காலத்தின் தேவை கருதி மூன்றாம் பதிப்பாக வெளி யிடத் துணிந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களைப் பின்பற்றி எழுந்த சைவ ஆலயங்களில் கிரியைகள் முக்கிய இடம்பெறுகின்றன. இக்கிரியைகளைச் செய்வோரும் செய்விப்போரும் இவற்றின் பயன் தெரியாது இவை வெறும் சம்பிரதாயங்கள் என மயங்கி இருக்கின்றனர். இவ்வெண்ணம் மிகத் துர்அதிஷ்டவசமானது ; சாபக்கேடென்றே கூறிவிடலாம்.

ஆலயக் கிரியைகள் மற்றும் பூர்வ அபரக்கிரியைகள் வெறும் சம்பிரதாயங்கள் எனக் கருதுவது பெருந்தவறு. இவை அனைத்தும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களுள்ளும் இறுதியாகவுள்ள ஞானத்துக்கு நிமித் தமாகும். இதனைப் பண்டிதமணி அவர்கள் '**சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்**' என்ற இந்த நூலில் எவரும் படித்து அறிந்து கொள்ளும் வகையில் மிகச் சீராகவும் சிறப்பாகவும் விளக்கி யிருக்கிறார்.

இக்காலத்தில் அவசியம் அனைவருக்கும் நல்ல விளக்கம் தரும் நூல். அதனாற்றான் இந்நூலை மறுபதிப்புச் செய்து சைவர்கள் கையில் தருகிறோம்.

இந்நூலை வாங்கிப் படித்துப் பயனடைவீர்களாக எனப் பணிவன்புடன் வேண்டி அமைகின்றோம்.

சு. செல்லத்துரை
செயலாளர்

அ. விஸ்வநாதன்
தலைவர்

இலக்கிய கலாநிதி.பண்டிதமணி
மு. கந்தையா, B.A
நூல் வெளியீட்டுக் கழகம்
'சத்தி முற்றம்'
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
07. 07. 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

## (முதற் பதிப்பு)

சைவசித்தாந்த அநுபவத்தைப் பெறுவதே வாழ்க்கையின் முடிவான நோக்கம்; அதைப் பெறுவதற்கேற்ற தகுதிப்பாட்டை வருவிப்பது சிவபுண்ணியம். புண்ணியங்களில் உயர் புண்ணியம் சிவ புண்ணியம், சிவ புண்ணியச் செயல்கள் அனைத்துக்குஞ் சிரோமணியாய்த் திகழ்வது சிவபூசை. பிரபஞ்ச வாழ்க்கையில் துளும்பும் பொய்மையும் அசுத்த இயல்புகளுமே மனிதனை மீள மீளப் பந்தத்திற்கு ஆளாக்குவன: அவ்விரண்டையும் நீக்கி உயிரி லும், உடலிலும் , ஏன்? புற உலகிலுங் கூடச் சிவத்துவ அபிவி யக்தியை ஏற்படுத்துவது சிவபூசை.

மனிதர் மேற்கொள்ளுதற்குரிய கைங்கரியங்களிலே அதி முக்கியத்துவம் வாய்ந்ததும் அதிப்பிரயாசையோடும் செய்யப் படவேண்டியதுமான காரியம் பூசை. இன்றைய நடைமுறைப் போக்கிலே அது அதிஅலட்சிய புத்தியோடும், அதி அக்கறைக் கேடாகவும், அதிசாமான்ய அலுவலாகவும் நடைபெறுவது ஒன்று; ஞானப் பேற்றுக்குரியது பூசை என்ற குறிக்கோள் மறக்கப்பட்டு, அது வெறும் சமூக நாகரிகச் செயல் என்ற நோக்கை முற் கொண்டு வருவாயையும் சனங்களின் அன்றாட வசதிகளையும் பேணுமளவுக்குப் பூசைப் பண்புகள் புறக்கணிக்கப்படுதல் ஒன்று. இவையெல்லாம் இடையே புகுந்த விபரீதங்கள் ஆகும்.

பூசைக்கிரமங்கள் பற்றிய பிரசித்தமான விதிகளுக்கு விலகி விலகி இன்றைய பூசை ஒழுங்குகள் போய்க்கொண்டிருப் பது ஆஸ்திக நம்பிக்கையுள்ள அனேகரின் உள்ளங்களுக்கு வேதனை தருவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களிலுஞ் சரி வேறெங்குஞ்சரி சிவம் தானாகத் தோன்றிக் காட்சியளிப்பது ஞானிகளுக்கு மட்டுந்தான். மற்றை யோர்களுக்குத் தகுதியான மந்திரம், பாவனை, கிரியை என்ப வற்றின் மூலமாகத் தகுதியான அர்ச்சகர் ஒருவரால் சிவத்துவ விளக்கம் ஏற்பட்ட பின்னரே தரிசனம் நிகழக்கூடும். தரிசித்த பலனுங் கைகூடும். இந்தக் காரணம் பற்றியே ஆலயங்கள் தோன்றின. அங்கு விக்கிரகங்கள் பிரதிஷ்டையாயின; பூசைக் கிரமங்கள் வகுக்கப்பெற்றன.

பூசைக்கிரமங்கள் முறையாக வகுக்கப்பெற்ற நூல்கள் பத்ததிகள் எனப்படும். அவை முழுக்க முழுக்க வேத ஆகமப் பொருளையே ஒழுங்குபடுத்திக் கூறுவன. அவற்றைவிட ஆலய பூசைக்கு ஆதார நூல் இல்லை. அவற்றிற் கூறப்பட்ட பூசைக் கிரமங்களை அப்படி அப்படியே அநுசரிக்குமிடத்துச் சிவத்துவ அபிவியக்தி ஏற்படுதற்கு ஏதுமொரு தடையிருக்காது. அவற்றைப் படித்துப் பார்க்கிறபோது இவ்வுண்மை புலனாகின்றது.

அப்பூசைக் கிரமங்களுட் பொதிந்து கிடக்கும் சைவசித் தாந்த ஞானப்புதையல்கள் அபாரமானவை. சைவசித்தாந்த அறிவு விளக்கத்திற் பார்க்கும் போதுதான் பத்ததிகள் தம் சுய ரூபத்தைக் காட்டும். அவ்வகையிற் காண்கின்ற போதுதான் நால்வேதங்கள், இருபத் தெட்டு ஆகமங்கள், பதினான்கு சைவ சாஸ்திரங்கள், பன்னிரு திருமுறைகள் என்ற எல்லாவற்றின் சாரமும் ஆலய பூசையே என்ற அருமையும் விளங்கும்.

ஆகவே, பத்ததிகள் கூறும் பூசை பற்றிய விளக்கங்களைச் சைவசித்தாந்தப் பொருள் விளக்கங்கொண்டு அநுசரிக்க வேண் டிய தேவை இன்றைய முக்கிய தேவையாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிக்கு எல்லாஞ்சரி, எப்படிச் செய்தாலும் சுவாமி ஏற்றுக் கொள்ளும் என்றெண்ணிக் கொள்ளும் ஏமாளிப்போக்கு அதிகமாக நிலவுதல் கண்கூடு. சுவாமிக்கு எல்லாஞ்சரிதான். ஏனெனில், அதற்கு விருப்பு வெறுப்பில்லை. அவ்வளவுக்கு அது சரி. அன்றி, சரியாய்ச் செய்வது பிழையாய்ச் செய்வது எல்லா வற்றிற்கும் சுவாமி ஒரே மாதிரிப் பலன் கொடுக்கும் என்று எண்ணுதல் பிழை. சரிக்கு நற்பலன் பிழைக்கு தீப்பயன் நிச்சயம். இது சுவாமியின் நடுவு நிலைப்பண்பு. இதைச் சைவஞானம் நன்குணர்ந்துள்ளது. சுவாமி எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் என்றதன் சரியான அர்த்தம் வேறு நடைமுறை விளக்கத்தில் உள்ளது வேறு; பிழையாய்ச் செய்யுங் காரியத்தையும் அது எதிர் நின்று தடுக்காது. அது அதன் விசேட இயல்பு. செய்யவிட்டு அதற்குத் தக்கபடி பலன் கொடுப்பது அதன் தர்மம். இதுவே குறித்த கருத்தின் சரியான அர்த்தம். இதிலே சுவாமி பேரிற் குற்றஞ் சார்வதில்லை. சுவாமி ஏலவே சரிபிழைகளை வேதாக மங்களிற் சொல்லி வைத்திருக்கிறது. அவற்றை உணர்ந் தொழுக அறிவையுங் கொடுத்திருக்கிறது. மேலும் பிழையாய் நடப்ப தற்குச் சுவாமி பொறுப்பாகாது.

தன்னறிவில் விளக்கம்பெறாத எதுவும் செயல்முறையிற் சீராய் நடப்பதுமில்லை உரிய பலனை உகந்த முறையில் தருவதுமில்லை. எனவே இன்றைய எமது முதற்கவனம், இவை பற்றிய விளக்கத்தைப் பெறுதலிலும் அவ்விளக்கத்தைச் சைவ சமூகத்தில் எங்கும் பரவச் செய்தலிலும் செலுத்தப்பட வேண் டுதல் இயல்பே.

புகழ்பெற்ற மருதடி விநாயகர் வாழ்பதியாகிய மானிப் பாயில் இது பற்றிய ஒரு சிந்தனை உருவாகியிருப்பது வரவேற் கத்தக்கதாகும். மானிப்பாய் இந்துசமய விருத்திச்சங்கம் இச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக்கு வளமும் வாழ்வும் கொடுக்க முற்பட்டிருத்தல் மேலும் பாராட்டப்படத்தக்கதாகும். அவர்களது இச்சிந்தனை செயலாகப் பரிணமிக்கவும் அது ஒரு பேரியக்கமாக உருவெடுத்து இன்றைய நமது ஆலய பூஜைக் குறைபாடுகளை நிவிர்த்தி செய்யவும் திருவருள் துணை நிற்பதாக.

இந்நன்னோக்கத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் ஏற்படுத்தும் நோக்கிலே, **'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்'** என்ற நூல் அவர்கள் முயற்சியால், ஒரு சிறு அளவில் வெளியாகின்றது. சைவ உலகின் ஆதரவு எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்குமோ அவ்வளவுக்கவ்வளவு இத் தொடர்பில் நூல்கள் பல வெளிவருவதற்கும் இடமுண்டு.

***'சத்திமுற்றம்'*,** ***ஆசிரியர்***
***ஏழாலை மேற்கு.*** ***மு. கந்தையா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆசியுரை

## (முதற் பதிப்பு)

நல்லை, ஞானசம்பந்தர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய ஸ்வாமிகள் அருளியது.

சைவர்களாகப் பிறந்தவர்கள் சைவசித்தாந்த அநுபவத்தைப் பெறுவதே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். சிவபுண்ணியச் செயல்களுக்கெல்லாம் சிகரமாயுள்ளது சிவபூசை. விநாயகர், முருகன், அம்பிகை, திருமால் யாவரும் சிவபூசை செய்திருத்தல் கொண்டு அதன் மகிமை உணரற்பாலதாய் இருக்கிறது.

இன்று சிவாலய பூஜாக்கிரமங்களும், பூர்வ அபரக்கிரியை ஒழுங்குகளும் பலவிதத்தில் குன்றி வருவது கண்கூடு. மந்திர லோபம், கிரியா லோபம், பக்திலோபங்களால் கேடுமிகும் என்பதை நாம் உணரவேண்டும்.

சைவபத்ததிகளிற் கண்டவாறு பூஜைக்கிரமங்களுக்குட் பொதிந்து கிடக்கும் சைவசித்தாந்த நுண்பொருட் புதையல்கள் அளவு கடந்தவை. அவைகளை அறியாமையினால் தத்துவ ரீதியாகப் பூஜாக் கிரமங்கள் அநுட்டிக்கப்படாதொழியும் இக்காலத்தில், நமது ஆதீன வித்துவான் பண்டிதர் மு. கந்தையா பி. ஏ அவர்களால் எழுதப்பட்ட **'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்'** என்ற இந்நூல், அறியாமை அகற்றும் அகல்விளக்காய் அமைகின்றது.

திருவாசகத்தில் பூசையுண்மையை அமைத்துக்காட்டிய **பொருத்தமும், நித்திய, நைமித்திய, ஆன்மார்த்த, பரார்த்த பூசைகளின்** உண்மைகளை வெளிப்படுத்திய **செப்பமும்** நைமித்திய பூசைகளுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் அவல நிலைமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துணர்த்திய திட்பமும் அதன் பொய்மையைக் கண்டித் தொதுக்கும் நுட்பமும் போல்வன பாராட்டுதற்குரியனவாம்.

**'சீவசேவையே சிவசேவை'** என்னும் கருத்தைத் தற்போ தைய அரசியற் கோட்பாட்டில் எழுந்த **பிரசார சுலோகம்** எனத் தெளிவாக விளக்கியதோடு **சிவனடியார் விஷயம் இதற்கு விதிவிலக் காம்** எனவுங் காட்டும் பகுதி மிகப் பிரீதிகரமானது. இதேபோல் பிரீதி பூர்வமான பக்ஷங்கள் இந்நூலுட் பல.

காமிய பூசையைப் பற்றிக் குறிப்பிட்டு, சைவர்கள் காமிய பூசைக்கு அநுமதிக்கப்படாமையையும், **போகமன்று மோக்ஷமே** அவர்களுக்குரிய பூசை நோக்கம் என்பதையும், சைவசித்தாந்த விளக்கத்தின் சார்பில் நிறுவுந்திறம் நன்றாயிருக்கின்றது. அதற் குத்திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்திலிருந்தும் திருப்புக ழிலிருந்தும் மேற்கோள்காட்டியவாறு **ரம்மியமாயிருக்கிறது.** காமிய வேண்டுதலில் குறுக்கிடக்கூடிய விக்கினங்கள் விபரீதங்களைப் புராண இதிகாசச் செய்திகளிற் பொருத்திக் காட்டும் பண்பிற் புதுமை பொலிகின்றது.

நைவேத்தியப் பூசையின் தத்துவத்தைக் கண்ணப்பர் செயலில் வைத்து விளக்கும் நிலை எண்ணிச் சுவைக்குமளவுக்கு இதமானது.

ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட பொருட்கூறுகளை மிக விரிவாக அலசித் தெளிந்து ஆழ்ந்து ஆழ்ந்து நோக்கி இந் நூலை வடித்துள்ளார்.

சைவத்தில் ஞானத்துக்கும் கிரியைக்கும் இடையிலான அன்யோன்ய உறவைக் கண்டு ரசிக்க இந்நூல் ஒரு நல்ல சாதனமாயமையும் என்பது மிகையாகாது.

சைவ உலகிற்கு இந்நூல் **ஞானபானு எனத்தக்கது.** இதனை அளிக்கும் எமது சித்தாந்த ஆசிரியர் அவர்கள் பல் லாண்டு காலம் வாழ்ந்து தமது அரிய சேவையால், சைவத் திருத்தொண்டு சிறந்தோங்குமாறு உழைக்க, எம்பிரான் சம்பந் தன் இணையடிகளை வழுத்தி ஆசீர்வதிக்கின்றோம்.

நா. சுந்தரலிங்கம்
இளவரசு

நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

## (முதற் பதிப்பு)

நூற்பெயரே நூலியல்பு எப்படியிருக்கும் என்பதைச் சொல்லுவதாயிருக்கிறது. அதற்கிணங்க, சித்தாந்தப் பொருள் விளக்கத்தைச் சிரமமின்றி அறிந்து கொள்ளுதற்கு **இன்றிய மையாத சில கிரியைகளே** இதில் தழுவப்பட்டிருக்கின்றன. சிவால யக் கிரியைகளில், நித்திய நைமித்தியக் கிரியைகள் எல்லாவற் றையும் எடுத்தாராய்வதற்கு இப்போதைய இடம் பொருள் ஏவல்கள் இயையாமை பற்றியும், சாமானிய வாசகருக்கு நூல், **பொருள் தன்மையிலும் நடையிலும் இலகுவான தாயிருப்பதுடன், தன் அளவிலும் மட்டானதாயிருத்தல்** விரும்பத்தக்கதாகும் என்பது பற்றியும் இங்ஙனம் அமைவதாயிற்று.

சைவக்கிரியைகள் நூலறிவாராய்ச்சியாளர்க்கு மட்டு மன்றி அனைவருக்குமே உரியவை. நூலறிவாராய்ச்சித் தரமு டையார் தவிர, ஏனையோர் இக்கிரியைகளின் தத்துவ தாற்பரிய விளக்கங்களைத் **தாமாக வாசித்து விளங்குதற்கேற்ற நூல்கள்** நம் மத்தியில் அத்யல்பமாயிருத்தல் குறிப்பிடத்தக்க அளவு ஒரு **பெருங்குறை** யென்றே சொல்லவேண்டும்.

கிரியை விபரங்களைச் சொல்லும் நூல்களுக்கோ குறை வில்லை. கோயிற் கிரியை விபரங்களை அறிவதற்குச் சமஸ்கிரு தத்திலுள்ள நூல்களைவிட, அவற்றின் மொழிபெயர்ப்பு நூல்க ளும் தமிழில் வெளிவந்துவிட்டன. அகோரசிவாச் சாரியாரின் **கிரியாக்கிரம ஜோதிகை, சைவபூஷணம்** என்ற இரண்டு நூல்களும் தனியே தமிழில் வெளியாகியுள்ளன. அகோரசிவாச்சாரியாரின் **பரார்த்த நித்திய பூஜா விதி**யும் தனியே தமிழில் வெளியாகி யுள்ளது. **சோமசம்பு சிவாச்சாரியார் பத்ததி, கிரந்தமும் தமிழுமாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்திருக்கிறது. காரணாகமத்திலுள்ள நித்தியபூசை விபரங்கள், **நித்தியார்ச்சனாவிதி** என்ற பெயரில், தமிழ் மொழி பெயர்ப்புடன் வெளிவந்துள்ளன.

நைமித்திகக் கிரியைகள் பற்றி அன்றே நாவலர் பெருமான் எழுதி வெளியிட்ட **சிவாலய மஹோற்சவ விளக்க உண்மை** என்ற நூலுண்டு. அதைத் தொடர்ந்து காலகாலங்களிலே இது போன்றவை பல வெளிவந்திருக்கின்றன. சமீபத்தில் மறைந்த அச்சுவேலி, குமாரசுவாமிக் குருக்கள் ஆன்மார்த்த, பரார்த்த பூசைகள், உற்சவங்கள் பற்றித் தமிழிலேயே வெளியிட்ட பல நூல்கள் உள. **முத்திரா லக்ஷணம், மூர்த்தியலங்கார விதி** என்ற நூல்கள் இத்துறையிற் புதுமையானவை. அவருடைய **விநாயக உற்சவ விளக்கம், சிவபூசை விளக்கம்** என்ற நூல்களும் மிக உபயோகமானவை. சமீபத்தில் ஆத்மநாதசர்மாவால் வெளியிடப்பெற்ற **அக்கினி காரிய விளக்கம்** என்ற நூலும் தமிழில் உள்ளது.

பூர்வக்கிரியை அபரக்கிரியை பற்றிய நூல்களும் நம் நாட்டில் வெளிவந்தவை பல. சைவப்பெரியார், புலோலி, சு. சிவபாதசுந்தரம் அவர்கள் சைவக்கிரியைகள் பற்றி எழுதிய நூல் ஒன்றுளது. 1964 இல் காரைநகர் சி. சுப்பிரமணியதேசிகர் என்பார் வெளியிட்ட விரிவான நூலுமொன்றுள்ளது. இவ்விரண்டும் இக்கிரியைகளின் விபரங்களைத் தெரிந்துகொள்வதற்குப் போதுமானவை. வட்டுக்கோட்டை அருணாசல சாஸ்திரிகள் வெளியிட்ட ஆசௌச விதி போன்ற நூல்களும் இத்துறையில் உபயோகமானவை.

சைவர்களாகிய எங்களுக்கு உரிய கிரியை விபரங்களைச் சரியாகத் தெரிந்து அநுசரிப்பதற்குப் போதிய நூல்கள் தமிழில் உள்ளன என்ற உண்மை மேற்காட்டிய விபரங்களினால் தெரியவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும், சிவாலயக் கிரியைகளுக்குஞ்சரி, பூர்வ அபரக் கிரியைகளுஞ்சரி, **சைவஞான அநுபவ ரீதியாக** அவற்றுக்குரிய விளக்கத்தின் பேரில் நடைபெற நம் மத்தியிற் காணுதல் முயற் கொம்பாயிருக்கிறது. செய்பவருஞ்சரி, செய்யவிருப்பவருஞ்சரி, தம் செயலின் **பண்பென்ன, பயனென்ன, அருமை என்ன, பெருமை யென்ன?** என்றறியாமலே சும்மாசெய்யும் பாங்கு பரவலாகக் காணப்படுகின்றது. அவற்றில் அவதானிக்கக்கூடிய ஒழுங்கீனங் களைக் குறித்துச் செய்பவரைக் கேட்டால், **நாங்கள் பரம்பரை யாக இப்படித்தான் செய்கிறோம்'** என்ற பதில் வருகிறது. செய்விப் பவரைக் கேட்டால், **'ஏதோ ஐயர் செய்கிறார்'** என்கிறார்கள். ஆத்ம ஈடேற்ற முக்கியத்துவம் வாய்ந்த இவ்விஷயத்தில், **எவருக்கும் எப்போதும் அவசியமான இவ்விஷயத்தில், இவ்வளவு விளக்கவீனம் இருப்பது பெரும் பழுதே பழுது.**

அநுபவப் பயன் பற்றிய விளக்கவீனங் காரணமாகக் கிரியைகளில் திருப்தியீனம் நிலவுதலுங் கண்கூடு. **அர்க்கியம் பாத்தியம் ஆசமனங்களை** ஒழுங்கறியாது கையாளுதலும், நைவேத்தியத்தைச் சும்மா காட்டி மறைப்பதும், ஒரே தட்டிலுள்ள நைவேத்தியத்தைப் **பலவேறு மூர்த்திகளுக்குக்** கொண்டு திரிந்து நிவேதிப்பதும் **சுவாமி ஆபாஹனம்** பண்ணாமலே திடுதிப்பென்று அபிஷேகம் பூசைகள் பண்ணுதலும் ஏன்? ஸ்னபனத்துக்கு அபிஷேகம் பூசைகள் பண்ணு தலும் ஏன்? ஸ்னபனத்துக்குரிய **சிவகும்பத்தை வயிற்றோடணைத்துக் கொண்டு** செல்லுதலும் போன்ற காரியங்கள், இக்கிரியைகளின் அருமை பெருமைகளை அறியாக் குறையினால் நிகழ்வனவேயாதல் ஒருதலை. இன்னும்,

பூசையின் முன்னோடிக் கிரியைகளாகிய ஆன்மார்த்த பூசை, **அந்தர்யாகம், பஞ்சசுத்தி, பஞ்சகவ்விய பூசை, பஞ்சாமிர்த பூசை, புண்ணியாகவாசனம்** என்பவை தம் பண்பாலும் பயனாலும் அபிஷேகம், நைவேத்தியம், தீபாலங்காரங்களைவிட, **அதிமகத் துவம் வாய்ந்தவை.** பூசைப் பண்பும் பயனுமாகிய **சித்தாந்த ஞானத்தின் அடிநிலை உண்மை விளக்கத்தைத்** தழுவியுள்ளவை இவைகளாம். இன்று இவைகள் அருகிப் போவதற்குக் காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் அருமை பெருமைகளை விளங்கிக்கொள்ளாக் குறையே என்பதில் தவறில்லை.

ஆதலால், சாதாரணமாக வாசித்து விளங்கும் அறிவுடையோர்க்கும் பெருமளவில் உதவவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்நூலில், பொருட்பெருக்கம் இயன்ற அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வசனநடையும் இயலுமளவு சரள நடையாகவே கையாளப்பட்டிருக்கிறது. அத்துடன் சைவக் கிரியைகள் பற்றிய முன்னோடி நூல்களில் இல்லாத அளவுக்கு, இக்கிரியைகளின் தத்துவப் பின்னணியும், சைவ ஞானப் பண்பும் துலக்கப்பட்டும் இருக்கின்றது. தகுதியான வரலாற்று உதாரணங்களும் தழுவப்பட்டுள்ளன.

தான் சம்பந்தப்பட்ட அளவில் இச்சிறுநூல் ஆர்வமுள்ள சைவமக்களின் உள்ளங்களுக்கு ஓரளவிலாயினும் திருப்தியளிக்கு மெனவும், அவர்கள் மேலும் மேலும் இத்துறையில் மற்றும் சைவ அறிஞர்களையும், சைவ நூல்களைத் தேடி விசாரித்தற்கு இது ஒரு நல்ல தூண்டுகோலாயமையும் எனவும், சைவசித்தாந்தக் கல்வியில் ஆர்வம் விளைவதற்கு இது ஒரு சாதனமாய் உதவும் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

எங்கள் சங்கத்தினருக்கு வடமொழி, தமிழ்மொழிப் பண்டிதர் மு. கந்தையா, பி. ஏ. அவர்கள் இவ்விடயம் பற்றி வாரந்தோறும் விரிவுரைகள் நிகழ்த்தி வருகிறார்கள். அவற்றைக் கேட்டு ரசித்த அன்பர்கள் இக்கருத்துக்களை சைவமக்கள் யாவரும் வாசித்து அறியக்கூடிய வகையில் இதன் சாரத்தை ஒரு சிறு நூலாக அமைத்துத்தரவேண்டும் என்ற வேண்டுகோளைப் பண்டிதர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் சங்கத்தினதும் சைவப் பெருமக்களினதும் மனப்பூர்வமான நன்றியும் கடப்பாடும் உரித்தாக்குக.

இச்சிறுநூலைப் பொருள்செய்து வாசித்து, இதன் குறை நிறைகளைப் பயன்படத்தக்க முறையில் எடுத்துக்காட்டி, இதை விடத் திருத்தமான, பலவேறு இத்தகைய நூல்கள் வெளிவர உதவும் அறிஞர் பெருமக்களுக்கு எமது பெருமதிப்பும், பெருங் கடப்பாடும், பெருநன்றியும் என்றும் உரியனவாம்.

சுபம்

மானிப்பாய். இந்துசமய விருத்திச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

(முதற்பதிப்பு)

## இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்

## கிரியை ஞானநிமித்தம்

வைதிகம் வேதநெறி ; அது சென்று முற்றுமிடம் சைவம். அது ஆகம நெறி.

சைவம் வைதிகத்தின் வழி வருவது. அதனால் அது வைதிக சைவம் எனப்படும்.

சைவம் சிவசம்பந்தம் ; சிவத்தோடு தொடர்புபடுத்துவது.

எல்லாச் சமயமும் இருப்பது நீதி என்று சொல்லுவது சைவம். அதே சமயத்தில் அவற்றின் வேறாயுமிருப்பது சைவம்.

ஒன்றோடொன்று மாறுபடுகின்ற எல்லாச் சமயமுமாய், அவற்றின் வேறுமாய், " இராசாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம் அழகிது" என்று விம்மிதம் உறுகின்றார் தாயுமானவர்.

சித்தாந்தம் முடிந்த முடிவு; தனக்குமேல் மற்றொரு முடிவு இல்லாதது. **'வேதாந்தத் தெளிவு சைவசித்தாந்தம்'** என்கிறது சிவப்பிரகாசம். சைவசித்தாந்தம் **'சித்தாந்தம்'** எனவும் வழங்கும்.

**'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்'** பற்றிச் சிந்திப் போமாக.

**'கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்'** என்பது சிவப்பிரகாசம்.

கணிதத்துக்கு விடை காண்பதற்குச் செய்யும் கிரியைகளில் வைத்து, ஞானம் கிடைத்தற்குக் கிரியைகள் முக்கியமாதல் சிந்திக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் இறை ஒளி. அது **தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி** எனவும் திருவருள் எனவும்படும். அதனைப் பெறு தலே வீடுபேறு.

**'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்'** என்பதில் "ஒன்று" எனபது ஆன்மா. அது உயிர் எனவும் படும்.இருள் ஆணவஇருள். ஒளி இறையொளி. அது உயிர்க்குயிர் அநாதியே உயிரோடு அத்துவிதப்பட்டிருப்பது. அங்ஙனமாகவும், அநாதியே உயிர் மற் றொன்றாகிய இருளோடும் அத்துவிதப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் உயிர்க்குயிராய இறையொளியும், **'மிக இருளேயாம்'** என்பது பெரிதும் சிந்திக்கற்பாலது.

இருள் சடம். (ஒளியாகிய ஞானம் எனப்படும்) அருள் சித்து.

பந்தகாலத்தில் இருள் மேலிடும் ; முத்திக் காலத்தில் அருள் மேலிடும்.

அருள் மேலிட்டவழி, இருள் உயிரை அணுகுவதில்லை.

இருள் மேலிட்டிருக்கும் போது, உயிர் தன்னோடத்துவிதப் பட்டு உயிர்க்குயிராயிருக்கும் உள்ளொளியைப் பெறமுடியா திருந்தபோதும், அஃதாவது, "ஒன்று மிகினும்", இருள் மேலிட் டிருப்பினும், ஒளி உள்ளம் கவரும்.

சித்தாகிய ஒளி உள்ளத்தை இருளிலிருந்து ஈர்க்கும். உள்ளம் - உயிர். கவராதேல் என்பதனால் கவரும் என்பது பெறப்பட்டது. **'ஒன்றுமிகினும் '.....** திருவருட்பயன்.

உயிரை இருளிலிருந்தெடுக்க ஈர்க்கும் ஈர்ப்பே நள்ளிருளில் நட்டம்.

ஒளி காந்தசக்தி போன்றது; உயிர் இரும்பு போன்றது. உயிரை அது ஈர்த்துக் கொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்ப்பின் விளைவே சகலாவஸ்தை; உயிர் சரீரத்தோடு கூடிய நிலை.

சூரிய ஒளியை நேரே பெறமுடியாத கண்ணுக்கு, மூக்கு கண்ணாடி போன்றது இந்தச் சரீரம். இந்தச் சரீரத்தின் மூலம் ஒரு சிறு அளவாயினும், உயிர் தன்னோடு கலத்தற்கு அந்த அருள் ஒளி இந்தச் சரீரத்தை உயிர்க்களித்திருக்கின்றது.

**' இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'** என்பது நாவலர் வாக்கு.

கடவுளை வணங்குதலாவது, ஞானநிமித்தமாகிய கிரியைகளை மேற்கொள்வதாம். முத்தியின்பம் ஞானப்பேறு.

இந்தச் சரீரம், ஞானத்தை அடைத்தற்கு நிமித்தமாகிய கிரியைகளைச் செய்தற்கே கிடைத்தது.

கிரியைகளை முன்னிட்டுக் குருத்துவம் பற்றி நாவலர் பெருமான் விடுங்கண்ணீர் பின்வருமாறு:

'சைவசமய குருத்துவத்துக்கு அவசியம் வேண்டிய கல்வி அறிவு ஒழுக்கங்களும் சைவசித்தாந்த நூலுணர்ச்சியுஞ் சைவக் கிரியைகளை மந்திரக் கிரியா பாவனை வழுவாவண்ணஞ் செய்யுந் திறமையும் சைவசமய போதனையும் இல்லாதவரைச் சைவசமய குருமாரெனக் கொண்டு உங்கள் கைப்பொருளை அவருக்கு இறைத்து விட்டு, அவரிடத்தில் வேலை வாங்காது பாராமுகர்களாய் இருப்பது நீதியா? தவசிப்பிள்ளைகளுக்குத் தங்கள் தொழிலிலே பரீட்சை கொடுத்தே தவசிப் பிள்ளைகளாக் குகின்றார்களே' பரீட்சை சிறிதும் வேண்டாத உத்தியோக மாவது, உலக முழுதாளும் அரசரும் பெறாத வந்தனாதிகளைப் பெறும் மிக மேன்மைபெற்ற உத்தியோகமாகிய சைவசமய குருவுத்தியோகம் ஒன்றேயாய் முடிந்ததே' இஃது என்னை யென்னை' கொடுமை' கொடுமை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீக்ஷைக்குக் கொடுத்த கணிதத்தில், என்ன கேட்கப்பட்ட தென்பதை விளங்கும் ஆற்றலில்லாத மாணவன், குறித்த நேரம் வரை ஏதோ கீறிக்கொண்டிருப்பான். அக்கீறுகளுக்கும் விடைக் கும் சம்பந்தமுண்டா?

இவ்வாறேதான் ஞானத்துக்கும் கிரியைக்குந் தொடர்பு தெரி யாதவர்களே பெரும்பாலும் ஏதோ செய்து வருகின்றார்கள்.

**தொடர்பு தெரிய வல்லவர்களும் ஏதேதோ காரணங்கள் சொல்லிக் காலங்கழிக்கின்றார்கள். அவர்களுக்காதல் இந்தச் சித்தாந்த விளக்கு, கிரியைகளின் அருமைகளைப் புலப்படுத்தி அச்சமோ கூச்சமோ விளைவிக்குமாயின், அவ்வளவே இந்நூலின் தோற்றரவுக்குப் போதியதாகும்.**

கிரியை விஷேசத்தால் மந்திரசக்தி பரவும் கோவிற் சந்நிதி, மின்சக்தி பரவும் இடத்திலும் பார்க்க, அச்சத்துக்குரியது. உள்ளும் புறமும் புனிதர்களே கோயிற் சந்நிதியிற் பிரவேசிக்க முடியும். புனிதங் குறைந்தவர்கள் பிரேவசிப்பாராயின், குளிக்கப் போய்ச் சேறு பூசுவதாம்.

**'மந்திர சக்தியின் நிலையையும், தன்னிலையையும் உணர்ந்த ஒருவர் குருக்கள் வேலைபார்க்க உடன்படாமல் ஓட்டமெடுக்கவுங் கூடும்'** என்று ஒரு மகான் கூறியது நினைவுக்கு வருகின்றது. காரைக்கால் தெய்வம் தலையால் நடந்த புனிதத் தலத்தில் கால் வைக்கக் கூசினார் சம்பந்தப்பிள்ளையார்.

" மந்திரசக்தி வாய்ந்த ஞானநிமித்தமான கிரியைகள் பற்றி வட மொழியிலும் தென்மொழியிலும் அனேக நூல்கள் உண்டு. அவற்றை ஆராய்ந்து, சைவக் கிரியைகள் சித்தாந்த விளக்கில் விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் ஆசிரியர் பண்டிதர் திரு.மு கந்தையா, பி. ஏ. அவர்கள் மும்மொழி வல்லவர். சித்தாந்தசாஸ்திரங்களிலும் திருமுறைகளிலும் முழுகித்திளைப் பவர்; அவர் பொழுது தவப்பொழுது; அவர் வாழ்க்கை சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை அவருடைய அறிவுச்செல்வம் **'பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்று'** பலவேறு இடங்களில் சித்தாந்த வகுப்பும் புராண வகுப்பும் நடாத்தி வருபவர்; இவ்வாறாயதோர் **'ஊருணி'** யைக் காணல் அரிது' அரிது''

ஆசிரியர் அவர்களைப் பயன்செய்யும் முறையிற் பயன் செய்யும் மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தை எத்தனை முறை பாராட்டினும் பாராட்டு முற்றுதல் எய்தாது.

**சித்தாந்த விளக்கு**
**'கிரிதீபம்' ஆகுக.**

*திருநெல்வேலி* — *சி. கணபதிப்பிள்ளை*
*07. 09. 78.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அணிந்துரை

## (முதற்பதிப்பு)

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

(ஆசிரியர் யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்)

**நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்**
**பொக்க மிக்கவர் பூவும்நீ ருங்கண்டு**
**நக்கு நிற்பர் அவர்தமை நாணியே.** (அப்பர்)

**பூக்கைக் கொண்டரசன் பொன்னடி போற்றிலார்**
**நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்**
**ஆக்கைக் கேயிரை தேடி அலமந்து**
**காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.** (அப்பர்)

நால்வர் வாக்கு தேவர்வாக்கென்பர். அந்நால்வரில் அப்பர் அருள் வாக்குகள் இரண்டு மேலே தரப்பட்டுள்ளன. முதல் வாக்கில் உண்மை வழிபாடும் போலி வழிபாடு பற்றியும், இரண்டாம் வாக்கில் காமியவழிபாடு பற்றியும் ஆக மூன்றுவகை வழிபாட்டு நெறிகளும் அவற்றின் பயனும் கூறப்பட்டுள்ளன.

முதலாவதில், இறைவனிடத்தும் அவனை வழிபடுமாறு கூறும் வேதசிவாகமங்களிலும் மெய்யன்புடையராய் வழிபட வேண்டும்; அதன் பயன் இறைவன் நம் இதயக் கோயிலில் வீற்றிருக்கப் பெறுதல் எனக் கூறப்படுகிறது.

இரண்டாவதில், போலி வழிபாடு இறைவனதும் பிறரதும் பரிகாசத்துக்கு உரித்தாவதன்றி வேறு உபயோகமற்றதெனப் பேசப்படு கின்றது.

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்,** என்றதும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதில் பொருளாகப் போற்றவேண்டிய இறைவனையும் ஆன்மாவையும் விடுத்து, பொருளல்லாத உடம்பையே பொருளாகப் போற்றி வாழும் மருளர் **'பெயர்த்தும் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றார்'** என்ற நிலை நினைப்பிக்கப்படுகிறது.

**' பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்**
**மருளானாம் மாணாப் பிறப்பு'** என்றலும் இதுவே.

இன்று கோயில்களிலும் இல்லங்களிலும் நாம் நடத்தும் நித்திய நைமித்திக பூர்வ அபரக்கிரியைகள் பலவும் இரண்டாவதான போலி வழிபாட்டு முறையிலேயே அமைந்து எல்லோரதும் பரிகாசத்துக்கு இடமாதலை நாம் காண்கிறோம். இக்கிரியைகளைச் செய்யும் ஆசிரியர்களும், செய்விக்கும் அதிகாரிகளும், அவற்றைப் பார்க்க வருவோரும், அனைத்திற்கும் காரணனாய் அவ்வழிபாட்டை ஏற்றருளும் இறைவனுமே இச் செயல்களை நோக்கி நகை புரிகின்றனர். ஆசாரியர் தம் செயலை மணி கிலுக்குதல் என்றும், அதிகாரிகள் இவை அந்தணர் வயிற்றுப் பிழைப்புக்குக் கட்டிவைத்தவை என்றும், தரிசிப்பார் தத்தம் மனம் போனவாறும் பரிகாசம் செய்வதையும் இவற்றை நோக்கி இறைவன் மௌனப் புன்முறுவல் செய்திருப்பதையும் அறியும் போது எந்த உண்மைச் சமயியும் உளம் வருந்தாதிருக்க நியாயமில்லை. சிலர், மேலும் ஒரு படி முன்னேறி இக்கிரியைகள் இன்றியே திருமணம் முதலான காரியங்களைச் செய்யவும் தலைப்பட்டுள்ளனர். ஐயோ பாவம்! சைவக் கிரியைகள் இந்தத் தரத்திற்குத் தரக்குறைவாய் மதிக்கப்படலாயினவே!

இதற்கான காரணம் என்ன? இந்நிலையை மாற்றி மேற்படி சைவக் கிரியைகளுக்கு உரிய மதிப்பை மக்களிடையே வளர்க்க வழி என்ன? இவ்வினாக்களுக்கெல்லாம் ஏக காலத்தில் விடை தர எழுந்ததே **'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்'** என்னும் இந்நூல் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைக் கிரமத்தையும், அவற்றின் உண்மைத் தத்துவத்தையும், கிரியைகளின் நோக்கம் பயன்களையும் முற்றும் உணர்ந்து செய்யும் ஆசாரியர்களும், அவற்றைப் பக்தி சிரத்தையோடு செய்விக்கும் மக்களும் அருகியமையே இந்த இழி நிலைக்குக் காரணமாகும். இதனை நன்குணர்ந்து தக்க சமயத்தில் இந்நூல் வெளிவருகிறது. நாவலர் **'யாழ்ப்பாணத்துச் சமய நிலை'** என்ற நூல் எழுதக் காரணமாயிருந்தது எந்தச் சூழ் நிலையோ அதுவே இந்நூல் வெளிவருவதற்குமுரிய சூழ்நிலை யாயுள்ளது என்பது எனது கருத்து,

தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் துறைபோகக் கற்ற மூதறிஞராய **திருவாளர் மு. கந்தையா,** பி.ஏ. அவர்கள் பழைய வேத சிவாகமங்களையும் திருமுறை மெய் கண்ட சாஸ்திரங்களையும் ஓதி உணர்ந்ததோடு நவீன ஆராய்ச்சி நூல்களையும் படித்துப் பார்த்துத் தெளிந்த சிந்தையினாலே சீர்தூக்கித் துணிந்து, சைவக்கிரியைகள் பற்றிய உண்மை யையும் உயர்நிலையையும் சித்தாந்தக் கண்ணோட்டத்தோடு புதிய முறையில் விளங்கச் செய்துள்ளது இந்நூலின் சிறப்பம் சமாகும்.

இந்நூலில் சைவக்கிரியைகளை ஆன்மார்த்தம், பரார்த்தம், பூர்வம், அபரம் என நான்கு வகையிலே அடங்கக்கொண்டு உள்ளுறுப்பாய சடங்குகளையெல்லாம் கிரமமாக வகுத்துக் காட்டி ஒவ்வொரு கிரியையின் இன்றியமையாச் சிறப்பையும், அவ்வவற்றில் அடங்கிய தத்துவக்கருத்துக்களையும், சில கிரி யைகள் நவீன நோக்கிலும் போற்றிச் செய்ய வேண்டியவை யாயிருப்பதையும் ஆங்காங்கு உளங்கொள எடுத்துரைக்கப் படுவதைக் காணலாம். வடமொழியிலும் தமிழ் மொழியிலும் முன்னே வெளிவந்த பத்ததிகள் கிரியை விளக்க நூல்களிலி ருந்து பல மேற்கோள்கள் ஆதாரமாக இங்கு எடுத்துக்காட் டப்பட்டன. அவை **'இக்கிரியையை இப்படிச் செய்'** என்ற ஏவலாக அமைந்தனவேயன்றி ஏன் செய்யவேண்டுமென்று எடுத்துரைக்கத் தவறியதைக் காணலாம். அக்குறை இந்நூலால் நீக்கப்படுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரலாம். மேலும்கிரியையில் உபயோகிக்கப்படும் பொருள் களும் வேண்டுமிடத்தில் கால நிர்ணயங்களும் தரப்பட்டுள்ளதும் சிறப்பம்சமாகும்.

வேதாகமங்களிலும் திருமுறை மெய்கண்ட சாஸ்திரங் களிலும் கிரியைகளின் தத்துவத்தை விளக்க வேண்டிய மேற்கோள்களைக் காட்டி அவற்றுக்குச் சரியான விளக்கம் தந்திருப்பதும் போற்ற வேண்டியதாகும். உதாரணமாக **'நலம் புரிகொள்கைப் புலம் புரிந்துறையும் செலவு'** என்ற திருமுருகாற் றுப்படை வரிக்கு உரைதந்தமை காணலாம்.

இன்னும் இதிகாச புராண வரலாறுகளிலும் சில எடுத்து ரைத்துக் கிரியைகளுக்கு விளக்கம் செய்திருப்பதும் நன்றாக அமைந்துள்ளது.

**'சிவன் சேவையே சீவசேவை'** என்ற தொடரைத் திரித்து, **'சீவ சேவையே சிவன்சேவை'** என்றுரைக்கும் திரிபுவாதிகளின் விபரீதப் போக்கைக் கண்ணியமான முறையில் கண்டித்து விடுகிறார். சந்தர்ப்பத்துக்குப் பொருந்த இரட்டையர் பாடலொன்று காட்டி ஊர்தோறும் ஆலயங்கள் அமைத்துக் கிரமமாக வழிபாடு செய் வதால் நல்வாழ்வும் உண்டென்றும் வழிபாடுகள் வழுவிவிடின் வாழ்வு குன்றும் என்றும் காட்டியதும் பாராட்ட வேண்டியது.

**'தவமும் தவமுடையார்க்கு ஆகும்'** என்ற தமிழ் மறைக்கேற்பச் சிவபுண்ணியஞ் செய்பவர்க்கு அப்புண்ணிய கர்மங்களை நெறி வழுவாது செய்வதற்கு ஆற்றுப்படுத்தும் பெருந்தவத்தைச் செய்ப வராய் இவ்வரிய நூலை வெளியிடுவதில் தமது ஓய்வு நேரத்தை தவப்பொழுதாக்கிக் கொண்டார் ஆசிரியர்.

சமய நம்பிக்கை அருகிவரும் இந்நாளில் சைவமக்கள் ஒவ் வொருவரும் வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டிய ஒரு நூல் இஃதெனலாம். இந்நூலைத் தந்த ஆசிரியருக்குச் சைவமக்கள் நன்றிக்கடனுடையவராவர். இந்நூலை வாங்கிப் படித்துச் சைவக் கிரியைகளின் உயர்வையும் உண்மைத் தத்துவத்தையும் அறிய வேண்டியதும் அவற்றைக் கடைப்பிடிப்பதும் நம்கடமை என்று கூறி அமைகிறேன்.

***ஆவரங்கால்*** ***ச. சுப்பிரமணியன்***
***01. 09. 1978***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

## (இரண்டாம் பதிப்பு)

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டுகளில், மானிப் பாய் இந்துசமய விருத்திச் சங்கம், சைவாலய பூசைகளின் நோக்கமென்ன, பண்பென்ன, பயனென்ன என்பதை விளக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க அச்சகத்தில் எம்மால் வழங்கப் பெற்றுவந்த தொடர் விளக்கங்களின் சுருக்கமே இந்நூல் என்பது இதன் முதற்பதிப்பின் முன்னுரையால் அறியலாம். அப்போது பிசுரமான ஆயிரம் பிரதிகளும் ஆறுமாச காலத்துள் விநியோ கமாய்விட்டன.தொடர்ந்தும் நூற்பிரதிகளுக்குத் தேவை இருந்து வந்ததுண்டு. வேண்டுவோர் தேவையை திருப்தி செய்வதற்காக, இதை மறுபிரசுரஞ் செய்வதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பலித்தில. அது பற்றி நிரந்தர விசாரமுற்றிருந்த நமதிஷ்டர் சிலரில் முக்கியமானவர் காரைநகரைச் சேர்ந்த சிவஸ்ரீ க. வை. குருக்கள் அவர்கள். குருக்களையாவுக்குப் **'பிறவும் தம்போற் பேணிக்கொள்ளல்'**என்ற பரோபகாரப் பண்பு அவர் ஜன்மசுபாவம். அதனால் நிர்க்கதிக்குள்ளான தமிழாக்கங்கள் பல அவர்களின் மறைமுக யத்தனங்களாற் பிரசுரமாகியுள்ளமை பரம இரகசியம். குறித்த 1978 களில் வெளிவந்த எமது நாவலர் பிள்ளைத்தமிழ்ப் பிரசுரம் குருக்களது இவ்வரும்பெரும் பண்பினாற் காரியப் பட்டிருத்தல் ஒன்றே இதற்கு உதாரணமாயமையும். அந்நூல் முன்னுரை காணத்தகும்.

இந்நூல் மறுபிரசுரமாக வேண்டி எம்மையே உசாவாமலும் குருக்கள் மேற்கொண்டு வந்த யத்தனங்களுள் மிக யுக்திபூர்வ மானது மலேசிய நண்பர் **திரு. ஐ. குலவீரசிங்கம்** அவர்களுடன் இது பற்றித் தொடர்பு கொண்டமையாகும். பல ஆண்டுகளுக்கு முன்னமே மலேசியப் பிரஜைகளாய் விட்டபோதும் தாய்வழி உணர்வு தப்பாது தம் ஜன்ம பூமியாகிய யாழ்ப்பாணத்து சைவ தமிழ்க் கலாசார பாரம்பரியத்தில் இம்மியும் வழுவாத செம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறி வாழ்வில் நிலைபெற்றிருந்துகொண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவையும் பேணு மாற்றாற் பேணிச் சைவவிருத்தி கருதிய பரோபகாரப் பணிகளில் அத்தியந்த பக்தி விசுவாசங்க ளுடன் ஈடுபட்டு வரும் மலேசியச் சைவத் தமிழ்ப் பேரியக்கங் களின் முக்கியஸ்தராக விளங்கும் அன்பர் குலவீரசிங்கம் அவர்கள், குருக்கள் வேண்டுகோளை மதித்து இந்நூல் இப் போது மறுபிரசுரமாக வகை செய்திருக்கும் பாங்கு, செய்யாமற் செய்த உதவி, பயன் தூக்கார் செய்த உதவி , காலத்தினாற் செய்த நன்றி என்ற முத்திறமும் ஒழுங்குபட நிற்கும் உயர்பெரும் தன்மையாகப் போற்றல் பெறும். மாரிக்குக் கைம்மாறு புரியவும் கடப்பாடு பூணவும் வல்லவர் யார்? அன்னரே இதற்கு யாமும் என அமைகின்றோம்.

இப்பிரசுரப் பணியிற் சம்பந்தமுறுவோர் யாவரும் சிவ பெருமான் அருளும் நிரதிசயானந்தப் பெருவாழ்வுக்கு அருகராக வாழ்த்து கின்றோம்.

கைப்பிரதியுமிழந்த நிலையில் இப்பிரசுரத்துக்கு மூலப்பிரதி அனுப்ப வழி காணாமல் தயங்கியபோது தமது சேமத்திலிருந்த அன்பளிப்புப் பிரதியொன்றைத் தந்துதவிய நவாலியூர் அனா தைச் சிறுவர் நிலைய அதிபர் அவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றிகள்.

நம்நாட்டுச் சைவாலயங்களிற் புறமுகவிருத்திகளான கட்டு மானச்சிறப்புக்கள் கனகச்சித விருத்தி பெற்றுவரும் அதேவேளை சைவசித்தாந்த ஞானவிளக்கமாகிய அகமுகவிருத்திகள் வரவரச் சோடை போய்க்கொண்டிருத்தல் பகிரங்க இரகசியம். அதன் காரணம் ஆலய பூசைக் கிரியைகளின் யதார்த்த விளக்கம் அருகிப் போனமையாம். அக்குறைபாடு தீர இந்நூல் ஓரளவாவது உதவும் என நம்புகிறோம்.

சைவ உலகில் இந்நூல் பெறுஞ் செல்வாக்கு இது போல்வன பல மேலும் வெளிவரத் தூண்டுவதாக. திருவருள் துணை.

**சத்திமுற்றம்,**
**ஏழாலைமேற்கு,** **ஆசிரியர்**
**சுன்னாகம், இலங்கை.** **மு. கந்தையா**
**27.10.1997**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முன்னுரை

## (இரண்டாம் பதிப்பு)

*சைவசித்தாந்த கலாநிதி, சித்தாந்தரத்தினம்*

*க. கணேசலிங்கம் B. S.c. (Eng.) ,*

*C. Eng, M.I.E.E. (Lond), M.I.E (Cey.)*

*ஆதீனப்புலவர், இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்*

**'சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்'** என்ற இந்நூல் கலாநிதி, பண்டிதர் மு. கந்தையா அவர்களால் எழுதப்பட்டு 1978 ல் முதற் பதிப்பாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது. இன்று மீள் பதிப்புச் செய்யப்பட்டு மலேசியா நாட்டிலிருந்து வெளிவரு கின்றது.

தமிழிலே பத்ததிகள் குறித்த நூல்கள் பல யாழ்ப்பாணத்து அறிஞரால் முன்னரே எழுதப்பட்டுள்ளன. இந்நூல்கள், பொது வாக கிரியைகளை வலியுறுத்தி, அவற்றின் செயன்முறைகள், அவற்றைச் செய்வதால் ஏற்படும் பயன்கள் முதலியவற்றை விளக்கி, புராண இதிகாசத்தை தொடர்புபடுத்தி எழுதப்பட்டவை யாகவே உள்ளன. தேவைக்கேற்ற அளவு இந்த வழிகளையும் பின்பற்றி, சைவசித்தாந்த தத்துவ விளக்கம் கொடுத்து எழுதப் பட்டது **'சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்'** என்ற இந்நூல்.

வேதந்தழுவிய வைதீகக் கிரியைகள் போலன்றி, சைவக் கிரியைகள் ஆகமநெறியை முக்கியமாகப் பின்பற்றுபவை. ஆக மாந்தம் எனப்படும் சைவசித்தாந்தம் உலகம் போற்றும் உயர்ந்த தத்துவம்.சைவத் தமிழருக்குப் பெருமை தரும் இத்தத்துவத்தை சைவர்கள் அறிந்திருக்கவேண்டியது அவசியம். சைவக் கிரியை களை இத்தத்துவத்தின் பின்னணியில் அறிந்து செய்வதும் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம். பண்டிதர் அவர்களின் இந்நூல் இதற்கு மிகவும் துணை புரிகிறது. திருமுறை விளக்கங்களும் இதில் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன.

இதுபோன்ற நூல்கள் எழுதுவதற்கு எல்லாத் தகுதியும் உடைய பண்டிதர் அவர்கள் இன்று எம்மிடையே வாழும் தலைசிறந்த சைவசித்தாந்த அறிஞர் அவர். மும்மொழி வல்லவரான அவர் சைவக்கிரியைகள் பற்றி நன்கு அறிந்தவர். திருமுறைகளில் ஊறித் திளைப்பவர்.

அறிவியல் விளக்கமற்ற சமயக்கிரியைகள் அதிக பயன் தரா. சைவமக்களுக்கு இன்று கிரியைகள், வழிபாடுகள் எல்லாம் பொருளற்ற சடங்குகளாக மாறிவிட்டன. இவற்றில் ஏன் ஈடுபடுகிறோம்? இவற்றால் ஏற்படும் பயன் என்ன? என்ற சிந்தனை எதுவும் இன்றி, தன்னலத்துக்காகவும், தற்காலிகமான ஒரு வித மன அமைதிக்காகவுமே பலர் இவற்றில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு, சைவசமயம் சார்ந்தவை எவை, வேற்றுமதம் சார்ந்தவை எவை என்ற அறிவும் இல்லை. அறிய வேண்டுமென்ற ஆர்வமும் இல்லை. கிரியைகள் செய்பவருக்கும் போதிய விளக்கம் இல்லை. இதனால் பல நேரங்களில் சைவநெறியிலிருந்து சைவர்கள் விலகிச்செல்ல வழி பிறக்கிறது.

சைவத்துக்கு ஒவ்வாத சடங்குகளும் வழிபாடுகளும் சைவர்களால் மேற்கொள்ளப்படும் அவலநிலை இன்று தோன்றியுள்ளது. சிறு தெய்வ வழிபாடு சைவர்கள் மத்தியில் இடம்பிடித்துள்ளது. சைவ ஆகம வழியில் சைவர்களை வழிநடத்த வேண்டிய சைவக்குருமார் சிலரும், பிரமுகர் சிலரும் தன்னலத்தினால் சைவ விரோதச் செயல்களை ஊக்குவிக்கின்றனர். சிவசிந்தனையில் தோய்ந்திருக்க வேண்டியவர்கள் 'சிவஸ்ரீ" "குருக்கள்" முதலிய பட்டங்களைத் தாங்கிக்கொண்டு, சிவ நிந்தனை செய்கின்றனர். சைவ ஆகமங்களை ஒதுக்கும் வைதீக மடங்களுடன் தங்களை இணைத்தும், தமது பிள்ளைகளை அவற்றில் குருப்பட்டப்பயிற்சி பெறச்செய்தும் சைவத்தைச் சிதைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில், இன்று "சித்தாந்த விளக்கில் சைவக் கிரியைகள்" என்ற இந்நூல் வெளிவருவது மிகவும் வேண்டற்பாலது: மிகுந்த பயனளிப்பது. இதனை மீள்பதிப்புச் செய்ய முன்னின்று உழைத்தவர் கோலாலம்பூர் சிவத்திரு ஐ. குலவீரசிங்கம் அவர்கள். அவர் சிவப்பொலிவுடன் விளங்கும் சீலர். அவரின் சிந்தனையும் பேச்சும் செயலும் சிவம் பெருக்கும்தகையன. இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த அவருக்கும், அமரர் முருகேசு கந்தப்பிள்ளை குடும்பத்தினருக்கும், அவரைச் சார்ந்த வருக்கும் சைவ உலகம் என்றும் நன்றிக்கடப்பாடுடையது.

மூன்றாண்டுகளுக்கு முன்பே இந்நூல் வெளிவர இருந்தது. ஆயினும் கணினி அச்சுக்கோப்பு முடிந்த நிலையில் நூற்பதிப்பு தடைப்பட்டது. அண்மையில் நான் மலேசியாவில் சொற்பொழிவுகள் ஆற்றிய வேளையில், அன்பர் குலவீரசிங்கம், இந்நூல் வெளிவர வேண்டும் என்ற நோக்கில், என்னை அணுகினார். அவரின் வேண்டுதலுக்கிணங்கி, அவர் தந்த நூற்பிரதியைப் புதிதாக கணினி அச்சுக் கோப்பு செய்து, சரிபார்த்து, அச்சிட்டு நூலாக்கியுள்ளேன். பல பணிகளுக்கிடையில் இச்சிவப் பணியில் என்னை ஈடுபடுத்தியது இறையருள் என்றே எண்ண வேண்டியுள்ளது.

சைவமக்கள் இவ்வரிய நூலைப் படித்துப் பயனடைவார்களாக.

21 (9/2) பீச் ஹோம் அவென்யு,
பெசென்ட் நகர், சென்னை 600 090
(குப்பிளான், யாழ்ப்பாணம்)

அன்பன்
க. கணேசலிங்கம்
25–10–2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாலயக் கிரியைகள் 1.

## வாழ்க்கைப் பேறு

**'வாழ்க்கை வாழ்வதற்காகவே தான்'** என்றது அனுபவக் கல்வியின் அரிவரிப் பாடம் மட்டும் தான். வாழ்க்கைக்கு முடிவான ஒரு பேறு வேறே இருக்கிறது. அது உலக வாழ்விற் பெறும் சாமானிய பேறுகளுக்கு வேறானது. புது வகையான ஒரு இன்ப அனுபவ வாழ்வு அது. பேரின்பம், மெய்யின்பம், முத்தியின்பம் என்ற பெயர்களில் உள்ளது அவ்வாழ்வு. இது ஆஸ்தீகக் கொள்கையுள்ள மக்களின் அசையாத நம்பிக்கையாகும்.

எங்கள் சமயத்தைப் பொறுத்தவரையில், உயிரானது தன்னோடு உடனாயுள்ள பரம்பொருளை அறிந்து அதனோடொன்றுபட்டு அதனால் வாய்க்கும் இன்ப அனுபவ நிலைதான் வாழ்க்கையின் முடிவான பேறு ; அதுவே ஆத்மலாபம்; அதுவே முத்தியின்பம் என்ற கொள்கையுண்டு. இந்த வாழ்க்கை ஏற்பட்டதன் ஒரே நோக்கம் அந்த இன்பப் பேறே என்பது முடிவான உண்மையுமாகும்.

## சைவ சாதனை

அந்த உயர்ந்த நிலையைப் பெறும் விஷயம் அநாயாசமாகக் கைகூடிவிடமாட்டாது. எவராயினும் அதை நாடுபவர் அதற்கான பூரண தகுதி பெறவேண்டும். அந்த தகுதி அகத்திலும் ஏற்படவேண்டும் ; புறத்திலும் ஏற்பட வேண்டும். அதற்கேற்ற அளவான சாதனை ஒவ்வொருவர்க்கும் அவசியம் என்பது எல்லோராலும் ஏகோபித்து உணரப்பட்ட ஒரு உண்மையாக இருக்கிறது.

கடவுட் கொள்கையேயில்லாத பௌத்தர், சமணர் முதலியோர் கூட ஏதோ ஒரு வகையான ஆன்மலாபப் பேற்றில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதை அடைவதற்கென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபாரமான சாதனைகளை மேற்கொள்கிறார்கள். பஞ்சசீலம், அஷ்டசீலம், தசசீலம் போன்ற சாதனைகள் பௌத்தர்களிட முண்டு. அஷ்டாங்கயோகம், ஆசிரவம் போன்ற சாதனைகள் சமணர்களிடமுண்டு.

சைவசமயம் இப்படியான சாதனைகள் அளவில் திருப் திப்படுவதில்லை. அது கருதுகின்ற உயர்ந்தரக அனுபவப்பேற் றுக்கு இவையெல்லாம் பற்றாக்குறையானவை. இவற்றைத் தனக் கேற்ற அளவில் அமைத்துக் கொண்டு இவையெல்லாவற்றுக்கும் இடந்தந்து இவற்றிலும் மேலாய் விரிந்து நிற்கும் ஒரு சாதனை யைச் சைவசமயம் மேற்கொண்டிருக்கின்றது.

கடவுளை முன்னிலையாகக் கொண்டு, கடவுள் தந்த உடம்பையும் உடற்கருவிகளையும் மனம் முதலிய மற்றுங் கருவிகளையும் நேர்படுத்திப் பூவும், நீரும், தூபமும், தீபமும் முதலாயின கொண்டு பூசை செய்து அதன் மூலம் கடவுள் அனுபவப்பேற்றைப் பெறுவது சைவங்கண்ட சாதனையாகும். சைவங்கண்ட இச்சாதனையே மனிதரின் தேக இயல்பு, மன இயல்பு, விவேக இயல்பு, உயிரியல்பு ( Physical, mental, intellectual and spiritual aspects) என்ற நால்வகை இயல்பு களுக்கும் ஒத்தியலக்கூடிய ஆத்மசாதனையெனவும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றது. வேறு சில சமயங்களிலும் இப்ப டியான சாதனை சிறுகச் சிறுக உண்டு. ஆனால் சைவத்தில் மட்டுமே இது பண்பும் பயனும் பெருகக்கூடிய அளவுக்கு விரி வாகவும் விளக்கமாகவும் அமைந்திருக்கிறது. அதனால் பூசை முறையாகிய சாதனை சைவத்துக்குரிய சிறப்பியல்புகளில் ஒன்றா கின்றது.

சைவம் இதற்கென்று விரிவான ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கின்றது. பிரமாண்டமான ஆலயங்கள் கட்டியெ ழுப்பப் பெற்றிருக்கின்றன. பூசித்தற்குரிய தெய்வ மூர்த்தங்கள் தெய்வீகக்களையோடு வார்த்து வைக்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைக்கு வேண்டிய சகலவித உபகரணங்களும் அங்கங்கு சம்பாதித்து வைக்கப்பட்டிருக்கின்றன. பூசையைச் செய்வதற் குரிய விதிமுறைகள் பற்றி விரிவான விளக்கங்களைத்தரும் நூல்கள் பெருமளவில் தயாரித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றை மக்கள் உரிய முறையிற் கையாண்டு வாழ்க்கைப் பெரும் பேறாகிய பேரின்பப் பேறடைதல் வேண்டும் என்பது சைவ சமயத்தின் உட்கிடையாகும்.

## நம்மவர் கடன்

நம் சூழலிலே நம்முன்னோர் எத்தனை எத்தனை ஆலயங்களை நிறுவி வைத்திருக்கிறார்கள். தமது சந்ததியா ரெல்லாம் மீளமீளப் பிறந்து இறந்து, பிறந்து இறந்து கொண்டு இருக்கும் வீண்வாழ்வுக்கு ஆளாகக் கூடாது. ஒவ்வொருவரும் தமக்கியலுமான அளவு விரைவாகப் பிறவாநிலை அடைய வேண்டும் ; அதற்குக் காரணமாகிய உயர் பேரின்ப நிலையை எய்தவேண்டும் ; அதற்கு ஒரேயொரு சாதனையாயிருக்கும் இந்தப் பூசைமுறையில் எல்லோரும் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கிருந்த ஆவலை இந்த ஆலயங்கள் நமக்கு எடுத்துணர்த்திக் கொண்டிருக்கின்றன. இந்த உணர்தலுக்கு அசைந்து கொடுக்காத அளவும் அவர்கள் நம்மேற் கொண்ட கரிசனைக்கு நாங்கள் உத்தரவாத மற்றவர்களாய்ப் போக நேரிடும். ஆதலால் இப்பூசையின் மகத்துவத்தை உரிய முறையில் விளங்கிக்கொள்ள வேண்டியது நமது இன்றியமை யாத கடமை என்போம்.

## சமய தத்துவஞான இணைப்பு

இந்த விளக்கம் நமக்கு இன்றியமையாதென்பதை இன்னொருவகையாலும் நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். நமக்குரிய சமயம் (Religion ) சைவம் ; நமக்குரிய தத்துவ ஞானம் (Philosophy) சைவசித்தாந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் அருளைப் பெறுதலை முன்னிட்டு மக்கள் அநுசரிக்கும் ஆசார அநுட்டானங்களும், பக்தி முறையான வழிபாடுகளும் சமயம் என்ற பெயரில் அடங்கும். கடவுள், உயிர், உலகம் என்ற உண்மைப் பொருள்களைப் பற்றிய அறிவாராய்ச்சியும் விசாரணைகளும் தர்க்க ரீதியான வாதப் பிரதிவாதங்களும் தத்துவஞானம் என்ற பெயரிலடங்கும்.

உலகில் மற்றைய மதங்களைப் பொறுத்தவரையில் சமயமும் தத்துவஞானமும் சகல விதத்திலும் ஒத்துபோகும் அமைப்பு பெரும்பாலும் இல்லை. சில சில மதங்களில் சமயமும் தத்தவஞானமும் ஒன்றினொன்று முட்டாமல் தனித்தனி தன் தன் பாட்டிற் போய்க் கொண்டிருப்பதுமுண்டு.

உருவ வழிபாடு அர்த்தமற்றது. கீழ்நிலையில் உள்ளவர்கள் அதைச் செய்யிற் செய்து கொள்ளலாம். மேல்நிலை அநுபவத்துக்கு அது உதவாது என்று ஒரு தத்துவஞானம் பேசிக்கொண்டிருக்கும். அதே தத்துவஞானத்துக்குரிய மதத்தவர்கள் அநேகர் இறுதிவரை உருவ வழிபாடே செய்துகொண்டிருப்பார்கள். இப்படியான மதமும் ஒன்றிரண்டு நம் நாட்டிலேயே இருத்தல் கண்கூடு.

சைவத்துக்கு இந்தப் **பொருந்தாப் போக்குக்** கிடையாது. சைவத்தில், சமயத்துக்கும் தத்துஞானத்துக்கும் **அனுப்பதைக்கு மளவுக்குக் கூட** (அணுப்புதைக்குமளவு) வேற்றுமை கிடையாது. சைவசித்தாந்தத்தில் நாம் என்னென்ன பேசுகிறோமோ அந்தந்தக் கருத்துக்களுக்குச் சமதையான அநுசரணை சைவ சமயப் பூசை முறையில் இருக்கிறது. எனவே சிலர் கருதுவது போன்று எங்கள் பூசை முறை தனியாகச் சமயம் என்று ஒதுக்கப்பட வாராது. சைவசித்தாந்த நூல்கள் தனியாகத் தத்துவ நூல்கள் என்று ஒதுக்கப்படும் நிலையும் வாராது. பூசைமுறை தத்துவஞானப் பின்னணியில் தான் நடைபெறுகிறது. தத்துவஞானம் பூசை அனுசரணையின் அநுபவப் பேறாகத்தான் அடையப்படுகிறது. பூசை காரியங்களுக்குக் கிரியை என்றொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர். தத்துவ சாஸ்திர அறிவுக்கு ஞானம் என்றொரு பெயர். கிரியையும் ஞானமுங் கைகோத்துத் திளைக்குங் காட்சி எங்கள் பூசைக்கு உரிய தனிப் பெருஞ் சிறப்பாகும். இந்த **அன்னியோன்ய நிலையை** அறிஞருலகம் வெகுவாகப் பாராட்டு கிறது.மேல்நாட்டு அறிஞர்கள் இதனை வாயாரப் புகழ்கிறார்கள். இதற்கு இடமாயிருக்குங் காரணம் ஒன்றே பற்றி, இந்தச் சமயத்துக்குரிமை பூண்ட எங்கள் சாதிப் பண்பை, உலகச் சாதிப் பண்பெல்லாவற்றிலும் **உயர் பண்பாக** அவர்கள் கணித் திருக்கிறார்கள்.

இந்தப் பெருமை எங்களைக் கௌரவிக்கும் பெருமை. இது எங்களுக்கு வேறு எவ்வகையாலும் வாய்த்த பெருமை யல்ல. சமயத்தால் மட்டும் வாய்ந்த பெருமை. அதிலும் எங்கள் ஆலய பூசைமுறை எமக்குத் தேடித் தந்தபெருமை இது.

## முப்பொருளும் பூசையும்

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களைப் பற்றி எங்கள் தத்துவ ஞானமாகிய சைவசித்தாந்தம் பேசுகின்றது. மூன்றும் ஒன்றுக்கொன்று வேறாகப் பிரிக்கப்படாதவை. பதி வியாபகத்துள் பசு வியாப்பியம். பசு வியாபகத்துள் பாசம் வியாத்தி. அநுபவமுடிவில் (Realization) இந்த மூன்றும் ஒன் றாகவே நம்மால் உணரப்பட இருக்கின்றன. ஒன்று தத்வ தரிசனம் மற்றையது ஆன்மதரிசனம். ஏனையது சிவதரிசனம். மூன்றும் ஒரே தொடர்பில் இடையீடின்றி அறியப்படுகின்றன.

அனந்தச் சாத்மா விஸ்வரூபோஹி அகர்த்தா
த்ரயம் யதா விந்ததே ப்ரஹ்ம மேதத்.

**பதி பசு பாசம் என்ற இம்மூன்றையும் எப்பொழுது இந்த ஆன்மா தன் அநுபூதியில் அறிகிறதோ அப்பொழுது மட்டுமே அது பிரமத்தை அறிந்ததாய், எல்லையற்றதும், வியாபகத் தன்மையுடை யதும், தான் எதற்குங் கர்த்தாவாகா நிலையை உணர்ந்ததும் ஆகும். - சுவதாஸ்வதரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அந்தப் பக்கம்.

இனி இந்தப் பக்கம் சமயத்துக்கு வருவோம். எங்கள் பூசையிலே முப்பொருளும் இடம் பெறவிருக்கும் அமைப்பு சுவாரசியமானது. பூசையிலே சிவம் (சுவாமிமூர்த்தம்) இருக் கிறது ; பூசிக்கின்ற ஆன்மா (பூசிக்கின்றவர்) இருக்கிறது ; பாசப் பொருள்களாகிய பழம், பாக்கு, வெற்றிலை, பட்டுப்பணி, பணிகாரம், அன்னம், மேளதாளம், நடனம் சங்கீத நாட்டிய கலாரசனை, குடை, கொடி, ஆலவட்டம் எல்லாம் இருக்கின்றன. முப்பொருட் சேர்க்கை எங்களுக்கு அங்கு (தத்துவஞானம்) மட்டுமல்ல இங்குந்தான். இத்தகைய பாசப் பொருள்க ளெல்லாம் கவர்ச்சியூட்டுபவை. மனவிகாரத்தை வருவிப்பவை, பழமும் பணிகாரமுங் கண்டால் வாயூறும். அழகான பட்டைக் கண்டு கண் மயங்கும். இந்த நிலையில் புலனடக்கம் எங்கே? மன ஒடுக்கம் எங்கே? கடவுள் தியானம் இங்கே லபிக்குமா? இப்படி நினைப்பவர் சிலர். சிலருக்கு உண்மையில் இது பெரிய பிரச்சனை. இப்படியாக ஆட்சேபிக்கின்றவர்கள் பலர் இருக்கலாம். ஆர் எதுவும் சொல்லலாம். ஆனால் சைவம் இதற்கு அசைந்து கொடுக்காது ஏன்? எப்படி? என்பது இன்னுஞ் சற்றுத்தூரம் போகத் தெரியவரும்.

## பொறிகளை நெறிப்படுத்தல்

தியானத்துக்குப் புறநிலைக் கவர்ச்சிகள் தடையானவை. மன விகாரத்தை வருவிக்குஞ் சாதனங்கள் குந்தகமானவை. இவற்றையாரும் மறுப்பதற்கில்லை. இக்காரணத்தால் பௌத்தர் சமணர் முதலியோர் தியானத்துக்கு ஒதுக்கிடந்தேடிப் போனார்கள். வெளிப் பொருளிலீடுபடுஞ் சுபாவமுடைய ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்க முற்பட்டார்கள். உணவும் நீரும் உரிய அளவு கொடுக்காமலே உடம்பை வாட்டி வதைப்பதுஞ் செய்தார்கள். இதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் சுய இயல்பிலிருந்து நேரடியாக அவற்றை மடக்கித் திருப்புவதற்கான வன்முறைச் செயல்களிலும் ஈடுபட்டார்கள். இப்படி இயல்புக்கு விரோதமாக வன்முறைச் செயல்கள் செய்வதனால் அவை அடங்குமா? மனோதத்துவக் கோட்பாட்டுக்கு இது நேர் முரணானது. அவற்றை வன்முறையால் அடக்க அடக்க அவை துள்ளுமேயன்றி அடங்கமாட்டா.

**'அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்**
**அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை'**

என்று திருமூலர் இக்கருத்தை அத்தாட்சிப்படுத்தி யிருக்கிறார். வெளியிலே பார்க்கவிடாமல் கண்ணை மூடினால் அது உள்ளுக்குள்ளே எத்தனை விசித்திரமெல்லாங் காண்கிறது. வெளிச் சத்தங் கேட்கக் கூடாதுதென்று காதைப் பொத்திக் கொண்டால் உள்ளுக்குள்ளே எத்தனையாயிரம் விசித்திர விநோதக் கிளுகிளுப்பெல்லாம் கேட்கிறது. " நான் ஒன்றும் நினைக்கிறதில்லை சும்மா இருக்கப் போகிறேன்" என்று ஓரிடத்திலே இருந்தால் மனம் எத்தனை எத்தனை விசித்திர லோகங்களிலெல்லாம் பவனிவருகின்றது. "இப்போ தியானம் பண்ணுவோம்" என்று தானே தியானத்தைத் தொடங்கி விட்டு தியானிப்பவர் இருந்த இடத்திலேயே இருக்க மனம் எங்கெங்கெல்லாம் உலாவிவருகின்றது. **இவையெல்லாம் நாம் அறியாத புதிர்களா என்ன!**

ஞானிகள் விஷயம் வேறு. அவர்கள் கண்ணை மூடினாலும் ஒன்றுதான் ; மூடாவிட்டாலும் ஒன்றுதான். அவர்கள் சதாகாலத் தியானத்தில் உள்ளவர்கள். இங்கே பேசுவது நம்மவர் நிலையைப் பற்றி. நம்மைப் பொறுத்தவரையில் வன்முறையால் அடக்கும் அடக்கம் விபரீதத்தையே விளைவிக்கும். அநுகூலத்துக்கெதிர் பிரதிகூலமாய் விடும்.

எனில், அவற்றை அவற்றின் வழியே விட்டுவிடுவது தான் நமக்கு வழியா? அதுதான் கடவுள் வழிபாடா? என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டத்தில் பொறுத்த கேள்வி. இந்தப் பொறுத்த கேள்விக்கு அந்தரங்கமான விடையுமுண்டு. சற்று அமைதியாய் நோக்க வேண்டும்.

பார்ப்பது கண்ணின் தோஷமல்ல. பார்க்க வேண்டாததைப் பார்க்க முனைவதே கண்ணின் தோஷம். அதிலும், பார்க்க வேண்டியது பார்க்கத் தகாதது இரண்டும் உள்ள ஓரிடத்தில் பார்க்க வேண்டியதை புறக்கணித்துக் கொண்டு வேண்டாததை விழுந்துகட்டிப் பார்த்தல் கண்ணுக்குப் பெருந் தோஷம். செவிக்கு, மனத்துக்கு, விரிவாகச் சொன்னால் ஐம் பொறிகள், ஐம்புலன்கள், அந்தக்கரணங்கள் அனைத்துக்கும் **இந்தத் தோஷநிலை இருக்கவே இருக்கிறது.**

ஏன்? நிலையானவை, நிரந்தரமானவை, நன்மையானவைகளைச் சாதாரணமாக்கிவிட்டு, நிலையற்றவை, நிரந் தரமற்றவை, தீமையானவைகளில் விசேட அக்கறை காட்டும் சுபாவம் மனிதருக்கில்லையா? மெய்யான மெய்யைப் பொய் யென்றும் பொய்யான பொய்யை மெய்யென்றும் நம்பியுலையும் இயல்பு நமக்கில்லையா? நம் சமூகத்தில் உலாவும் அரைப் பொய், காற்பொய்களை முழுமெய்களாகக் கொண்டதனால் நமக்கு விளைந்த கஷ்டநஷ்டங்கள் தான் எத்தனை? இவற்றை யெல்லாம் உள்ளடக்கி,

> **'பொருள் அல்லவற்றைப் பொருள் என்று**
> **உணரும் மருள்'** என்றார் திருவள்ளுவர்.

> **'பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்**
> **புழுத்தலைப் புலையனேன்'**

என்றார் மாணிக்கவாசகர். இதனால் நாம் விளங்குவது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் சேர்ந்து வாழும் உயிருக்கு இந்த விபரீத நிலை இருக்கிறது. எடுத்த பிறப்பிலேயே வாழ்வின் இலட் சியத்தை அடையாமல் மீள மீளப் பிறக்க வேண்டிச் செத்துக் கொண்டிருக்கிற இழிநிலையை நமக்குச் சாஸ்வதமாக்கிக் கொண்டிருக்கிறதும் இந்த விபரீதம்தான். திருவள்ளுவர் அழ காகவே சொன்னார்.

**'மருளான் ஆம் மாணாப் பிறப்பு'** என்று.

**'பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே**
**தொழிலாகி இறக்கின்றாரே'**

என்கிறார் அப்பர் சுவாமிகள்.

உயிரியல்பாய்ப் போன இந்த விபரீதநிலை மாற வேண்டும். பொய்யை விட்டு மெய்யைப் பார்க்கிற கண்ணாக நம்கண் மாற வேண்டும். பொய்யைக் கேளாது மெய்யைக் கேட்கும் செவியாக நம்செவி மாற வேண்டும். ஏனையவும் இப்படியே. அப்பர் சுவாமிகள் அருளிய **திருவங்கமாலையின்** அர்த்தப்பெருமையைச் சிந்திப்பதற்கு இது நல்ல தருணம். அவர் பாடிய **"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா"** என்ற பாடலின் சிறப்பைச் சிந்திப்பதற்கும் இது நேர்த்தியான சந்தர்ப்பம். சமணரோ பௌத்தரோ சொல்லுவதாயிருந்தால், **"கண்காள் காணாதீர்கள்"** என்றும் ஒருவேளை (அவர்கள் கொள்கையின் பேரில்) சொல்லியிருப்பார்கள். அப்பர் அப்படி யல்லவே. **"கண்காள் காண்மின்கள் "** என்று தான் சொல்லு கிறார்.

"கண்களே' நீங்கள் பார்ப்பதற்கென்றே படைக்கப்பட்ட வர்கள். உங்களைப் பார்க்க வேண்டாம் என்று சொல்வதற் கில்லை. பாருங்கள் நன்றாய்ப் பாருங்கள். எதை? **எண்டோள் வீசிநின்றாடும் பிரான்தன்னைப் பாருங்கள் "** என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே பாங்கில் சகல அங்காவயங்களுக்கும் அப்பர் சுவாமிகள் செய்த சற்பிரசங்கமே **திருவங்கமாலை.**

## சைவ விவேகம்

நம்புலன், பொறி, மனம் என்பவற்றின் பொய்ம்மையியல் பைக் கண்டு கொண்டு அவற்றைப் பொய்மையில்இருந்து மெய்ம்மைக்குத் திருப்பும் சைவஞானநிலை இது. பாசப் பொருள் களைப் பரப்பி வைத்துக் கொண்டே, பூசையில் உயிருணர் வைக் கடவுள்பால் செலுத்தும் பயிற்சியை உண்டாக்கும் எங்கள் சமயநிலை அது. இதில் விவேகம் உண்டோ இல்லையோ? விவேகிகளாயுள்ளவர்கள் தீர்மானிக்க வேண்டியது.

**'அசதோ மா சத் கமய'**

"நிலையற்றதிலிருந்து என்னை நிலையானதற்குச் செலுத்து" - பிருக தாரண்ய உபநிஷதம்.

**'பத்ரம் கர்ணேபி : ச்ருணுயாமதேவா:**
**பத்ரம் பச்யேம அஷரீர் யஜத்ரா:'**

"எம் காதுகளால் நன்மையானவற்றையே கேட்போமாக தேவர் **களே**' எம் கண்ணால் நன்மையானவற்றையே பார்ப்போமாக யஜத் **திரர்களே**' " உபநிஷ்த மங்கள சுலோகம்.

இந்த உபநிடத உண்மைகள் குறித்த உண்மைக்குப் பின் **னணிக் கீதம்** இசைக்கின்றன.

## எல்லாம் சிவனுக்காக

பாசப் பொருள்களின் சமூகத்திலே கண்கள் அவற்றைப் பார்க்காமல் சுவாமியைத்தான் பார்க்கின்றன என்பதற்கு என்ன உத்தரவாதம்? என்ற கேள்வி இக்கட்டத்தில் எழுமே என்றால், அது மிகவும் நல்லது. அக்கேள்வி எழத்தான் வேண்டும். அக் கேள்விதான் எங்கள் விஷய ஓட்டத்துக்குச் சவள் போடுதலாயி ருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கட்டத்தில் கண்கள் பாசப் பொருள்களைப் பார்ப்ப தில்லை என்று யாரும் சொல்வதில்லை. பார்த்துக் கொண்டே யிருக்கப் பார்க்கவில்லை என்று கூறுவது திருஷ்டி தோஷமாய் விடும். கண்கள் பார்க்கின்றன. ஆனால் பார்க்கும் விதத்தில் வேறுபாடுண்டு.

சாப்பாட்டறையில் பழம் பணிகாரம் என்பவற்றைப் பார்க் கும் நோக்கம் வேறு. பூசையில் அவற்றைப் பார்க்கும் நோக்கம் வேறு. சாப்பாட்டறையில் நிகழ்வது அவற்றைத் தனக்காக்கும் ஆவல் நோக்கு. பூசையில் நிகழ்வது அவற்றைச் சுவாமிக் காக்கும் அர்ப்பண நோக்கு. ஆடையாபரணங்கள் பட்டுப் பணிகளை வேறிடத்தில் நாம் நோக்கும் நோக்குக்கும் பூசையில் அவற்றை நோக்கும் நோக்குக்கும் இத்தகைய வேறுபாடே யுண்டு. அன்றியும் அப்பழம் பணிகாரம் முதலியவற்றை அர்ச்சகர் அன்பாதரவாகத் தொட்டுக் குழைந்து கசிந்து சுவாமிக்கு ஊட்டுகிறதைக் காணும் கண்ணுக்குச் **சுவாமி சாப்பிட்டிருக்கிறார்** என்ற திருப்தி முன்னிற்குமேயல்லாது அதைத் தான் வாஞ்சிக்கும் நிலை அணுவளவும் ஏற்படாது. பட்டுப் பணிகள் சுவாமியிற் சாத்தப்பட்டிருக்கக் காணும் கண்ணுக்குச் சாமி அழகாயிருக் கிறார் என்ற திருப்தியே முன்னிற்கும். தான் காணுஞ் சுவாமி அழகுக்குப் பட்டுப்பணி அழகுகள் விசேடணங்களா (Attributes) யிருக்கக் காணுங் காட்சி விசேடமன்றி அவற்றின் அழகுக்காக அவற்றைப் பார்க்கும் நிலை அங்கில்லை. கண்ணப்பர் செய்தி மெய்யென்று நிரூப்பிப்பதை விடப் பொய்யென்று நிரூபிப்பது கஷ்டத்தின் மேற் கஷ்டம். அவ்வளவுக்குச் சைவக் கலாசாரத் திலே ஊறிச் சுவறிப் போயிருக்கிறது கண்ணப்பர் செயல். அவர் மாமிசத்தை வாயிலிட்டுச் சுவைத்த நிகழ்ச்சி ஏதோ உண்மைதான். ஆனால் சுவைத்தது எதற்காக? தனக்காகவல்ல, சுவாமிக்காக, சமானியமாக நம்மவர் நினைக்கவும் அஞ்சக் கூடிய செயல். நாம் மட்டுமல்ல மாணிக்கவாசகர் போன்ற வர்களே தம்மை மறந்து வியக்குஞ் செயல். நீண்ட காலச் சரித்திர வரலாற்றில் முன்மை பின்மை காணாத செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணப்பர் ஒருவர் மட்டுமே செய்த செயல். அவர் செயற் கிறுக்கு. ஒருவகை அன்பின் கிறுக்கு. அது, **"கண்ணப்பர் அன்பு"** என்ற ஒரு தனியன்பு. அதற்குள் உறையும் புதிர் யாதெனில் அவர் **தனக்காகவல்ல, சுவாமிக்காகச் சுவைத்த** புதிர் தான்.

இங்கே நாங்கள் நிற்குஞ் சந்தர்ப்பத்துக்கு இது தரமான எடுத்துக் காட்டு. சுவாமிக்காகப் பழம் பணிகாரங்களைப் பார்ப் பதிலும், சுவாமி அழகாகவே பட்டுப் பணிகளைப் பார்ப்பதிலும் பார்வைத் தோஷமில்லை. அப்பர் சுவாமிகளின் உபதேச நெறி யிலேதான் உண்மையுண்மையாகக் கண் நிற்கிறது இங்கே. இவ்வளவுங் கூறியது எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு அநுபவ ரீதியான விளக்கம். இனி இதற்குப் பூசை முறை ரீதியான ஒரு விளக்கமிருப்பதைக் கவனிப்போம்.

## சுத்திகரிப்பு

எங்கள் பூசை விஷயங்களில் அதிக இடத்தைப் பிடிப்பது சுத்திகரிப்புக்கிரியை. மந்திரசுத்தி, லிங்கசுத்தி, தானசுத்தி, பூத சுத்தி, திரவியசுத்தி முதலாகச் சுத்திகரிப்புக்கள் அனேகம். ஓமத்துக்குக் கொண்டு வரும் அக்கினிக்கே சுத்திகரிப்பு விதி சொல்லப்படுகிறதென்றால் சைவங் கைக்கொண்டிருக்கும் இச் சுத்திகரிப்பின் நுணுக்க விபரங்களை எப்படிச் சொல்லுவது? எனினும், இவற்றில் இரண்டு சுத்திகளை இப்போது கொஞ்சம் கவனிக்க வேண்டும். பூசைக்கென்று கொண்டுவரப்படும் பால், பழம், மலர், தண்ணீர் முதலாகிய சகலமும் பாசப்பொருள்கள். இவையனைத்தும் மாயைப் படைப்புக்கள். எங்களை அகப் படுத்தி நிற்கும் மாயைக்கே அசுத்தமாயை என்று பெயர் என் றால் இப்பொருள்கள் அசுத்த சம்பந்திகளாயிருத்தல் பற்றிச் சந்தேகிக்க இடமில்லை. நாம் வழிபடும் மூர்த்தியே கல்லில் அல்லது உலோகத்திற் செய்யப்பட்டதாயிருப்பதனால் அதற்கும் இந்த அசுத்த சம்பந்தம் இருத்தல் தவிர்க்க முடியாது என்று கொண்டு அந்த மூர்த்திக்கே லிங்கசுத்தி என்ற சுத்திகரிப்பு விதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறாயிருக்கிறது. அப்படி சுத்திகரிக்கப்பட்ட பின்பே அங்கு ஆவாஹிக்கப்படும் சுத்தமயமாகிய தெய்வசாந்நித்யத்தை ஏற்க அம்மூர்த்தி தகுதியடையதாகும். இது இப்படியிருக்கையில் அந்த மூர்த்தியில் அபிஷேகிக்க இருக்கும் பொருள்களுஞ் சரி அதற்கு நிவேதிக்க இருக்கும் பொருள்களுஞ்சரி சுத்திகரிக்கப் படாமல் அமையுமா? திருமஞ்சனக் கிணற்றில் எடுக்கும் பச்சைத் தண்ணீர் கூட உரிய முறையில் உரிய மந்திரமோதி மலரிட்டு அர்ச்சிக்கப்படாமல் பூசைக்கோ அபிஷேகத்திற்கோ உபயோகப் படுத்தலாகாது. அவசர புத்தியாலோ, அக்கறையீனத்தாலோ, அறியாமையாலோ இது அநுசரிக்கப்படாவிட்டால் அது மாபெருந் தோஷமாகும். அத்தகைய செயல்கள் மூர்த்தியின் தெய்விகத் தூய்மைக்கு ஒவ்வாதவை. ஏலவே அதனிடத்தில் இருக்கக் கூடிய தெய்விக சாந்நித்தியத்தையும் இல்லாமற் செய்துவிடக் கூடியவை. இந்த அவசியத்தை முன்னிட்டுத் திரவியசுத்தி இடம் பெறுகின்றது.

## இன்றைய தேவை

இன்றைய எங்கள் ஆலயங்களில் விசேடமாக நித்திய பூசையில் இது சம்பந்தமாக நாங்கள் காணக்கிடக்கும் ஒழுங் கீனங்கள் மிகமிக மோசகரமானவை. அவற்றை வெளியிற் சொல்வதும் அழகில்லை. அவற்றை நீடிக்க விடுவதும் நியாய மில்லை. சம்பந்தப்பட்டவர்கள் அறிந்து திருந்த வேண்டும். அல்லது உரியவர்கள் தலையிட்டுத் திருத்த வேண்டும். இது இன்றைய முக்கிய தேவை என்பதை மட்டும் வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

## பூத சுத்தி

திரவியசுத்தியைப் போலவே முக்கியத்துவமுள்ளது பூத சுத்தி. அது பூசைத் திரவியங்களைப் பொறுத்தது. இது பூசிக் கிறவரைப் பொறுத்தது. இதற்குத் தேகசுத்தி என்றும் பெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் என்றால் மண். நீர், நெருப்பு, காற்று, வெளி என்ற ஐந்துமாம். சமயவிஷயம் சம்பந்தமாகப் பேசும்போது இவற்றை இப்பெயர்களால் கூறுவதில்லை. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற சொற்களே கையாளப்படும். உலகம், உடல், உயிர், உயிர் வாழ்க்கை என்பவற்றைப் பொறுத்தவரையில் இப் பஞ்ச பூதங்களின் ஆட்சியே எங்குமாயிருக்கிறது. பிருதிவியும் அப்புவும் முறையே நிலப் பகுதியும் நீர்ப்பகுதியுமாய் அமைந்து நாம் வசிக்கும் பூவுலகம் காணப்படுகின்றது. இது போன்ற பல உலகங்களைக் கொண்டது ஒரு அண்டம். அப்படிப் பல அண் டங்களைக் கொண்டது ஒரு புவனம். சூரபன்மன் ஆளுகைக் குட்பட்டிருந்தவை இப்படியான அண்டங்கள் ஆயிரத்தெட்டு. அவ்வளவும் பிருதிவியண்டங்கள். மற்றைய நாலு பூதத்துக்கும் தனித்தனி. இவ்வகையான பெருந்தொகை அண்டங்கள் உள. அவற்றின் விரிவைச் சொல்ல இருக்கின்றது கச்சியப்பரின் **கந்த புராண அண்டகோசப்படலம்.** நாம் சொல்லித் தொலையாது, இனி இவ்வண்டங்களிலுள்ள பல்வேறு கூறுகளாகிய உலகங்களில் உள்ள விசித்திர விநோதப் படைப்புக்கள் அனைத்தும் இந்த ஐம்பூதக் கூறுகளின் சேர்க்கைகள். சுருங்கச் சொன்னால் நாம் உண்ணுஞ் சோறு, குடிக்கும் தண்ணீர் ஒவ்வொன்றும் ஐம்பூதக் கூறுகளின் சேர்க்கையாலானவை. சோற்றை விஞ்ஞான ரீதி யாக அலசி ஆராய்ந்து பார்த்தால் அதில் ஒரு பெரும் பகுதி மண் (பிருதிவி), மற்றை நான்கு பூதங்களும் குறிக்கப்பட்ட ஒவ் வோரளவின. நாம் மண்ணையும் நெருப்பையும் வாயுவையும் தின்றோம் என்று எண்ணுவதற்கே இடம் வைக்காமல் இத் தனையையும் மெத்த விசித்திரமாகக் கலந்து சுத்த மாதுரியமான சுவைப்பண்டமாகப் பண்ணி வைத்தானே ஒரு சீமான்! அந்த இறைவனுக்கும் அவனுடைய படைத்தற்றொழிலுக்கும் இந்தப் பூதங்களே திரவியங்களாயிருக்கின்ற மகிமையை எண்ணிப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூதமின்றி யாதுமில்லை

இவ்விறைவனின் பூதப்படைப்புத்தான் நமது உடலும். இவ்வுடலிலும் ஒரு கூறு பிருதிவி: மற்றக்கூறுகள் மற்றை மற்றைப் பூதங்கள். இந்த உடல் நமது தூலதேகம். இது விழுந்தாலும் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கிற மற்றொரு தேகம் இருக்கிறது. அதன் பெயர் சூக்கும தேகம். அந்தச் சூக்கும தேகம் எட்டுப் பொருள்களின் சேர்க்கையாலானது. அந்த எட்டில் ஐந்து, இந்த ஐம்பூத மூலங்களாகிய தன்மாத்திரைகள். அவை சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பன. உயிருக்கு முதன் முதலாகப் பிறப்புக் கொடுக்கிற போதே இறைவன் இத் தன்மாத்திரைகளைச் சேர்த்து படைத்துக் கொடுத்த தேகம் சூக்கும தேகம். உயிர் இறைவனடியில் இரண்டறக் கலக்கும் வரை இந்தச் சூக்கும தேகம் பிரிவதில்லை. அதுவரை இப்பூத மூலங்களாகிய தன் மாத்திரைகள் உயிரைவிட்டுப் பிரியாமலே இருந்து கொள்கின்றன.

இனி இந்த உடலில் வாழும் உயிருக்கு அறிவு எப்படி நிகழ்கின்றது என்று ஆராய்ந்தால் வியப்பாயிருக்கும். இதற்கு முன்னேற்பாடாக, தூல உடலைப் படைக்கும் போதே இறைவன் இந்தப் பூதமூலங்களை உடலில் வெவ்வேறு பகுதிகளில் மிக நுணுக்கமாகப் பொருத்தி வைத்திருக்கிறான்.

கண் பாவையிலே இருக்கிறது தேயுவின் மூலமாகிய ரூபம்.
செவித் தொளைவில் இருக்கிறது ஆகாசத்தின் மூலமாகிய சத்தம்.
தோற் புரையில் இருக்கிறது வாயுவின் மூலமாகிய பரிசம்.
நா நுனியல் இருக்கிறது அப்புவின் மூலமாகிய ரசம்.
மூக்கு நுனியில் இருக்கிறது பிருதிவியின் மூலமாகிய கந்தம்.

சுவையான பண்டமொன்றைக் காணும்போது கண்ணிலோ செவியிலோ தோலிலோ மூக்கிலோ நீரூறுவதில்லை. நாவில்தான் நீரூறுகிறது. நாக்கிலே நீர்த்தொட்டியோ நீர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கமோ இல்லை. ஆனால் நீர் வருவிக்கப்படுகிறது. அதை நிகழ்த்தும் கர்த்தாதான் அந்த **"ரசம்"** என்ற பூதமூலம். அப்பு என்ற பூதத்தின் மூலம் இது. இப்படியாகச் சொல்லப்பட்ட ஐந் திடங்களிலும் அவ்வப் பூதக்கூறுகள் இருக்கிறது இருக்கிறது தான். சந்தேகமில்லை, ஆனால் அவற்றைக் கண்ணால் மட்டு மல்ல, பூதக்கண்ணாடியால் மட்டுமல்ல, எக்ஸ்ரே கதிர்களால் கூடக் கண்டுவிட முடியாது. அவ்வளவு அந்தரங்க பந்தோபஸ் தாக அவை வைக்கப்பட்டிருக்கின்றன என்றால் இந்த ஐம்பூத மூலங்களுக்கும் நமக்குமுள்ள உறவையுஞ் செறிவையுஞ் எண் ணிப் பார்க்க வேண்டியது தானே!

நமது அறிவுக்கு வெளியிலிருந்து வரும் விஷயம் எதுவா யினும் இந்த ஐம்பூத மூலங்களில் ஒன்றின் வடிவமாகவே யிருக்கும். அதாவது, ஒன்றில் ரூபமாய் அல்லது சத்தமாய் அல்லது ரசமாய் அல்லது பரிசமாய் அல்லது கந்தமாயே இருக்கும். இந்த ஐந்து வகைக்கும் அப்பாற்பட்ட எந்த ஒரு அறிவுக்கூறும் இருப்பதில்லை. இந்த ஐந்தும் ஐம்புலன்கள் எனப்படும். இவற்றில் ஒவ்வொன்றும் அறியப்பட வரும்போது அவ்வவற்றின் இனமாக அங்கங்கு ஏலவேயிருக்கும் தன்மாத் திரைகள் அவ்வவற்றைப் பற்றிக்கொள்கின்றன.

கண்ணப்ப நாயனார் புராணத்தில் ஒரு வேட்டைக் காட்சி வருகிறது. வேட்டையாடும் பகுதியைச் சுற்றி வலை போட்டிருக்கிறார்கள். வலைக்கு வெளியே வேட்டை நாய்கள் அட்டகாசம் பண்ணிக் கொண்டிருக்கின்றன. உள்ளே நிகழும் வேட்டைக் கலவரத்தில் வெருண்டோடும் பிராணிகள் வலையின் நொய்வான பகுதிகளைப் பிய்த்துக் கொண்டோட முயல்கின்றன. அவை வரவர வேட்டை நாய்கள் அங்கங்கு நின்று அவற்றைக் கவ்விக் கொள்கின்றன. நம் அறிவுக்கு வரும் **புலன்களைப் பொறிகளிலிருக்கும் தன்மாத்திரைகள் ஒன்றுவிடாமற் பற்றிக் கொள் ளுதல்** இவ்வேட்டை நிகழ்ச்சிக்கு உவமையாக அங்கே பேசப் படுகிறது. அந்த வர்ணனை எம் தன்மாத்திரைகள் புலன்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுதலில் கொண்டிருக்கும் உத்வேகத்தையும் சுறுசுறுப்பையும் கூட நன்றாகக் காட்டுகிறது.

இந்த வகையில் ஐம்பொறிகளிலுள்ள தன்மாத்திரைகளாற் பற்றப்படும் அறிவை மனம்பற்ற அதிலிருந்து புத்திபற்ற அந்த வகையிலே அறிவு நிகழும் என்பர். இதன்மூலம் நாம் அறிவதென்ன? நமது வாழ்க்கைக்கு **உலகமாய், உடல்களாய், உணவாய், மற்றும் போக்கியப் பொருள்களாய்** உதவுதலோடு உயிரில் அறிவு நிகழ்தற்குக் கூட இப்பூதமூலங்களே உள்ளும் புறமுமாய் நின்று உதவுகின்றன. புறத்தில் அறியும் விஷயமாய் நிற்கின்றன. உள்ளே அவற்றை ஏற்குங் கருவிகளாய் நிற்கின்றன.

இந்தப் பூதங்களும், புலன்களும், தன்மாத்திரைகளும் **இல்லாமல் நாமில்லை.** இவற்றை விலகி நாம் எதுவுஞ் செய்வதற்கில்லை. நமக்குப் பூசை வேணுமோ வழிபாடு வேணுமோ எதுவும் இவற்றின் அநுசரணையோடே தான் ஆகவேண்டியது. ஆனால் இவைதாம் மாயைப் படைப்புகளாயிற்றே'. அதற்குத்தக மாயையியல்பாகிய மயக்குந் தன்மை இவற்றுக்குச் சொந்தமாய்ப் போய்விடுகிறது. மாயையும் அசுத்தமாயை. அதற்கேற்ப அசுத்தத் தன்மையும் இவற்றிற் குடிகொண்டு விடுகின்றது. நமது அறிதல் நிலையிலுள்ள பலவகை ஒழுங்கீனங்களை முன்புங் கவனித்திருக்கிறோம். நம் கண், செவி முதலியவற்றின் குற்றப்பாடுகளையும் முன் கவனித்திருக்கின்றோம். முற்றுக்கும் பொறுப்பாயிருப்பது இந்த மாயையியல் பாகிய **மயக்குந் தன்மையும் அசுத்தத்தன்மையுந் தான்.** இனி இப் பொறிபுலன்களின் உபகாரத்தைப் பெற்றுக்கொண்டு உள்ளிருக்கும் இராச உயிரின் நிலை என்ன?

## அழுக்கினுள் அசுசிப் பிராணி

அவருமோ என்றால் இப் பொறிபுலன்களால் விளையும் மயக்கத்தையும் அசுத்தத்தையும் அதிகரிக்குங் குணமே தன் மயமாயுள்ள மற்றொரு பெரிய அழுக்கோடும் கூடிப்போயிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அழுக்கு ஆணவம். இந்த வகையிலே பார்த்தால் உயிரின் அகச் சூழ்நிலையும் அழுக்கும் மயக்கமும் ஆகத் தான் இருக்கக் காண்கிறோம். அழுக்குச் சூழ்நிலையில் **அசுசிப் பிராணி**யென்னும் படியாக இருக்கும் இந்த ஆத்மாதான் பூசைக்கு எசமான். ஆகவே இங்கு பூசையில் முதல் நடைபெற வேண்டியது இந்த ஆத்மாவின் உபகாரிகள் போன்ற ஓரளவிலே அபகாரிகளாயு மிருக்கும் பொறிபுலன்களைத் தூய்மை செய்யும் நிகழ்ச்சி யாகும். இத்தகைய சுத்திகரிப்பு நிகழ்ச்சியே **பூதசுத்தி** அல்லது **தேகசுத்தி** எனப்படுவது. இச்சுத்தி ஏற்படுமளவுக்குத் தக ஆத்மா வின் இயற்கை அழுக்காகிய ஆணவ மறைப்பிலும் அப்போதைக் கப்போது லவலேசமளவாயினும் வெளிப்புண்டாகும்.

## பூதசுத்திப் பலன்

இவ்வெளிப்பு மயமான சுத்தம் ஏற்படுவதால் நம் பொறி புலன்களின் அசுத்தத் தன்மையில் ஒரு பகுதியாவது விலகும். அவற்றின் மயக்குந் தன்மையில் ஒரு சிறிதாவது குறையும். இதற்கு ஏற்ற மாதிரியான கிரியைகளும் மந்திரங்களும் இந்தத் தேகசுத்திக் கிரியையிலே இடம்பெறுகின்றன. தேகத்தைச் சார்ந்த பிருதிவிபூதம் சுத்தஞ் செய்யப்படும் போது **'ஓம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் நிவ்ருத்தி கலாயை ஹ : ஹூம்பட்'** என்ற மந்திரம் உச்சரிக்கப்படும். இம்மந்திரத்தில் "ஹ்லாம்" என்பது **பீஜம்** எனப்படும். அது இங்கே ஐந்து தடவை வருதல் கவனிக்கத்தக்கது. இது முடிந்து, தேகத்தைச் சார்ந்த அப்பு தத்வபாகம் சுத்தஞ் செய்யப்படும்போது **'ஹ்வீம்'** என்ற **பீஜம்.** அதற்குரிய மந்திரத்தில் நான்கு தடவை வரும். பின், தேயு தத்வபாகத்தின் சுத்தியின்போது அதற்குரிய மந்திரத்தில் "ஹ்ரூம்" என்ற பீஜம் மூன்று தடவை தோன்றும். மேல், வாயு தத்வபாக சுத்தியின்போது அவ்வாறே 'ஹ்யைம்" என்ற **பீஜம்** இரு தடவை வரும். இனி ஆகாச தத்வபாகம் சுத்திகரிக்கப்படும் போது 'ஹௌம்" என்ற **பீஜம்** ஒரு தடவை மட்டுமே தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இம் மந்திரங்களில் பீஜ மந்திரம் 5, 4, 3, 2, 1 தடவைகளில் வருதலிலேயே ஒரு தத்துவ ஞான உண்மை அடங்கிக் கிடக்கின்றது. பூதங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஒவ்வோர் குணமுண்டு. அவை ஒன்றையொன்று சார்ந்தியலுந் தன்மையினாலே ஒன்றில் மற்றதன் குணமுஞ் சம்பந்தப்படுதல் சாமான்யம். எனினும், ஆகாசத்துக்கு மற்றவை நான்கையும் வியாபித்து நிற்குந் தன்மையுண்மையால் அது தன் குணத்தை மற்றவற்றுக்குக் கொடுப்பதேயன்றித் தான் அவற்றின் குணத்தை ஏற்பதில்லை. அவ்வகையில் ஆகாயத்துக்கு ஒரே குணம் மாத்திரம் உள்ளதாகக் கொள்ளப்படுகிறது. அதற்கடுத்தது வாயு. அது தன் குணத்தோடு ஆகாயத்தின் குணத்தையுங் கொள்ளும். அதனால் அதற்குக் குணம் இரண்டு. தேயுதன் குணத்தோடு ஆகாயம், வாயு இரண்டின் குணத்தையுங் கொள்வதால் அதன் குணம் மூன்று. அப்பு தன் குணத்தோடு முந்திய மூன்றையுங் கொள்வதால் அதற்குக் குணம் நான்கு. பிருதிவி தன் குணத்தோடு முன்னைய நான்கையுங் கொள்வதால் அதன் குணம் ஐந்து. இக் குணத்தொகை அளவைத் தழுவி இப் பீஜ மந்திரத் தொகை அமைந்திருப்பதனால் நாம் அறிய வருவதென்ன? நமது பூசை முறைகள் நமது **தத்வஞானத்தை அடிப்பிரியாமல்** தொடர்ந்து செல்லும் அமைப்பை இங்கு காண்கிறோம்.

## திருவாசகத்தில் பூசையுண்மை

இந்த உண்மையைத் தழுவி வருகிறது திருவாசகம் போற்றித் திருவகலில் ஒரு பகுதி.

**"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இதைப் பார்க்கும்போது, நாங்கள் எடுத்துக் கொண்ட பூதசுத்தி சம்பந்தமான மற்றோருண்மை வெளிப்படுகின்றது.*

*இறைவன் இல்லாமல் எப்பொருளும் நிலையாது. எந்த ஒரு பொருளின் எந்த ஒரு குணமும் அவனில்லாமல் விளக்க முறாது. இருக்குவேதம் 10 ஆம் மண்டலம் 121 சூக்தம் முழு வதும் இதே விளக்கத்தைத் தருகின்றது.* **"எல்லா உலகமு மானாய் நீயே ......" வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி ......."** *என்ற தேவாரப் பதிகங்கள் இவ்வுண்மையைத் தெளித்துக் காட்டுகின்றன. இவ்வகையில், பிருதிவியில் உள்ள ஐந்து குணங்களுக்கும் விளக்கங் கொடுத்துக் கொண்டிருப்பதும் இறைவனே. அப்புவில் உள்ள நான்கு குணங்களுக்கும், இவ் வாறே மற்றவற்றில் உள்ள மற்றைக் குணங்களுக்கும் விளக்கந் தந்து கொண்டிருப்பவனும் இறைவன் ஒருவனே.*

*இந்த உண்மை எப்படியும் இருக்கிறது. ஆனால், நமக் குப் புலனாவதில்லை. நாங்கள் வெறும் பிருதிவியைத்தான் காண்கிறோம்; அதன் குணங்களைத் தான் காண்கிறோம்; அப் படிப்பட்ட எங்களுக்குக்* **கண்டதைக் கொண்டு காணாததை உணர்த்துவது தானே** *எங்கள் ஆசாரியர்களின் வழக்கம். ஆகவே தான் மாணிக்கவாசகர் பாடுகின்றார்.* **"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி"** *- என்று. இதில் தத்துவ உண்மை புலப்படுவதோடு, அதன் பின்னணியான தெய்விக விளக்கமும் புலப்பட வைத்த அழகே அழகு!*

*இனி இதற்குள்ளே பூதசுத்தி பற்றிய உண்மை என்ன? என்றது நம் கவனத்துக்குரிய விஷயம். முன் கவனித்தவாறு பூத சுத்திக் கிரியையினாலே பூத இயல்பாகிய அசுத்தமும் மயக்குந் தன்மையும் நீங்க நீங்க அதன் பின்னணியாயிருக்கும் தெய்விக சக்தி புலப்பட்டுத் தோன்றும்.*

> "மரத்தை மறைத்தது மாமத யானை
> மரத்தின் மறைந்தது மாமத யானை
> பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
> பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது திருமந்திரப் பாடல். இப்பாடலில் '**பரத்தை மறைத்தது பார் முதற் பூதம் பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே**'என்ற பகுதி கவனத்திற்குரியது. பூத இயல்புகள் சகல பொருள்களிலும் பிரகாசித்தற் பாலதாகிய சிவத்தை மறைத்துக் கொள்கின்றன. அம் மறைப்பு விலக்கப்பட்ட மாத்திரமே, சிவப் பிரகாசம் வெளிப்பட அப்பூதக் கூறுகள் மறைந்தொழிகின்றன. முன்பு மறைத்திருந்த அவை பின்பு மறைந்து போகின்றன என இம்மந்திரப் பகுதி விளக்குகின்றது.

இதற்கு அநுசரணையான ஒரு அம்சம் பூதசுத்திக் கிரியையில் இடம்பெறுதலையும் நாம் அவதானிக்கத் தவறுதல் ஆகாது. ஒவ்வொரு பூதப்பகுதியும் ஒவ்வொரு **சிவமூர்த்தத்துடனும்** ஒவ்வொரு **காரணேஸ்வரருடனும்** கூடியதாகவே தியானிக்கப்படுகின்றது. அவ்வகையில் பிருதிவி பூதப்பகுதி **சத்தியோஜாத மூர்த்தியும்** பிரமாவுங் கொண்டதாக இருக்கும். அப்பு பூதப் பகுதி **வாமதேவ மூர்த்தியும் விஷ்ணுவுங்** கொண்டதாகும். அக்கினி பூதம் **அகோர மூர்த்தியும் உருத்திரனுஞ்** சேர்ந்துள்ளதாகும். வாயுபூதப் பகுதியில் **தற்புருஷ மூர்த்தியும் மகேசுரரும்** இடம் பெறுவர். ஆகாச பூதம் **ஈசான மூர்த்தியையும் சதாசிவரையுங்** கொள்ளும். இவற்றில் பிரமா, விஷ்ணு உருத்திரன், மகேசுரர், சதாசிவர் என்ற ஐந்தும் அவ்வப்பூதப் பகுதிக்கு அதிட்டானத் தெய்வங்களாகவுள்ள காரணேஸ்வரர்கள். மற்றைய ஐந்தும் இந்த ஐந்துக்கும் உள்ளொளிகளாக நின்று விளங்கும் சிவ மூர்த்தங்கள். **சிவத்துவ வெளிப்பாடே பூதசுத்திக் கிரியையின் பயன் என்பது இந்த அமைப்பினால் விளங்கும். இவ்வாற்றால்** பூதசுத்திக் கிரியை தெய்வீக வெளிப்பாட்டைக் கொண்டு வருகிறது. அந் நிலையில் **பூசிப்பவர், புரோகிதர், அண்டையயலிலுள்ளவர்** என்று பூசையில் சம்பந்தப்பட்டவர் அனைவருக்கும் சம்பந்தப்பட்ட எப்பொருளிலும் அதனதன் தெய்வீகத் தோற்றம் (களை) முன்னிற்குமே தவிர அவற்றின் விபரீதத் தன்மை முன்னிற்பதற் கிடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக ஒரே தடவையில் இந்த விளக்கநிலை ஏற்பட்டுவிடுமெனச் சொல்வதற்கில்லை. அவரவர் **பக்குவத்திற்கேற்பப் படிப்படியாக** அது வளர்ந்தேறி வரும் என்பதை மறுக்க முடியாது. இது மட்டுமா, எங்கள் கல்வி விஷயமுஞ் சரி மற்றெந்த உலக அநுபவமுஞ் சரி வந்தேறும் வகையும் அதுதானே, இங்ஙனம் பூசையின் மகிமை இருந்தவாற்றை இருந்துணர்ந்து ரசித்தலிலேயே ஒரு தனி இன்பமுண்டு.

## சுத்தியின்றிச் சித்தியில்லை

ஆலய பூசையில் நித்திய பூசை நைமித்திய பூசை என இரண்டுண்டு. எந்தப்பூசையிலும் சுவாமிக்குரிய தீபாரதனை அர்ச்சனை முதலியவற்றைவிட பூசைக்கு முன்னோடிகளாக நிகழ வேண்டிய சுத்திகரிப்புக் கிரியைகள் **மகாபிரதானமானவை.** அபிஷேகம், தீபாராதனை, அர்ச்சனை செய்வதற்கு அங்கே தெய்விக சாந்நித்தியம் முதலிற் பிரபலிக்கமாயிருக்க வேண்டுமே. பூசிக்கும் இடம், பூசிக்கும் ஆன்மா, பூசிக்கப்படும் மூர்த்தி, பூசைக்கு உபயோகிக்கும் பொருள்கள் அனைத்திலும் **தெய்வீக சோபை** பிரதிபலிக்க வேண்டும். அதற்குரியவை இப்பூத சுத்தி முதலாகிய சுத்திகரிப்புக் கிரியைகள். இவற்றுடன் புண்ணியாஹவாசனம், பஞ்சகவ்யபூசை, பஞ்சாமிர்த பூசை, அக்கினி கார்யம் என்பனவும் அவசியம் நடைபெற வேண்டுபவை. இவையும் அந்தச் சுத்திகரிப்புக் கிரிகைகளுக்கு அநுசரணையாகஇருந்து தெய்விக சோபையைச் சொலிக்கச் செய்வன. இவற்றின் விபரத்தைத் தனித்தனி பார்க்கில் இவ்வுண்மை விளங்கும்.

## படுமோசநிலை

நைமித்திய பூசையில் நேரவசதிக்குத் தக்கபடி இவற்றிற் சிலவற்றைச் சிலபோது செய்வதும், சிலபோது அவை செய்யப்பட்டிருப்பதாகப் . **பாவனையால்** (taken for granted)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதியதாகச் சொல்லிக் கொள்வதும் நம் ஆலயங்களிற் பரவலாகக் காணப்படுகிறது. நித்திய பூசையில் எந்த ஆலயத்திலும் இவை நடைபெறுவதற்கான அறிகுறிகள் எதுவுமில்லை. "பூசைப்பலனை எவரும் பெறாதிருக்கக் கூடியதாகவே பூசை செய்வது" என்ற ஒரு தீர்மானம் இதன் **பின்னனி போலும்!** இந் நிலை படுமோசமானது.

பூசையிற் சம்பந்தப்படும் எசமானுஞ் சரி ஆலய முகாமையுஞ் சரி, வழிபடும் பக்தர்களுஞ் சரி, இவற்றை அறியாதிருப்பது **ஒருபிழை.** அறிந்தும் நடைமுறையிற் கையாளாதிருப்பது **இருமடியான பிழை.** செய்யத்தகாதவற்றைச் செய்வது மட்டுமல்ல செய்யத்தக்கவற்றைச் செய்யாமையுங் கேட்டிற்குக் காரணம் என்கின்றது திருக்குறள். எப்படியாவது இந்நிலை மாற வழிவகைகள் தோன்றியேயாக வேண்டும். நிற்க.

## சிவோகம் பாவனை

பூசை மகத்துவம் சம்பந்தமான மற்றும் இரண்டு அம்சங்களை இப்போ கவனிக்கலாம். பூசை அநுபவப் பேறாகிய சித்தாந்த அனுபவப் பேறு ஞானம். அதற்கு முன்னோடியான அநுபவம் **யோகம்.** சைவ நாற்பாத ஒழுங்கில் யோகத்துக்கும் முன்னாகக் **கிரியையை** அமைத்ததில் நிரம்ப அர்த்தமுண்டு. எமது உடலின் உட்பக்கம் தெய்வீக அநுபவப் பேற்றுக்கு உகப்பான பல சாதனங்களோடு கூடியது. படைப்பின்போதே தெய்வசக்தியின் ஒரு பொறியாகிய **குண்டலினி சக்தி** உள்ளுடலில் மூலாதாரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. **பிராணாயாம** சாதனையின் மூலமே அச்சக்தி தொழிற்படும். அல்லது தன்பாட்டிற் சோம்பிக் கிடக்கும். இது பற்றிய விளக்கம் வெகு விரிவானது. விரிவை மற்றொரு சந்தர்ப்பத்திற் கவனிக்கலாம். இப்போ சுருங்கிய அளவிற் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சக்தி தொழிற்படுமானால் தானாகவே சொரூபித்தெழுந்து மூலாதார முதல் புருவநடு இறுதியாக உள்ள **ஆறு ஆதாரங்களிலும்** அங்கங்கு தெய்வமூர்த்தங்களைத் தோற்றுவிக்கும். அவ்வவ்விடங்களிற் காணும் அவ்வத் தெய்வமூர்த்தங்கள் நம் ஆலயத்திலுள்ள சிலாமூர்த்தங்களலல்ல. அவை உண்மையான **சக்தி மூர்த்தங்கள்.** அவை சுயமான சிவரூபம். அவற்றை கண்டு அகத்திலே நிகழ்த்தும் பூசை **அந்தர்யாகம்** எனப்படும். அப்பூசையின் விளைவாகவே ஆன்மா சிவத்தோடு ஒன்றுபடும் உண்மைப் **பாவனைப் பயிற்சி** உளதாவது. இப்பாவனைக்குச் **சிவோகம் பாவனை** என்று பெயர்.

பூசையில்ஈடுபடும் ஒருவர் பூசைக்கிரியைகள் தொடங்கும் முன்னரே இச்சிவோகம் பாவனை பண்ணிக் கொள்ளல் வேண்டும் என்பது விதி. இச்சிவோகம்பாவனைப் பயிற்சியே தன்முதிர்வில், நாற்பாதங்களிலொன்றாகிய யோகநிலையைப் பெறுவதற்கு முன்னோடியநுபவமாயமையும்.

ஞானகுரு வந்து உணர்த்திய பின்தான் யோகங்கைகூடி ஞானம் விளக்கமாகும் என்றது உண்மை. ஆனால் மேற்குறித்த அளவான பக்குவம் ஏற்பட்ட பிறகே தான் ஞானகுரு வருவார். அப்பக்குவத்தை வருவிக்கும் **பயிற்சிக்களம் பூசை.** இதுவும் பூசை மகத்துவங்களிலொன்று.

## பூசையில் அத்துவித விளக்கம்

ஆலய பூசையிலே சுவாமிக்கு அபிஷேகம் செய்தல், அலங்காரஞ் செய்தல், சாதம், பலகாரம், பழம், வெற்றிலை, பாக்கு முதலியன நிவேதித்தல், சுவாமியைச் சயனத்தில் அமர்த்தல் ஆகியன நடைபெறுதல் பற்றிய விளக்கமும் அத்தியாவசியம் நம்மவராற் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியது. விளக்கமில்லாதவிடத்து அச்செயல்களில் **உண்மையான பக்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரத்தை** தலைக்காட்டாது. இவை பற்றிய விதிமுறைகளை நோக்க இப்போ அவகாசமில்லை. இச்செயல்கள் பற்றிய தத்துவப் பின்னனியை மட்டும் இங்கே நோக்குதல் சாலும்.

எந்நிலையிலும், தெய்வம் (சிவம்) நமக்கு வேறாயிருப்பதில்லை. நமது உடலுக்குள்ளே உடலுக்கு வேறான உயிரொன்று இருப்பது போல, நமது உயிருக்குள்ளே உயிருக்கு வேறான சிவம் என்றும் இருந்து கொண்டேயிருக்கிறது. பொருள் தன்மை அளவில் உடலுக்கு உயிர் வேறென்றாலும் கலப்பினால் ஒன்றாகவேயிருக்கிறது. உடலுக்குச் செய்யுஞ் செயல்களினால் உயிர் நேரடியாகத் தாக்கப்படுவதிலிருந்து இவ்வுண்மை புலனாகும். உடலின் ஒவ்வோர் அணுவிலும் உயிர் செறிந்திருக்கும் உண்மை மிக அற்புதமானதுங் கூட. அல்லா விட்டால் தோற்புரையில் ஒரு சிறு முள்ளுக்குத்த முன்னமே உயிருக்கு நோவதில் அர்த்தமில்லை. இதுபோலவே உயிருக்கு வேறு சிவம் என்றாலும் கலப்பினால் ஒன்றேயாயிருக்கிறது. உயிர் உடலோடு கலப்பினாலொன்றாய் இருந்து உடலை நிலைக்கச் செய்வது போல சிவம் **உயிரோடொன்றாயிருந்து** அதை நிலைக்கச் செய்கிறது. உயிர் பொருள் தன்மையால் உடலுக்கு வேறாயிருந்து உடலைச் செலுத்துதல் போல, சிவமும் **உயிருக்கு வேறாயிருந்து** அதனை அநுபவங்களில் செலுத்துகின்றது. உயர் உடலோடு உடனாயிருந்து அதற்கு அநுபவத்தை ஊட்டுவதைப் போல, சிவம் **உயிரோடு உடனாயிருந்து** அதை அநுபவிக்கின்றது.

இங்ஙனம் உடல், உயிர் - சிவம் என்ற இவ்விரண்டு பகுதிகளிலும் **ஒன்றாதல், வேறாதல், உடனாதல்** என்ற மூன்று நிலைகளை அவதானிக்கின்றோம். இம்மூன்றுஞ் சேர்ந்து அத்துவிதம் என்று பெயர் பெறும். இவ்விடத்தில் ஒரு கருத்தை நாம் அவதானிக்க வேண்டும். உடலுக்கும் உயிருக்கும் உள்ள அத்துவிதத் தொடர்பு **தற்காலிகமானது.** சிவத்துக்கும் உயிருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ள அத்தவிதத் தொடர்பு **நிரந்தரமானது.** அத்துடன் மற்றும் ஒரு வேறுபாடு கவனிக்கத்தக்கது. உடலில் நிகழும் உணர்வு களால் உயிர் பாதிக்கப்படும். ஆனால் உயிரில் நிகழும் உணர்வு களால் சிவம் பாதிக்கப்படமாட்டாது. சிவத்தொடு இரண்டறக் கலந்திருந்தும் உயிரின் உணர்வுகளால் சிவம் பாதிக்கப் படாதிருப்பது சிவத்துக்குரிய பிரத்தியேகமான ஒரு **பெரும் பேரியல்பு.** எனினும் உயிருக்குச் செய்வதொன்று உடம்பையுந் தாக்கும் நிலை இருப்பது போல, சிவத்துக்குச் செய்வதொன்று உயிருக்கும் பலன் தரும் நிலையுண்டு.

## தத்துவஞானப் பின்னணி

**'சிவன் சேவையை சிவசேவை'** என்பதே சைவஞானம். **'சீவசேவையே சிவசேவை'** என்ற கருத்து சைவ ஞானமல்ல. இது தற்போதைய அரசியற் கோட்பாட்டின் அடிப்படையில் எழுந்து சமூக நலநோக்கைப் பிரதிபலிக்கும் ஒரு **பிரசார சுலோகம்** என் பதை அறிதல் நலம். ஆனால் சிவனடியார் விஷயம் இதற்கு விதி விலக்கு.

உயிர்களுக்கு நேரிற் செய்யுஞ் சேவை மட்டுந்தான் அர்த்தமுள்ளது. கடவுளுக்குச் செய்து உயிர்க்குச் சேருமெனக் கருதுதல் பொருந்தாது. அது கைகூடுதல் அசம்பாவிதம் என்ற கருத்துச் சைவர் அல்லாதவர்களிடத்து எழுந்ததும் அது சமயத் துறையிலுந் தலையிட முயன்றதும் உண்மைதான். அதன் வாசனை இன்றுந்தான் எங்கள் ஆலய வளாகத்துள் **குறளி வித்தை** காட்டிக் கொண்டிருப்பது கண்கூடு. இது சம்பந்தமாக நாம் குறிப்பிடக் கூடிய தொன்றுண்டு.

சைவசமயத்தாரல்லாதாருள்ளும் சிந்திக்கும் சக்தி யுள்ளவர்கள் அக்கொள்கை தவறென்பதை நன்குணர்ந்திருக் கிறார்கள். பின்வரும் பந்திப் பொருள் கவனிக்கத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For over 30 years my only religion was humanism. The belief that man guided by reason, was sufficient unto himself that progress only in knowledge would automatically bring a better world. But having witnessed the advance of 20th century materialism and the doing of nations living without God, I am now convinced that humanism is not enough - that man for his very survival, needs contact with a power outside and greater than himself and that is why I have returned to Christianity. I wish to re - enter that knowledge and love of God which Jesus taught with such clarity and simplicity.

Dr. Lin yu - Tang
My step back to Christianity

' கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக என்னுடைய ஒரே சமயமாக மனிதநலக் கோட்பாடே இருந்து வந்தது. மனிதன் அறிவை வழிகாட்டியாகக் கொண்டு நடந்துவந்தால் அதுவே அவனுக்குப் போதும். அறிவில் முன்னேற்றமடைதல் ஒன்றே தானாக ஒரு சிறந்த உலகத்தைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்து வந்தது. ஆனால் இந்த நூற்றாண்டின் உலக முன்னேற்றங் களையும் கடவுட் கொள்கையின்றி வாழும் நாடுகளின் அழி செயல் களையும் பார்த்த பிறகு வெறும் மனித நலக்கோட்பாடு மட்டும் போதாது, மனிதன் தான் தப்பிப்பிழைத்து உயிர் வாழ்தல் ஒன்றிற்கே கூடத் தனக்குப் புறம்பாகத் தன்னைவிடப் பெரியதாயுள்ள ஒரு பேராற்றலுடன் தொடர்புகொள்ள வேண்டியவனாக இருக்கிறான் என்பதனை நான் இப்போது தெளிவாக நன்குணர்ந்து கொண்டேன். அதனால்தான் நான் மீண்டும் கிறிஸ்துவ சமயத்துக்குத் திரும் பினேன்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த இக்கருத்தாளர் **சைவர் அல்லாதவர்.** சிவசேவை வாயிலாகத்தான் சீவசேவை நடைபெற வேண்டும் என்ற நேரான கொள்கை அவர் சமயத்துக்கில்லை. ஆனால் அவர் விளக்கத்தின் சாயல் சைவக்கொள்கையை மருவியே நிற்றல் புலனாகின்றது. அவருக்கு மறுபிறப்புண்டானால் அவர் இக்கொள்கைக்கே **ஆளாய் விடுதல் எதிர்பார்க்க வேண்டியதே.** இத்தொடர்பில் இன்னுமொன்று தெரிந்து கொள்ள வேண்டும். நேரடியாக உயிர்க்கென்று செய்யும் சேவையுஞ் சைவம் விலக்கவில்லை. **பசு புண்ணியம்** என்ற பெயரில் அதனையும் ஒத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் சீவசேவையைச் சிவசேவை என்று பிரசுரஞ் செய்யுங் கொள்கையைத்தான் சைவம் மறுக்கின்றது. சீவனுக்கென்று செய்வது சிவ சேவையல்ல. **சீவனுக்கென்று செய்வது சீவனுக்கும் ஆம்.** ஆனால் அடியார் விஷயத்தில் அவர்களுக்குச் செய்வதே சிவசேவை. அவர்கள் சாமானிய **சீவர்கள் அல்ல; சிவங்கள்** என்பதையும் அறிய வேண்டும்.

இவ்வாற்றால் இங்கே இரு உண்மைகள் புலனாகின்றன. உடனாய் நிற்றல் என்ற அத்துவித நிலையால் சிவம் உயிருக்கு அநுபவத்தை ஊட்டிக்கொண்டிருக்கிறது என்பது ஒன்று. சிவனுக்குச் செய்வது சீவனுக்கும் சேரும் என்பதொன்று. இந்த இரண்டு வகையான உண்மை விளக்கத்தின் அடிப்படையில் அமைந்தனவே நாம் எடுத்துக்கொண்ட அபிஷேகம் நைவேத்தியம் முதலியன.

குறித்த உண்மைகளிரண்டில் முன்னையது சிவம் உயிர்க்குக் 'கண்டு காட்டல்' என்ற ஞான உண்மையாகச் சித்தாந்தத்தில் விளக்கப்படுகின்றது. சிவன் காணுவதும் காட்டுவதும் தனக்காகவல்ல, உயிருக்காக. இந்தவிளக்கத்தின்படி சிவன் அபிஷேகம் பெறுதலும், அமுதை ஏற்றலும், சயனத்தில் அமர்தலும் இயல்பானவையன்றி எவ்வகையிலும் விபரீதமானவை ஆகமாட்டா. இதனால் சிவம் எதை எதை ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுமோ அது அப்படியே சீவனுக்குப் பலனாகும். அவ்வகையில் உயிருக்கு வருவது சுத்தபலன் அந்தப்பலன் உயிரைச் சுத்தநிலைக்கு ஆளாக்கும். சிவனுக்குச் செய்யாது எந்த ஒரு காரியத்தையும் உயிர் தனக்குத் தானே செய்யுமாயின் அதனால் வருவது அசுத்த பலன். அது உயிரை மென்மேலும் அசுத்த நிலைக்கே ஆளாக்கும்.

**'தேவர் அதிதியனல் தேசிகர்க்கென் றிட்டவனந் (அன்னம்)**
**தேவருல கத்தி லமிர்தென்.'**

சிவதருமோத்தரம் உரை மேற்கோள்

**'அட்டவை தம்மைச் சொன்ன நால்வரு மருந்த அன்பா**
**லிட்டுமிக் கதனை யுண்கை யமுதமீ யாதே யுண்கை**
**கட்டமுங் கடுவு மாவி கழிந்தவூன் காயந் தானும்**
**ஒட்டியே யுடலிற் றோன்றும் புழுவுமென் றொழிக ஓர்ந்தே.'**

~ காசிகாண்டம்

சிவத்தின் சுத்தத் தன்மைக்கும், சாதாரண உயிரின் அசுத்தத் தன்மைக்கும் இடையிலுள்ள வித்தியாசங் காரணமாக இந்த வேறுபாடு ஏற்படுகின்றது.

எனில், அசுத்தநிலை அனுபவத்துக்காக நாம் பாடுபடுவதில் எவ்வித அர்த்தமுமில்லை. எம் முழுக்கு, உணவு, சயனம் முதலாய காரியங்களையும் சிவத்துக்குச் செய்து அதன் மூலமாக நாம் பலன்பெற வேண்டுவதே செய்யத்தக்கதாகின்றது.

அதனால் நாம் உண்ணுவது இரண்டாம் விஷயம். சிவம் உண்ணுவதே முதல் விஷயம். நாம் சயனிப்பது இரண்டாம் விஷயம். சிவம் சயனிப்பதே முதல் விஷயம். இன்னும் விடுத்துச் சொல்வதானால் சிவம் உண்ணாத விடத்து நாம் உண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாத மாதிரித்தான். சிவம் சயனிக்காதவிடத்து நாம் சயனித்தும் சயனிக்காத மாதிரித்தான். பிறவும் அவ்வாறே.

பூசையில் அபிஷேகம், நைவேத்தியம் முதலாயின இடம் பெறுவதன் தத்துவ ஞானப் பின்னணியை இப்படி உற்றுணர்தல் வேண்டியது நம் கடன். எம் பூசை மகத்துவங்களில் இது மிக மிக மேன்மை வாய்ந்ததெனலாம்.

சிவத்தை நினையாமலே தன்னை நினைக்கும் நிலையில் தனக்குத்தான் பசிக்கும். தன்னை முற்றாக மறந்து சிவத்தை நினைக்கும் நிலையில் **தனக்கல்ல பசி சிவத்துக்கே** பசியிருப்பது புலனாகும். கண்ணப்பநாயனார்க்கு ஆறுநாளாகத் தன்பசி தெரியவில்லை. சிவத்தின் பசியே புலனாயிற்று. அச் சந்தர்ப் பத்தில் அவர் நிலையை,

**'யார் தமராக நீரீங் கிருப்பதென்றகல மாட்டேன்**
**நீர் பசித்திருக்க இங்கு நிற்கவுங் கில்லேன்'**

என்று கண்ணப்பர் வாக்காற் சொல்லிக் காட்டுவர் சேக்கிழார்.

சுவாமிக்கு ஊட்டாமலே எங்கள் பாட்டுக்கு நாமுண்பது **சாதாரணநிலை**; சுவாமிக்கு ஊட்டிப் பின் நாம் உண்பது **சமய நிலை.** நம்பசியை மறந்து சுவாமிக்கே ஊட்டுவது **ஞானநிலை.** இந்த ஞானநிலை வருதற்கு இன்றியமையாத முன்னோடி அனுபநிலை எமது பூசையில் இடப்பெறும் நைவேத்தியக் கிரியை முதலியவற்றால் வருவதாகும்.

இரட்டையர் என்ற புலவர்களின் செய்தி பிரசித்தமானது. அவர்கள் எப்போதுமே தேசாந்திரிகள். சென்ற சென்ற இடங்களிலே ஏதும் உணவு கிடைத்தாற்சரி அல்லது அவர்கள் பாடு பட்டினி. ஒருநாள் பகல் முழுவதும் அலைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிடத்திலும் எந்த ஒரு உணவும் கிடைக்கவில்லை. பொழுது பட்ட பின் திருவாங்கூரிலுள்ள அல்லாளியப்பர் கோயிலுக்குப் போனார்கள். அங்கே பூசை நடைபெறுகிறது. சில கோயில்களில் இராப்பூசைக்கு வைக்கும் நைவேத்தியத்தை அன்றன்று தற் செயலாக அவ்விடம் வரும் தேசாந்திரிகளுக்குக் கொடுக்கும் வழக்கமுண்டு. அதற்குத் 'தேசாந்திரி சாதம்" என்று பெயர்.

அந்த வகையில் கோயிற்பூசை முடிவில் தமக்கேதும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். நிலைமை ஏமாற்றத்தை விளைவித்தது. முடவர்க்குப் பொறுக்கவில்லை.

**'தேங்குபுக ழூங்கூர்ச் சிவனே அல்லாளியப்பா**
**நாங்கள் பசித்திருக்க ஞாயமோ'**

என்று பாடினார். நாங்கள் பசித்திருக்க ஞாயமோ என்றால், **'நீர் மட்டும் சாப்பிட்டு விட்டீர்'** என்ற விளக்கம் அதற் குள்ளே கிடக்கிறது.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த குருடர் உடனடியாக,

**- போங்காணும்**
**கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை யல்லாமற்**
**சோறு கண்ட மூளி யார்சொல்?** என்று பாடிவிட்டார்.

நீர் நினைக்கிற மாதிரியில்லை விஷயம், இங்கே சங்கும், முரசும் கொட்டுமேளமுமாய் ஆரவாரம் நடந்ததேயல்லாமல் சோற்றை இங்கே கண்டதார்? என்பது குருடரின் கருத்து.

கோயில் எசமானுக்கு இது கேட்டுவிட்டது. சோறு கண்ட மூளி யார்? என்ற வார்த்தை அவர் ஆராய்ச்சியைத் தூண்டிற்று. அடுத்த நாள் பூசை நிலைமைகளை ஆராய்ந்தார். பலநாள் தொடர்பாக அமுது வைக்காமல் அமுது வைத்தது போலக் காட்டிக் கொண்டு பூசை நடந்த குட்டு அம்பலமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரலாற்றைப் பல கோணங்களில் நோக்கிச் சுவைக் கலாம். இதில் தங்கிக் கிடக்கும் சைவஞானக் கருத்தே நம் கவனத்துக்குரியது. **'சுவாமி சாப்பிட்டு முடிந்தால் நமக்குச் சாப்பாடு கிடைத்தாக வேண்டும்'** என்பது முடவர் கூற்றிலுள்ள சைவஞானம்.

**'சுவாமி சாப்பிடவில்லை. அதனால் நமக்குச் சாப்பாடு கிடைக்க வில்லை'** என்பது குருடர் கூற்றிலுள்ள சைவஞானம்.

இருவர் கூற்றில் முன்னையது **உடன்பாட்டாலும்** பின்னையது **எதிர்மறையாலும்** இச் சைவஞானத்தைச் செய்யுளாக வடித்துத் தந்திருக்கின்றன.

நாங்கள் மேற்கொண்ட விஷயத்துக்கும் இச்சம்பவத்துக்கு முள்ள பொருத்தம் நயக்கத்தக்கதாகும்.

பூசை மகத்துவம் பற்றிய பலவேறு உண்மைகளிற் சில வற்றை இதுவரை கவனித்தோம். முடிவாக ஒன்று கூற இருக் கின்றது.

ஆலயங்களில் வழக்கம் இடையறாமல் இருப்பதற்காகப் பூசை செய்வது என்ற கருத்து மூன்றாம் பட்சமானது ; சனங் களின் இஷ்டசித்திகளுக்காகப் பூசை செய்வது என்ற கருத்து இரண்டாம் பட்சமானது ; வழிபடுவோரிடத்தே **உண்மை ஞான மான சைவ சித்தாந்த அநுபவம் ஏற்படுவதற்காகவே பூசை செய்வது** என்ற கருத்தே முதல் தரமானது. மற்ற இரண்டும் இதற்குள் அடங்கும் அவற்றுக்குள் இது கிட்டவும் அணையாது.

எனில், இதற்கு அநுசரணையான முறையில் விதிமுறை வழுவாமல் ஆலய பூசைகள் நடைபெற வைக்கவேண்டும் என்பது சொல்லாமலேயமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவாலயக் கிரியைகள் 2.

கடந்த அத்தியாயத்தில் தத்துவசுத்தி, சிவோகம் பாவனை, அத்துவிதம் என்ற சித்தாந்த உண்மைகளின் விளக்கில் ஆலய பூசையைப் பற்றி அவதானித்தோம். அவற்றின் இன்றியமையாமை உற்றுணரும்போது மற்றுமோர் சித்தாந்த உண்மை கிரகிக்கக் கூடியதாயிருக்கின்றது.

பூசிப்பவர் தன் உடல், கருவி கரணங்கள் எல்லாவற்றையும் பற்றிநிற்கும் மாயாவியல்புகள் அனைத்தினையும் இயலுமளவு நீக்கிக் கொள்ளுங்கிரியைகள் பற்றிப் பூதசுத்தி கிரியை சொல்கிறது. அவ்வகையில் தன்னைச் சுத்திகரிக்கும் பூசகர், மந்திரசகிதமான தன்பாவனையினால் தன்தூல தேகத்தை முற்றாக அழித்துத் தன் சிரசிலிருந்து பெருக்கும் அமிர்தப் பிரவாகத்தினால் அதனை மீளப்படைக்கப் பெற்ற ஒரு தெய்விகத் திருமேனியாக்கிக் கொள்ளும் நிலையும் ஆகமங்களிற் சொல்லப்படுகின்றது.

## பூதசுத்தி – தத்துவசுத்தி

சித்தாந்தத்தில் வரும் தத்துவசுத்தி என்ற பேற்றுக்கு இது முன்னோடியான பயிற்சியனுபவமாய் அமைகின்றது. தான் எதெதனைச் சார்ந்திருக்கிறதோ அதெல்லாம் தான் என்றிருப்பது உயிரின் இயல்பு. இதைச் **சார்ந்ததன் வண்ணமாதல்** என்று குறிப்பிடுவர். உடலும் தான், உடல் சம்பந்தப்பட்ட கருவிகரணங்களொவ்வொன்றும் தான் என அவற்றுடன் தனித்தனியும் கூட்டாயும் ஒன்றிப் போயிருப்பது உயிர். இவை யொவ்வொன்றையும் தனித்தனி தானல்ல தானல்ல தானல்ல என்று கண்டு நீங்கி இவற்றுக்கு வேறான ஓர் உணர்வுப் பொருளே தான் என உயிர் அவற்றின் சார்பைவிட்டு, மீள ஒட்டாது, ஒட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாமற் கழன்று உள்ளிருக்கும் புளியம் பழம்போல் இருக்கும் நிலையே **தத்துவசுத்தி** எனப்படும். இதற்கும் அதற்கும் நெருங்கிய தொடர்பிருத்தல் இவ்வகையால் அறியப்படும். இங்ஙனம் பூசகர் தம் உடலைப் பொறுத்தவரையில் தம்மைச் சிவமாய்ச் செய்துகொள்ளும் நிலை சித்திக்கும்.

அடுத்துவரும் **சிவோகம்பாவனை** என்றது, இவ்வாறே அவர் தம் உயிரைப் பொறுத்த வரையிலும் சிவமாய் நிற்குந் தன்மையைக் காட்டுகின்றது. இங்ஙனம் தான் வேறு சிவன் வேறு என இல்லாமல் இருமையில் ஒருமையாய், தானே புறத் தினாலும் அகத்தினாலும் தன்னைச் சிவமாய்ப் பாவிக்கும் நிலை **'அத்துவிதம்'** என்ற அநுபவப் பேற்றுக்கு முன்னிகழும் பயிற்சியாய் அமைகின்றது.

## தான் சிவனாயிருந்து பூசித்தல்

இந்நிலைமைகளை ஒன்றுகூட்டிப் பார்க்குங்கால், பூசிப்பவரொருவர் தான் தானாயிருந்து பூசிப்பவரல்லர், தான் சிவனாயிருந்து பூசிப்பவர் எனத் தெரிகின்றது. இவ்விடத்தில் **உயிர் தான் உயிராகவேயிருந்து பூசித்தலாகாமை ஏன்?** என்ற ஆசங்கை எழும். இதன் விடையும் சைவசித்தாந்தத்துக்குள்ளேயே தடக்குண்டு கிடப்பக் காண்போம்.

உயிர்கள் ஒவ்வொன்றுஞ் சதா செயல் புரிந்து கொண்டிருப்பன. தங்கள் அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்காக அவைகள் செய்யுங்காரியங்களுஞ் செயல்களே. ஆலய பூசை முகாந்தரமாக அவை செய்யுங்காரியங்களுஞ் செயல்களே. செயல் ஒவ்வொன்றும், அவ்வக்காலத்தில், செய்த செய்த இடத்தில் நடந்து நடந்து ஒழிந்து போகின்றது. செயல்கள் ஒழிந்தாலும் அச்செயல்கள் பற்றிய பெறுபேறுகள் அவ்வவ்வுயிரின் சார்பில் ஏதோ ஒரு வகையில் எப்படியோ இருந்து கொண்டிருக்கின்றன என்பது சைவசித்தாந்த உண்மை. செய்யுஞ்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் நற்செயலானால் நல்வினை ; தீச்செயலானால் தீவினை. நற்செயலின் பெறுபேறு புண்ணியம்; தீச் செயலின் பெறுபேறு பாவம். ஒவ்வோருயிரின் சார்பிலும் இருக்கக்கூடிய புண்ணியங்களும் பாவங்களும் எல்லையற்றவை. அவையனைத்தும் அந்த அந்த உயிரின் புத்தி தத்துவம் பற்றுக் கோடாக மாயையிலே தங்கிக் கிடக்கும் என்பர். அவரவர் செயற்பேறுகளாகிய இப்புண்ணிய பாவங்களை ஒன்றும் அவம் போகாமற் பயன் படுத்தி, இறைவன் அவற்றையே உயிரின் மலநோய்க்கு மருந்தாக ஊட்டி வரும் செய்கை சுவாரஸ்யமானது.

நோயாளி - உயிர், நோய்- ஆணவம், மருந்து - புண்ணிய பாவம், வைத்தியன் - இறைவன், மருந்துப்பெட்டி - மாயை, ஆஸ்பத்திரி - உலகம் என்றிருக்கும் சித்தாந்த உண்மை விசேடம் எல்லாரும் அறிய வேண்டுவது.

## ஆகாமிய வினை

இவ்வாறு மாயையிலே கட்டுண்டிருக்கும் வினைகள் **சஞ்சிதவினைகள்** எனப்படும். அவற்றில் குறிக்கப்பட்ட ஒரு பகுதி குறித்த ஒரு பிறப்பில் அநுபவத்துக்காக இறைவனால் கொடுக்கப்படும். அந்தப் பகுதிக்கு **பிராரப்தம்** என்று பெயர். இதனால் எந்த உயிரும் அவ்வப்பிறப்பில் தனக்குப் பிராரப்தமாக உள்ள புண்ணிய பாவங்களை ஏற்றே தீர வேண்டும். அவையொவ்வொன்றையும் ஏற்கும் முகமாக உயிர் பின்னும் ஒவ்வோர் செயல் செய்தே ஏற்கவேண்டும். ஏதாவது, ஒரு புண்ணியப் பலனை ஏற்றனுபவிக்க வேண்டியவர், அப்படியான பலனுக்குத் தொடர்புபடுத்தி விடக்கூடிய ஏதேனுமொரு பொருத்தமான நற்செலைச் செய்தே அநுபவிக்கவேண்டும். உதாரணத்துக்காகப் பார்த்தால், ஒரு புண்ணியப் பேறாக ஒரு பிறப்பில் ஒரு உயர் பதவியைப் பெறும் வாய்ப்புள்ளவர், அப்பதவிக்குத் தான் தகுதியாகக் கூடிய அளவுக்குக் கற்றும், வேறும் அவசியமான முயற்சிகளைச் செய்தும் தானே பெறக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராகின்றார். அதுபோல ஒரு பாவப் பலனான கொடுந்துன்பத்தை அநுபவிக்க வேண்டியிருப்பவர் அதற்குத் தான் இலக்காகுமளவுக்கு ஒரு தீச் செயலைச் செய்தே தான் ஆகவேண்டும்.

**இப்போது அநுபவிப்பவை ஒவ்வொன்றும் முற்செய்தவை. இப்போது செய்பவை ஒவ்வொன்றுக்கும் பிறகு வரும் பிறவிகளில் தான் பலன்'** இது மாற்ற முடியாத நியதி. ஆனால் அறக் கொடிய தீச் செயலுக்கும் மிகச் சிறந்த புண்ணியச் செயலுக்கும் உடன் பலனுண்டென்பர். அது ஒரு விதிவிலக்கு.

**'தாந் தாம்முன் செய்தவினை தாமே அநுபவிப்பார்**
**பூந்தா மரையோன் பொறி வழியே'**

– நீதிவெண்பா

**'பிற்செயா தநுபவிப்ப தின்றுபின் தொடருஞ் செய்தி'**

– சிவஞானசித்தியார்

இவ்வகையில் முற்செயலின் பேறாகிய புண்ணிய பாவப் பலன்களைப் பெறுவதற்காகப் பின் செய்யுஞ் செயல்களுஞ் சும்மா ஒழியமாட்டா. பிற் செயல்களுக்காம் புண்ணிய பாவங்களும் புதிது புதிதாக முளைத்துகொண்டே வரும். **பழையது ஒவ்வொன்றும் அழியப் புதியது ஒவ்வொன்றும் முளைக்கும்** சுப்பிரமணியருக்கும் சிங்கமுகாசுரனுக்கும் இடையில் நடக்கும் போர் நிகழ்ச்சியில் ஒரு கட்டம் இவ்வுண்மையை நினைவூட்டும். சுப்பிரமணியர் சிங்கன் தலைகளையும் கைகளையும் வெட்ட வெட்ட அவை மீண்டும் முளைக்கும். இப்படிப் பல தடவை முளைத்து முளைத்து வெட்டப்பட்டு, முடிவில் அவருடைய 'ஹூம்" என்ற உறுமல் தொனியினாலேயே முளைத்தல் இல்லாதொழியும். பிராரப்தமான புண்ணிய பாவங்களை அநுபவிக்கையில் புதிய புண்ணிய பாவங்கள் தோன்றும் என்பதற்கு இந்நிகழ்ச்சி **கண்முன் காணும் காட்சி மயமான ஒரு அத்தாட்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் புதிதாக முளைக்கும் புண்ணிய பாவங்களுக்கு **ஆகாமியம்** என்று பெயர். இப்படி ஒரு பிறப்பில் ஒரு உயிருக்கு உண்டாகும் ஆகாமியமும் எண்ணிக்கையில்லாதிருக்கும். இவையெல்லாம் முன்னமே எஞ்சிக் கிடக்குஞ் சஞ்சிதத்தோடு கூடிச் சஞ்சிதவினைப் பட்டியலை வளர்த்து நீட்டிக் கொண்டிருக்கும். **வட்டிக்கு வட்டி தொடர் வட்டியாய்க் கட்டித் தொலைக்க முடியாத அளவுக்குப் பெருகிவரும் கடன் தொகை போல்வது இதுவாகும்.** நிலைமை இப்படி ஆதலால் எந்த உயிரும் தன்வினை முழுவதையும் அறுதியாக அநுபவித்து ஒழித்து முடிவு காணுதல் என்றுமே இயலாத ஒன்றாகும். எனில், இது என்ன **விபரீதம்!** இந்த உயிருக்கு வினையிலிருந்து என்றுமே மீட்சியில்லையா? என்பது கேள்வி.

## அஹங்கார மமகாரம்

நெருப்பிருக்கும் மட்டும் புகையிருந்து கொண்டிருக்கும். நெருப்பு ஒழிந்த பிறகு தான் புகையிருக்காது என்பது பிரசித்தமான ஒரு அநுபவஉண்மை. காரணமிருக்கு மட்டும் காரிய மிருக்கும் ; காரண மொழிந்தாற் காரியம் இருக்காது என இதனைப் பொது விதியாகக் கொள்ளலாம்.

உயிர் செய்யுங் செயல் ஒவ்வொன்றிற்கும் புண்ணியப் பலனோ பாவப்பலனோ வருவதானால் அதற்குக் காரண மென்ன? என்பதைச் சைவசித்தாந்தம் தெளிவாகக் கண்டு சொல்லியிருக்கிறது. **நான்** என்ற அகங்காரத்தோடும், **எனது** என்று செய்கையைத் தனதாக்கும் ஆணவ மதர்ப்போடும், பொய்ம்மை மெய்ம்மையுணராத மாயா மயக்கத்தோடும் தான் சாதாரணமாக உயிரின் செயல்கள் நிகழ்கின்றன. இந்த நிலைமைதான் உயிரின் சார்பில் புண்ணிய பாவங்கள் விளையக் காரணமாயுள்ளது. இந்த நிலைமைக்கு அப்பாற்பட்ட செயல் மட்டுமே புண்ணிய பாவங்கள் ஏற்படாதிருக்க வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதாவது* நான் எனது என்ற இருவகை அபிமான நிலைகளு மில்லாமல் மயக்கமற்ற மெய்யுணர்ச்சியோடு செய்யுஞ் செயலுக்கு மட்டுமே சாமானிய புண்ணிய பாப விளைவு இல்லா தொழியும்.

## நிஷ்காமியகர்மம்

'விஹாய காமான் ய : சர்வான் புமான்
சரதி நிஸ்ப்ருஹ :
நிர்மமோ நிரஹங்கார :
ச சாந்திம் அதிகச்சதி'

**' எவனொருவன் சகல விதமான விருப்பங்களையும் விட்டு, பற்றற்ற நிலையில், நான் எனது என்ற அகங்கார மமகாரங்களுள் தடக்குண்ணாமல் கர்மத்தைச் செய்கின்றானோ அவன் சாந்தியை அடைகிறான்.'** *(பகவத் கீதை 2. 71.) இங்ஙனம் பற்றற்று நிகழுங் கர்மம்* **நிஷ்காமிய கர்மம்** *என்று பகவத் கீதை பிறிதோரிடத்தில் சொல்லும். நிஷ்காமிய கர்மம் - என்றால் பற்றற்ற நிலையில் (பற்றுதல் அற்ற நிலையில்) நிகழும் கர்மம் என்று பொருள். இதற்குச் சமதையான ஒரு நிலை சைவசித்தாந்தத்திலே* **இருவினையொப்பு** *நிலை எனப்படுகிறது. இந்த இருவினையொப்பு நிலை சைவ சித்தாந்தத்தில் ஒரு முக்கிய* **திருப்புமுனை யாயும்** *உள்ளது. இந்த நிலையை அடைந்து விட்டால் தேவையில்லை என்ற ஆசை எங்கள் எல்லாருக்குந்தான் இருக்கிறது.*

**அகங்கார மமகாரமில்லாமற் கர்மத்தைச் செய், பலனில் பற்றில்லாமல் செய், பிரஹ்மார்ப்பணமாகக் கர்மத்தைச் செய்என்று நூல்கள் முழங்குகின்றன. ' அசுத்த மனமே பலனைப் பற்றுவது. அதை விட்டுச் சுத்தமனதாற் செய்யின் பலப்பற்று நிகழாது'** *என்னும் உபநிஷத வசனமும் ஒன்றுளதாகச் சொல்லப்படுகின்றது. இவற்றைப் படித்தும் கேட்டும் அறிந்த அளவிற் பற்றில்லாமல் கருமத்தைச் செய்தல் இலகுவான காரியம் என எண்ணப்படு கிறது. ஆனால் முடிந்தால் தானே' எந்த ஒரு சிறு காரியத் தையும் செய்ய முயன்றாலும் ஏதோ ஒரு விருப்போ வெறுப்போ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தோ அறியாமலோ வலுக் கட்டாயமாக அதனுள் புகுந்து விடுதல் தப்பாது. சாதாரணமாக எவராயினும் இந்த நிலையை அல்லவெனத் தட்டிக் கழிக்க முடியாது.

## வெறும் பாவனை பலன் தராது

இனி, பாவனை ஒருங்கே உடனடியாகப் பலிப்பது எவ்விஷயத்திலுமில்லை. பற்றில்லாமற் கருமஞ் செய்வதாக ஒருவர் பாவிக்கப் பாவிக்கக் காலகதியில் வந்தேறுந்தானே என்பாரும் இருக்கலாம். அத்தகைய பாவனையைச் சைவசித் தாந்தம் ஒப்புவதில்லை. அது போலிப் பாவனையேயன்றி உண்மைப் பாவனையாகாது. உண்மையல்லாத ஒன்று, எத்தனை காலங்கழியினும் பயன் தராது. **குற்றவாளியாகிய ஒருவன் தன்னைச் சுற்றவாளியாகப் பாவிக்கில் பாவிக்கலாம். ஆனால் குற்றம் அவனை விட்டுக் கடைசிவரையும் அகலாது. அவன் அப்படிச் சொன்னதற்காகச் சட்டமும் அவனைத் தண்டிக்காமல் விடாது.** ஆதலால் இதற்கு வழி வேறென்பதே சைவங்கண்ட முடிவு.

## சிவபாவனை பலன் தரும்

உயிர் தான் ஆன்மா என்ற உணர்வு நிலையில் இருக்கும் வரையும் தன்னை அகங்கார மமகாரங்கள் அற்ற வனாப் பாவிக்க முடிவதுமில்லை. அது பலன் படுதலுமில்லை. இந்த அகங்கார மமகாரங்களின் மூலமாகிய அந்த ஆன்ம உணர்வுப் பழக்கம் படிப்படியாகக் கெடவேண்டும். அதைக் கெடுப்பதற்கேற்ற ஒரே உபாயம், ஆன்மா தன்னைச் சிவ னென்று பாவித்துப் பழகுதல்தான் என்பது சைவத்தின் நிலை.

எனில், **முன்சொன்ன அதுவும் பாவனை தானே, இதுவும் பாவனை தானே! அந்தப் பாவனை பலிக்காது, இந்தப் பாவனை மட்டும் பலிக்குமோ** என்றால் என் சொல்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி நியாயமானதே! இதற்கு ஒரேயடியாக ஆமென் னவும் வகையில்லை. இல்லையெனவும் வகையில்லை. பின் னைப் பதில் என்னையெனில், உடனடியாய் ஆகாது, காலகதி யில் ஆகும், என்பதே.

**முன்குறித்த பாவனையும் இவ்வாறே உடனடியாய் ஆகா தொழியினும் காலகதியில் ஆகும் என்னலாகாதோ?** என்ற கேள்வியும் இங்கு எழவே செய்யும்.

பாவனை என்ற பெயர் ஒப்புமையளவில் இரண்டும் ஒன்றல்ல. அந்தப் பாவனை வேறு; இந்தப் பாவனைவேறு. அது உள்ளதை இல்லாததாகப் பாவிக்கும் பாவனை; இது உள்ளதை உள்ளதாகப் பாவிக்கும் பாவனை. முன்னையதில் குறிப்பிட்ட சிவம் தன்பால் உள்ளதொன்றே. **எவ்வுயிர்க்கும் சிவம் அவ்வு யிராய் உள்ளுறைதல் அகிலப் பிரசித்தம் ஆதலின்,** இதனால் இப்பின்னைய பாவனை உடனடியாக வாய்க்காதொழியினும் காலகதியில் வாய்க்கலாம். அம்முன்னைய பாவனை தன்னள வில் என்றுமே வாய்க்காது. ஆனால், இப்பாவனை உண்மை யாய் வாய்க்கும்போது அப்பாவனையிற் கருதிய விஷயமும் வாய்த்தற்குச் சரியாகும். அதாவது, ஆன்மா தன்னைச் சிவனாகப் பாவிக்கும் பாவனை பலிதமாகும்போது. ஆன்மக் குற்றங்க ளாகிய அகங்கார மமகாரங்கள் அடியோடகன்று விடும்.

## சிவபுண்ணியம்

இவ்வுண்மைப் பிரகாரம் ஒரு ஆன்மா தன்னைச் சிவனென இருந்து நிகழ்த்தும் பூசை ஒன்றே, உயிருக்குப் பொது வாக செயல் தோஷமாகிய ஆகாமிய ஏற்றத்தைத் தடுக்கும். அவ்வகையில் ஆகாமிய ஏற்றத்துக்கிடமில்லாத பூசைப்ப லனுக்கே சிவபுண்ணியம் என்பது பிரத்தியேகமான ஒரு பெயர். அந்தச் சிவபுண்ணியம் மட்டுமே ஆன்மாவுக்கு விமோசன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கமாவது. பிறகு ஞானகுரு வந்து சேர்வதும், அவரால், இவ்வளவு காலமும் பயின்ற பாவனை நிலையெல்லாம் பலித நிலையாவதும் ஆகிய பேறுகளுக்கு இச் சிவ புண்ணியமே காரணம் என்பது சித்தாந்த உண்மை.

திருமுருகாற்றுப்படை எங்களுக்குப் பிரசித்தமான ஒரு பாராயண நூல். அதன் இதயம் போல் அமைந்திருக்கும் ஒரு ஐந்து அடிகளை நாங்கள் இங்கே கவனிக்கலாம்.

'...................... செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே'

சிவந்த வேலாயுதத்தையுடைய என்றுமிளையோனாகும் சுப்பிரமணிய சுவாமியுடைய சிவந்த திருவடிகளைச் சந்திக்குந் தலைமை பெற்ற உள்ளத்துடனே சிவ புண்ணியங்களை விடாது செய்யுங் கோட்பாட்டினாலே விளையா நின்ற மெய்ஞ் ஞானத்தைச் சாதித்து அத்திருவடிக்கீழ் இருக்கும் நெறியை நீ விரும்பினாயானால்.... என்று செல்கின்றது இப்பகுதிக்குரிய **நாவலர் புத்துரை.**

இதன்கண் **நலம்புரி கொள்கைப் புலம் - சிவ புண்ணியங்களை இடைவிடாது செய்கின்ற கோட்பாட்டினாலே விளையா நின்ற மெய்ஞ்ஞானம்** என உரை காணப்பட்டிருக்கிறது. **சிவபுண்ணியமே ஆன்ம விமோசன மார்க்க**மென்பது இதனாலும் விளங்கும்.

இனி,பூசையல்லாத மற்றுஞ் சிவப்பணிகளுமுள. கோயில் கட்டுதல், பிரதிஷ்டை செய்வித்தல், கோயிலுக்கு நிலம்புலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுங்குதல், கோயில் நித்திய நைமித்தியங்களுக்கு நிபந்த னைகள் அமைத்தல். விசேட பூஜாதர்மங்களின் பொருட்டு அறக் கட்டளைகள் ஏற்படுத்துதல். நந்தவனம் திருக்குளஞ் சமைத்தல் ஆகியன அனைத்துஞ் சிவ புண்ணியங்கள் ஆதற்குரியன, ஆனால், அவற்றைச் செயவோர், தம் ஆன்ம உணர்வு நிலை. மறந்து **தாம் சிவ பாவனையில் நின்று அவற்றைச் செய்தால் மட்டுமே அவை சிவ புண்ணியங்களாகும்.** ஒருவர் கோயிலை இடமாகக் கொண்டு செய்கிறார் என்பதற்காக ஒரு செயல் புண்ணிய மாகாது. செய்யுமவர் **சிவபாவனையில் நின்று செய்யும் அந்த ஒரு இயல்பு கொண்டே** அது சிவ புண்ணியமாகும். அத்தன் மையில் ஆகுமானால் கோயிற் காரியங்களல்லாத பிற தர்மச் செயல்களும் சிவ புண்ணியங்களாதல் அமையும்.

சொத்து வளமுள்ளோரிற் சிலர் அச்சொத்துக்களைக் கொண்டு தாமாக முன்னின்று சிவதருமங்களைச் செய்யாமல், அதைச் சிவபாவனையில் நின்று செய்யவல்ல தக்கார் ஒருவர் மூலஞ் செய்விக்கும் வழக்கம் என்றும் இருந்துவருதல் கண்கூடு. தம் பொருளின் நல்விளைவு தமது நேரடித் தலையீட்டால் பழுதுறாமலிருக்கட்டும் என்ற அவர்களின் விருப்பம் இவ்வுண் மையின் அடிப்படையில் எழுந்ததேயாம்.

**எப்பொருளும் ஆக்குவான் ஈசனே ........**
**அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள்**

– திருஞானசம்பந்தர் புராணம் 71.

என்றதும் இதனை வலியுறுத்தும்

குறித்த சிவபாவனை நிலையில்லாமற் செய்யப்படும் மேற்சொல்லப்பட்ட காரியங்கள் செய்பவர் தரவேறுபாட்டிற் கேற்ப அற்பசொற்பமான லௌகீக பலன்களை மட்டுங் காட்டி ஓய்வனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் இவ்வளவும் விசாரித்ததன் பெறுபேறாக:

1. நான் என்ற உணர்வு நிலையில் நின்று நாமியற்றும் செயல் எதுவும் அகங்கார மமகாரச் சார்பானவையாம்.
2. அவை ஆகாமிய ஏற்றத்துக்குக் காரணமாம்.
3. சிவபூசை எனினும் அந்நிலையில் நிகழின் அதன் விளைவு அங்ஙனமேயாம்.
4. செய்பவர் சிவபாவனையில் நின்று செய்தலாகிய ஒருபாயத் தினால் மட்டுமே அவ்விளைவைத் தவிர்க்கும் வாய்ப்பை அடையலாம்.
5. அந்நிலையில் நிகழ்வன மட்டுமே சிவபுண்ணியங்களாம்.
6. அவ்வகைப் புண்ணியங்களில் ஆலயபூசை மகா சிவ புண்ணியமாம்.
7. அதுவொன்றே ஆன்ம விமோசன மார்க்கமாம் என்ற கருத்தம்சங்களைக் கவனித்தோம்.

இப்படி உயர்ந்த பலன் தரவல்லதாகப் பூசை அமையும் பொருட்டுச் சிவபாவனையில் நிற்பதற்கு உபகாரமாகவே பூத சுத்தி முதலிய பூசைக்கிரியைகள் ஏற்பட்டன என்பதையும் இவை முற்ற முடியச் சைவசித்தாந்தக் கண்ணோட்டத்தில் அமைந்தன என்பதையும் இங்கும் ஒருக்கால் ஞாபகம் செய்து கொள்வோம்.

## ஆன்மார்த்தம் பரார்த்தம்

சிவபூசை, ஆன்மார்த்த பூசையென்றும் பரார்த்த பூசை யென்றும் இருவகையாகச் சொல்லப்படுகிறது. இரண்டுக்கும் வெகுதூர வித்தியாசங்கிடையாது. இரண்டும் தன்மையளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒன்றே. பிரதான கிரியாம்சங்கள் சகலமும் இரண்டுக்கும் ஒரு வகையினவே. ஆன்மார்த்தத்துக்குள்ளே பரார்த்தம் இல்லா மலில்லை. பரார்த்தத்துக்குள்ளே ஆன்மார்த்தமும் இல்லா மலில்லை.*

*சிவம் வியாபகப்பொருள். அதை முன்னிட்டுச் செய்யும் பூசையும் பூசைப்பலனும் வியாபகமேயாம். எனினும்* **பூசிப்பவர் தாம் சிவபாவனையில் நின்று உயிருணர்வையொடுக்கிப் பூசையில் நேர்முகமாகச் செலுத்துமளவுக்கு** *விசேடபலன் பெறுபவரா கின்றார்.*

*பூசிக்குந் தகுதி ஒருசிலர்க்கே தான் இருக்கும். உண்மை யுண்மையாகக் கடவுளை வழிபடுந் தகுதியும் அவ்வண்ணமே.*

'ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே'

*என்ற அப்பர் சுவாமிகள் பாடல் இங்கே கருதத்தக்கது.* **'தகுதியுள்ளவர்கள் செய்யட்டும் நாம் அதில் ஈடுபடாதிருப்போமாக'** *என்பதற்கும் இடமில்லை அவர்கள் செய்வதைப் பார்த்துப் பிறகும் அவ்வழியில் முயலலாம் ; முயலவேண்டும் என்ற உணர்வை இப்பாடல் தருதலைப் பிரதானமாகக் கவனிக்க வேண்டும்.*

*ஆத்ம ஞானிகளாயுள்ளவர்களே பூசைக்குத் தகுதியுள்ள வர்கள். எனினும், அவர்கள் பூசிக்கும் பரிவையும் பரிமளிப்பை யுங் கண்டு மற்றொருவர் தாமும் பூசிக்க விரும்புதல் சகஜமே.* **ஆனால் தமக்கியலா நிலையில் அல்லது தமக்குப் பயிற்சி போதா நிலையில் என் செய்வது!** *தமக்காகவும் ஒருகால் சுவாமி யைப் பூசிக்கும்படி அவ்விருப்ப வழிப்பட்ட ஒருவர் கேட்டுக் கொள்ள, அவர்பாற் கொண்ட கருணை யால் ஒரு ஞானி அது செய்வா ராயின் அப்போது அது பரார்த்த நிலைக்கு வந்துவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்துக்கநுசரணையான நடைமுறை அநுபவங்கள் நாமறிய இல்லாதவைகளல்ல. தமது வீடுகளில் வந்து சிவபூசை செய்யும்படி அதிற்பயிற்சி விசேடமுள்ளாரைத் தேடிச் சிலர் கேட்டுக் கொள்வதும், அவர்கள் அதற்கிணங்கிக் காலாகாலங் களில் அங்கங்கு சென்று சிவபூசை செய்வதும் நம்மத்தியில் என்றுமுள்ள நிகழ்ச்சிகள்.

எங்கள் சமயாசாரியர் சரித்திரத்தில் ஒரு அம்சம் இங்கே கவனிக்கத்தக்கது. அவர்கள் செல்லுமிடங்களில் அவர்களுக்கு மகத்தான குதூகல வரவேற்பு நிகழும். அதன் அடிப்படையில் வேறெதுவும் அல்ல. **' எங்கள் ஊர்க்கோயிலில் எங்கள் சுவாமியை எங்களுக்காகவும் கும்பிட இவர்கள் வந்திருக்கிறார்கள்'**, என்ற பெருமித உணர்ச்சிதான் அது. இந்த உண்மை சேக்கிழார் வாக்கில் அங்கங்கு வெளிவந்திருத்தலுங் கண்கூடு.

'செழுந்தரளப் பொன்னிசூழ் திருநனிபள்ளியுள்
    ளோர்தொழுது திங்கட்
கொழுந்தணியுஞ் சடையாரை எங்கள் பதியினிற்
    கும்பிட்டருள ஆங்கே
எழுந்தருள வேண்டும்என இசைந்தருளித் தோணிவீற்
    றிருந்தார் பாதந்
தொழுந்தகைமை யாலிறைஞ்சி அருள்பெற்றுப் பிறபதியுந்
    தொழமுன் செல்வார்.'

*திருஞானசம்பந்தர் புராணம் (செய். 112)*

திருநனிபள்ளியிலுள்ளார் சீகாழிக்குத் தேடிப் போய்க் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே! இப்படியிருக்கிறது தமக்கா கவும் சுவாமியைக் கும்பிடுவிக்கும் பரிவின் அருமை!

இவ்வகையில் தமக்காகவும் பூசிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டவர் கேட்டுக் கொண்டவரையும் பூசைக்கு உட்ப டுத்திக் கொள்கின்றார். கேட்டுக்கொண்டவரே **சுவாமியை நேரிற்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூசித்ததாலொத்த ஒரு சூழ்நிலையை உண்டாக்குகின்றார் எனலாம்.** பூசை ஆத்மார்த்தத்திலிருந்து பாரார்த்தமாக வந்த வகையை இப்படி நோக்குதல் சாலும். இம்முறையிலிருந்தே ஆலயங்கள் தோன்றிப் பரார்த்தப் பூசை நிலையங்களாய் விரிவுற்றன.

தமக்காகவும் சுவாமியைப் பூசிக்குமாறு கேட்டுக் கொண்டவரையும் பூசிப்பவராகவே கருதிக் கொள்ளும் நிலை எங்கள் கோயிற்பூசையமைப்புக்களில் அவதானிக்கக் கூடியதா யிருக்கிறது. ஒரு ஆலயத்தில் ஒருவர் ஒரு பூசை செய்விப் பதனால் ஆரம்பத்தில் அர்ச்சகர் அவர் கையில் பவித்திரத்தை அணிவித்துக் கொள்கிறார். பவித்திரம் அணிவித்தல் சங்கற்பம் நிகழ்வதற்கு முதற் செயல் ஆகும்.

" அத்ய பூர்வோக்த: ஏவம் குண விசேக்ஷண விசிஷ் டாயாம்........."என்று ஆரம்பித்து "பூஜாம் அஹம் அத்ய கரிஷ்யே" என்று முடிகிறது சங்கற்பம். "சொல்லப்பட்ட இத்தகைய விசேடங் களோடு கூடியதாய இன்ன இடத்தில், இன்ன வருடத்தில், இன்ன மாசத்தில், இன்ன நக்ஷத்திர, திதி, யோக, கரணங்களுடனான வாரத்தில்.... நான் பூசை செய்வேன்" என்பது விளக்கமாகும்.

அதன் மேல் ஓமத்துக்கிடும் சமித்து, பொரி ஆகியன எல்லாம் இவர் தொட்டுவிட்ட பின்னரே அர்ச்சகர் கையா ளுகிறார். ஓமமுடிவில் பூர்ணாகுதி கொடுக்கையில் அர்ச்சகர் தீயில் நெய் சொரியும் அதே வேளையில் இவரும் **தம்கையால் பழமும் பொரியும் தேங்காயும் பிறவும் அக்கினியிற் சொரிகிறார்.** உள்ளே பூசை நைவேத்தியத்திற்குரிய பொருள்களும் இவர் தொட்டுவிட்ட பின்னரே பூசையில் உபயோகமாகின்றன.

இவ்விபரங்கள் பரார்த்த பூசையின் இயல்பையும் இதன்கண் பூசகர் - உபயகாரர் என்ற இருவரது பொறுப்பு எத்தகையதென்பதையும் அறியத்தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரார்த்த பூசைப் பண்பு

இப்பரார்த்த பூசைப்பண்பு இங்ஙனம் பூசகரும் உபய காரரும் என்ற அளவில் மட்டுப்படாமல், பரந்த நோக்கில், அந் நிகழ்ச்சியில் உதவியாளர்களாக, தரிசனையாளர்களாகப் பங்கு பற்றும் அனைவரையும் உட்படுத்துமளவுக்கு விரிவானது. சுருங்கச் சொல்லில் **பூசகர் மட்டுமல்ல அந்நிகழ்ச்சியிற் சம்பந் தப்படும் அனைவருமே பாவனையாற் பூசகர்கள்தான். பூசகர் மட்டு மல்ல சம்பந்தப்படும் அனைவரும் உயர்ந்த தூய்மை, வாய்மை, நேர்மை உள்ளவர்களாயிருத்தல் வேண்டும்.** என்ற கட்டுப்பாடு அதனாற்றான் ஏற்பட்டது. இவர்களிடத்தில் இவ்விஷயமாக ஏற்பட வேண்டிய நிறைவையளிக்கும் பொறுப்பு பூசகருக்கும் அவர் புரியுங்கிரியைகளுக்கும் உரியதாகும்.

இந்நோக்கிற் பார்க்கும்போது ஆலய பூசகருக்கிருக்கும் பொறுப்பு அதிமகத்துவமானது. அவர் புரியும் பூசை தமக்கும் ஆத்மார்த்த பூசையாய் அமைய வேண்டும். **அதே நேரம் சம்பந் தப்பட்ட பிறருக்கும் ஆத்மார்ந்த பூசையாய் அமைய வேண்டும்.** அதாவது **அவர்கள் தாமே நேரில் பூசித்தாலொத்த திருப்தியையும் பலனையும் பெற வேண்டும்**. இவ் விளக்கத்தின் ஒளியில் ஆத் மார்த்த பூசை பரார்த்த பூசைகளின் இலக்கணத்தை வரைவு செய்து கொள்வோம்.

**பூசிப்பவர் பிறர் சார்பில்லாமல் தம்மளவில் தாம் புரியும் பூசை ஆத்மார்த்த பூசை. பூசிப்பவர் தமக்கும் ஆத்மார்த்தமாய் அதேவேளை சம்பந்தப்பட்ட பிறர்க்கும் ஆத்மார்த்தமாய் பலன் கொள்ள இயற்றும் பூசை. இதுவே இவற்றின் யதார்த்தமான வரைவிலக்கணமாகும்.**

பூசைக்கு முன்னோடியாக அமையும் சுத்திக்கிரியைகள் ஆத்மார்த்தத்தை விடப் பரார்த்த பூசையில் அதிபிரபல்யமாய் நடைபெற வேண்டுவதன் அவசியத்தையும் இதில் வைத்து வற்புறுத்துதற்கிடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தெரிந்துகொள்ளாமல் சொல்லின் வெளிப் பொருளளவில் நின்று **ஆத்மார்த்தம் - தனக்காக, பரார்த்தம்- பிறர்க்காக** என்று மட்டும் விளங்கிக் கொள்ளும் நிலை துரதிர்ஷ் டவசமானது. ஆத்மீக நோக்கில் , **தான் சம்பந்தப்படாத பிறரும், பிறர் சம்பந்தப்படாத தானும்** இருத்தல் முடியாத காரியம். ஆன்ம ஈடேற்ற நோக்கில் தம்போக்கில் போய்க்கொண்டிருப்ப வர்களைப் பார்த்து **'இவர்கள் சுயநலக்காரர்கள், தன்வாரக் காரர்கள்'** எனச் சிலர் கூறிக்கொள்ளும் புறங்கூற்றும் தவறான தென்பதை இதில் வைத்துக் கண்டு கொள்ளலாம்.

## பூசை நோக்கு

ஆத்மார்த்த பூசை யாயினும் பாரார்த்த பூசை யாயினும் பூசையின் நோக்கு ஒன்றுதான். ஆத்மீக ஈடேற்றம் ஒன்றே தான் அதன் நோக்கம். விசேட பூசை முடிவில் பூசகர் **' சர்வஜனா சுகினோபவந்து சர்வ மங்களானிபவந்து'** என ஆசீர்வாதஞ் செய்தல் பிரசித்தம். **" எல்லாச் சனங்களும் சுகவான்கள் ஆகட்டும்: எல்லா மங்களங்களும் ஆகட்டும்"** என்பது இதன் பொருள். இங்கே " சுகம்" என்பது புத்திர தார சுகங்களையன்று. பரமசுகமாகிய கைவல்ய சுகத்தையே. இத்தகைய பூசை முதலிய பரமயத் தனங்களால் வருந்தி முயன்றமைக்குப் பலனாக வேண்டிக் கொள்ளத் தகுதியானது அக்கைவல்ய சுகமே. இம்மை வாழ்வுக்கு வேண்டுவன என நாம் கருதும் தேகாரோக்ய விருத்தி சம்பந்தமான சுகங்களெதுவும் இந்த அளவுக்குப் பிரதானமான வையாகமாட்டா. அந்தச் சாயுச்சிய சுகமாகிய கைவல்ய சுகத்தின் முன் இவை சுயமென்னுமளவுக்கு நின்று பிடிக்க மாட்டா. மேலும்

**இந்தச் சுகங்கள் தற்காலிகமானவை**; **ஆசை காட்டி மோசஞ் செய்பவை**; மேலும் மேலும் வினையைப் பெருக்கி பிறவிப் பட்டி யலை நீட்டுபவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சுகம் தற்காலிகமானதல்ல; நிரந்தரமானது; **அது மோசஞ்செய்யாது; விமோசனமே செய்வது.** அது பிறவிப் பட்டியலை நீட்டாது.

அதற்கெதிர் **அடியோடு இல்லாமலே பண்ணிவிடும்.** இவ்வகையிற் பூசையின் நோக்கத்தை உணர்ந்து பயன்பெற வேண்டும்.

எனில், வாழ்க்கைப் பேறுகள் வேண்டப்படாதனவோ? அவையின்றி வாழ முடிமோ? என்ற ஆசங்கை எழுதல் இயல்பே.

அவை வேண்டாதன என்பதற்குமில்லை. பூசைப்பலனாக வேண்டிக் கோடற்பாலன அவைதான் என்பதற்குமில்லை. காரணம், **அவை நம் முகாந்தரத்தில் தங்கியிருப்பவையல்ல. நம் வினையும் அதை வழிநடத்தும் திருவருளுமே அவற்றுக்கு உத்தர வாதிகள்.** ஏலவேயுள்ள நம் வினைப்பயனுக்கேற்ப இறைவனால், நாம் வேண்டினும் வேண்டாவிட்டாலும், அவை வருதல் தவறவே தவறாது.

**'வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால**
**தீண்டா விடுதல் அரிது'** **- திருக்குறள்**

**ஏலவே தபாலில் சேர்க்கப்பட்ட பார்சல்கள் அவை.** உரிய உரிய காலத்தில் ஒவ்வொன்றும் வந்தே சேரும். ஆனால், வர வேண்டியதுதான் வரும் வருவதற்கில்லாதது எப்படித்தான் தலை கீழ் நின்றாலும் வராது.

**' வருந்தியழைத்தாலும் வாராத வாரா'**
வரவிருப்பதை வாராதேயென்பதற்கும் நாமார்?

**' பொருந்துவன போமினென்றாற் போகா'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது விதி ; இது நியதி ; இது எல்லோர்க்குமுண்டு ; எப்போது முண்டு. அவ்வப்போது அவற்றைப் பெறுவதற்கான முயற்சி வகைகளையும் திருவருள் தானே பிரேரித்துக் கொண்டிருக்கும். இது பிரஸ்தாபிதமான ஓருண்மை.

இருந்தும், நாம் பந்த நிலையிலிருக்கும் இக்கால மெல்லாம் **ஏதோ எதையும் நாமே முடிவு கட்டுவதாக முனைந்து முடுகிமுன் நிற்கும் ஒரு தான்தோன்றிப் போக்கு நமக்கு** இருப்ப தையும், அதுவே ஆகாமிய வினைப் பெருக்கத்தை மிகுவிப் பதென்பதையும், அது நம்மைச் சார்ந்த ஒரு குற்றப்பாடென் பதையும் சற்று முன்னதாகவே தெரிந்திருக்கின்றோம்.

நமக்குத் **தனித்துணை**யாகின்ற திருவருள் நிற்கவும் அதை அவமதித்து, வினைத்துணைதான் நமக்குற்ற துணை யென்று அதன் வேகத்திலே **மதர்த்தெழுந்த குற்றப்பாடு ஆத்மா வான நம் குற்றப்பாடேதான்.** இதைப்பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது மிக நல்லாயிருக்கிறது.

**"தனித்துணை நீ நிற்க யான்தருக் கித்தலை யால்நடந்த**
**வினைத்துணை யேனை வீடுதிகண் டாய்.... "**

- திருவாசகம்

இப்படித் தலையால் நடக்கும் **தறிதலைப்போக்கு** மாற வேண்டியே, அதற்குச் சந்தர்ப்பமளிக்காத அளவுக்கு நம் நிலையை மாற்றி ஆன்ம மதர்ப்பை அகற்றிச் சிவோகம் பாவனை யோடிருந்து சிவபூசை செய்வது என்ற விளக்கத்தையுஞ் சற்று முன்னதாகவே கண்டோம். அது அங்ஙனமாக, வினைப் பெருக் கத்துக்கே ஏதுவான சாமானிய வாழ்க்கைப் பேறுகளை நோக் குதலே பூசையிலும் நோக்கமாயிருக்குமென்றால் இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புபவரார்? இது பூசை **நோக்கத்துக்கே நேர்மாறே மாறு!** குளிக்கப் போனவனைக் கூப்பிட்டுக் " குளிக்காதே சேறு பூசிக் கொண்டு வா" என்றால் எவ்வளவு மாறுபாடோ அவ்வளவு மாறுபாடு இது.

எனில் வாழ்க்கைப் பேறு வேண்ட உயிர்க்கு உத்தர வாதமில்லை. சாயுச்சியப்பேறு வேண்ட மட்டும் உத்தரவாத முண்டோ எனில், **உண்டு! தாரளமாய் உண்டு! எங்ஙனமெனில்** , உயிரை மலம் நீக்கிச் சாயுச்சியப்பேறு கொடுக்கவே அதனைப் பிறப்பில் விட்டது திருவருள். இந்த உயிர் அந்த உணர்வின்றி , தான் தருக்கித் தலையால் நடந்தமை அத்திருவருள் நோக்குக்கு குந்தகமாய் விடுகிறது. **இது வினையைப் பெருக்க, அது வினைக்குத் தக்க பிறப்பைக் கொடுக்க வேண்டியிருப்பதால்** விளை யாத விபரீதமெல்லாம் விளைகிறது. இந்த நிலை மாறுகில் உயிர்முயற்சியால் தான் மாறவேண்டும். **நானென்று ஒரு பொருள்** உண்டென்கின்ற உயிர் , **அப்படியல்ல. தானென்று ஒரு சிவன் உண்டு. லௌகீகத்துக்குப் பொருள்** வேண்டிப் பயனில்லை. **ஆத்மீகத்துக்கு அருள் வேண்டுவதே** பயன்தரும். அதுவே செய் யத்தக்கது என்ற திருப்பநிலை உயிரிடத்தில் வந்தே , பிறகு எதுவும் ஆகவேண்டும். ஆதலால் சாயுச்சிய சுகம் பெறும் விஷயத்தில் உயிருக்கு உத்தரவாதமுண்டு. **இதைச் சொல்ல யாருந் தயங்க வேண்டியதில்லை.**

எவ்விஷயத்திலும் குற்றப்பாடான வழியைத் தவிர்த்து நல்வழி நிற்பது தானே நம்கடன். நல்வழிக்குள் நல்வழி சிவபூசை வழி. **'நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே அல்லாது வேறு நிலையுளதோ'** என்பர் பட்டினத்தார். இனி, இந்த நல்வழி நிற்றற்கு இம்மைப் பேறுகளும் யாம் வேண்டாமல் தாமாகவேயுண்டு. பெரியார் சரித்திரங்களில் இதற்கு நிரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தாட்சியுண்டு. அவர்கள் சார்பிற் பொதுவாகப் பின்வரும் விசேடங்கள் அவதானிக்கத் தக்கனவாம்.

1. விதிவழியாய் ஒருவர்க்கு வரும் பெறுபேறுகளிருக்கக்கூடிய மிகை குறைகள் இதனாற் சீர்செய்யப்படும்.
2. பொதுவாக இவர்களுக்கே அதிக செல்வங்கள் அதிக கஷ்டங்கள் வருதலும் அவற்றை அவர்கள் சோதனைகளாக ஏற்றுச் சித்தி பெறுதலும் உண்டு.
3. பூசைப் பயிற்சியாலான உண்மையுணர்வு இவர்க்கிருத்தலினால் செல்வ மயக்கிலீடுபட்டு அது முழுவதையும் இவர் தனது என்று "சீல்"பண்ணிக்கொள்ளார். சிவமயமாயிருப்பவர் பணமயமாக மாட்டார்தானே!
4. பூசை வழியிலான சித்தத் தெளிவும் மனோதிடமும் இவர்க் கிருத்தலின் எந்தக் கொடுந் துன்பத்திலும் இவர் அழுந்தி அவலமுறார். **அலை வந்தால் தலைக்கு மேலால் போகட்டும்** என்றிருப்பது அவர் நிலையாயிருக்கும்.
5. இப்பூசை நெறியில் நிற்போர் தம்மியல்பிற்கேற்பச் சிறிதளவேனுந் திருவருட் சார்பாகநிற்குந்தன்மையும் உண்டு. அவரவர் சார்பின் தரத்திற்கேற்ப அவர்க்காம் வாழ்க்கைப் பேறுகளில் திருவளின் கைவண்ணம் பிரத்தியேகமாக இடம்பெறும் அநுபவங்களும் இல்லாதவையல்ல.

நாங்கள் எதைக்கண்டோம்! நம் சமயாசாரியார்கள் சொல்கிறார்கள்.

**'நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத**
**என்னடியா னுயிரைவவ்வே லென்றடற் கூற்றுதைத்த**
**பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்**
**நின்னடியா ரீடர்களையாய் நெடுங்களம் மேயவனே'**

– திருஞானசம்பந்தர் தேவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கண்டேயர் சிவபூசையில் லயித்திருக்கிறார். அவருக்கு ஆயுட் காலம் முடிந்ததென்ற சாட்டில் யமன் வருகிறான். '**என் பிள்ளையில் தொடாதே'** என்று அங்கு திருவருள் எச்சரிக்கின்றது. திருஞான சம்பந்தர் இச்செயலைக் **கையும் மெய்யுமாகக் கண்டு காட்டும் பாங்கில் இச் செய்யுள் ஓசையும் பொருளும்** அமைந் திருக்கின்றன. என் அடியான் உயிரை வவ்வேல் - எனது அடிய வனின் உயிரை கவராதே. என்றிருக்கிறது திருவருளின் பரிவு அங்கே.

இந்த அளவுக்குப் பலனளிக்கும் பூசைப்பேறு பூசிப்பவ ரொருவரின் சாமானிய வாழ்க்கைப் பேறுகளில், வேண்டுமாய் இருந்தால், **செழிப்பு முழிப்பைத்** தராதென்றும் நாம் சொல்வ தற்கில்லை. ஆனால் சாமானிய வாழ்க்கைப் பேறே பூசை நோக்கமல்ல. பூசை நோக்கம் அதற்குரிய உயர் நோக்கமாய் இருக்கட்டும். பூசையின் உண்மைத் தரத்துக்குப் பழுது விளைத்தல் ஆகாது. அதேநேரம் வாழ்க்கை விலாசங்கள் அதிகரித்து **வந்தால் விலக்குதற்குமில்லை; வராவிட்டால் குறைப் படுதற்குமில்லை**; இது சைவநிலை; சைவஞான நிலை.

## காமிய பூசை

எனினும், தத்தம் அகங்கார மமகாரச் சேட்டைகளினாலே மட்டுக்கு மிஞ்சியெழுந் தமது சுயதேவை பற்றிய முட்டுக்களைத் தாங்கமாட்டாமல் சதா தவிப்போர் தொகையும் உள்ளதுதானே! பொருளே உயிரென்று பொருளான்மாவாய்ப் போயிருப்ப வர்களும், சுகபோகமே உயிரென்று சுகபோக ஆன்மாக்களாய்ப் போயிருப்பவர்களும் அவற்றின் மயமாகவே பரிணமித்து விட்ட வர்கள். அவர்களுக்கு அம்முட்டுக்களைத் தீர்க்காமல் இருந்து கொள்ளல் இயலாது. அவர்களுக்குங் கடவுள் பேரினால் தானே வழி அமையவேண்டும். அவர்களும் ஆலய பூசையிலேயே முட்டித் தம்முட்டுக்களைத் தீர்த்துக் கொள்ளட்டுமென்ற கரு ணையால், பூசை வகுப்பில் காமிய பூசை எனவும் ஒன்றுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவரவர் தத்தம் இஷ்டசித்திப் பொருட்டு ஏதேனும் நேர்த்தி பண்ணி அவ்வப்போது செய்விக்கும் பூசைகள் காமிய பூசை எனப்படும். இது பூசையில் ஒரு* **'ஆபத் தர்மம்', 'ஆபத்துக்குப் பாவம் இல்லை'** *என்ற அளவில்தான் அமைந்திருப்பதாகக் கொள்ள வேண்டும். இஷ்டசித்திகளைப் பெருக்கி வினையைப் பெருக்குவது விசேடமல்ல என்பதே சைவத்தின் நிலை. சைவபத்ததிகளிலும் இக்காமிய பூசை பிரபல்யப்படுத்தப்பட் டிருப்பதாகத் தெரியவில்லை.*

"Normally a Saiva is not permitted to perform the KAMYA POOJA. For him POOJA is always for **Moksha** and never for **Bhoga**" *(பொதுவாக, சைவரென்றிருப்பவர் காமியபூசைக்கு அநுமதிக்கப்படுவதில்லை. அவருக்கு பூசை நோக்கம் மோட்ச மேயன்றி எந்நிலையிலும் போகம் அன்று.)*

- Worship in the Agamas
M. Arunachalam.

*இது பற்றி அப்பர் சுவாமிகளின் எச்சரிக்கை யொன்றிருத் தலை யாரும் மறந்துவிடக்கூடாது.*

**"காமியஞ் செய்துநீர் காலஞ் கழிக்காதே**
**ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ**
**சாமி யோடு சுரச்சு வதியவள்**
**கோமி யும்உறை யுங்குட மூக்கிலே"**

~ திருக்குடமூக்கு குறுந்தொகை. 8

*காமம் - விருப்பம்; காமியம் :- விருப்பபூர்வமாக நிகழ்வது. லௌகிகத் தேவையான பொருள் போகங்கள் முன்னிட்டுச் செய்வது காமியபூசை. இது ஆன்ம ஈடேற்றத்துக்கு உகந்த தல்ல. ஆதலால் "காமியஞ் செய்து நீர் காலங் கழிக்காதே" என்கிறார் அப்பர். அதற்கு மாற்று வழியும் அவர் தெரிவிக்காமல் விட வில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமியம்

*"ஓம்" என்பது பிரணவ மந்திரம். இதைப் பற்றி உபநிடதங்கள் வெகுவாகச் சிலாகித்துரைக்கும். திருமூலரும் வகைவகையாய் வர்ணிப்பர். கடோபநிஷத்தில் இம்மந்திரத்தின் பெருமை பேசப் படுகிறது.*

**' ஏதத் ஹி ஏவ அக்ஷரம் ப்ரஹ்ம**
**ஏதத் ஹி ஏவ அக்ஷரம் பரம்**
**ஏதத் ஹி ஏவ அக்ஷரம் ஞாத்வா**
**யோதத் இச்சதி தஸ்ய தத்'**

*இந்த அட்சரமே அபரப் பிரமம்; இந்த அட்சரமே பரப் பிரமம்; இந்த அட்சரத்தை அறிந்தால் ஒருவன் எதை விரும்பு கிறானோ அது அவனுடையதாகிறது.*

- கடோபநிஷத் 2.16

*இவ்வோங்காரம் ஞானக்கலைகளாகிய நாதவிந்துக்களின் வடிவாய் உள்ளது. அதன் உருவமைப்பு ஒலியமைப்பு இரண்டும் நாதபிந்து வடிவமே. இது முதலிலும் முடிவிலும் இடம் பெறாவிட்டால் எந்த மந்திரமும் அர்த்தமற்றதாகும். அபரப் பிரமமும் இதுவே. பரப்பிரமமும் இதுவே என்று கடோபநிடதஞ் சொல்லுதற்கியைய, வழிபடும் மூர்த்தி எதுவாயினும் அதன் சொரூபநிலை இதன் மூலமாகவே விளங்கப்படுகிறது.*

**'ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு**
**தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே?'**

~ கந்தரலங்காரம் ~ 55

*நன்னெறிப்பட்ட தியான பாவனைகளின் மூலம் வழிபட்டு.*

**'உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற மெய்யா'**

*என மாணிக்கவாசகர் கண்டாங்கு, ஓங்காரத்துள்ளே இறை வனைக் கண்டடைதலே வழிபாட்டின் உயர் குறிக்கோள். இத னையே அப்பர் சுவாமிகள்* **'ஓமியஞ் செய்து உள்ளத் துணர்மினோ'** *என்றார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் என்பதன் சம்பந்தமாவது **ஓம்யம்**. அது தமிழ் வடிவில் **ஓமியம்** ஆகும். காமியத்திற் சித்திபெறுங் கருத்தால் வழிபடுவதை விடுத்து இறைவன் சொரூபத்தை அறிந்து அடையுங் கருத்தால் வழிபட்டு வழிபாட்டுப்பயனையும் உள்ளமறிய உணர்ந்து கொள்ளுங்கள் என்பதே இங்கு சுவாமிகளின் உணர்த்துதல். இக்கருத்தைச் சொல்லும் போது கேட்பவர்க்கு இதில் நியாயபூர்வமான விளக்கம் ஏற்படத்தக்க வகையாகவே அவர் சொல்வதைக் கவனிக்கவேண்டும். காமியம் பற்றிக் குறிப்பிடும்போது காலக்கழிவையும், ஓமியம் பற்றிக் குறிப்பிடும் போது உள்ளத்துணர்தலையும் பொருத்திக் கூறுகின்றார். இதன் மூலம்.

| காமியம் | ஓமியம் |
|---|---|
| 1. காலத்தை வீணாக்குவது | காலத்தைப் பயன் செய்வது |
| 2. பலன் உள்ளத்துக்கு உணர வராதது. | பலன் உள்ளம் உணர வருவது |
| 3. அர்த்தமற்றது | அர்த்தமுள்ளது. |

இந்த வகையில் வேறுபாட்டம்சங்களை நேருக்கு நேர் வைத்து உணர்ந்தால் எதைத் தொடுவது? எதை விடுவது? என்பது தானே புரிந்துவிடும் அல்லவா?

**'காமியத் தழுந்தி - யிளையாதே**
**காலர்கைப் படிந்து - மடியாதே**
**ஓமெழுத்தி லன்பு - மிகவூறி**
**ஓவியத்தி லந்த - மருள்வாயே'**

என்ற அருணகிரிநாதர் திருப்புகழும் கவனிக்கத்தக்கது.

இக்காமிய கர்ம முறைகள் வேதத்திலும் பெருமளவில் உள்ளன. **ஜ்யோதிஷ்டோமம்** என்ற ஒருவகை யாகம் வேதத்தில் சொல்லப்படுகிறது. " **சுவர்க்கம் விரும்புவோன் ஜ்யோதிஷ் டோமத்தால் வேட்க**' என்னும் விதியுமுண்டு. இவ்வாறே **அஸ்வமேதம்** என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு யாகமுண்டு. அதைச்செய்தால் அண்டையயல் நாடுகளின் ஆதிக்யம் முழுவதையும் தனக்காக்கும் வன்மை இதைச் செய்பவனுக்குண்டாம். அதை நூறு தடவை செய்து சித்தி பெற்றால் **இந்திர பதவியே** வந்துவிடும். விசுவாமித்திர முனிவர் **திரிசங்குவைச்** சுவர்க்கத்திற்கனுப்பியதும், வசிட்டர் **நகுஷன்** என்ற இராசாவை இந்திரனாக்கியதும் இப்படியானயாக உண் மைப் பேறுகளுக்கு உதாரணங்களாயுள்ளன.

இப்படியிருந்தும், **வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிட தங்கள் இவற்றைப் பொருள் செய்யாமல் முற்ற முடிய நிராகரித் திருக்கின்றன.** இவற்றினால் பலன் பெற்றதாகக் கொள்ளுதல் பசித்தவன் ஒரு கால் உண்டு பசிதீர்த்தான் போல் திருப்தியுற்று நேரக்கழிவில் பிறகும் பசிகொள்ளும் நிலைக்கே ஒப்பாகும் என்கிறது சிவஞானபோதம்.

**'பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்**
**இசைத்து வருவினையி லின்பம்'**

– சிவஞானபோதம்.

இதனால், அவ்வுபநிடதங்களின் நிலையே நம் சைவ சித்தாந்த நிலையுமாம் என்று தெரிகிறது.

## மார்க்கண்டேயர்

பிரசித்தமான மார்க்கண்டேயர் வரலாற்றில் ஒரு கட்டம் இக்காமிய வழிபாடு வழியில் குறுக்கிடக்கூடிய சில அனர்த் தங்களைச் சுட்டிக்காட்டுகிறது. மிருகண்டு முனிவர் தமக்குப் புதல்வன் பிறக்கவேண்டித் தவம் செய்கின்றார். தவப்பயனாகச் சிவபெருமான் வெளிப்படுகின்றார். அவர் கேட்கிற ஒரு கேள்வி முனிவரைத் தூக்கிவாரிப் போட்டுவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*" உனக்கு நூறாண்டு வாழக்கூடியவனாய் நம்மிடத்தன்பற்ற வனாய் இருக்கும் ஒரு உதவாக்கரைப் பையன் வேண்டுமா? அல்லது பதினாறு வயது மட்டுமேயுள்ள, நம்மிடம் அன்பு வாய்ந்த ஒரு சற்புத்திரன் வேண்டுமா? என்பது கேள்வி.*

*சோதனைக்குள்ளானார் மிருகண்டர். ஏனடா கேட்க வந்தோம். என்ற தயக்கநிலை ஏற்படுகிறது. " இனி என்ன செய்வது, உள்ள தற்குள் நல்லதைக் கேட்போம்" என்ற முடிவுக்கு வந்தார். கேட்டுப் பெற்றும்விட்டார். பதினாறு வருடமும்* **பையனையல்ல; முனிவரையே வெருட்டிக்கொண்டிருக்கிறது யமபயம்**. *கதையின் முடிவும் அலாதியானது.*

*பையனுக்குச் சிவன்பால் அன்பிருந்தது.* **அது அன்புக்காகவே அன்பு செய்யும் அன்பு**. *தான் சீடராக நடந்தால் அந்த அன்பு தன்னைச் சாகவிடாது என்ற உணர்வு (Consciousness) அவனுக்குண்டு. உள்ள அன்பை விவேகமாகப் பயன்படுத்திக் கொண்டான்.* **ஓமியஞ் செய்து** *சிவனை உள்ளத்துணரலானான். தன் கடமைக்காக அவனைக் கைப்பற்ற வந்த காலனுக்கே ஆபத்தாயிற்று. இன்றைக்கும் என்றைக்கும் வயசுப் பிரச்சனை யில்லாமலே* **நித்திய மார்க்கண்டனாகச்** *சிவனை உள்ளத் துணர்ந்துகொண்டே சுகித்திருக்குஞ்* **சிவமார்க்கண்டனாயிருக்கும்** *வாய்ப்பு உளதாயிற்று. இப்போதுதான் முனிவரும் கண்ணை விழித்தார். பெருங்கஷ்ட சூழ்நிலையில் முனிவர்* **காமியம்** *பெற்றது பெற்றதுதான். ஆனால் கவலை தீர்ந்ததில்லை.* **மகன் ஓமியப் பலன்** *பெற்றபின் தான் அவர் கவலை தீர்வாயிற்று.*

**"வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவுமுன்றன்விருப்பன்றே "** *என்ற திருவாசகப் பொருள் அப்பொழுதுதான் முனிவருள்ளத்திற் பொன்னெனப் புலப்பட்டிருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகுஷனும் திரிசங்குவும்

நாங்கள் சற்றுமுன் கவனித்த சம்பவங்களின் சார்பாகவும் உற்றறிய உள்ளதொன்றுண்டு. விசுவாமித்திரரால் சுவர்க்கத் துக்கனுப்பப்பட்ட திரிசங்குவை அங்கு நிலைகொள்ள விடாமல் அவர் புரிந்த யாகசக்தியினும் மேற்பட்ட சக்தி ஒன்று கீழே தள்ளி விட்டது. அவன் **அங்குங் கெட்டான், இங்குங் கெட்டான்** . பூமிக் கும் சுவர்க்கத்துக்கும் இடையில் நின்றுகொண்டிருக்கிறான். **திரி சங்குசுவர்க்கம்** என்ற புதுச்சுவர்க்கம் இதை பிரசித்தப் படுத்திக் கொண்டிருக்கிறது.

வசிட்டரால் இந்திர பதவி பெற்ற நகுஷனைச் சம்பிர தாயப்படி சப்த ரிஷிகள் பல்லக்கிற் சுமந்து செல்கின்றனர். முற்கொம்பில் நின்றவர் அகஸ்தியர். வேகமாய்ப் போய் இந்திரா ணியைக் கண்டுவிடவேண்டும் என்ற துடிப்பு நகுலனுக்கு.ரிஷிகள் மெல்ல மெல்ல அசைவதை அவன் விரும்பவில்லை. வண்டிச் சாரதியின் செயற்பாங்கில் "சர்ப சர்ப" **கெதியாய்ப் போ, கெதி யாய்ப்போ** - என்று தூண்டினான். அகத்தியருக்குப் பொறுக்க வில்லை. எடுத்த வாக்கில் "**த்வம் ஏவ சர்போபவ' - நீயே சர்ப்ப மாய்ப் போ**- என்றார். வசிட்டரின் யாகத்தால் நகுஷனுக்கு வாய்த்த சக்தியை அகத்தியரின் சாப சக்தி கவிழ்த்து விட்டது. அவன் அப்பொழுதே பாம்பாய் பல்லக்கிலிருந்து கவிழ்ந்தவனானான். காமிய முறையில் வரும் பலன்களுக்கு **ஆபத்தும் விபத்தும்** கூடக் காத்திருக்கும் என்பதற்கு இவை நல்ல உதாரணங்கள்.

இத்திரிசங்குவும் நகுஷனும் காமியம் விரும்பாதிருந்தால், **ஓமியஞ் செய்து சிவனை உள்ளத்துணரும் பேற்றை** ஒருகாற் பெற்றிருப்பார்கள் தானே'

இப்படியான காமிய சித்திகளை விரும்பியலையும் ஊக்கம் பொதுவில் எல்லார்க்கும் நிரந்தரத் தொல்லை ( Standing nuisance) யாய் இருந்து வருகின்றது. இது உயிரின் இயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கம் என்ற அளவில்தான் சாதாரண அறிவாராய்ச்சி இதை விளங்கிக் கொள்ளும். எங்கள் சைவசித்தாந்தம் இதை இன்னும் ஆழமாகப் பார்க்கும். சைவசித்தாந்தத்தின்படி , இது உயிரின் சொந்தக் குணமல்ல. வந்த குணம். உயிரைச் சேர்ந்த மலமாயா கன்மங்களின் சேர்க்கையால் வந்த குணம். இந்த மலமாயா கன்மங்களின் வேலையே பொறிபுலன்கள் மூலமாக உயிரிடத்தில் காமிய சித்தி விருப்பத்தை எப்போதுந் தூண்டிக் கொண்டிருப்பதுதான். இதுபற்றிய விபரம் சைவசித்தாந்த நூல்களில் அறியப்படும்.

பிறர் தூண்டுதலில் எடுபட்டுத் திரிபவனை நாம் அநுமதிப் பதில்லை. நம்மவர் என்றாலும் நமக்குத் தீங்கான காரியங்களில் நம்மைத் தூண்டுகையில் நாம் ஊக்கங்கொள்வதில்லை. நம் புற முக வாழ்க்கையில் இந்த அம்சத்தில் நாம்விழிப்பாகத் தானே யிருக்கிறோம். உயிரின் உள்முக விஷயத்திலும் மலமாயா கன்மச் சார்பான பொறிபுலன்களால் தூண்டப்பட்டுக் காமிய சித்திகளில் ஊக்கங்கொள்ளும் அம்சத்தில் மிக விழிப்பாகவே இருக்கவேண்டியது

'புள்ளுவர் ஐவர் கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளைய வொட்டார்'

– திருநாவுக்கரசர் தேவாரம்

ஐவர் கள்வர் - பொறிபுலன்களாகிய ஐவர் , வஞ்சகக்குண முடையவர். புள்ளுவர் - வேடர்.

'ஐவர் கொண்டிங் காட்ட ஆடி
ஆழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்'
குய்யு மாறொன் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியு ளீரே.

– சுந்தரர் தேவாரம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் செய்யும் வழிபாடு எதுவும் திருநாவுக்கரசு சுவாமிகள் சொல்கிறபடி ஓமிய வழிபாடாகவே இருக்க வேண்டி யதவசியம். நமக்கு வரவேண்டிய நியாய பூர்வமான வாழ்க்கைப் பேறுகளுக்கும் அதன் பலனே மிச்சாமிச்சம். பிரத்தியேகமாக அதற்கெனக் காமியஞ் செய்துழல வேண்டிய அவசியம் இல்ல வேயில்லை என அமைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விரதமும் பிறவும்

## விரதங்கள்

பூசை வழிபாட்டில் ஈடுபாட்டையும் பரிமளிப்பையும் பெருக்கு வதற்காக ஏற்பட்ட ஒருவகை நியமங்கள் தான் விரதங்கள் என்ற பெயரில் இருக்கின்றன. விரதம் என்ற பெயர்க்காரணத்தை ஆராய்ந்தால் இது விளங்கும்.

**வ்ரத: சங்கல்பபூர்வ: புண்யகர்ம:** சங்கற்பத்துடன் செய்கிற சமய காரியமும் மற்றும் புண்ணியச் செயல்களும் விரதம் ஆகும் என்று வடமொழி அகராதியிற் சொல்லப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சங்கற்பமுள்ளதாயிருத்தல், சமய காரியமாயிருத்தல், நன்மையாயிருத்தல் என்ற மூன்று கருத்தும் எங்கள் விரதத்துக்கு இருக்கக் காண்கிறோம்.

## சங்கற்பம்

ஒருவர் தாம் செய்யுங் காரியமொன்றுக்கு மனம், வாக்கு, காயம் மூன்றையும் நேர்படுத்திக் கொள்ளுதல் சங்கற்பம் ஆகும். சங்கற்பம் என்ற பெயரில் தர்ப்பை அணிதலும், பிராணாயாமம் பண்ணுதலும், விநாயகரை நினைத்துத் தலையிற் குட்டிக் கொள்ளுதலும், சங்கற்ப வசனங்களை வாய்விட்டுச் சொல் லுதலும அந்த நேர்பாட்டுக்காகவே தான்.

## சமயகாரியம்

ஆன்ம ஈடேற்ற நலங்கருதிச் செய்யுங் காரியங்கள் சமய காரியமாம்.

மூன்றாவது அம்சம் வெளிப்படை. இனி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'விரதம் என்பது வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற் பொருட்டுத் துறந்தோராற் காக்கப்படுவது. அது இன்ன அறஞ் செய்வல் எனவும் இன்னபாவம் ஒழிவல் எனவும் தம் ஆற்றலுக்கேற்ப வரைந்து கொள்வதாகும்'.** *இது திருக்குற ளுரையில் விரதம் பற்றிப் பரிமேலழகர் தருங்கருத்து.*

ஒல்லையாறி யுள்ளமொன்றிக் கள்ளமொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனாம நாவினவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவல மேயவனே.

– திருஞானசம்பந்தர் தேவாரம்.

*திருவலிவலப் பதிகத்தின் முதற்பாடல் இது. இப்பாடல் கூறுங் கருத்துக்களில் மேலே கண்ட வடமொழியகராதி தரும் பொருளுண்டு. பரிமேலழகர் தருங் கருத்தம்சங்களுமுண்டு. அவற்றுக்கு மேலாகவும் உண்டு. அங்கே* **சங்கல்ப***மெனப்பட்டது. இங்கே* **உள்ளமொன்றி** *என்றதில் அடங்கும். அங்கே* **வினைமாசு** *தீர்ந்து என்றதும், இங்கே* **தொல்லை வினையகற்றி** *என்பதும் ஒக்கும். அங்கே* **அந்தக்கரணங்கள் தூயவாதல்** *எனப்பட்ட கருத்து, இங்கே* **ஒல்லையாறி, கள்ளமொழிந்து, சொல்லையாறி, தூய்மை செய்து** *என வகை வேறுபாடு புலப்பட விளக்கப் பட்டிருக்கிறது. இவ்வெல்லாவற்றுக்கும் மேலாக,*

**'நல்லவாறே யுன்றன்நாமம் நாவில் நவின்றேத்த'** *என்றதும் இருக்கின்றது.*

## உபவாசம்

*விரதத்திற்கு உபவாசம் என்பதும் ஒரு பரியாயம்* (Synonym).*உபவாசம் என்றால்* **'கிட்ட இருத்தல்'** *என்ற கருத்துப்* **ப்ராஹ்மணங்கள்** *என்ற வேத நூல்களிலேயே இடம்பெற்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கிறது. **'எதற்குக்கிட்ட எனில்'**, **'வழிபடுபொருட்குக் கிட்ட'** என்பர். கிட்ட என்பது இடத்தினாலுந்தான் மனச்சேர்க்கை யாலுந்தான் அகலாதிருத்தலைக் குறிக்கும்.**'இடத்தாற் கிட்டுதல்'**, **'மனத்தாற்கிட்டுதல்'** இரண்டும் சைவத்தில் மகா முக்கியமா னவை. பிறர் பிறர் இடத்தாற் கிட்டுதலை இரண்டாம் பட்ச மாக்குதல் கண்டு நம்மவரும் அது புரியாதொழிதல் வேண்டும். வீட்டிலிருந்தபடியே விரதம் திருப்தியளிக்காது. நிற்க,

விரதம் என்ற கருத்து வாழ்க்கை அநுசரணைகளிற் பல்வேறு முறைகளில் நின்று மனிதரை நல்வழிப்படுத்தி வருகின்றது. பொய் சொல்லாமை, வெகுளாமை, பிறர்பொருளை இச்சியாமை, ஐம்புல நுகர்ச்சிகளில் அளவு கடந்து செல்லாமை என்பன சாமானியமாக அனைவர்க்குமுரியன. இவையும் விரதங் களோ எனில், சற்கற்ப பூர்வமாக அநுட்டிக்கப்பட்டால் இவை களும் தத்தமளவில் விரதங்கள் ஆதலுடன் மற்றும் மற்றும் உயர் விரதங்களுக்கு இவை அங்கங்களுமாம். ஆதலின் இவையும் விரதங்களே என்போம்.

**'கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்'** என்றார் தாயுமானவர். அன்றியும் இவற்றில் ஒன்று வழுவினும் எந் விரதமும் வீறுகொள்ளாது என்பதையும் அறிந்து கொள்வோம்.

தன் கணவனையேயன்றிப் பிறரெவரையும் ஒரு பொருளாக் கருதாத பதி விரத்தியம் என்பது பெண்களுக்கு விசேட விரதமாக வேண்டப்படுகிறது. நாங்கள் கருதும் விரதக் கருத்துக்கும் இக்கருத்து உடந்தையானதே! ஆன்மாவாகிய பெண் சிவபெரு மானாகிய நாயகனையன்றி வேறெவரையும் பொருட்படுத்தாதி ருத்தலாகிய கற்பு நெறியை இது நினைவிக்கும். சொல்லை மாறித் தூய்மை செய்து கொல்லாமை, புலாலுண்ணாமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனடக்கம், அவாவின்மை, உடற்றுன்பங்களை மனவிகார மின்றிச் சகித்திருத்தல், என்றும் சித்த சமாதானத்தோடிருத்தல் ஆகியன துறவு நெறி விரும்புவோர்க்கு விசேடமாக வேண்டப் படுவன. இவையும் மற்றெந்த உயர் விரதத்துக்கும் இன்றியமை யாதனவே.

இத்தகைய விரதநிலை ஒவ்வோர் சமயத்தார்க்கும் அவ்வவர் போக்குக்கேற்ப அமைந்திருக்கிறது. ஆனால் சைவசமயம் அவ்வெல்லாவற்றையும் ஒருமுகப் படுத்திக்கொண்டு போய், பூசைவழிபாட்டுக்குச் சாதனமாய் அமைத்திருக்கின்றது. சற்று முன்னே அவதானித்த சம்பந்தர் தேவாரத்தில் இஃதா மாற்றை நன்கு கண்டோம். **விரத நிலையை எடுத்துக் காட்டுதற்கும் விரத நாளில் பாராயணமாக மேற்கொள்ளுதற்கும் ஏற்ற ஒரு அருமையான தேவாரம் அது.**

## காலதத்துவம்

இவ்வகையால் சைவத்துக்கு எல்லா நாட்களும் விரத நாட்களே. எனினும், கடவுளுக்கு அடுத்தபடியாக நமக்கு விசேட மிக்கது காலமென்ற ஒரு தத்துவம். கடவுள் உயிர்க்கருளுங் காரியங்கள் அனைத்தினையுங் காலத்தை இடமாகக் கொண்டே நடத்துகிறார். அவருடைய விசேட அருட் செயல்களுங் காலம் இடமாகவே நடைபெற்றிருக்கின்றன. சிவன் நஞ்சுண்ட காலம் திரயோதசித் திதியன்று பிரதோஷ நேரம். அவர் பிரமவிஷ் ணுக்கள் நடுவிற் சோதியாயெழுந்தது மாசி அபரபக்கச் சதுர்த் தசியன்று நடுயாமத்தில். தில்லையில் வியாக்கிரபாத பதஞ்சலி முனிவர்களுக்கு நடனதரினம் நல்கியது தைமாசப் பூசநட்சத் திரத்தில்; உமாதேவியைத் தாம் திருக்கல்யாணம் புரிந்தது பங்குனி உத்தர நட்சத்திரத்தில். இது இவ்வாறாக,

சைவசித்தாந்த தத்துவங்கள் முப்பத்தாறில் சுத்தமாயா தத்துவங்கள் ஆன சிவதத்துவம் ஐந்துஞ் சொல்லப்பட்டு மேல் அசுத்தமாயா தத்துவங்கள் ஆரம்பிக்கையில் முதல் தத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகக் காலம் சொல்லப்படுகிறது' **அருவமாகிய கடவுள் எவ்வாறு நின்று** உலக கிருத்தியமெல்லாஞ் செய்கிறார்? என்றெழும் வினாவுக்கு **அருவமாகிய காலம் நிற்பது போல நின்று செய்கிறார்** என்றே சிவஞானசித்தியார் விடை சொல்கிறது.

'ஞாலமே விசும்பே இவை வந்துபோங்
காலமே உனை என்றுகொல் காண்பதே' – திருவாசகம்.

மாணிக்கவாசக சுவாமிகள் காலத்துக்கும் கடவுளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பு குறித்தே அவரைக் **காலமே** என விளிக்கின்றார்.

**காலேசுவரவாதம்** எனப் பெயர் பெற்ற ஒரு சமயக் கொள்கையுமுண்டு. சைவசித்தாந்தத்திற் காலம் கடவுளல்ல. ஆனால், கடவுள் ஆணைக்கமைந்து அதற்குமிக அண்மியதாய் நிற்கும் ஒரு துணைக்காரணம்.

இப்படிக் கடவுளோடு கிட்டிய தொடர்பிருத்தல் பற்றிக் காலம் முழுவதிலும் பொது நிலையிலும், குறிக்கப்பட்ட வெவ்வேறு காலப்பகுதிகளிற் சிறப்பு நிலையிலும், கடவுள் பிரபாவம் சம்பந்தப்பட்ட ஏனைய தத்துவங்களிற் பிரதிபலிப்பதிலுங் கூடுதலாகப் பிரதிபலித்துக் கொண்டிருப்பது ஒருண்மை. இதன் பிரகாரம் கடவுள் பிரபாவம் விசேடமாகப் பிரதிபலிக்குங் காலப் பகுதிகள் விரதத்துக்கு விசேட தினங்களாகக் கொள்ளபட்டிருக்கின்றன.

காலம் என்ற பொருள் கல்பம், மன்வந்தரம், யுகம் என்ற பெரும் பிரிவுகளாகவும் வருடம், மாசம், வாரம், திதி, நட்சத்திரம் முதலிய சிறுபிரிவுகளாகவும் நின்று நமக்கு உதவுகின்றது. தனிப்பட்ட ஒரு பிறப்பில் நமக்குத் தொடர்பாயிருக்கக் கூடியவை இச்சிறு காலப்பிரிவுகளே. அதனால் இப்பிரிவுகளில் குறிக்கப்பட்ட சில நட்சத்திரங்களும், குறிக்கப்பட்ட சில திதிகள், வாரங்கள் என்பனவும் விரத காலங்களாக ஏற்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பூசவிரதம், உத்தரவிரதம், திருவாதிரைவிரதம் போன்றவை நட்சத்திர சார்பான விரதங்கள். விநாயகசதுர்த்தி, கந்தர்சஷ்டி, ஏகாதசி, அமாவாசை, பௌர்ணமி போன்ற விரதங்கள் திதி சார்பானவை. சோமவாரவிரதம், சுக்கிரவார விரதம், சனிவார விரதம் போன்றவை வாரம் சார்பான விரதங்கள். பிரதோஷ விரதம், சிவராத்திரி, நவராத்திரி என்பவை நாட் கூறுகள் சார்பானவை.

இங்ஙனம் நட்சத்திரங்கள், திதிகள், வாரங்களிற் குறிக்கப் பட்டவை, சில கட்டங்களில் விசேடம் பெறுவதற்குக் கிரக சஞ் சார ரீதியான விஞ்ஞான காரணமுமுளதாகத் தெரிகிறது. அவற்றிற் சிலவற்றைப் பற்றிய சில அசுகைகள் (Glimpses) சோதிடசாஸ்திர வாயிலாக அறியப்படுகின்றன. முழுவிவரமும் வெளியாக வேண்டுபவை.

சூரிய வீதியாகிய வானவட்டம் பன்னிரு இராசிகளாக உள்ளது. இவ்வான வட்டத்திலேயே சந்திரனும் மற்றும் கிரகங்களும் ஒன்றையொன்று சுற்றுதலும் சூரியனைச் சுற்றுதலுமாகிய செயல்களும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. சந்திரனுடைய ஒரு சுற்றில் 27 நட்சத்திரங்கள் தொடர்பு படுகின்றன. இந்த 27 இல் ஒவ்வொன்று சூரியன் செல்வாக் கினால் ஒவ்வொரு இராசியில் மேன்மையுறும். அத்தொடர்பில் அவ்வந் நட்சத்திரப் பெயரின் சார்பிலேயே மாசப் பெயரும் ஏற்படுகிறது.

இவ்வகையால்,

சூரியன் மேடத்திற் செல்லுங்கால் விளக்கம் பெறுவது சித்திரை நட்சத்திரம். அம்மாசமும் சித்திரை மாசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனமே,

| இலக்கினம் | விசேடநட்சத்திரம் | மாசப்பெயர் | |
|---|---|---|---|
| | | வடமொழி | தமிழ் |
| இடபம் | விசாகம் | வைசாகம் | வைகாசி |
| மிதுனம் | மூலம் | ஜ்யேஷ்டம் | ஆனி |
| கர்க்கடகம் | உத்தராடம் | ஆஷாடம் | ஆடி |
| சிங்கம் | திருவோணம் | சிராவணம் | ஆவணி |
| கன்னி | உத்தரட்டாதி | பரத்ரபதம் | புரட்டாதி |
| துலாம் | அச்சுவினி | ஆஜ்வீசம் | ஐப்பசி |
| விருச்சிகம் | கார்த்திகை | கார்த்திகை | கார்த்திகை |
| தநு | திருவாதிரை | மார்கசீர்ஷம் | மார்கழி |
| மகரம் | பூசம் | புஷ்யமாசம் | தை |
| கும்பம் | மகம் | மாகமாசம் | மாசி |
| மீனம் | உத்தரம் | பாற்குனம் | பங்குனி |

மாசாமாசம் விசேட நட்சத்திரங்களமையும் விபரம் இதுவாம்.

இனி, திதிகளில் ஒவ்வொன்று ஒவ்வோர் மாசத்தில் விசேடம் பெறுகின்றது. சந்திரனுடைய சுற்றுநிலையில் அது சூரியனுக்கு பன்னிரண்டு பாகை விலக ஒரு திதி என்று கணக்குண்டு. குறிக்கப்பட்ட ஒவ்வோர் ஒவ்வோர் திதி இப்பாகைநிலை நோக்கில் விசேடம் என்று கருதப்படுவதாகத் தெரிகிறது. ஆவணியில் சதுர்த்திக்கும், ஐப்பசியில் சஷ்டிக்கும், புரட்டாதியில் தசமிக்கும், மார்கழியில் ஏகாதசிக்கும் விசேடமுண்டு. பொதுவாக அமாவாசை, பௌர்ணமிகளுக்கு எல்லா மாசங்களிலும் விசேடம் உண்டேனும் தை அமாவாசையும் ஆடி அமாவாசையும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வாறே சித்திரா பூரணைக்குந் தனி விசேடமுண்டு.

தத்தம் சுற்றுநிலைகளில் பூமிக்கு, மற்றும் கிரகங்களின் செல்வாக்குச் சம்பந்தப்படும் ஒவ்வோர் நிலைகளில் வைத்து அவ்வகையால் வார விசேடங்காணப்படுகிறது. ஆவணி மாசத்திற் சூரியன் பூமிக்கு ஆட்சியாயிருத்தல் பற்றி ஆவணியில் சூரிய வாரமாகிய ஞாயிற்றுக்கிழமை விசேடம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைக்கும் இது பொருந்தும். வைகாசியில் சுக்கிரன் பூமிக்கு ஆட்சியாதலால் இம்மாசத்தில் சக்கிரவாரமாகிய வெள்ளிக் கிழமை விசேடமுறுகின்றது. ஐப்பசிக்கும் இது பொருந்தும். புரட்டாசி மாதத்தில் சனி நட்பு நிலையி லிருத்தலால் சனிவாரம் அம்மாசத்திற்குச் சிறந்ததாகிறது. இவை ஓரளவில் நாம் அநுமானிக்கக் கூடியவை. இவ்வாறே பங்குனியில் சந்திரன் நட்பு நிலையிலிருத்தலால் சந்திரவாரமாகிய திங்களுக்கு அம்மா சத்தில் விஷேடமுண்டு. விருசிகமாசமாகிய கார்த்திகை மாதத் தில் சந்திரன் நீசமாயிருக்க, அதன் வாரமாகிய திங்கட்கிழமை சோமவாரமாக அனுட்டிக்கப்படுகிறது. ஆடி மாசத்தில் செவ் வாய் நீசமாயிருக்க அதன் வாரமாகிய செவ்வாய் விரததினமாகக் கொள்ளப்படுகின்றது. இவையுஞ் சிந்தித்தற்குரியன.

எல்லாமாகப் பார்த்தால் பொதுவில், **'நல்ல தெல்லாம் உன்பாற் கொண்டாய் நாதா சண்முகா'** என்ற துதிதான் ஞாபகத் துக்கு வருகிறது. நட்சத்திரம், திதி, வாரம் என்ற ரீதியில் காலதத் துவத்தில் எங்கெங்கு தெய்வீகஞ் சிறக்கிறதோ அவ் வேளைகள் விரத தினங்களாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. சோதிட ரீதியாக அவதானிக்ககூடிய கிரகநிலைக் குறிப்புக்களும் அதற்குப் புறநிலை அத்தாட்சியாயமைகின்றன எனலாம்.

ஒரு மாசத்துக்கொருமுறை சூரியன் இராசி மாறுவதாகவும், சந்திரன் ஒரு மாசத்துக்குள்ளாகவே பன்னிரு இராசியையும் வலம் வருவதாகவும் சோதிடத்தில் ஒரு குறிப்புண்டு. அக்குறிப் பின் வண்ணம் மாசத்தில் ஒருநாள் சூரியன் இருக்கும் இடத்தைச் சந்திரன் அணுகி அதன் உடனிருக்கும். அந்தத்தினம் அமாவா சையாக் கொள்ளப்படுகிறது. விரதங்களில் பெரும் பான்மையாக எல்லோரும் அநுட்டிக்கும் விரதங்கள் சிலவற்றில் அமாவாசை பௌர்ணிமை இரண்டும் பரவல் வழக்கிற் பிரதானமானவை. இவற்றில் அமாவாசை பலதுறைகளில் விசேடம் பெறுகிறது. அன்று பிதிரர்கள் மகிழ்ந்திருக்கும் காலம் என்றும் பிதிர்ப் பிரீதியளிக்கும் திலதர்ப்பணம் (எள்ளுந் தண்ணீருமிறைத்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று விசேடமாகச் செய்யப்படவேண்டும் என்றுங் கொள்ளப் படுகின்றது. அண்டத்திலே சூரியனுஞ் சந்திரனும் ஒன்றுகூடும் அவ்வேளை பிண்டத்திலே (உடலில்) உள்ள சூரிய சந்திர மண்டலச் சேர்க்கைக்கு உகந்த கால மெனவும், அந்த நிலை தியானதுக்கு மிக உவப்பானதெனவும், சூரிய சந்திரத் தொடர் புள்ள இடைகலை, பிங்கலை நாடிகளின் ஒத்துழைப்பு அன்றைய பிராணாயாமத்தில் விசேடமாயிருக்கு மெனவும் கருதப்படு கிறது. இனி சித்தாந்த உண்மை நோக்கில் அன்றைய தினம் ஆன்மா சிவனை அண்டியிருக்கும் நிலையின் அறிகுறியாகவும் அவதானிக்கப்படுகிறது. இதன் ஒப்புமை விளக்கம் அவசிய மானது. சூரியனொளியாற் சந்திரனும் தற்காலிக ஒளியுள்ளதா யிருந்த தன்றித் தன்னொளியுடையதன்று. உயிரும் சிவனருளா லன்றித் தன்னொளியுடைய தன்று. இருந்தும் அமாவாசையல்லா நாட்களில் சந்திரனும் தன்னொளியாளன் போல உலகிற்குப் படும்படி இருந்தது. உயிரும் தன்னறிவாளன் போலவே தன் பெத்தநிலைக் காலமெல்லாம் உலாவியது. அமாவாசையன்று சந்திரனுக்கிருந்ததென எண்ணிய ஒளியெல்லாம் சூரியனொ ளியே வேறில்லை என்ற இரகசியம் பரகசிய மாகிறது. அன்று சந்திரன் **'என்னொளியாவ தொன்றில்லை எல்லாம் உன்னொளியே'** எனச் சூரியனிடத்தில் தன்னை ஒப்படைத்து அதனொளியில்தான் அமிழ்ந்தியிருக்கும் நிலை ஏற்படுகிறது. தனக்கறிவுண்டென் றிருந்த உயிரும் பெத்தநிலை நீக்கமாகிய ஒரு கட்டத்தில் **'என்ன றிவாவது யாதொன்று மில்லை சிவனே: எல்லாம் உன்னறிவே!** எனத் தன்னறிவைச் சிவன்பால் ஒப்படைத்து அவனறிவில் அடங்கி உடனிருக்கும் நிலையொன்று இருக்கிறது. இந்நிலையை மனதார எண்ணித் தியானபூசை வழிபாடுகள் செய்ய இது நல்ல தருணந் தானே' அன்றியும்,

பிரபஞ்சசிருஷ்டி முழுவதற்கும் தந்தையும் தாயுமாயுள் ளவை சூரிய சந்திரர்கள். சூரியனின் உக்கிரத்திலும் வெப்பத் திலும் தந்தையாமியல்பும் சந்திரனின் தண்மையிலும் செம்மை யிலும் தாய்மையியல்பும் பிரதிபலித்தல் கண்கூடு. இதன்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் தன்னொளி மிஞ்சி நிற்கும் அமாவாசை தினம் தந்தை வழியை (பிதிர் வழியை) நினைவு கூர்தற்கும், அவர்க்காம் கடன் புரிதற்கும் உரிய தினமாதலும், சந்திரன் ஒளி நிறைவுற்றிருக்கும் பூரணை நாள் தாய்வழியை நினைவு கூர்தற்கும், அவர்க்காம் கடன் புரித்றகும் உரியதினமாதலும் பொருந்துவதேயாம். **அமாவாசை தந்தை விரதநாள்; பூரணை தாய் விரத நாள்** என்ற வழக்கின் பின்னணி இதுவாகும்.

இப்படி இப்படி விரத விசேடங்கள் உணர்ந்து உணர்ந்து விரதங்கள் அநுட்டிக்கத் தக்கவையாம். விரத விளக்கங்கள் பெறுவதற்குப் புராணக்கல்வியும் இன்றியமையாதது.

எவ்விரதமாயினும் நாம் ஏலவே கண்டவாறு அகத்தூய்மை புறத்தூய்மையைப் பெருக்கி அகப்புறக் கருவிகளில் ஒடுக்கத்தை ஏற்படுத்திச் சிவத்தியானத்தையும் சிவபூசை வழிபாடுகளையும் செழிப்பிக்கும் பாங்கில் அநுட்டிக்கப்பட வேண்டும். விரத அம்சங்களாகிய சங்கற்பம், உபவாசம், தீர்த்தஸ்நானம், சிவவழிபாடு ஒவ்வொன்றும் கிரமமாகக் கொள்ளப்பட வேண்டும். உணவொழிந்திருத்தல் மட்டும் உபவாசமன்று. அது மட்டுமானால் அதற்குப் பெயர் **பட்டினி இருத்தல்.** உணவொழிந்திருத்தலோடு மனத்தூய்மையுஞ் செம்மையும் மிகுவித்துச் சித்தத்தைச் சிவன்பால் செலுத்தி உடலாலும் உள்ளத்தாலும் அந்நிலையிற் பிரியாதிருத்தலே **உபவாசம்** என்பது விசேடதரமாக அறியப்பட வேண்டியதாகும். உணவொழிந்திருத்தல் விரதத்துக்கு இன்றியமையாத ஒரு நியமமாகவே கொள்ளப்படும். உணவின்மை உடலின் கனத்தன்மையையும் மதர்ப்பையும் பெருமளவிற் குறைக்கும். அந்நிலையில் உணரப்படும் ஒரு வகை இலகுத் தன்மை மன ஒடுக்கத்துக்கும் தெய்வ சிந்தனைக்கும் மிகமிகப் பத்தியமான ஒரு சூழ்நிலையாகும். நம் பொறிபுலன்களின் பரபரப்பும் மனதின் சஞ்சல நிலையும் உணவொழிந் திருத்தலால் தணிவடையும். திருஞானசம்பந்தர் பாடலிலுள்ள **ஒல்லையாறி கள்ளமொழிந்து, வெய்ய சொல்லையாறி,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காமவினையகற்றி** என்ற இந்த நால்வகைப் பண்புகளும் லப்பிய மாதற்கு உணவின்றி இருத்தல் சிறந்த சாதனமாகிறது.

விரதநாளில் உணவொழிந்திருத்தலின் அவசியம் மற்றொரு வகையாலும் வலிவுறும். நமக்குள்ள வாதனைகளிற் பிரதான வாதனையாயுள்ளது பசி. இயல்பில் நமக்குள்ள வாதனைகளை மெல்ல மெல்ல வெல்லப்பழகுதலும் வேண்டியதே. இடையிடை ஓரோவொரு நாள் பசியை மறந்திருக்க இது நல்லதொரு சந்தர்ப்பமாகிறது. அதை அடியோடு மறக்க முடியாமல் அதன் தாக்கம் உணரப்பட்டுக் கொண்டிருந்தாலுந்தான் பழுதில்லை. பசிக்கப் பசிக்க உணவை நினைப்பது சாதாரண வழக்கம். அதற்கெதிர், பசிக்கப் பசிக்கக் கடவுளை நினைக்கும் வாய்ப்பு இங்கே ஏற்படுகிறது.

**'உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்**
**ஒண்மலரடியலால் உரையா தென்நா'** – சம்பந்தர் தேவாரம்

இத்தேவாரப் பொருள் அத்தொடர்பில்தான் செம்மையாய் விளங்கும். இந்த விளக்கமும் விரத உணர்வுக்கு மிகமிகப் பத்தியமாய் இருக்கும்.

பிரதான விரதங்களில், பொதுவாக முதனாள் ஒரு நேர உணவும் விரததினத்திலன்று முழுப்பட்டினியும் அடுத்தநாள் மட்டும் பத்திய உணவும் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் எங்களுக்கு எல்லா விரதங்களும் சிவவிரதங்களே. அமாவாசையுஞ் சிவவிரதமே. விநாயக விரதம், அம்மன் விரதம், முருகன் விரதம் என்ற பெயரிற் சொல்லப்படுவனவும் சிவவிரதங்கள். **விநாயகரும் அம்மனும் முருகனும் சிவனின் வேறாகார்** என்க.

## ஆன்மபக்சத்திற்கும் கிரியையிற் பங்கு

இவ்வுலகில் வாழ்ந்து பெத்தநிலை நீங்கிச் சுத்தநிலையெய்தும் சீவன்கள் சிவலோகத்திற்கு உரியவர்கள். சிவலோகம் எனப்படுவது எங்கள் தத்துவக்கிரமத்திலே சுத்தவித்தியா தத்துதவம் முதல் சிவதத்துவம் ஈறான ஐந்து தத்துவங்களை அடக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பகுதி சிவனும் சிவனருட் சக்திகளும் சுவரூபித்து நிற்கும் பகுதியாதலால் அதன்பெயர் சிவலோகம் ஆயிற்று. எமது இவ்வுலகிலிருந்து சிவகதி பெறத்தகுதியான உயிர்களிலும் தர வேறுபாடு உண்டு. சிவகதி பெறுதற்குரிய உயிர்களின் குறைந்த பட்சத் தகுதி மாயாமல நீக்கம் ஆகும். மாயாமலத் தொடர்பு மட்டும் முற்றாக நீங்கி மற்று இரு மலங்களிலும் கணிசமான அளவு குறையப்பெற்ற உயிர்கள் பிரளயாகலர் என ஒரு வகையினராவர். மாயாமலத்தோடு கன்மமலத் தொடர்பும் முற்றாக நீங்கி ஆணவமலத் தொடர்பு இன்னும் கொஞ்சம் உள்ளவர்கள் விஞ்ஞானகலர் எனப்பிறிதோர் வகையினராவர். ஆணவமலத் தொடர்பும் முற்றாக நீங்கப் பெற்ற உயிர்கள் **முக்த ஆன்மாக்கள் - வீடுதலை பெற்ற உயிர்கள் ஆவார்கள்.** ஒவ்வொரு வகையிலும் உள்ளுக்குள் தகுதி வேறுபாடும் உண்டு.

அதற்கமைய முத்தான்மாக்களில் ஒரு பகுதியினர் சக்தி தத்துவம் சிவதத்துவம் என்ற 35ஆம் 36 ஆம் தத்துவங்களில் சிவனருட்பேறொன்றையே அநுபவிப்பவர்களாயிருப்பார்கள். அவர்களுள் பக்குவம் மிக்கவர்களாகிய ஒரு பகுதியினர் சிவ னோடு இரண்டறக் கலந்திருத்தலாகிய **சிவசாயுச்சிய** நிலையை அடைந்திருப்பார்கள். இரு பகுதியினர் நிலையும் முத்தி நிலையே. ஆனால் முன்னைய பகுதியினர் **அபரமுத்தர்கள்** எனவும், பின்னைய பகுதியினர் **பரமுத்தர்கள்** எனவும் பெயர் பெறுவர். அபர முத்தர்களும் பரமுத்தர்களாகும் வாய்ப்புக் காலகதியில் தன்பாட்டிலே கிடைக்கும்.

விஞ்ஞானகலர் எனப்பட்ட வகையினர் சத்தி தத்துவத் துக்குக் கீழ்ப்பட்ட 33 ஆம் 34 ஆம் தத்துவங்களாகிய மகேசுர தத்துவத்திலும் சதாசிவ தத்துவத்திலும் சிவனாணையால் தமக்கு வாய்க்கும் சில சில அதிகாரங்களாடு இருப்பார்கள். இதனால் அவர்களுக்கு **அதிகாரமுத்தர்கள்** என்று பெயர். அவர்களும் தரவேறுபாட்டுக்கிணங்க **மந்திரேஸ்வரர், மந்திர மகேஸ்வரர், அஷ்ட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வித்தியேஸ்வரர், அனுசதாசிவர்** என்ற வகைகளில் இருப்பார்கள். இவர்களுக்கும் நெடுங்கால அடைவில் அபரமுத்தர்களாய்ப் பின் பரமுத்தர்களாகும் வாய்ப்புண்டு. பரமுத்தர்கள் அபர முத்தர் களைப் போலவே, இவர்களுக்கும் மீளவும் பூமியில் வந்து பிறக்கும் நிலையில்லை. **இவர்கள் எல்லோரும் பிறவாநெறி பெற்ற பெருமக்கள்.**

இவர்களில் **மந்திரேஸ்வரர்கள்** சிவலோகத்தில் வியாபகமாயி ருக்கும் சிவசத்தி அம்சங்களைச் சிவனாணையால் மந்திரங் களாக அமைத்துக் கொண்டிருக்கும் பணியில் இருப்பார்கள். மந்திர **மகேஸ்வரர்கள்** அப்பகுதித் தலைமையாளர்களாவார்கள். **அனுசதாசிவர்கள்** என்போர் சிவனருளால் சதாசிவமூர்த்திக்குரிய முக்கண், நீலகண்டம் என்ற அம்சங்களோடு கூடிய திருமேனி தாங்கி அவர் ஆணைக்கமைந்து அவர் பக்கங்களில் இருப் பார்கள். **அஷ்டவித்தியேஸ்வரர்கள்** என்போர் சதாசிவமூர்த்தி மகேஸ்வரர் என்ற பெயரில் அதிகாரம் புரியும் நிலையில் அவர் மருங்கில் எட்டுத் திசைகளிலும் அமர்ந்து அவருடைய அதிகார கிருத்தியங்களில் அவராணைக்கமைந்து பங்கு கொள்பவராயி ருப்பார்கள். இவர்களுக்கு **அநந்தர், சூக்குமர், சிலோத்தமர்** முதலாகிய பதவிப் பெயர்களும் உண்டு. இவர்களின் நிலை கல்லூரியதிபரின் நிர்வாகத்துக்கு. உடன் நின்றுதவும் சிரேஷ்ட மாணவ தலைவர்களின் (Prefects) நிலையாம். இவருள் அநந்தர் நிலை பிரதம மாணவர் தலைவரின் நிலை போல்வதாம்.

இனி, பிரளயாகலர் எனப்படுவோர் மகேசுவரதத்துவத் துக்குக் கீழ்ப்பட்ட தான சுத்த வித்தியா தத்துவத்தில் உருத்திர மூர்த்தியாகிய சிவனாணையின் கீழ், தம் தரத்திற்கேற்ப ருத்திரர் களாய் சுத்த வித்தைக்குக் கீழ்ப்பட்ட எல்லாப் புவனங்களிலும், எல்லா அண்டங்களிலும், அண்டப் பிரிவுகளிலும் அங்கிருந்து பிரபஞ்ச அதிகாரத்திற் பங்கு பூண்டிருப்பார்கள். இவர்களுக்கு மட்டும் இருந்தபடியிருந்தே அபரமுத்தி பரமுத்திகளை அடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பில்லை. மீளப் பிறந்தே அவற்றையடையும் வாய்ப்பைப் பெறுவர். ஆனால், அவர்கள் பிறப்பு நம்மவர் பிறப்புப் போலல்லாது **மகத்தான பெரும் பிறப்பாகவேயிருக்கும்.** இவர்களின் பிறப்பே அவதாரம் என்ற பெயருக்குப் பொருந்துவது. சைவத்தில் சிவ சம்பந்தப்பட்ட எதுவும் மனிதர் போற் பிறப்பதில்லை. அணு (உயிர்) சம்பந்தமான பிரளயாகலருக்கே பிறப்புண்டு. அதற்குப் பிரத்தியேகமான பெயர் அவதாரம். நாங்கள் சகலர்: எங்கள் பிறப்புக்குப் **பிறப்பென்று** தான் பெயர்.

## கருணையின் பெருமை

சிவபெருமானுடய **பிரபஞ்ச சாம்ராஜ்ய அதிகார நிர்வாக ஒழுங்கிருக்கும் சீரை,** சாதாரண உலகியல் அரச நிர்வாக ஒழுங்கில் அமைத்துப் பார்க்கத்தக்கவாறு ஆகமங்கள் இவ் வாறு வகுத்து விளக்கியிருக்கின்றன. இதுபற்றிய சுவையான கருத்தம்சங்கள் இன்னும் அவற்றில் நிறையவுண்டு. நாங்கள் தற்போதைய தேவையளவில் அமைவோம்.

**'அளவிறந்தது அருள் சிவ சிவ சிவ'** என்று வியந்தார் அங்கொரு பெரியார். **'கருணையின் பெருமை கண்டேன் காண்க'** என்று குதூகலித்தார் மாணிக்கவாசக சுவாமிகள். சிவபெருமான் நம் போன்ற உயிர்களை மேல் கதிக்கெடுத்துத் தமது சிவத்துவச் சார்பைக் கொடுத்தலிற் கொண்டிருக்கும் அக்கறை எவ்வளவினதென்பதை மேற்கண்ட ஆகம விளக்கம் அழுத்தந் திருத்தமாய் எமக்குக் காட்டுகிறது. ஆகக்குறைந்தபட்சத் தகுதி கண்டாலே அதற்கேற்ற ஒரு உயர்வைத் தந்து சிவலோகத்தில் வாழவைக்க முந்துகிறதல்லவா சிவபெருமான் திருவருள்.

இத்திருவருள் நலத்துக்கிணங்க, மேற்சொன்ன அதிகார முத்த நிலையினர்களாகிய ஆன்மாக்களையும் சிவனுக்குரிய அபிஷேக பூசைக்கிரியைகளிற் சம்பந்தப்படுத்திக் கொள்ளும் **சைவக் கலைச் செழிப்பை** இனிக் கவனிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலொன்று நிர்மாணமாகிப் புதிதாகப் பிரதிஷ்டை நடைபெறும் போது மூலமூர்த்திப் பிரதிஷ்டை பிரதானமானது. மூலமூர்த்தி பிரதிஷ்டையானதும், அதைச் சுற்றிவர எட்டுக் கோணங்களில் எட்டுப் பேருக்குப் பிரதிஷ்டை நடக்கும். அந்த எண்மரும் யார்?

உற்சவமாகுங் கோயிலில் கொடிமரம் பிரதிஷ்டை செய்த கையோடு அதைச் சுற்றிவர எட்டுமூலையில் எண்மருக்குப் பிரதிஷ்டை நடக்கும். அந்த எண்மர் யார்?

கோயிலில் ஸ்நபன அபிஷேகத்துக்கு ஒன்பது கும்பம் அமைக்கும் போது நடுவில் உள்ள பெரிய கும்பம் சிவம். அதனோடு ஒட்டினாற்போல ஒரு சிறு கும்பமிருக்கும். அது சத்தி. இந்தச் சத்தியோடு கூடிய சிவகும்பத்தைச் சுற்றிவர எட்டுக் கும்பங்கள் இருக்கும். இவற்றால் குறிக்கப்படுவர்கள் யார்?

இவர்கள் வேறு யாருமல்லர். மேற்சொன்ன அதிகாரமுத்தர் வகை நான்கில் ஒரு வகையாகிய அஷ்டவித்தியேஸ்வரர்களே தான். இவர்கள் அணுக்கள். அதாவது ஆன்ம வர்க்கத்தினர்கள். இவர்களுக்கும் சிவனோடு சேர்ந்து ஆவாகனம், சந்நிதானம், சந்நிரோதனம், தியானம், அபிஷேகம், அலங்காரம், நைவேத் தியம், பூசை எல்லாமுண்டு. ஆனால் இவர்கள் பெரும்பாலும் மனதால் கற்பித்துப் பூசிக்கப்படுகிறார்களே தவிர, மூர்த்தியைப் போல உருவமாகச் செய்து வைக்கப்படுவதருமை.

மூலமூர்த்திக்குப் பூசைபுரிகையில் முன்னோடியாகப் **பஞ்சா வரண பூசை** என ஒன்று நடைபெறும். அதில் இரண்டாவது ஆவரணத்திற் பூசிக்கப்படுபவர்கள் இந்த அஷ்டவித்தியேஸ் வரர்கள் தான்.

ஸ்நபன கும்ப அபிஷேகம் நடைபெறும்போது அஷ்டவித்தி யேஸ்வரர் கும்பங்களும் மூலமூர்த்திக்கு அபிஷேகமாகின்றன. கோயிற் புனருத்தாரணம் செய்கையில் அங்கிருக்கும் மூல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி இடம் பெயர்க்கப்பட வேண்டிவரும். அதற்கு முன் அம் மூர்த்தியிலிருக்கும் தெய்வசக்தி பரிபக்குவமாக மந்திர சாத னையால் இழுக்கப்பட்டு ஒரு கும்பத்திற் சேர்க்கப்படும். இதற்குக் **கலாகர்ஷணம்** என்று பெயர். இக்கிரியையின் போது அஷ்டவித்தியேஸ்வரர்களின் சக்தியைக் கும்பத்தில் சேர்த்த பின்பே மூர்த்தியின் சக்தி இழுக்கப்படும். ஸ்நபனத்துக்கு ஒன்பது கும்பங்கள் மட்டும் இடம்பெறுவதை **அதமத்தில் மத்திமம்** என்ற அளவில் தான் **சித்தாந்த சேகரம்** என்ற ஆகமம் ஒத்துக் கொண்டிருக்கிறது. இத்தொகை இருபத்தைந்து, நாற்பத் தொன்பது, எண்பத்தொன்று, நூற்றெட்டு, இருநூற்றுப்பதினாறு, ஐந்நூறு என்று போய் ஆயிரம் ஆகும்போது உத்தமத்தில் உத்தமம் எனப்படுகிறது. இப்படிக் கும்பங்களின் தொகை அதிகரிக்கையில் எங்கள் அதிகாரமுத்தர் பட்சத்திலும் மற்று முள்ளோர் பட்சத்திலும் இன்னும் எத்தனையோ பேர் இடம் பெறும் வாய்ப்பு உண்டு.

## சண்டேசுவரர்

இது இவ்வாறாக, ஆலய நித்திய நைமித்திய பூசையம் சங்கள் எல்லாவற்றையுந் தொகுத்துச் சொல்லும் போது **சௌராதி சண்டாந்தம்** என்பார்கள். சௌர - சூரியன்; சண்ட - சண் டேசுவரர். ஒவ்வொரு நித்திய நைமித்திய பூசையும் சூரிய பூசையில் தொடங்கிச் சண்டேசுவர பூசையில் முடிய வேண்டும். இச்சண்டசுவர பூசையைப் பக்த பூசை என்றும் சொல்வர். இச் சண்டேசுவரர் யார்?

இவ்வுலக வாழ்விலிருந்து ஈடேறிச் சிவனருளால் அதிகார முத்தர் பதவிக்கும் அப்பாலான பெரும்பதவி பெற்றுச் சிவன் பக்கத்தில் அமர்ந்து பூசிப்போர்க்குப் பூசைப்பலன் கொடுக்கும் நிலையிலுள்ள ஒரு ஆன்மாவே இச் சண்டேசுவரராவர். சிவன ருளால் இவர்க்குப் பிரத்தியேகமான அந்தஸ்துக்களுமுண்டு. இவருக்குத் தனிக்கோயில், சிவனுக்குச் சூடுவன நிவேதிப்பன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிலும் பின்னுரிமை, விசேஷமாகச் சிவன் சூடுங் கொன்றை மாலையுரிமை வழிபாட்டு பலன் கொடுக்கும் உரிமை ஆகியன இவர்க்காம் விசேட அந்தஸ்துக்கள். எவ்வளவு செய்தும் சண்டேசுவரபூசை முடியாவிட்டால் அப்பூசைக்கு முடிவுமில்லை: விடிவுமில்லை. பெரியபுராணத்து நாயன்மார் களில் ஒருவர் இந்த உயர்பதவி பெற்றிருத்தல் பிரசித்தம். இன்னும், ஆலயங்களிற் பஞ்சமூர்த்தி உற்சவம் ஆகும்போது ஐந்தாவது இடம் வகிப்பவர் சண்டேசுவரர். பஞ்சரத உற்ச வத்தில் ஐந்தாவது ரதம் பக்த ரதம் என்ற சண்டேசுவர ரதம். கொடியிறக்கும் திருவிழாவில் சண்டேசுவரர் மட்டும் தனியே எழுந்தருளும் சண்டேசுவர உற்சவம் இடம்பெறும். கோயில் வழிபடுவோர் எவரும் இறுதிக் கட்டமாகச் சண்டேசுவர சந்நிதியிற் சென்று கும்பிட்டேயாக வேண்டும் என்பது வழிபாட்டு விதி.

எல்லாவகையாலும் பார்த்தால் சண்டேசுவரர்க்கு ஆலய பூசை விழாக்களில் ஏகபோக உரிமை இருத்தல் புலப்படும்.

## சமயாசாரியர்கள்

சைவசமயாசாரியர்கள் நால்வருக்கும் சிலாமூர்த்தங்கள் அமைத்துப் பூசித்தலும் செப்புப்படிமங்கள் சமைத்து விழா வெடுத்தலும் இராஜராஜசோழன் காலம் முதலாகவே நடை பெற்று வருகிறது. கால அமைவில் ஆகமங்கள் இவர்கள் காலத்துக்கு முற்பட்டனவாதலால் ஆகம பூசாவிதிகளில் இடம் பெறாதொழியினும் இவர்களையும் கோயிற்சுற்றுப் பிரகாரத்தில் தென்மேற்கில் பிரதிஷ்டை செய்து பூசித்து வழிபடற்கான ஒழுங் குகள் வகுக்கப்பட்டுள்ளன. பிரதம உற்சவங்களில் ஒன்று பக்தோற்சவமாக நடைபெற விதியுமுண்டு. குருபூசை நாட்களில் ஆலயங்களில் விசேட பூசை விழாக்கள் நடைபெறுதலும் கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர்க்கு மேலுமோர் தனிச்சிறப்புண்டு. மார்கழித் திருவாதிரை நாளில் ஆர்த்ரா தரிசனத்தின் சார்பில் நடராசரோடு ஒன்றாக மாணிக்கவாசகர், அபிஷேகம், பூசை, வீதியுலா அனைத்திலும் இடம்பெறுவர். திருவெம்பாவைக் காலம் மாணிக்கவாசகர்க்குத் தனியுற்சவ காலமுமாகும். தென்னிந்தியாவில் அறந்தாங்கிக்கண்மையிலுள்ள ஆவுடையார் கோயில் மாணிக்கவாசகர்க்கே முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட அற்புதச் சிற்பக்கோயிலாயிருக்கிறது. அங்கு சகல கிரியாவைபவங்களும் மாணிகவாசகர்க்கே.

திருஞானசம்பந்தர்க்கும் சீகாழிப் பெருங்கோயிற் பிரகாரத்தில் ஒரு தனிக்கோயிலுண்டு. அப்பர் சுவாமிகளுக்குத் திருவாமூரிலும், திருப்புகலூரிலும் சமீபத்தில் தனிக்கோயில்கள் எழுந்துள்ளன. சுந்தரர்க்குத் திருவாரூரில் விசேட சிறப்பு நிகழ்ச்சிகளுண்டு. சிவனுக்குரியது போல எல்லாவகையான பூசைக் கிரியைகளும் இவர்க்குள்ளன. இவராற் பாடப்பெற்ற திருத்தொண்டத்தொகை அடியார்கள் அறுபத்து மூவருக்கும் ஒரு கூட்டாக பிரதிஷ்டை பூசை விழா வைபங்கள் பெருங்கோயில்கள் எல்லாவற்றிலும் உள. சைவாதீனங்களில் சந்தானாசார்யர்களுக்கும் பிரதிஷ்டை பூசை விழாச்சிறப்புகள் விமரிசையாக நடைபெறுகின்றன.

சைவ ஆலய பூசைக் கிரியைகளின் தனிப்பெரும் நோக்கம் ஆன்ம ஈடேற்றமே. ஈடேறிய ஆன்மாக்கள் பூசைக் கிரியைகளிற் சம்பந்தப்படுதல் மூலமும், முத்திபெற்ற ஆன்மாக்கள் சிவனுக்குரிய சகல கௌரவ நிலைகளோடும் பூசிக்கப்படுதல் மூலமும், சண்டேசுவரர் ஆலய பூசையிற் பெற்றிருக்கும் விசேட அந்தஸ்துக்களின் மூலமும், இவ்வுண்மை வெகுவாகப் பிரஸ்தாபிக்கப் படுகின்றது. சிவாலய பூசையின் பண்பும் பயனும் சைவசித் தாந்த அநுபவ சாதனைப் பயிற்சியே என்பதை இங்குமொரு கால் நினைவு கூர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயபூசைகள் செழிக்க வழி

'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' — தாயுமானவர்

*நாங்கள் வாழுஞ் சூழ்நிலை மையலும் மொய்யலும் மலிந்தது. வெளி வாழ்வில் நம்முன்னே கிளைத்துச் செல்லும் வழிகள் ஏய்ப்பும் மேய்ப்பும் நிறைந்தவையாகத் தென்படு கின்றன. இன்பமென்று கருதி ஒன்றில் இறங்கினால் துன்பத்திலே கொண்டு சேர்க்கின்றது. நல்வழியென்று ஒன்றைத் தெரிந்து கொண்டு தொடர்ந்தால் பெருந்தீமைகள் தோன்றித் திடுக்கிட வைக்கின்றன. உலகமுகத்திற் பிரவர்த்திப்போம் என்று சென் றால் இப்படி இப்படித்தான். இருந்தாலும், இடையிடையே இன்பம் போல, வாழ்வு போல, மறுமலர்ச்சி போல ஒவ்வொன்று தோன்றத் தோன்றி நம்மை ஆகத்தீரச்சளைக்க விடாமல் ஏதோ நடத்திக்கொண்டு போகிறது. ஆனால், நிலையான நிம்மதியாக, நிலையான இன்பமாக, நிலையான சுகமாக இங்கு எதுவு மில்லைப் போலிருக்கிறது. அதேவேளை, இல்லை என்று முடிவு கட்டவும் முடியாமல் இருக்கின்றது. நம் பின்னணியிலே பெரிய தொரு பாரம்பரியமிருத்தல் தெரிகிறது. நிலையாக இன்புற்றோர் நினைவுகள் அதன் வழியே வந்து கொண்டிருக்கவும் காண்கின் றோம். நாம் காணவும் கேட்கவும் கூடியதாக இன்பநெறி நின்றார் வாழ்க்கைகளும் நடந்தேறியிருக்கின்றன. எல்லாரும்* **இன்புற் றிருக்க இடமுண்டென்றே** *தாயுமானவர் சொல்கின்றார். இவற்றின் மூலம் ஒரு புதிய தெம்பு பிறக்கின்றது.*

*இப்படி இன்புற்றவர்கள் எவ்வழியால் இன்புற்றார்கள் என்று ஆராய்கிறோம். வேறு யாருமல்ல, தன்னையறிந்தவர்கள் தான் இன்புற்றிருக்கிறார்கள் என்று எப்படியோ தெரியவருகிறது. தன்னையறிதல் என்றாலென்ன? தான் இந்த ஆசாபாசமயமான லோகப்பிராந்தியல்ல. உண்டுடுத்துப் பூண்டு செத்துச் சாம்பராதற் குரிய வெறும் வாழ்க்கைப் பொதியல்ல. தான் இவற்றுக்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறான ஒரு சித்துப்பொருள். தன் வழியும் துறையும் வேறு. ஆனால், இவற்றுக்குள்ளே தற்காலிகமாகத் தடக்குண்டு மாய் கின்ற சங்கடம் தனக்கிருக்கிறது. இச்சங்கடத்திலிருந்து விடுபட் டால் இன்பமாகும் எனப்படுகிறது. அவ்வளவுக்குத் தன்னை இதற்குள்ளிருந்து விடுவித்துக் கொண்டு விடுதலே தன்னைய றிதற்குச் சரியாகும் எனத் தெரிகிறது.

இனி, இதை அடைவதற்கு வழியென்ன என்று விசாரித்தால் பலவித சாதனைகளைச் சொல்லுகிறார்கள். நம் கலாசார பாரம்பரியத்துக்கு இணக்கமான ஒருவழியும் இருக்கிறது. இதுவே இலகுவழி எனவும் தெரிகிறது. இது மற்றெதுவுமல்ல, ஆலய பூசை வழியேதான் என்று தெரிந்து கொண்டோம். தெரிந்து கொண்டோமானால் அதைச் சரியாக நடைமுறைப்படுத்துவதே அடுத்த கடமையாகிறது.

ஆலயபூசைகள் பற்றி இதுவரை நாம் விசாரித்தவற்றின் மூலம் நமக்கு இன்றியமையாதது: மாற்றுவழி வேறில்லாதது; இனியது; நல்லது என்பதை அழுத்தந்திருத்தமாக அறிந்தோம். யதார்த்தபூர்வமாக ஆலயபூசைகள் இருக்க வேண்டியதற்கும் இன்றைய நடைமுறையிலுள்ளதற்கும் வெகுதூர வேறுபாடு இருத்தல் தெரிகிறது. இது ஏன் இப்படி? என்று விசாரிக்குமளவில் அது காலப்போக்கு என்கிறார்கள். அர்ச்சகர்களும் அதுதான் சொல்கிறார்கள். ஆலய நிர்வாகமும் அதைத்தான் சொல்கிறது.

உண்மைகள் காலத்துக்குத் தக மாறுமோ? இல்லை. ஆனால் காலத்துக்கும் ஒரு வலுவுண்டு. தன்போக்கிலே காலம் எல்லாவற்றையுந் தன் திசையில் செலுத்தப்பார்க்கும். உண்மை யில் நம்பிக்கை வைத்தவர்கள் இக்காலப்போக்கில் எடுபடுவ தில்லை. உலகில் உண்மையை நிலைநாட்ட முயன்றவர்கள் எல்லாம் கால வெள்ளத்தில் எதிர்நீச்சல் பொட்டுத்தான் கருமம் பார்த்திருக்கிறார்கள். எங்கள் நாவலர் வாழ்க்கை தான் இருக் கிறதே. கால நீரோட்டத்தில் அவர் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டுவந்த அம்சங்கள் தானே அவர் வாழ்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமறிந்து சுவைக்கக் கிடக்கின்றன. திருஞானசம்பந்தர் இந்த உண்மையை ஒரு உதாரணத்தால் எல்லோரும் அறியச்செயல் முறையில் நிரூபித்துமிருக்கிறார். மதுரையில் சமணர்களுடன் வாதிட்டகட்டத்தில் திருஞானசம்பந்தர் ஆற்றின் நீரோட்டத்துக்கு எதிர்பக்கமாக ஓடும்படி தம் ஏட்டைச் செலுத்தி இதை நிரூபித்தி ருக்கிறார். நாமும் எங்கள் விசயத்தில் இந்த முன்மாதிரியையே கடைப்பிடிக்க வேண்டிய நிலையில் உள்ளோம். காலம் சடப் பொருள். நாங்கள் சித்துக்கள். சித்துக்கள் உன்னித்தெழுந்தால் சடம் விட்டுக் கொடுக்க வேண்டியதே முறை.

## நாவலர் வாக்கு

இதற்கிடையில் நாவலர் வாக்கில் ஒருபகுதி நினைவு வருகிறது. "யாதாயினும் ஒருசமயத்தை நம்புகிறவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாதபொழுது பயன் பெறான். அந்தச் சமயத்துக்குமுரிய கடவுள் இவரென்பதும் அவரு டைய இலக்கணங்களும் அவரால் விதிப்பட்ட புண்ணியங்களும் விலக்கப்பட்ட பாவங்களும் அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுகதுக்கங்களும் அவரை வழிபடும் முறையும் அந்த வழிபாட்டினாலே பெறப்படும் பிரயோசனமும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத பொழுது அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குருமுகமாக விதிப்படி பெறுஞ் சமயநூற் கல்வி கேள்விகள் இல்லாத பொழுது அந்த அறிவு உதியாது. ஆதலால் கல்வியும் அறிவும் ஒழுக்கமும் ஆகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு?

– நாவலர் சரித்திரம் பக். 43

**'கல்லார் நெஞ்சில் நில்லானீசன்'**

## நாவலர் வழி வழி

நாவலர் வழியே நம்வழி. இதற்குள்ளே கிடக்கிறது நம் விமோசன வழி. **கல்வி, அறிவு, ஒழுக்கம் ஆகிய இந்த மூன்றும்** வேண்டும். இது சாகாவரம் பெற்ற ஒரு வாசகமாயிருக்கிறது. இதிலேயே முதலில் நம் கவனம் லயிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

சமய காரியங்களில் ஈடுபடுவோர் எவராயினும், - அவர் அர்ச்சகராயிருக்கலாம், ஆலய வழிபாட்டாளராயிருக்கலாம், - அங்கு நடைபெறுவன பற்றிய பூரண அறிவ; விளக்கம் உள்ள வராதல் வேண்டும். இந்த ஆலய விஷயங்களை விளங்குதற்கு புறமுக அறிவு (Empirical Knowledge) மட்டும் போதியதாகாது. அதற்கே சிறப்பாக உரியது சைவசித்தாந்த அறிவு. சித்தாந்த அறிவொளி விளக்கத்திலே சிவாலய விஷயங்ளை அலசித் தெளிந்து கொள்ள வேண்டும். சித்தாந்த அறிவு என்பதும் வெறுமனே ஒரு கட்டுப் பெட்டிக் கலையல்ல. சகலதுறை அறிவு களின் சாராமிர்தமாயுள்ளது அது. அகில கலையின் பொருட் கெல்லையாயுள்ளது அது எனல் பொருந்தும். அதற்கேற்ற அளவு விரிவான கலாவிசாரணையோடு சித்தாந்தக் கல்வி நிகழ சுயமொழியோடு அயல்மொழி அறிவும் வேண்டும். அயல் மொழியில் வடமொழி மஹாபிரதானமுள்ளது. இம்மொழிகளில் இலக்கண இலக்கிய தர்க்கரீதியான விளக்கம் வேண்டும். பிரதானமாக அர்ச்சகர்களும் ஆலய நிர்வாகமும் இதிற் சிரத்தை கொள்ள வேண்டும். சுருங்கச் சொன்னால் ஆலயச் சூழலில் கலைஞானப் பரிமளிப்பு முதலில் ஏற்பட வேண்டும். வேதாகம புராணேதிகாச விளக்கம் அங்கு ததும்ப வேண்டும் என்றால் சரியாயிருக்கும்.

## அறிவு

கல்விக்குப் பயன் அறிவு. அறிவு என்பது **'கல்வியின் மூலம் எனக்கின்னது வேண்டும்'** என **அறிந்து அணைத்துக் கொள்ளும்** ஒரு உணர்வு நிலையைச் சுட்டுகின்றது. இன்னது தனக்கு நல்லதென அறிந்து கொண்டவன் தன் மனச்சாட்சியோடு அதனைப் பொருத்திக் கொள்வான். புறநிலை ஏதுக்களால் அதற்கு இரண்டகம் விளையவரின் விட்டுக்கொடுக்கான். **இந்த நிலையே அறிவு நிலை.** சும்மா தெரிந்து கொள்ளுதல் என்ற அளவில் அறிவின் முழுமை உருப்படவராது; பலன் தரவும் மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கம்

கல்விக்குப் பயன் அறிவு என்பது போல அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்பதும் பிரதானம். ஏதேனுமொன்றைத் தன் மனச் சாட்சியோடு ஒட்ட அணைத்துக்கொண்டிருப்பவன் தன் நினை வில், பேச்சில், செயலில் அதனையே அநுசரித்து நடந்து கொண்டிருப்பான். **இந்த அநுசரணை, ஒழுக்கம்** என்று பெயர் பெறும். சித்தாந்த விளக்கத்தின் மூலம் ஆலயக்கிரியை விஷயங் களை விளங்கிக் கொள்ளல் கல்வி. அவையே எமக்கு இன்றிய மையாதவை; இனியவை; நல்லவை என மனச்சாட்சி யோடு ஒட்ட அணைத்து உணர்ந்து கொள்ளுதல் அறிவு. அதற்கேற்ப **ஆலயக் கிரியைகளைத் தூய்மையாக நேர்மையாகப் பண்பாகப் பலன் படத் தக்க விதமாக அநுஷ்டிப்பது ஒழுக்கம்** என்று சுட்டப்படும். அகப்புற நிலைப் பண்புகள் அனைத்தும் இதற் கடக்கமாய் விடும். இனி ஒருகால் திருவள்ளுவர் திருக் குறளைச் சிந்திக்கலாம். "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" கற்க வேண்டு பவற்றைக் கற்க வேண்டும். ஐய விபரீத மில்லாமல் தெளியக் கற்க வேண்டும். அதுவே கசடறக் கற்றல். கற்றால் அதற்குத்தக நிற்கவேண்டும். **கற்றபின்** என்பதற்குப் பொருள் **கற்றால்.** இத் திருக்குறள் ஒரு மும்மணிப் பேடகம். மூன்று விலையுயர்ந்த கற்றால். இத் திருக்குறள் ஒரு மும்மணிப் பேடகம். மூன்று விலையுயர்ந்த மணிகள் இதில் உள்ளன. **கல்வி, அறிவு, ஒழுக்கம்** மூன்றும் மும்மணிகள்.

கற்க கசடறக் கற்பவை - கல்வி
நிற்க அதற்குத்தக - ஒழுக்கம்.

கற்றால் என்ற ஓசையில் ஒரு தயக்கம் (Pause) இருத்தல் தொனிக்கிறது. இத்தொனிக்கும் பொருளுண்டு. **கற்றதே நல்லது என அறிந்து கொள்வானானால்** என்பதே அப்பொருள். இதனால் இச்சொல்லின் மூலம் கல்வி ஒழுக்கங்களுக்கிடையில் அறிவும் அகப்படவந்ததாயிற்று. கற்றபின் என்ற சொல்லுக்குக் கற்றால் எனப் பரிமேலழகர் உரை கண்டதன் நுட்பம் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, அறிவு, ஒழுக்கம் என்ற மூன்றுக்கும் உள்ள தொடர்பைத் திருவள்ளுவர் குறள் மூடியாக உணர்த்தியிருக்கிறது. நாவலர் வாக்கு அதனைத் துல்லியமாக விளக்கியிருக்கிறது.

அர்ச்சகராயிருப்பவர் அதிகம் படித்திருக்க வேண்டியவர். விசேடமாக மொழி, சமயம் பற்றிய விஷயங்களில் உத்தரவாதத் தன்மையுள்ள அறிவும் அதற்குத் தக்கபடிப்பும் அவருக்கு அவசியம். சம்பிரதாய முறைப்படி பிரமசரிய விரதங் காத்துப் படிக்க வேண்டியவர் அவர்.

## பிரஹ்மசர்யம்

எங்கள் சமயம் வைதிகத்தை வேண்டுமளவு பயன்படுத்தியிருக்கிறது. உயர் வருணப் பிள்ளைகளுக்கு உபநயனஞ் செய்வித்து அந்தக் கையோடே குருகுலத்திலமர்த்திக் கற்க வைப்பது பிரஹ்மசர்யம் எனப்படும். அக்காலத்து அப்பிள்ளைகள் அநுஷ்டித்தற்குரிய நியமங்களும் பல. அவற்றின் நோக்கம் கல்வி, அறிவு, ஒழுக்கம் என்ற முத்துறையிலும் பிள்ளைகளைப் பரிபூரண புருஷர்களாகத் தேற்றி எடுப்பதேயாம். இப் பிரஹ்மசர்யத்துக்கு ஆரம்பமாக நிகழும் உபநயனவைபவத்தில் இடம் பெறும் ஆசீர்வாத சுலோகமொன்று பின்வருமாறு கேட்கப் படுகிறது.

அயம்படு: வ்யாச இவ புராணேஷு
　　பாணினிரிவ வ்யாகரணே
ஸ்ரீ சங்கர இவ உத்தரமீமாம்சாயாம்
　　ஜனக இவ தத்வஜ்ஞானே
ப்ரஹ்லாத இவ பகவத்பக்தௌ
　　ஹரிச்சந்த்ர இவ சத்யவசனே
பீஷ்ம இவ ப்ரஹ்மசர்யே
　　மார்க்கண்டேய இவ சிரஜீவித்வே
சபூயாத் இதி மஹசந்த: அநுக்ருஹ்ணந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞான பக்தி வைராக்ய ஒழுக்கவிஷயங்களில் எவ ரெவர் உலகில் அதிப்பிரசித்தி பெற்றிருக்கிறாரோ அவரவர் ஒவ்வொருவரும் போல இந்தப் பிரமசாரி (படு) தேர்ந்து வருமாறு ஆசீர்வதிப்பது இச்சுலோகம்.

| | | |
|---|---|---|
| புராணங்களில் | - | வியாசர் |
| இலக்கணத்தில் | - | பாணினி |
| உத்தரமீமாம்சையில் | - | சங்கரர் |
| தத்துவஞானத்தில் | - | ஜனகர் |
| பகவத்பக்தியில் | - | ப்ரஹ்லாதன் |
| சத்தியத்தில் | - | அரிச்சந்திரன் |
| பிரமசரியத்தில் | - | பீஷ்மர் |
| நித்யஜீவத்துவத்தில் | - | மார்க்கண்டேயர் |

இவ்வளவு மேதாவிகளின் திறமைகளும் ஒருங்கமைய ஒரு பிள்ளை இருந்தால்.........' நினைக்கவே வாயூறுகிறது.

இது வைதிக சமுதாயம் முழுவதற்கும் பொருந்த அமைந்த ஒரு கருத்தமைப்பு.

இதே பிரமசரியத்துக்குரிய இதே பிரயாசத்துடனேயே (Strain) எங்கள் அர்ச்சகப் பிள்ளைகளின் பிரமசரியமும் நடை பெறவேண்டியது. சைவசமயத்தேவைக்குரிய சிறப்பம்சங் களுடன் இப்பிள்ளைகள் இப்பிரமசரிய காலத்தைத் தங்கள் ஆலயபூசைப் பயிற்சிக் காலமாகக் கொண்டு நல்ல தேர்ச்சி பெற்று வெளிவரவேண்டும்.

பிரமசரியம் என்பது குழந்தையை முழுமனிதப் பண்புள்ள **ஒழுக்க விக்கிரகமாக வடித்தெடுக்கும் உலைக்களம்.** இதன் அருமை பெருமையை அறிந்து அநுசரிப்பின் சமயத்துக்குஞ் சமூகத்துக்கும் எவ்வளவோ நன்மைகள் பொலியும்'

உண்மை நிலை இவ்வாறாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குருகுலப்படிப்பு இல்லாமல் குருபக்தி வளராது; ஈசுவர பக்தியும் வளராது. அப்படி, குருகுலப்படிப்புத்தான் வேண்டும் என்று சொன்னால் அது இந்தக் காலத்தில் சிரமந்தான். பூரண மாகக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையில் சொல்ல வில்லை. அப்படி வந்துவிட்டால் நல்லது தான். ஆனாலும் இதுபோன்ற ஒருமுறை இருந்திருக்கிறது என்பது தெரியாமல் அடியோடு அழிந்து விடக்கூடாதல்லவா' மியூசியத்தில் வைக்கிற மாதிரியாவது நான் குருகுலவாசம் செய்து படித்தேன் என்று வருங்காலத்தில் சொல்லிக் கொள்வதற்காவது பத்துப்பேர்களை அப்படிப் படிக்க ஏற்பாடு செய்யவேண்டும். விதை முதலை யாவது ரட்சிக்க வேண்டும். இது ஒரு கும்பாபிஷேக மலர் விஷயம். **சிவோகம் பாவனை** நிலை கொள்ள வேண்டிய சூழலிலே வெறும் **மியூசிய பாவனை** தலைக்கொள்கிற விபரீதத்தை இவ்வசன கர்த்தாவாய்சோர்ந்து விட்டிருக்கிறார். இதை **ஆரொடு நோகேம் ஆர்க்கெடுத் துரைப்போம்!** குருகுல பாவத்தில் மியூசிய பாவனை யைச் சுமத்தும் இவ்வறிவுநிலையை எண்ணி அழவா? சிரிக்கவா? என்ன செய்வது'

உலகிலே உன்னதமானது, இனியது, நல்லது என்ற சிவார்ச்சனைத் தொழிலுக்கு, அதற்கேபுரிய பிள்ளையைப் பயிற்றி எடுக்கும் விஷயத்தில் அத்துறையார் ஒருவருக்கு இத்தனை தூர அவநம்பிக்கை இருப்பானேன் என்பது விளங்க வில்லை.

**'மொய்ம்மையாலே போது போக்கிப் புறத்துமில்லை அகத்து மில்லை'** என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியதிலும்,

**'பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்**
**புழுத்தலைப் புலையனேன் தனக்கு'**

என்று மாணிவாசக சுவாமிகள் பாடியதிலும் இருக்கிறது தான் விஷயம் என்பது இப்போது தானே தெரிகிறது.

இப்படி இப்படி உள்ளது முழுவதையுங் குட்டிச் சுவராக்கும் **அலட்சிய புத்தியைச் சாய்க்க** எத்தனை போர்முனை தோன்றினுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகும்! **இன்றும் இருக்கின்றார் நாவலர்! அவர் நினைவு நம்மைவிட்டு என்றும் அகலப் போவதில்லை.**

இத்தகைய அலட்சிய மனப்பான்மைகளும் அவநம்பிக்கை யுளறல்களும் அநுமதிக்கப்படக்கூடாதவை. இவர் கருவதுபோல மியூசியக் காட்சிகளுக்கு நிலைக்களங்களாக நம் ஆலயங்கள் உருப்பெறுமானால் நமக்காகத் தம் பொருள் நல போகங்களை ஒறுத்து இவ்வாயங்களை உருவாக்கி வைத்துப் போன அம்மகா னுபவர்களின் மனம் என்ன வேதனைதான் படுமோ! இதற்கு நிவாரணங்கண்டேயாக வேண்டும். இப்படியான **அர்த்தமற்ற போக்குகளைச் சகிக்க இங்கொரு சைவ சமுதாயம் இல்லை** என்ற நிலை முதலில் நிலைநிறுத்தப்பட வேண்டும். சமூகத்திற் சைவ ஞானம் எவ்வளவுக்கு ஏறுகிறதோ அவ்வளவுக்குச் சுலபமாகவும் சீக்கிரமாகவும் இது நிலைநிறுத்தப்படும்.

நமக்கு வேண்டுமென்று உணரப்பட்டதொன்று நம்மாலா காமற் போன சம்பவம் நம் சரித்திரத்திலில்லை. சமூகலௌகீகத் தேவைகளில் எதற்கும் நமக்கு ஆட்பலமுண்டு பொருட்பல முண்டு. அத்தியந்த தேவையாகிய ஆத்மீகத் தேவைக்கு மட்டும் அவை உதவாமற் போய்விடுமோ? நம்நாட்டு அர்ச்சகப் பிள்ளைகள் தரமான அர்ச்சகர்களாகப் படித்து முன்னேற வைப்பதற்கு வேண்டியது, **அதன் அவசியத்தை உணரும் உணர்வு. அதற்கு இன்றியமையாத சைவஞான அறிவு, அதை ஊட்டவல்ல சித்தாந்தக் கல்வி.** ஞானவறுமையே மோசமான வறுமை.

**நுண்ணுணர்வின்மை வறுமை அஃதுடைமை**
**பண்ணப்பணைத்த பெருஞ்செல்வம்.**

இவ்வுணர்வுடைமை செழிக்கச் செல்வம் செழிக்கும்; கருதியது கைகூடும். பரந்துபட்ட பண்பாட்டின் வழிவந்த நம் சைவ சமுதாயத்துக்கு **இது எளிதே எளிது!**

எங்கள் ஆலயங்களை உண்மை நம்பிக்கையோடு நாடி வரும் பொது மக்கள் பல்லாயிரவர். அவர்கள் நம்பிக்கைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டகம் பண்ணாத அளவுக்கு ஆலயங்களில் மந்திர சாந்நித்தியம், மூர்த்திப்பிரபாவம், ஆன்ம சாட்சாத்காரம்** பொங்கிப் பொலிய வேண்டும். அதற்கு அநுகுணமான அர்ச்சகர்கள் அங்கங்கு இடம்பெற வேண்டும். அவநம்பிக்கை, அலட்சிய புத்தி என்பவற்றின் தலைக்கறுப்பும் அங்கே காணக்கூடாது.

இந்த அவநம்பிக்கை அலட்சிய புத்தி இரண்டும் **மாயாவாத விலாசினிகள்.** குறித்த மியூசிய மனப்பான்மை உலகாயத **உந்துதல்.** எங்கள் ஆலயங்கள் சைவசித்தாந்த நிலையங்கள். அந்தப் போக்குகள் இந்தக் கோவில்களில் அநுமதிக்கப் படுதற்கு அனுப்பதைக்குமளவேனும் இடமில்லை. இனி,

முறையான அர்ச்சகர்களை அமர்த்தி ஆலய பூசையை ஆலய பூசையாக நிகழவைப்பதில் ஆலயநிர்வாகத் தரப்பின ருக்கும் அதிக பங்குண்டு. உயர் பெரும் புண்ணியப் பேறாக அந்நிலையில் வைக்கப்பட்டவர்கள் அவர்கள். எத்தனையோ ஆயிரம் உயிர்களுக்கு ஆன்ம ஈடேற்றம் அளிக்க வேண்டிய நிலையங்களை நிர்வகிக்கும் அந்தஸ்துள்ளவர்கள் அவர்கள்.

எங்கள் ஆலய பூசை விதிகளைச் சொல்லும் நூல்களின் பிரகாரம் ஒரு ஆலயக் கடமைக்கு அமரும் அர்ச்சகர் அந்த ஆலயத்துக்கே உரியவர். அவர் எக்காரணம் கொண்டும் வேறு பராக்குப் பார்க்க அவருக்கு அவகாசமில்லை. உதயாதி, உத யாந்தம் அவருக்கு ஆலயத்திலேயே தொழும்புண்டு. அதற்கி ணங்க அவர் தம் வாழ்க்கைத் தேவைகளுக்குப் போதுமான அளவு எல்லாவகையாலும் உதவிக்கொண்டு வருவதற்கான அமைப்புகளை நிர்வாகஸ்தர்கள் ஏற்படுத்திவைக்க வேண்டும். அர்ச்சகர் வாழ்க்கை விசாரமின்றி, பூசை கைங்கரியங்களுக்குத் தம்மை முற்றாக அர்ப்பணிக்கக்கூடிய அந்தஸ்தில் அவரை வைத்துக் கொள்ளும் பூரண பொறுப்பு நிர்வாகஸ்தர்களுக்கு இருக்கவே இருக்கிறது.

இவையெல்லாம் கைகூடும் பட்சத்தில் ஆலய பூசைகள் செழிக்க வழி தானே அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பூர்வக் கிரியைகள்

சிவாலயக் கிரியைகள் போன்று பூர்வக்கிரியைகளும் சைவசித்தாந்த ஞானப் பேற்றையே இலக்காகக் கொண்டவை. சித்தாந்த தத்துவ உண்மைகளே அவற்றின் அடிப்படையாக இருத்தல் அவதானிக்கத்தகும்.

உலகில் மனித உடலெடுத்துவரும் உயிர் ஒவ்வொன்றும் சைவசித்தாந்த ஞான அநுபவத்துக்குத் தகுதிப்பட்டு வர வேண்டும் என்பது சைவசமயத்தின் குறிக்கோள். உயிர் என்ற பொதுமையில் எல்லாம் ஒன்றாயினும் உயிருக்குயிர் தகுதியும் தரமும் வெவ்வேறு. சமயரீதியில் இவ்வேறுபாடு ஒருதலையாக ஒத்துக் கொள்ளற்பாலது. ஒவ்வோருயிரும் தன் தரமும் தகுதியும் எவ்வளவுக்குண்டோ அவ்வளவுக்கு சைவசித்தாந்த அநுப வத்துக்குத் தகுதிப்பட்டு வருதல் தப்பாது. அதற்கிணங்க ஒவ்வொருவரின் உடல், உயிர், உள்ளம் மூன்றும் படிப்படியாகத் தூய்மையும், வலுவும், உரனும் பெற்று வரவேண்டியதன் அவசியத்தைச் சைவம் துடியாக உணர்ந்திருக்கிறது. அதனால் ஓருயிர் கருவிற் புகும் அந்த அடிநிலையிலிருந்து அது எடுத்த உடலை விட்டு கழல இருக்கும் நிலைவரையில் அவ்வுயிரின் உடல், உயிர், உள்ளங்களுக்குத் தூய்மையும், வலுவும், உரனும் விளைக்கக்கூடிய பலவித கிரியைகள் சைவத்தில் உள்ளன.

அக்கிரியைகள் ருதுசங்கமனம், கருப்பாதானம், பும்ச வனம், சீமந்தம், ஜாதகர்மம், கர்ணவேதனம், உத்தாபனம், நாமகரணம், உபநிஷ்கிரமணம், அன்னப்பிராசனம், பிண்ட வர்த்தனம், சௌளம், வித்தியாரம்பம், உபநயனம், காண் டோபகரணம், காண்டமோசனம், சமாவர்த்தனம், விவாகம், தீட்சை, சந்தியாவந்தனம், சிவபூசை, சிவாசிரமம் என்ற பெயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகின்றன. மனிதனின் மரணநிலையை மையமாக வைத்து அதற்கு முன்னாக இவை நடைபெறுவதால் இவை பூர்வக் கிரியைகள் எனப்படுகின்றன. பூர்வம் - முன். மரணத்தின் பின் நிகழ்வன அபரக்கிரியைகள் - அபரம் - பின். அவற்றை அடுத்து வரும் அத்தியாயத்திற் காண்போம்.

சிவகும்பம், சிவாக்கினி, சிவமந்திரம், சிவமூலமந்திரம் என்பவற்றுடன் வேண்டுமளவிற் சம்பந்தப்பட்டே இக்கிரியைகள் நிகழ்தல் இவற்றின் பொதுப்பண்பாகும். நாம் மேற்கண்டவாறு, உடலுயிர் உள்ளங்களுக்கு உண்மையான தூய்மை வருவ தாயின் அது சிவத்துவச் சார்பினாலேயே அமையவேண்டும். உண்மையான வலு அமையினும் அதனாலேயே அமைய வேண்டும். **"சிவமில்லாமல் எதுவுமில்லை"** என்றது பரமாப்தமான உண்மை. இவ்சைவ ஞான உண்மையின் அடிப்படையிலேயே இவை அனைத்தும் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

சைவ சித்தாந்தத்தை வேதாகம சைவசித்தாந்தமென்றல் பெருவழக்கு. ஆகமம் என்ற சொல் வேறு அடைமொழியின்றி உச்சரிக்கும்போது சிவாகமங்களையே குறிக்கும். வேதங் கூறும் உண்மைகளும் சிவாகமங்கள் கூறும் உண்மைகளும் சைவத்தி னால் தழுவப்படும். எனினும் வேத உண்மைகளை ஒரு பொது நிலையிலும் ஆகம உண்மைகளை ஒரு சிறப்பு நிலையிலும் ஏற்றுக் கொள்கின்றது சைவம். சிவாகமத்தைச் சைவம் என்றே வழங்குதலும் உண்டு.

**'ஆரணநூல் பொது சைவம் அருஞ்சிறப்பு நூலாம்**
**வேதம்பசு அதன்பால் மெய்யாகமம்'**

என்ற வழக்குகள் பிரசித்தமானவை.

மேற்குறித்த பூர்வக்கிரியைகள் வேதத்திலுமுள்ளன: சிவாக மத்திலுமுள்ளன. அவற்றின் மூல உண்மைகள் இரண்டிற் கும் ஒன்றே. நடைமுறை வியவகார விதிகளில் வேதத்திலிருந்து சிவா கமஞ் சற்று வேறுபடும். இக்கிரியைகளைக் கையாளுபவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்மிருதியாளர், வைதிகர், சைவர் என முத்திறத்தினராவர். அவருள் ஸ்மிருதியாளர்களும், வைதிகர்களும் வேதத்தில் உள்ள அமைப்பின்படியே அவற்றைக் கைக்கொள்வர். சைவர்கள் சிவாகமத்தில் உள்ளபடியே கைக்கொள்வர்.

இக்கிரியைகள் பற்றி வேதத்திற் கண்டவற்றை நெறி முறைப்படுத்திக் கூறும் பகுதிகள் ஸ்மிருதி நூல்களில் உள்ளன. அந்நூல்கள் ஆபஸ்தம்பஸ்மிருதி, போதாயன ஸ்மிருதி, ஆஸ்வாலாயன ஸ்மிருதி முதலாகப் பலவாகும். அவற்றில் வேத சுலோகங்களும், மந்திரங்களும் மிக அதிகமாகக் கையாளப் படும். நடைமுறை விதிகளும் சில. சில கிரியைளில் மிக மிக விரிவுள்ளனவாய் இருக்கும். அந்தணர்களாயிருப்பவர்கள் பெரும் பான்மையும் ஸ்மிருதி விதிகளையே பின்பற்றுவர்.

எங்கள் சூழலில் அந்தணர் இல்லமொன்றில் நடக்கும் விவாகக் கிரியைக்கும். வேளாளர் இல்லமொன்றில் நடக்கும் விவாகக் கிரியைக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படும் போது நாம் மலைக்கிறோமல்லவா'

எங்கள் மணவறையில் அரசாணி இருக்கும்: நவக்கிரக கும்பமிருக்கும். சிவகும்பபூசை முதலில் நடைபெறும். அவர்கள் மணவறையில் இவை இல்லை. அவர்கள் மணநிகழ்ச்சியில் மணமக்களுக்கு இடுப்பில் தருப்பைப் கயிறு கட்டுதல் உண்டு. மணப்பெண் மடியில் ஒரு ஆண் குழந்தையை இருத்திப் பழம் உண்பித்தலுண்டு. எங்கள் விஷயத்தில் இவை இடம் பெறுவ தில்லை. இத்தகைய வேறுபாடுகள் ஸ்மிருதி விதிகளுக்கும் ஆகம விதிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டினாலே நிகழ்வனவாம். பூர்வக்கிரியைகளிற் போல அபரக்கிரியைகளிலும் இத்தகைய வேறுபாடுகள் உள.

இனி வேதங்களிலுள்ள பூர்வக்கிரியைகள் அபரக்கிரியைகள் பற்றிய கருத்துக்களை ஸ்மிருதிகள் நெறிப்படுத்திக் கூறியது போல ஆகமங்களிலுள்ள அக்கருத்துக்களை நெறிப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிய பதினெட்டு உள்ளவாகச் சொல்லப்படுகிறது. அவைகள் பத்ததிகள் எனப்படும். அவற்றில் இரண்டு பத்ததிகள் மட்டும் தற்போது வழக்கில் உள்ளன. ஒன்று **அகோரசிவாசாரியர் பத்ததி,** மற்றையது **சோமசம்புசிவாசாரியர் பத்ததி.** இவற்றில் சோமசம்பு சிவாசாரியர்பத்ததி மிகச் சுருக்கமானது. அகோர **சிவாசாரியர் பத்ததி** வேண்டுமளவுக்கு விரிவானது. அதனால் அகோர சிவாசாரிய பத்ததியே நம் நாட்டில் பெரும்பாலோராற் கைக் கொள்ளப்பட்டு வருகிறது. சைவர்களாகிய நமது பூர்வக்கிரியை அபரக்கிரியைகளுக்கு இப்பத்ததியே உத்தரவாதமுள்ளதாயி ருக்கிறது.

எந்தக் கிரியையாயினும் அதைச் செய்வோருக்கும் செய் வித்துக் கொள்வோருக்கும், உரிய தகுதிப்பாடு இன்றியமை யாதது. சைவர்களுக்குரிய பூர்வ அபரக்கிரியைகளைச் செய் வோர் சிறந்த குலஒழுக்கமும், வேதசிவாகமப் பயிற்சியும், உயர்ந்த சிவதீட்சைப் பேறும், சிவபூசை நியமமும், சிவபக்தி வினயப் பண்பாடும், சைவாசாரிய லக்ஷணமும் உள்ளவரா யிருத்தல் வேண்டும். அவற்றைச் செய்வித்துக் கொள்வோரும், சிவதீட்சை பெற்றுச் சந்தியாவந்தனம் பண்ணுபவர்களாய், பஞ்சமாபாதகங்களில் ஈடுபடாதவர்களாய், சுத்தபோசனிக ளாய், சிவவழிபாடு உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். சந்தர்ப்ப வசத்தால் மாமிச போசனிகளாயுள்ளவர்கள் அவ்வக் கிரியா காலங்களிலாவது பிராயச்சித்தஞ் செய்து தோஷம் நீக்கிச் சுத்த போசனிகளாய் இருந்தே அவற்றைச் செய்வித்துக் கொள்ளல் வேண்டும்.

சைவக்கிரியைகளுக்குத் தகுதிகாண்டற்குரிய ஏதுக்களில் தீட்சையே பிரதானமாகக் கொள்ளப்படும். பூர்வக்கிரியை விஷயத்திலும் பார்க்க அபரக்கிரியை விஷயத்தில் தீட்சைத் தகுதி அதி முக்கியமாகக் கருதப்படும். தீட்சைத் தகுதிக் கேற்பக் கிரியைகள் வித்தியாசப்படும் நிலை அங்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இப் பூர்வக்கிரியைகளின் சுருக்கமான விளக்கங் களைக் கவனித்தல் நலமாகும்.

## இருது சங்கமனம்

விவாகத்தின் பின் தம்பதிகளின் முதல்நாட் சேர்க்கைக்கு முன்னாக நிகழுங்கிரியை இதுவாகும். தம்பதிகளைச் சிவாக் கினிக்கு மேற்குப் பக்கமாக இருத்தி அக்கினியில் சிவத்தைப் பூசித்து, சிவமந்திரங்களால் ஓமஞ்செய்து நாயகனால் நாயகிக்கு விபூதி தரிப்பித்து ஆசீர்வாதம் பண்ணிவிடுதல் இதற்குரிய கிரியையாம். இதற்கு முன் பெண்ணுக்கு ருதுசாந்தி நிகழ்ந் திருத்தல் வேண்டும். பெண் பூப்படைந்த மாதம், நாள், திதி, நட்சத்திரங்கள் சார்பாக ஏற்படக்கூடிய தோஷங்களை நீக்கு வதற்குரியது ருதுசாந்தி. அதுவும் சிவகும்பபூசையுடனும், சிவாக் கினி காரியத்துடனுமே நடைபெற வேண்டியது. தண்ணீரில் நீரா டியபின் சிவகும்பத்தினாலும் நீராட்டப்பட்ட பின்பே பெண்ணின் ருது தோஷம் சாந்தியானதாகும். அதன் பின்பே நெல் சாதம் முதலியவற்றால் ஆராத்தி எடுத்துக் கழித்தலும், தீப ஆலத்தி சுற்றுதலும் நடைபெறவேண்டும்.

இன்றைய நடைமுறையில், சிவகும்பபூசையும் சிவாக்கினி காரியமும் இல்லாமல் ருதுசாந்தி செய்வதும், ருதுசங்கமனம் செய்யாது விடுவதும் அந்தணரல்லாதாரிடத்திற் பெரும்பான்மை யாயிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

## கருப்பா தானம்

கருப்பத்தை நிலைபெறச் செய்தல்; கருப்பையில் உற் பத்தியான ருது ஸ்திரப்பட வேண்டி இக்கிரியை நடைபெறும். கருவுற்ற அதே மாசத்தில் இது நிகழும். ஒரு நன்முகூர்த்தத்தில் சிவாக்கினி வளர்த்து சக்தியோஜாத மந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதி பண்ணி கோதுமை, உழுந்து என்பவற்றை அரைத்துப் பால், நெய், தயிர் என்பவற்றில் கலந்து பெண்ணைப் பருகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து பின்னும் சத்தியோஜாத மந்திரத்தால் 25 தடவை ஆகுதி பண்ணி நாயகனால் நாயகியின் வயிற்றைத் தடவுவித்துப் பூர்ணாகுதி பண்ணுதல் இக்கிரியை நிகழ்ச்சியாகும்.

## பும்சவனம்

ஆண்குழந்தை உண்டாதல் கருதி நிகழுங்கிரியை இது. கருவுற்று இரண்டாம் மாசத்தில் அல்லது நாலாம் மாசத்தில் இது நடைபெறும். இதில் விநாயக பூசையும் சிவாக்கினி ஓம்பலும், கோதுமை, உழுந்து அரைத்து முன்சொன்னவாறே குடிப்பித்தலும் நிகழும். சிவாக்கினிக்குப் பக்கத்தில் பெண்ணைக் கிழக்கு முகமாக இருத்தி ஆல், அரசு, அத்தி, பலாசு மொட்டுகளைப் பிழிந்து பெண்ணின் மூக்குத் துவாரத்தில் விடுதல் இக்கிரியையின் விசேட அம்சமாகும்.

## சீமந்தம்

நடு உச்சிவகிர்தல்: ஆறாம் அல்லது எட்டாம் மாதத்தில் இது நிகழும். இதற்கும் விநாயகபூசையும் சிவாக்கினி காரிய முமுண்டு. சிவாக்கினிக்கருகில் கர்ப்பவதியை இருத்தி, மந்திர சகிதமாக பன்றிமுள், தருப்பை, அத்திக்குச்சி என்பவற்றால் தனித்தனி நான்குதரம் உச்சிவகிர்ந்து, பின் நான்கும் ஒன்றாக எடுத்து ஒருமுறை "ஓம் தேச தேச சித்ரூபாய நேத்ரத் த்ரயாய ஹூம் ப்ண்ஊமு" என்று கூறி வகிர்ந்து பின்னும் மந்திர சகிதமாக அவற்றைச் சிரசின் மேல் வைத்தல் இக்கிரியையின் பிரதான நிகழ்ச்சியாகும். கோதுமையும் உழுந்தும் அரைத்துக் குடிப் பித்தல், நாயகனைக் கொண்டு நாயகியின் வயிற்றைத் தடவுவித்தல் என்பனவும் இக்கிரியையில் இடம்பெறும். கிரியை முடிவில் தம்பதிகளை அறுகரிசியிட்டு வாழ்த்த வேண்டும். இக்கிரியை வரையிலான நான்கு கிரியைகளும் பெண்ணின் முதற் கர்ப்பத்தில் மட்டும் செய்தற்குரியனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜாத கருமம்

*இது குழந்தை பிறந்தவுடன் செய்யும் கிரியை. இக்கிரியை கணவனாற் செய்யப்பட வேண்டியது. குழந்தை பிறந்ததும் தகப்பன் ஸ்நானஞ் செய்து விநாயக பூசையும் சிவாக்கினி காரியமும் நிகழ்த்தி அஸ்திர மந்திரத்தால் ஆகுதி பண்ணி மந்திர சகிதம் குழந்தையின் நாபிக்கொடியை விலக்கி (தொப்பூள் கொடி வெட்டி) அங்க மந்திரங்களை ஓதிக் குழந்தையைத் தூய்மை செய்வர். தொடர்ந்து பத்து நாள் வரை அக்கினி தணியாமல் வைத்திருந்து நெய், வெண்கடுகு என்பவற்றால் ஓமஞ் செய்து வரவேண்டும்.*

## கர்ண வேதனம்

*காது குத்துதல்: பிறந்து பத்து, பன்னிரண்டு, முப்பத் தொன்று என்ற எண்ணிக்கையுள்ள நல்ல நாளில் இது செய்தல் வேண்டும். பெருங்கிரியை இல்லாவிடினும் பிள்ளையார் பிடித்துக் கும்பம் வைத்து வணங்கிச் செய்தல் உண்டு.*

## உத்தாபனம்

*குழந்தையைப் பிரசவ அறையிலிருந்து வெளிக் கொணர் தல்; அவரவர்க்குரிய ஆசௌச நீக்க எல்லைக் கணக்குக்குத் தக்கபடி பத்து, பன்னிரண்டு, முப்பது இரவுகளின் பின் இது நிகழும். அன்று வீடு முழுவதும் சுத்தி செய்து விநாயக பூசையும் புண்ணியாகவாசனமும் செய்து சம்பந்தப்பட்ட எல்லோரும் பஞ்ச கவ்வியம் பருகுதல் வேண்டும். குழந்தையைப் பொன் அணிந்து சிறப்பித்தலும் இத்தினத்தில் அமையலாம்.*

## நாமகரணம்

*பெயரிடுதல்: ஆசௌசக் கழிவு நாளில் இது நிகழ வேண்டியது. விக்கினேஸ்வர பூசை, சிவாக்கினி காரியம், சிவகும்பபூசை, அறுகரிசி ஆசீர்வாதம் என்பன இக்கிரியையில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும். பெயர் தெய்வப் பெயராக, நட்சத்திர எழுத்துக் களும் இடம்பெறக் கூடியதாக அமைதல் வேண்டுமென்பது விதி.

## உபநிஷ்கிரமணம்

வீட்டெல்லைக்கு வெளியே குழந்தையைக் கொண்டு செல்லல்: விக்னேஸ்வர பூசை, சிவாக்கினி காரியம் என்பன இதற்குமுண்டு. வீட்டு முற்றத்திலும் மணல்மேடையில் அரசிலை வைத்து உருத்திராதித்தனைப் பூசித்தல் வேண்டும். இவற்றின் பின் மங்களகரமாகக் குழந்தையைத் தூக்கிக் கோயிலுக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும். இச்செயலுக்குத் தாய்மாமன் உரிமையுடையவர். ஆலயத்தில் குழந்தையை நந்திக்குப்பின் வைத்து வழிபட்டுக்கொண்டு வீடு திரும்பித் திருஷ்டி தோஷம் நீக்கிக்கொள்ள வேண்டும். (உபசமீபமாக, நிஷ்கிரமணம் - வெளிக்கிளம்புதல்.)

## அன்னப் பிராசனம்

முதன்முதலாகச் சோறு தீற்றுதல்: முப்பது நாள் ஒரு மாசமாகக் கணக்கிட்டு வரும் ஆறாம் மாச முதல் இரட்டை மாசங்களில் ஒன்றில் ஆண் குழந்தைக்கும் ஐந்தாம் மாசமுதல் வரும் ஒற்றை மாசங்களில் ஒன்றில் பெண் குழந்தைக்கும் அன்னப் பிராசனம் நிகழும். விக்னேஸ்வர பூசை, சிவாக்கினி காரியங்களுடன் நவக்கிரக பூசையும் இக்கிரியைகளில் இடம் பெறும். அக்கினி முன் கிழக்குமுகமாக குழந்தையை இருத்தி நெய்கலந்த பாயாசத்தைச் சிவாக்கினியில் ஓமஞ் செய்து சிவபீஜ மந்திரத்தால் அப்பாயாசத்தையே குழந்தைக்கு ஊட்டுவது முறை. பின் பூர்ணாகுதியும் குழந்தைக்கு விபூதி சாத்துதலும் ஆசீர்வாதமும் இடம்பெறும். பெண் குழந்தைகளாயின் அக்கினி காரியம் வேண்டியதில்லை என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிண்டவர்த்தனம்

உடல் வளர்ச்சி நோக்கமாகச் செய்யுங் கிரியை. பிண்டம் - உடல், வர்த்தனம் - விருத்தி, அன்னப்பிராசனத்துக்குப் பிறகு ஒரு சுபதினத்தில் இது நிகழும். விக்னேஸ்வர பூசையுஞ் சிவாக்கினி காரியமும் இதற்குமுண்டு. ஆண் குழந்தையாயின் வலக்கையின் ஐந்து விரல்களிலும் பெருவிரல் முதலாக **'ஈசனாயநம'** முதலிய ஐந்து மந்திரங்களையும் அமைத்து வலக்காதில் **வியோமவியாபி** மந்திரமோதி **மதுபர்க்கம்** பருக்குதல் இதற்குரிய கிரியையாகும். தேன், நெய், நீர், பால் நான்கும் கலந்த பானம் மதுபர்க்கம் எனப்படும்.

## சௌளம்

குடுமி வைத்தல்: குடுமி முடிதற்கேற்றபடி தலையின் முன்பகுதி மயிரை வழித்தல் சௌளக்கிரியை எனப்படும். இக்கிரியைக்கும் விக்னேஸ்வரபூசை சிவாக்கினி காரியம் எல்லாமுண்டு. சிவாக்கினி சந்நிதியில் குழந்தையை இருத்தி **அரஹர ஒலியுடன் அறுகரிசியிட்டு,** இளவெந்நீரில் தருப்பையைத் தோய்த்து மயிரில் தெளித்து நனைத்து மந்திர சகிதமாகக் குரு அல்லது தந்தை மயிர் வழித்தலை ஆரம்பித்துவிடுவர். அப்படி வழித்தெடுக்கும் மயிரைத் தாய் மருங்கில் நின்று சாண நீருள்ள பாத்திரத்தில் ஏற்றுக் கொள்வர். பிறகு மீதிப் பாகம் நாவிதனால் முறைப்படி சவரஞ்செய்யப்படும். மூன்றாம் வயதில் இக்கிரியை செய்தல் உத்தமம். பிறந்த ஒரு வருடத்துள் குறித்த ஒரு மாசத்தில் துடக்குமயிர் வழித்தல் என்ற கிரியையும் உண்டு. அது வேறு. இது வேறு.

## வித்தியாரம்பம்

கல்வி பயிலத் தொடங்குதல்: இது ஐந்தாம் வயதில் நடைபெற வேண்டியது. உத்தராயணகாலம் இதற்குச் சிறந்ததாகும். சுபவேளையில் விக்கினேஸ்வர பூசை சரஸ்வதி பூசைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வித்தியாரம்பம் நிகழ்த்த வேண்டும். அறிவொழுக்க அனுபவம் மிக்க ஆசாரியார்கள், ஆசிரியர்கள் பலர் மத்தியில் இது நடைபெறுதல் விரும்பத்தக்கதாகும்.

## உபநயனம்

இரண்டாவது கண்: சிறப்பாகிய கண்: அறிவுக்கண்: பிள்ளைக்குச் சமய ஒழுக்க அதிகாரம் வழங்குதல் இதன் நோக்கமாகும். அதற்கறிகுறியாகப் பிள்ளையின் உடலில் கொப்பூழிலிருந்து தோள்வரை குறுக்காக அமையும்படி பூணூல் ஒன்று தரிக்கப்படும். பூணூலைத் தொடர்பாகத் தரிக்குந் தகுதிப்பாடு இல்லாதவர்கள் சமயக்கிரியை காலங்களிலாவது தரித்துக் கொள்ளல் வேண்டும். இக்கிரியையில் விக்னேஸ்வர பூசை சிவாக்கினி காரியம் இரண்டும் இடம்பெறும். சவரஞ் செய்து ஸ்நானம் முடிந்த பிள்ளையைச் சிவாக்கினிக்கயலில் வடக்கு முகமாக இருத்தி மந்திர சகிதமாக **முஞ்சிற்புற் கயிற்றை** அரையிற் கட்டி மான்தோல் துண்டொன்று கோத்த பூணூல் அணிந்து தோள்வேஷ்டி, தண்டம், பவித்திரம் எல்லாம் கொடுத்துப் பஞ்சகவ்வியம் பருகிவித்துப் பிரமமந்திரங்களால் ஓமஞ் செய்யப்படும்.

## காண்டோபகரணம்

காண்டரிஷிகளைத் திருப்தி செய்தல்: படைப்பிலுள்ள ரிஷிகள் தொகையில் தேவரிஷி முதலாகப் பத்து வகை உண்டு. அவற்றில் காண்டரிஷிகள் என்பது ஒரு வகை. இவ்ரிஷிகள் வேதாகமங்களின் மந்திரப் பகுதிகளுக்கு அதிபர்களாகவும் அவற்றை விளக்கும் பொறுப்புள்ளவராகவும் இருப்பர். அவர்களின் திருப்திக்காக அஸ்திர மந்திரத்தால் ஓமஞ் செய்யப்படும். பின் பிரமகாயத்திரியையும் சிவகாயத்திரியையும் உச்சரித்து எவ்வெட்டு ஆகுதி செய்யப்படும். ஆகுதி முடிவில் அம்மந் திரங்கள், சம்பந்தப்பட்ட பிள்ளைகளுக்கு உபதேசிக்கப்படும். இதுஉபநயனத்தைத் தொடர்ந்து மூன்றுநாள் அநுஷ்டிக் கப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காண்டமோசனம்

காண்டோபகரண நிறைவேற்றம்: மோசனம் - விடுதல். முன்னைய விரதம் தொடங்கி நான்காம் நாள் சிவாக்கினியில் நூற்றெட்டு ஆகுதி செய்து விரதம் கைவிடப்படும். இதிலிருந்து குறித்த பிள்ளைக்குப் பிரமசரிய விரதம் ஆரம்பமாகும். சிவபூசை செய்யும் பயிற்சியும் இதிலிருந்தே தொடங்கும். இதை நிறைவேற்றிய பின்பே வேதசிவாகமங்களை ஓதுந்தகுதி உள்ளதாகும்.

## சமாவர்த்தனம்

உரிய முறைப்படி பிரமசரியம் முடித்துக் கொண்டவர் இனி இல்லறம் மேற்கொள்ளும் பொருட்டு பிரமசரிய நிலையிலிருந்து திரும்புதல் இக்கிரியையின் அர்த்தமாகும். சமாவர்த்தனம் - திரும்புதல். விக்னேஸ்வரபூசை முடித்துச் சிவாக்கினியில் அஸ்திர மந்திரத்தால் நூறாகுதி பண்ணிப் பிரமசரியங் கைவிடப்படும். முன்னணிந்த முஞ்சிப்புற் கயிறும் பூணூலும் விலக்கப்பட்டுப் **புதிய இரட்டைப் பூணூல்** அணியப்படும். பின் மதுபர்க்கம் பருகிச் சிவாக்கினியை வலம் வந்து குடை, பாதுகை, தண்டு முதலிய வற்றுடன், பிரமசரியங் கைவிட்ட பிள்ளை **கன்னிகார்த்தமாக** வடக்கு நோக்கிச் செல்வர். அதைத் தொடர்ந்து பெண் கொடுத் தற்குரியவர் போய் வழிமறித்து அவரை அழைத்து வருவர். இது சமாவர்த்தனத்தில் கவர்ச்சியான அம்சமாகும்.

## விவாகம்

இல்லற தர்மத்துக்குகந்த கன்னியொருத்தியைக் கைப் பிடித்துக் கொண்டு வருதல் என்பது விவாகம் என்ற சொற் பொருள். விவாகம் எட்டு விதமாக உள்ளது. அதில் நம்மவர் களால் பெரும்பாலாகக் கைக்கொள்ளப்படுவது "பிரஜாபத்யம்" என்ற விவாகம் ஆகும். மணமகனின் சுற்றத்தார் பெண் கேட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகளின் சுற்றத்தார் அதற்குடன்பட்டுக் கன்னியைச் சிவாக் கினிமுன் தத்தஞ் செய்து கொடுக்கும் நியதியோடு கூடியது பிரஜாபத்யம்.

எந்த ஆணுக்கு எந்தப் பெண்? இது சாமானிய மனித அறிவு நிச்சயத்தரத்துக்கு முற்றிலும் அப்பாற்பட்ட விஷயம். விவாகம் தெய்வலோகத்தில் நிச்சயிக்கப்படுவது என்றல் பிரசித்தம். எல்லா விஷயங்களும் அப்படித்தான் என்றாலும் இதுபற்றி இவ்வாறு விசேடமாகச் சொல்லப்படுகிறது. இத்தெய்வ நிச்சயத்தை ஒருவாறு இனங்கண்டு கொள்வதற்குச் சாதகங்கள் உதவுகின்றன. அவற்றின்படியுள்ள கிரகநிலை, நட்சத்திர நிலை களை ஒப்பு நோக்குதல் மூலம், விவாகப் பொருத்தம் தெரிந்து கொள்ளல் பெரும்பான்மை. இப்பொருத்தம் பார்த்தலின் மூலம் சம்பந்தப்பட்ட இருவருக்குமிடையில் இருக்கக்கூடிய உடல் நிலை இணக்கம், உளநிலை இணக்கம் என்பன அவதானிக் கப்படுகின்றன.

இப்படி நல்லிணக்கம் வாய்க்கப்பெற்ற மணமகன் மண மகள் இருவரையும் பார்வதி பரமேஸ்வரர்களாகப் பாவித்து விவாகக் கிரியை நடைபெறும். சைவவிவாகக் கிரியையில் சங்கற்பம், விக்னேஸ்வரபூசை, புண்ணியாகவாசனம், பஞ்சகவ் வியம் அமைத்தல், காப்புக்கட்டுதல், சிவகும்பபூசை, நவக்கிரக பூசை, நாந்திமுகம், அக்கினிகாரியம், தத்தஞ் செய்தல், மந்திர வாசம் வழங்கல், மாங்கல்யதாரணம், கோதரிசனம், சப்த பதி, அம்மி மிதித்தல், அருந்ததி தரிசனம், ஆசீர்வாதம், அறுகரிசி யெடுத்தல் ஆகியன நடைபெறும்.

இக்கிரியைகளில் நாந்திமுகம் என்பது பிதிர் பூசையாகும். பிதிர்களை நினைவு கூர்ந்து அவர்கள் திருப்தியுறும் பொருட் டாகத் தானம் வழங்குதல் இக்கிரியையாகும். மந்திர வாசம் வழங்கல் என்பது கூறை கொடுத்தல். சப்தபதியென்பது மண மகன் மணமகளின் வலக்கையைப் பற்றிக் கொண்டு ஏழு இடத் தில் இட்ட நெல்லின்மீது மணமகள் அடிவைத்து வரும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துதல். ஏழாவது அடி வைத்ததும் அம்மி மிதித்தல் இடம்பெறும். அம்மி மிதித்தவுடன் சிவாக்கினியை வலம்வந்து இருவரும் கூப்பிய கைகளால் நெற்பொரி ஓமஞ் செய்வர். இது தொடர் நிகழ்ச்சியாக மூன்றுமுறை நடைபெறும். மணமகன் மணமகளைத் தன் மரபிற்குரியவளாகச்செய்தல் என்ற அர்த்தம் சப்தபதிக் கிரியையில் உண்டு. வாழ்க்கையில் வரும் எவ்வித தாக்கங்களையும் தாங்கும் திட்பநிலையைப் பெறுதல் அம்மி மிதித்தலின் அர்த்தமாகிறது. இச்செயற் பேறுகளுக்குச் சிவன ருள் கைகொடுத்தலைக் குறிப்பது சிவாக்கினியிற் பொரி ஓமஞ் செய்தல். விவாகத்தின் பின் நான்காம் நாள் எண்ணெய் ஸ்நானஞ் செய்து அன்றிரவு அருந்ததி தரிசனம் செய்தற் பாலதெனும் விதியுண்டு. தற்பொழுது பகல்வேளை யென்றாலும் கூட மணவறைக் கிரியையோடே அதுவும் முடிக்கப்படுதலுண்டு.

## தீக்ஷை

தீ - தானம் - கொடுத்தல்: க்ஷை - க்ஷயம் - கெடுத்தல். கெடுத்தல் கொடுத்தல் என்ற இரு தன்மைகள் இக்கிரியையில் உண்டு. மலங்கெடுத்தலையும் ஞானங் கொடுத்தலையும் அவை குறிக்கும். இத்தீட்சை உபநயனத்தை அடுத்து நிகழ வேண் டியது. சிவதீட்சை, சமய தீட்சை என்றும், விசேட தீட்சை என்றும், நிர்வாண தீட்சை என்றும் மூன்று பிரிவாக உள்ளது. சமய தீட்சை குறைந்தபட்சத் தேவையாகக் கருதப்படும். அதைப் பெற்றுக் கொண்டவரே சமயக்கிரியைகளில் எசமானாய், கர்த்தாவாய் இருக்கத் தகுதியுடையவராவர். அவரே சமய அநுட்டானங்களை அநுசரிப்பதற்கும், சமய நூல்களைக் கற்பதற்கும், திருமுறை யோதுவதற்கும், உற்றார் பெற்றாரின் அந்தியக் கிரியைகளைச் செய்வதற்கும் தகுதி பெற்றவராவர். விசேட தீட்சை, ஒருவர் ஆன்மார்த்த பூசை செய்தற்குரிய தகுதியையளிக்கின்றது. நிர்வாண தீட்சை ஞானப்பேற்றுக்கு ஒருவரைத் தகுதியாக்கு கின்றது. இம் மூன்று தீட்சைகளும் அவரவர் தகுதிக்கும் சூழ் நிலைக்கும் ஏற்றவாறு தனித்தனி வெவ்வேறு காலங்களிலா யினும், ஒரே தடவையில் ஒருமித்து ஒரே தொடர்பாகவாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவராலும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்பது சைவத்தின் உட்கிடையாகும். எனினும், ஆசார அநுட்டானங் களைக் கடைப்பிடிக்கும் வலுவின்மையாலும், பிரதானமாகச் சுத்தபோசனமளவில் திருப்திப்பட முடியாதிருத்தலினாலும், சமயஞான நூலறிவுக் குறைபாட்டினாலும், பொதுவாக அலட்சியப் புத்தியினாலும் இது பெரும்பான்மையோரால் நழுவ விடப்பட்டு வருகின்றது. குறைந்த பட்சம் சமய தீட்சையாவது பெற்றுக் கொள்ளாதவர் சைவர் எனப்படார். சமயநிலை பிறப் பினாலல்ல: தீட்சையினாலேயே உத்தரவாதஞ் செய்யப் படுகின்றது.

சமயதீட்சை ஒருவர்க்கு உடல் தூய்மையையும் உளத் தூய்மையையும் வருவித்துச் சிவத்தொண்டுக்கும், வழிபாட் டுக்குந் தகுதியாக்குகிறதால் இது பெற்றவர்க்குச் சரியையில் அதிகார முண்டு. விசேட தீட்சை மேற்கூறியவற்றுடன் உயிரைச் சிவபுத்திரனாக மாறிப் பிறக்கச்செய்து வைத்தலினால் அது பெற்றவர் ஆன்மார்த்த பூசைத் தகுதியுமுடையவராய் சரியை கிரியை இரண்டுக்கும் அதிகாரியாகிறார். நிர்வாண தீட்சை உயிரின் பந்தகாரணமாகிய வினைத்தொடர்ச்சி முழுவதையும், வினை அநுபவத்துக்கு உதவியாயிருக்கும் போக போக்கிய அம்சங்கள் அனைத்தையும் நீக்கிவைக்கும் வகையில் அத்துவ சோதனையும் அத்துவ சுத்தியும் ஆக்கிவிடுதலினாலே அத் தீட்சை பெற்றவர் பந்தங்களின் தொந்தரவு நீங்கிச் சிவயோ கத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரியாகிறார். யோகத்துடன், முன் னைய சரியை கிரியை அதிகாரங்களிலும் இவருக்குக் கூடுத லான உத்தரவாதமுளதாகும். இவ்வாற்றால் முழுமையான சிவா னுபவப் பேற்றுக்கு வழிகோலுவதே தீட்சையின் நோக்கம் என அதன் தனித்துவம் உணர்தற்பாலதாகும்.

தீட்சை உயிருக்குத்தான் உடலுக்கில்லை என்பது பிரசித்த மான ஒரு வாதம். இதில் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. தீட்சைக் கிரியையில் சாதியுத்தாரணம் (சாதியை மேம்படுத்தல்) என்ற ஒரு அம்சமுண்டு. சாதி உடற்சார்பால் அமைந்தது தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும், குருவாயிருப்பவர் சீடனது உயிரைப் பாவனை முறையினால் கிரகித்துச் சிவாக்கினியிடத்திலும் தன் இதயமுள்ள சிவத்துடனும் சேர்த்துச் சமரசபாவம் பண்ணி, அதாவது ஒப்புமைத்தன்மையாக்கி மீளச் சீடனுடலில் பதிக்கும்போது சுத்தஞ் செய்யப்பட்ட உடலில் பதிப்பதாகவே சொல்லப்படுகிறது. இவ்வாற்றால், தீட்சையால் உடலும் தூய்மையும் உயர்வும் பெறுகின்றது என்பதை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். தீட்சை பெற்றவர் தமது சகவாசம், உணவுக்கலப்பு, உறவுக்கலப்பு முதலிய விஷயங்களில் சமயத்தூய்மையற்றவர்களோடு சம்பந்தப்படலாகாது என்ற விதி நடைமுறையிலிருப்பது தீட்சையால் உடல் பெற்ற தூய்மையை மீளக் கெடுத்துக் கொள்ளாதிருக்கும் நோக்கத்தினாலேயாம். இவ்வுண்மையை அறிந்து அத்தகையோரை மற்றவர்கள் உலகத்துக்குதவாதவர் என்று பரிகசிக்க அவர்கள் அது தாங்கலாற்றாது படிப்படியாக மற்றவர்களுட் கலந்தவிடுங் காட்சிகள் இன்று அநேகம். இந்நிலை விரும்பத்தக்கதல்ல.

இச் சிவதீட்சை இன்னொரு வகையில் ஏழுவிதமாக அமையும். அவற்றுள் **ஔத்திரி தீட்சையில்** கும்பபூசை, சிவாக்கினி காரியம் என்பன நடைபெறுவதாலும், சக்ஷுதீட்சையாகிய சாம்பவி தீட்யில் ஆசாரியன் தனக்குக் கைவந்துள்ள **சிவோகம் பாவனை**யினாலே தான் சிவமாயிருந்து கொண்டு சீடனைப் பார்ப்பதினாலும், **பரிச தீட்சையில்** ஆசாரியன் தனது கையைச் சிவனுறையுங் கையாகப் பாவித்து அருச்சித்துச் சீடனது சிரசில் வைத்து எங்குந் தடவி அவன் வடிவையே சிவவடிவாகச் செய்தலினாலும், **வாசக தீட்சையில்** சிவசக்தி மயமாகிய சங்கிதா மந்திரங்களையும் அங்க மந்திரங்களையும் சிவமூலமந்திரத்தையும் சீடனது செவிவழியாக உபதேசிப்ப தாலும், **சாத்திர தீட்சையில்** சைவாகமங் கூறும் ஞான உண்மைகளடங்கிய சித்தாந்த அறிவைப் போதிப்பதாலும், **யோக தீட்சையில்** ஆசாரியன் சிவத்தியானத்தின் மூலம் சீடன் உயிர் அதற்குள்ளுயிராயிருக்குஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனோடு ஒன்றுபடும் நிலையை வருவிப்பதாலும் இவ்வ னைத்தும் **சீவனைச் சிவமயமாக்கி** அது தங்குமிடமாகிய உட லையும் சிவமாக்கும் நோக்கிலேயே நடைபெறுவதாகத் தெரி கின்றது. சிவதீட்சையாவது யாதெனில், **சீடனை உள்ளும் புறமும் சிவமாக்குந் தீட்சையெனல்** பொருந்தும்.

இவ்வெழுவகைத் தீட்சையில் ஔத்திரி தீட்சை மற்ற அறுவகையையும் உள்ளடக்கும். மற்றைத் தீட்சைகள் அவரவர் தரத்துக்குத் தக்கபடி தனித்தனி அமையும். சாமானியமாக நம்மவர்க்கு அமையுந் தீட்சை ஔத்திரி தீட்சையேயாகும்.

## சந்தியாவந்தனம்

சந்தியா காலங்களிற் செய்யும் வழிபாடு இது. சூரியன் வரச் சந்திரன் விலகும் உதய காலமும், சந்திரன் வரச் சூரியன் விலகும் அஸ்தமன காலமும் சந்தியாகாலம் எனப்படும். பகலும் இரவும் என இரு காலப்பகுதிகள் சந்தித்தல் பற்றிச் சந்த்யா என்ற பெயர் ஏற்பட்டது. **சூரியன் சிவனுக்கிருப்பிடம், சந்திரன் சக்திக்கிருப்பிடம்** என்பது தெய்வ தரிசனமுள்ளவர்களின் அபிப் பிராயமாகும். அத்தன்மையால் இக்காலங்கள் சந்தியாவந்தனத் துக்குரியன ஆயின. உச்சிப்பொழுதாகிய மத்தியானமும் தேவர் களின் பிரீதிக்குரிய காலமாதலின் அதையுஞ் சேர்த்துச் சந்தியா காலமும் மூன்றாகக் கொள்ளப்படும். தீட்சை பெற்றவர்கள் இம்மூன்று காலங்களிலும் வழிபாடு செய்தல் **பிரதானமான ஒரு சமயக் கடமையாகும்.** சமயதீட்சை பெற்றவர்கள் காலைச் சந் தியும், விசேட தீட்சையாளர் காலை மாலை என்னும் இரு சந்திகளும், நிருவாண தீட்சையுடையார் காலை, உச்சி, மாலை என்னும் முச்சந்திகளும் ஆவது வழிபாடாற்றக் கடமைப்பட்டி ருக்கிறார்கள். அது செய்யாவிடில் அவர்கள் பெற்ற தீட்சை யால் பயனின்றியொழியும்.

சூத்திரங்கள் என்ற நூல்களிற் கூறப்பட்டுள்ள சந்தியா வந்தன விதி வைதிக சந்தியாவந்தனம் என்றும், பத்ததிகளிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ள சந்தியாவந்தன விதி சைவ சந்தியாவந்தனம் என்றும் பெயர் பெறும். **வேதத்தை மூலமாகக் கொண்டது வைதிகம்: ஆகமத்தை மூலமாகக் கொண்டது சைவம்.** வேத விதிகளிலுந் தழுவ வேண்டியனவற்றை ஆகமந்தழுவியேயுள்ளது.

வைதிகர்கள் வைதிக சந்தியாவந்தனத்தையும் சைவர்கள் சைவ சந்தியாவந்தனத்தையும் அநுட்டிக்க வேண்டும். சிவாசாரியர்கள் என்றிருப்பவர்கள் இரண்டையும் அநுட்டிக்க வேண்டும். இவர்கள் வைதிக சந்தியாவந்தன விதிகளிலும் ஆகம **விரோதமானவற்றைக் கைக்கொள்ளார்கள்.** சைவ சந்தியாவந்தனத்தில் பின்வரும் அம்சங்கள் இடம்பெறும்.

## தானசுத்தி

சந்தியாவந்தனஞ் செய்தற்குரிய இடத்தை அஸ்திரமந்திரத்தாற் சலந்தெளித்துத் தூய்மை செய்தல்.

## கணபதி குரு வணக்கம்

விநாயகரையும் தீட்சாகுருவையும் தியானித்துக் குட்டிக் கும்பிடுதல்.

## சலசுத்தி

கண்களைச் சூரிய சந்திர மண்டலங்களாகப் பாவித்துக் கொண்டு சந்தியாவந்தனச் செம்பிலுள்ள சலத்தைப் பார்த்தல். புருவ நடுவில் உளதாகக் கொள்ளப்படும் விந்துத்துளியை எடுத்து நீரில் தெளித்தல், செம்பின் நடுவில் தட்டி நீரிலுள்ள சிவசக்கியைப் பிரகாசிக்க வைத்தல் முதலிய கிரியைகள் இதிலடங்கும்.

## ஆசமனம்

ஆத்மதத்வாய சுவதா, வித்தியாதத்வாய சுவதா, சிவதத்வாய சுவதா என்ற மந்திரங்களைத் தனித்தனி உச்சரித்துக் கொண்டுஒவ்வொரு முறையும் ஒவ்வோர் துளி நீர் உட்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடுமிடந் தொடுதல்

*மோவாய், வலமூக்கு, இடமூக்கு, கண்களிரண்டு, செவிக ளிரண்டு, புயங்களிரண்டு, உந்தி, மார்பு, சிரம் என்னும் பன்னி ரண்டு இடங்களிலுமுள்ள தேவர்களை அருட்டி விழிப்பாயிரு க்கச் செய்யும்பொருட்டு இருதய மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு தொடுதல்.*

## விபூதி சுத்தி

*அணிதற்குரிய விபூதியைச் சங்கிதா மந்திரத்தால் அபிமந் திரித்தும் தென்மேற்குத் திசையில் ஒரு சிறிது தெறித்தும் சுத்தியாக்கி, அவ்விபூதியில் ஒரு பகுதியால் தன்னையும் உச்சி முதல் எங்குஞ் சுத்திபண்ணிக்கொள்ளல்.*

## முக்குறி தரித்தல்

*சுத்திகரித்த விபூதியை மந்திர சகிதம் நீர் விட்டுப் பசை யேறக்குழைத்து ஈசான, தற்புருட, அகோர, வாமதேவ, சத்தி யோஜாத மந்திரங்களுடன் முறையே உச்சி, நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள் என்னுமிடங்களிலும், சத்தியோஜாத மந்திரத்தாலே ஏனைய மதினோரிடங்களிலும் முக்குறியாய மையத் தரித்துக்கொள்ளுதல். பொதுவாக நம்மவர்க்கு விதிக் கப்பட்டன இப்பதினாறிடமுமாம். இனி, சிலர் சிலர் தத்தம் குருமரபின் சம்பிரதாயத்துக்கிணங்க 32, 12, 8, 5 இடங்களில் முக்குறி தரித்துக்கொள்ளுதலுண்டு.*

## பிராணாயாமம்

*தியானத்திற்குபகாரமாக மனத்தை நிலைநிறுத்தற் பொருட்டு மூச்சுக்காற்றை உள்ளிழுத்தலும் வெளிவிடு தலுமாகிய முயற்சியைச் சமப்படுத்தல். இதற்கு சம்மிதா மந்தி ரங்கள் உதவும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்ச்சனம்

துடைத்துத் துப்பரவு செய்தல்: சந்தியாவந்தனத்துக்குரிய மந்திரபூர்வமான ஜலத்திற் கொஞ்சம் இடக்கையில் நிரப்பிக் கீழொழுகுஞ் ஜலத்தை வலக்கையால் தன்மேற்படுமாறு தட்டிச் சிதறச் செய்தல். இது தன்னுடன் சம்பந்தமான அழுக்குகளைத் துடைத்துத் துப்பரவு செய்வதாகும்.

## அகமர்ஷணம்

பாவங்களை நீக்குதல்: ஜலத்திற் கொஞ்சம் கையி லெடுத்து நாசியின் சமீபத்திற் பிடித்துக்கொண்டு தனை அமிர்தமயமாகப் பாவித்து அந்த ஜலம் இடது நாசி வழியாக உள்ளிழுக்கப்பட்டு உள்ளுள்ள பாவங்களைக் கரைத்துக் கொண்டு வலது நாசி வழியாக வெளிவருவதாகப் பாவிக்கும் பாவனை இதுவாகும்.

## தருப்பணம்

சந்தியாவந்தனத்தில் உபயோகிக்கப்படும் மந்திரங்களி னிடமாக அவற்றின் அதிதேவதைகளாய் நின்று பலன் தரும் தேவர்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டாக இருகைகளாலும் நீரிறைத்தல். இது சங்கிதா மந்திரங்களுடன் "ஸ்வாஹா" சேர்த்துச் சொல்லிச் சொல்லிப் பதினொரு முறையும், சிவமூல மந்திரத்துடன் "ஸ்வாஹா" சேர்த்து மூன்று முறையுஞ் செய்யப் படும். தருப்பணம் - திருப்திசெய்தல்.

## சகளீகரணம்

"ஈசானாய" முதலிய பதினொரு மந்திரங்கள் சக்தி கலைகள். அவைகளே சிவன் திருமேனியாதற்குரியவை. அம் மந்திரத் திரு வுருவத்தை நமது உடம்பிலும் அமைத்துக் கொள்ளும் பாவ னையே சளீகரணம் எனப்டும். முதலில் உள்ளங் கைகளில் அம் மந்திரங்களை விரல் தோறும் அமைத்து நடுவில் சிவன் எழுந் தருளியிருப்பதாகப் பாவித்துத் தியானித்து அதே கரங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலின் பல்வேறிடங்களைப் பரிசித்தலினால் இது கைகூடும். முன்கூறியவாறு கையில் சிவனை அமைத்தல் கரநியாசம் எனப் படும். பின் மெய்யில் அமைத்தல் அங்கநியாசம் எனப்படும். கரநியாசம் கையில் அமைத்தல்: அங்கநியாசம் உடம்பில் மைத்தல். சகளீகரணம் - சிவம் உடலிற் பொருந்தியதாகச் செய்தல். சகளம் - உடம்போடு கூடுதல்.

## மூலமந்திர ஜபம்

மூலமந்திரத்தை ஒலி வெளியிற் கிளராது உச்சரித்தல். நூற்றெட்டுத்தரத்துக்குக் குறையாமல் இம்மந்திரம் ஜபிக்கப் படும். இதற்கு உதவியாக செபமாலையுருட்டல் அல்லது கைவிரல் வரைகளை ஒன்றுமாறியொன்று பத்து வட்டம் தொட்டுக் கொள்ளுதல் உண்டு. மூலமந்திர ஜபத்துக்கு முன் விநாயக மந்திரமும் பின் உமாதேவி, சரவணபவ, சிவசூர்ய, சிவகுரு மந்திரங்களும் பப்பத்து முறைகளுக்குக் குறையாமல் ஜபிக்கப்படும்.

## தோத்திரம்

ஜபமுடிவில் கைகூப்பித் திருமுறைப் பாடல்களில் இயலு மளவு படித்தல்.

## திக்வந்தனம்

அட்டதிக்கிலும் உள்ள திக்பாலகர்களை அவர் நாம மந்திரஞ் சொல்லிக்கொண்டு நின்ற நிலையிற் சுற்றி வணங் குதல்.

## சிவசூர்ய தரிசனம்

திக் வந்தன முடிவில் சூரியனை நோக்கிக் கைகூப்பி அதிற் சிவனைக் கண்டு வணங்கிப் பிரார்த்தித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இன்னும் பூர்வக்கிரியைகளில் எஞ்சியுள்ள இரண்டு. அவற்றுள் ஒன்று சிவபூசை: மற்றையது சிவாசிரமம்.*

## சிவபூசை

*சந்தியாவந்தனஞ் செய்து கொண்ட பசுமையோடு உடனடியாகச் செய்தற்பாலது சிவபூசை.*

**பஞ்ச சுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசை செய்தால்**
**விஞ்சிய மெய்ஞ் ஞானம் விளங்கும் பராபரமே.**

– தாயுமானவர், பராபரக்கண்ணி.

*சிவபூசை செய்யாதொழியிற் சிவஞானம் விளங்காது. அவரவர் தாம்தாம் சிவபூசை செய்வதே அவரவர்க்கு உண்மை வழிபாடாவது. இதற்குத் தகுதிப்படும் பொருட்டுச் சமய தீட்சையுடன் விசேட தீட்சையும் பெற்றுக்கொள்ள வேண்டும். தீட்சாக்குருவின் மூலம் சிவபூசை எழுந்தருளு வித்துக் கொள்ள வேண்டும் ; சாகும்வரை நியமமாகச் செய்தும் வரவேண்டும். நாங்கள் இதுவரை கவனித்த* **'பூர்வக் கிரியைகள்'** *அனைத் தினுக்கும் முடிவான பெரும் பேற்றை அருள உள்ளது இச் சிவ பூசையாகும்.*

**அருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரும்**
**அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே.**

*- அப்பர் தேவாரம்.*

*சிவபூசையாளர் இருத்தல் ஊருக்குத் தனிச்சிறப்பென்கிறது இப்பாடல்.*

## சிவாசிரமம்

*ஆன்மீக முன்னேற்றங் கருதிய அநுஷ்டான நிலைகள் வைதிகத்திலும் சைவத்திலும் நந்நான்கு விதமாகச் சொல்லப்படுகின்றன. வைதிகத்தில் பிரமசரியம், க்ருஹஸ்தம்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானப்ரஸ்தம், சந்நியாசம் எனவும் சைவத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும் அமையும். சைவத்தில் இவை நாற் பாதங்கள் எனவும்படும். சைவம் வேதாகம சைவம் ஆதலின், வைதிகத்துக்குரிய ஆச்சிரம நிலைகளையுந் தனக்கு வேண்டு மளவில் ஆகம அறிவியலுக்கு விரோதமாகாத வகையில், தழுவிக் கொள்கிறது. அத்துடன் சரியை முதலிய நாற்பாதங் களையும் பிரதானமாகக் கொண்டுள்ளது. இந்நாற் பாதங்களும் படியேற்றக் கிரமமாக ஒன்றன்பின்னொன்றாகத் தொடர்ந்து அநுசரணைக்கு வரவேண்டியன. ஞானபாதத்தில் நிற்பவர் நான்கிற்கும் பூரண உத்தரவாதமுள்ளவராவர். நாற்பாதத்தில் எந்தப் பாதமாயினும் அவரிடத்தில்தான் பூரணவிளக்கம் பெறும். நம் சமயாசாரியர் நால்வரில் ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வோர் பாதம் விளக்கமுற்றிருந்தமை பிரசித்தம். தம்முண்மையில் நால்வரும் ஞானிகளேயாவர். இந்த நான்கும் படிமுறையால் அடையப்படுந் தன்மையை அரும்பு, மலர், காய், கனி என்ற உதாரணத்தால் விளக்குவர் தாயுமானவர்.

**விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே**

– தாயுமானவர், பராபரக்கண்ணி.

## உவமை விசேடம்

சைவ நாற்பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றின் அந்தரங்கத் தொடர்பை விளக்க எழுந்த ஒரு அருமையான உவமை அரும்பு, மலர், காய், கனி என்பதை அவதானித்தல் தகும். அரும்பு ஆரம்பநிலை, மலரும் காயும் அதே அரும்பின் பரிணாம வளர்ச்சி நிலைகள். கனி அதன் முடிநிலை. மலராதற்கும் காயாதற்கும் வேண்டிய அனைத்தும் அரும்பினிடத்தேயே அடங்கிக் கிடந்தவை. அதேபோல கிரியை, யோகம், ஞானம் என்ற மூன்றும் சரியையிலேயே அடங்கிக் கிடந்தவை. இதை இன்னும் விடுவித்துக் கண்டு கொள்ளுதல் நலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பு தன் ஆதாரமாகிய கொம்பையோ கிளை யையோ இன்றி அமையாதது. அதுபோலச் சரியையும் தன் ஆதாரமாகிய சிவதீட்சையையின்றி அமையாதது. சிவதீட்சை யின்றிச் சைவ ஒழுக்கம் எதுவுமேயில்லை.கொம்போ கிளையோ இல்லாமல் அரும்பில்லை. இதனை உற்றுணர்தல் வேண்டும். எனவே, சரியையைப் பற்றி எண்ணும்போது சிவ தீட்சையையும் உடன் கொண்டே எண்ணல் வேண்டும். அப்படி எண்ணும் போது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கினதும் அடிப்படை சிவதீட்சையிலே அமைந்திருக்குஞ் சிறப்பும் அவதா னிக்கப்படும். சிவதீட்சை பெற்றுச் செய்யும் சந்தியாவந்தன அநுட்டானத்திலே, சுத்த ஜலம் தயாரித்தல், மலர் பறித்தல், தோத்திரஞ்செய்தல், சுற்றிக் கும்பிடுதல், விழுந்து வணங்கல் என்பன அனைத்துஞ் சரியையாம்.

தானசுத்தி, ஜலசுத்தி, விபூதிசுத்தி, விபூதிஸ்நானம், மந்தி ரஸ்நானம், சகளீகரணம், ஆசமனம் முதலியன கிரியையாம்.

பிராணாயாமம் பண்ணி மனதை ஒருவழிப்படுத்தல் யோக மாம். சிவமூல மந்திரத்தைச் செபித்து அதைத் தியானித்தல் ஞானமாம்.

**ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச்**
**சொல்லாம்** ~ பெரிய புராணம்

இவ்வகையில் நாற்பாத இயல்புகளுக்குமுரிய ஆரம்ப முயற்சி நிலை தீட்சையிலே அடங்கியிருக்கக் காண்கிறோம்.

சிவதீட்சையின் இத்தகைய உபயோகத் தன்மையை முன்னிட்டே, சைவத்தின் அடிப்படைத் தேவையாகச் சிவ தீட்சை வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால், சிவதீட்சை பெற்றுச் சந்தி யாவந்தனம் பண்ணிக் கொள்ளாவிடில் ஒருவருக்குச் சரியைத் தொழிலுக்குக்கூட அதிகாரமில்லை யென்பதையும், கொம்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அரும்பு தோன்றி மலராய் விரிந்து, காயாய் உருத் திருந்து, கனியாய்ப் பரிணமித்துப் பயன்படுதல் போல, தீட்சை அநுட்டான அநுசரணையி லிருந்து சரியை அரும்பிக் கிரியை யாக மலர்ந்து, யோகமாய் உருப்பட்டு, ஞானமாய்க் கனிந்து, உயிர் ஆன்மலாபப் பேறு அடைகின்றது என்பதையும் இத் தொடர்பில் வைத்து விளங்கிக் கொள்ளுதல் நலமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பூர்வக் கிரியைகளின் பண்பும் பயனும்

உடலுயிர் வாழ்விற் பூர்வக்கிரியைகளின் பங்கு மிகவும் மகத்தானதாகத் தெரிகின்றது. இவற்றின் மூலம் **ஆன்மீக ரீதியாக ஏற்படும் நலன்களை விட, சுகாதார ரீதியாகவும், வைத்திய ரீதியாகவும், சரீரபோஷணை ரீதியாகவும்** பல்வேறு நன்மைகள் விளையக்கூடியதாயிருத்தல் அவதானிக்கத்தகும்.

**'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'** என்ற திருமந்திர விளக்கத்தின் அடிப்படை இங்கே இடம்பெற்றிருக்கக் காணலாம். ஒவ்வோர் கிரியைக்கும் இன்றியமையாத தேகசுத்தி மட்டுமன்று, அவற்றில் அதிகமாகச் சம்பந்தப்படும் **அக்கினி காரியமும்** அவற்றில் உபயோகமாகும் **வெண்கடுகு, நெய், மாவிலை, விதவிதமாய ஓமத்திரவியங்கள்** என்பவற்றின் மணமும் கூடச் சிறந்த சுகாதார சாதனங்கள் என்பதை மறுக்க முடியாது.

பின்வரும் கிரியாம்சங்களில் வைத்திய ரீதியான நன்மைகள் பல விளைதல் கூடும் என்று அநுமானிக்கப்படுகின்றது.

1. கருப்பாதானத்தின் போதும் சீமந்தத்தின் போதும் **நாயகன் நாயகியின் வயிற்றைத் தடவுதல்.**

2. பும்சவனத்தின் போது ஆல், பலாசு, அரசு, அத்தி மொட்டுக்களை அரைத்துக் **கர்ப்பவதியின்** மூக்குத் துவாரத்திற் பிழிந்து விடுதல்.

3. சீமந்தத்தின் போது பன்றிமுள், அத்திக்குச்சு, தருப்பை, கோதுமை முனை என்பவற்றால் கர்ப்பவதியின் **உச்சி வகிர்தல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காதுகுத்துதல், துடக்குமயிர்வழித்தல், சௌளஞ் செய்தல்.

5. (i) சந்தியாவந்தனத்தில் மோவாய் முதல் உச்சி ஈறாகப் பன்னிரண்டிடங்கள் தொடுதல்.

(ii) பதினாறிடங்களில் விபூதிக்குறி அணிதல்.

(iii) பிராணாயாமஞ் செய்தல்.

தற்போது பிரசித்திக்கு வந்து கொண்டிருக்கும் **அக்யூ பங்சர் என்ற சீன நாட்டு வைத்திய முறைச்சாயல்** மேற்கூறிய கிரியாம்சங்களில் அமைந்திருப்பதாகக் கொள்வதில் தவறில்லை.

கர்ப்பவதியின் உச்சி வகிர்தலினால் கர்ப்பத்திலிருக்கும் சிசுவுக்கு ஏற்படக்கூடிய அங்கவீனக் குறைபாடுகள் நிவர்த்தியாகும் என்பர். காதில் தொளையிடுவதனால் குழந்தைக்கு நரம்பு சம்பந்தமாக நிகழக்கூடிய சில நோய்கள் தடைப்படுத்தப்படும் என்பர். சந்தியாவந்தனத்தில் தொடுமிடங்களும் குறிவைக்குமிடங்களும் உடலில் நோய் தோன்றுதற்குரிய மூல இடங்களிற் பல என்கிறார்கள். குறிவைக்குமிடங்களில் அதிகமானவை எலும்புப் பொருத்து நிலையங்கள் (மூட்டுக்கள்) ஆக இருத்தலினால் அவற்றிலணியப்படும் விபூதியினால் அவற்றுக்கு ஸ்திரத்தன்மையோ வலுவோ உண்டாகலாம் என்பதும் பொருந்துவதேயாம்.

இனி, கருப்பாதானம், சீமந்தம் முதலியவற்றில் கோதுமை, உழுந்து என்பற்றை அரைத்து நெய், தயிர், தேன் என்பவற்றில் கலந்து குடிப்பித்தல் ; ஜாதகர்மத்தின் போது தேன், நெய், வெல்லம் என்பவற்றைக் கலந்து பொற்கரண்டியால் பிரசவமாதினைக் குடிப்பித்தல் ; குழந்தைக்கான கிரியைகளில் மதுபர்க்கம் தயாரித்துப் பருக்குதல்; விசேஷமாகப் பிண்ட வர்த்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கிரியை செய்தல் என்பன எல்லாம் தேகபோஷணையைப் பிரதானமாகக் கருதிய கிரியாம்சங்களாயிருத்தல் வெளிப்படை.

சிவச்சார்பில்லாத எந்தக் கிரியையும், அதாவது சரீர சுத்திக் கிரியை, வைத்தியக்கிரியை, தேக போஷணைக்கிரியை என எதுவும், உரிய பலன் அளிக்கமாட்டாது என்பது சைவ ஞான உண்மையாகும். அதற்கிணங்க அனைத்துக்கிரியைகளும் **விநாயகபூசை, சிவகும்பபூசை, சிவமந்திர உபாசனை, சிவாக்கினி காரியம்** என்பவற்றுடனேயே நடைபெறுவனவாயின. இவ்வகையால் தற்காலிகப் பலனாகிய லௌகிக பலன்களும் நல்ல முறையில் வாய்க்கின்றன. நிரந்தர பலனாகிய ஆன்மீகப் பேறும் அடையப்படுகின்றது. ஆதலின் சைவசமயிகள் என்றுள்ள அனைவரும் இக்கிரியைகளுக்கு உரிமையுடையவர்களேயாவர்.

இருந்தும், சுத்தமான சமய ஆசார ஒழுக்கத்தில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளமுடியாத கஷ்டத்தினால் சைவ மக்களில் மிகுதியான பெருந்தொகையினர் இவற்றிற் பல வற்றைக் கைநழுவவிட்டுவிட்டார்கள். ஸ்மிருதிப்படி அந்தணர்க்குத் தான் இவை அவசியம், ஏனையவர்க்கு அநாவசியம் என்று சில காலமாக நிலவிவருங் கருத்து அர்த்தமற்றதாகும். எவராயினுஞ் சரி, **முறையான சைவ ஆசார அநுட்டானமுள்ள வர்க்கு மட்டுமே இக்கிரியைகள் பலனளிப்பன வாகும் என்பதே சைவாகமங்களின் நிலை. ஸ்மிருதிக் கருத்துக்கள் எல்லாம் சைவத்துக்குப் பிரமாணமாவதில்லை. ஸ்மிருதி விதிகளின்படி சைவக் கிரியைகள் நடைபெறுவதற்கு அங்கீகாரமுமில்லை ; ஸ்மிருதியாளர்களைக் கொண்டு சைவக்கிரியைகளைச் செய்விப்பதில் அர்த்தமுமில்லை. இவை சைவத்தில் என்றும் வற்புறுத்தப்பட வேண்டிய கருத்துக்களாம்.**

இங்ஙனம், சிவத்துவச் சார்பான லௌகிகப் பேறுகளையும் உண்மையான ஆத்மீகப் பேற்றையும் கருதி நடைபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வெல்லாக்கிரியைகளுக்கும் **சிகரமாய் அமைகின்றது சிவ தீட்சை.** இதற்கு முன்னோடியாயுள்ள மற்றைக் கிரியைகள் அனைத்தும், இதற்கு வேண்டிய அளவு **அகப்புறத் தூய்மையையும், தகுதிப்பாட்டையும்** விளைவித்தற்குரியவை என்பதை மறந்து விடுதல் ஆகாது. இந்நிலையில் அமையும் சிவதீட்சையானது **சைவ நாற்பாதங்களாகிய** சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றின் கருவாய் அமைகின்றது. (இதன் விபரம் சற்று முன்பாகவே அவதானிக்கப்பட்டுள்ளது.) இதனால் உயிர் தானடைய வேண்டிய மேல்கதிக்குத் தன்னைத் தயார் செய்து கொள்கின்றது. **இதுவே பூர்வக் கிரியைகளின் உயர் பயனாகும் என்க.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அபரக் கிரியைகள்

*உயிர் உடலோடு கூடி வாழும் நிலையில் அதன் நன்மை கருதிச் செய்யப்படுங் கிரியைகள் பூர்வக்கிரியைகள். எடுத்த உடலை விட்டு விலகிய பின் அதன் நன்மை குறித்துச் செய்யப்படுங் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப் பெயர்பெறும்.*

*உயிர் என்றைக்கும் வாழும் வஸ்து (*Soul is a living Principle*). அதன் வாழ்க்கை மூன்று நிலைகளில் வைத்து அவதானிக்கப்படுகிறது. அது இவ்வுலகில் உடம்பெடுத்து வாழும் வாழ்க்கைநிலை* **இம்மை**; *இவ்வுடல் வீழ்ந்தபின் திரும்பவும் இது போல் உடலிற் கூடி வாழும் வாழ்க்கை* **மறுமை**; *உடல் வாழ்க்கைக்கான வினைத்தொடர்பு முற்றாக நீங்கி இறைவனடி சேர்ந்து விடுதல்* **அம்மை** *எனப்படும்.*

*மூன்று நிலையிலும்* **உயிர்க்கு வாழ்வுண்டு.** *இவற்றில் இம்மை வாழ்க்கைக்கும் மறுமை வாழ்க்கைக்குமிடையில் குறிக்கப்பட்ட அளவு ஒரு* **இடையீடுண்டு.** *அந்த இடைக்கால எல்லை குறைந்த பட்சம் ஒரு வருடம் என்பார்கள்.*

*நம்மவர் யாரேனும் முன் பின் அறியாத ஒரு புதுத்தேசத்திற்குப் போக நேர்ந்துவிட்டால் எமக்குப் பெரும் விசாரமேற்படுகிறது. அங்கு இடந்துறைகள் எப்படியோ? வாழ்க்கை வசதிகள் எப்படியோ? என்ற வகையில் அவ்விசாரங்கள் தோன்றும். அது போலவே, நம்மோடு உடனாய் நம்மத்தியில் உடல் கொண்டு வாழ்ந்தவர் ஒருவர் உடலைவிட்டுப் போய் விட்டார் என்றபோது, எங்கே போனார்? அவர் போன இடந்துறை வசதிகள் எப்படியோ? அங்கு அவர் வாழ்க்கைக்கான ஏற்பாடுகள் எப்படியோ? என்ற விசாரங்கள் எழவேண்டியதியல்பேயாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வாழுங்காலம் முழுவதும் அவர் அறிவுணர்ச்சி யுள்ளவராயிருந்தார். தம் அறிவுணர்ச்சிக்கேற்றபடி உண்ணுதல், பருகுதல் முதலிய பலவேறு போகங்களை அநுபவிப்ப வராயிருந்தார். இங்கே அவர் பெற்றிருந்த உடல் இவ்வெல்லா வற்றையும் அவர் தேடுதற்கும் அநுபவிப்பதற்கும் சிறந்த ஒரு சாதனமாயிருந்தது. இவ்வுடலை விட்ட மாத்திரத்தே அவர் அவ் வாய்ப்புக்களை இழந்தவரானார். இனி, அவர் மானங்காத்தற்கு, அவர் பசிக்கு, அவர் தாகத்துக்கு என்ன வழி? என்பது ஒரு வகை விசாரம். அநாதையாக அந்தர வழியில் விடப்பட்டிருக்கும் அவருக்குப் படைப்புப் பேதங்களாக உள்ளன என்று சொல் லப்படும் பூதபைசாசங்களால் ஏதும் நிகழ்ந்து விடுமோ என்ப தொருவகை விசாரம். மேல் அவருக்கு வாய்க்க இருக்கும் பிறப்பு நல்ல பிறப்பாக வாய்க்குமோ என்றது ஒரு வகை விசாரம். இவ்விடைக்காலத்தில் உளதெனப்படும் நரக வாதனையில் அவர் மிகுதியுங் துன்புற நேருமோ என்றதொரு வகை விசாரம். இங்கிருந்து இறந்து போன ஒருவரைப் பற்றி இங்குள்ளளோ ருக்கு எழவேண்டிய விசாரங்கள் இவைகளாகும்.

இக்கட்டத்தில் இவர்கள் சம்பந்தமான சேம நலன்களைக் கவனித்தற்கென்று இறைவனாற் படைக்கப்பெற்றுள்ள பிதிரர் என்ற ஒருவகைத் தேவசாதியார் இருக்கின்றார்கள். மரணத்துக்கு முந்திய நிலையில் நம் சேம நலன்களுக்குச் சிறப்பாக உதவும் இந்திரன், வருணன் முதலிய தேவர்களைப் போல, மரணத் தின்பின் நமது சேம நலன்களுக்குச் சிறப்பாக உதவும் பொருட்டாக இருப்பவர்கள் பிதிரர்கள். தேவர்களைப் போலவே பிதிரர்களும் தம்மைக் குறித்து நம்மாற் செய்யப்படும் சத் கிரியைகளினால் தாம் திருப்தியுற்ற பின்னரே தாம் கவனித்தற் குரிய சேமநலன்களைக் கவனிப்பவர்கள் ஆவார்கள்.

இறந்து விட்டவர் அரூபியாய் விட்டார். எவ்வகையிலும் நாமாக அவரோடு தொடர்பு கொள்ளல் இயலாது. ஆகவே அதற்குரிய உத்தரவாதமுள்ளவர்களாகிய பிதிரர்களை வருந்தி யழைத்து நம்முன் இருத்தி அவர்களை நமது பூசை, தானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ப்பணம் என்பவற்றால் திருப்திப்படுத்தி, இறந்தோரின் சேம நலன் பொருட்டாக நாம் எவற்றையெல்லாஞ் செய்ய விரும்பு கிறோமோ அவற்றையெல்லாம் அவர்களைக் கொண்டே செய்வித்தல் தான் அபரக்கிரியைகளின் பொது நிலைப் பண் பாகும்.

பொதுவாக நம் வாழ்வில் நமக்கு நிகழும் சேமலாபப் பேறுகள் எல்லாவற்றிலும் தேவர், பிதிரர்களின் பங்கு முக்கிய மானது. அவர்களின் திருப்தி எங்கள் சேமலாபப்பேறுகளை நன்கமையச் செய்யும்; அவர்களின் வெறுப்பு அவைகளைக் குறைக்கவும் கெடுக்கவும் பார்க்கும். இவ்வுண்மை சமயநிலை யில் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு ஆஸ்திக உண்மையாகும். இருவர் சகாயமும் எப்போதும் வேண்டுவன எனினும், மரணத் திற்குப்பின் பிதிரர் சகாயம் பிரத்தியேகமாக வேண்டப்படும் நிலையுண்டு. இதனால், இல்வாழ்வார்க்கு தேவர் கடனும் பிதிர் கடனும் இன்றியமையாதனவாயின.

உயிர்வாழ்வின் சேமநலப்பேறே கண்ணாகக்கொண்டு நூல் செய்த திருவள்ளுவர் இல்வாழ்வார் கடமைகளைக் குறிப்பிடும் போது,

> "தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
> ஐம்புலத்தாறு ஓம்பல் தலை."

என்றார். இதில் தென்புலத்தாரே முதலிற் குறிக்கப்பட்டிருத்தல் கருதத்தகும். **தென்புலத்தார் என்போர் பிதிரர்.** பிரபஞ்ச வெளி யில் தெற்குத்திசை அவர்களுக்கிடமாகக் கருதப்பட்டுள்ளமை யால் அவர்கள் தென்புலத்தார் எனப்பட்டனர். இப்பிதிரர்கள் தம்படைப்பமைதியின்படி **ஸ்கந்தர், சண்டர், கணாதீசர்** எனவும் **ஈசர், சதாசிவர், சாந்தர்** எனவும் மும்மூன்று பேர் இரு பகுப்பில் உள்ளனர். சமயதீட்சையாளர்களாய் இறந்தவர்களின் நலத் திற்கு முன்னைய மூவரும், விசேட தீட்சையாளர்க்குப் பின்னைய மூவரும் உதவுவதாகக் கொள்ளப்படும். தனித்தனி இம்மூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியிற் சேர்ந்தோர் ஒருவருக்கொருவர் விருத்தராய் தந்தை வழி மரபுத்தொடர்புள்ளவர்களாய் இருப்பார்கள். இறந்த சமய தீட்சையாளர் ஒருவர் சார்பில் பார்க்கும்போது **ஸ்கந்தர் என்பவர் அவர் பிதா: சண்டர் பேரன்; கணாதீசர் பாட்டன்** எனப்பாவிக்கப் படும் நிலையுண்டு. இக்காரணத்தினாலேயே அவர்கள் பிதிரர் எனப்பெயர் பெற்றதுமாம். பிதிரர்கள் - பிதாக்கள்.

சாதாரண வாழ்க்கையில் நம் பிதா, பேரன், பாட்டன் ஆகியோரின் கரிசனையும் தாய் பேர்த்தி, பாட்டி ஆகியோரின் கரிசனையும் நமக்கு உதவுவதற்கு நேரொப்பாக மரணத்தின் பின்னைய வாழ்வில் இவர்களின் கரிசனை நமக்கு உதவுவ தாகும்.

**“மாதா மனமெரிய வாழாய் ஒருநாளும்”**

என்பது உலகநீதி. இந்த மாதா பிதாக்களுக்கு நேரொப்பாக அங்குள்ள பிதிரர்களையும் கருதி அவர்கள் மனங்கோணா வகையில் அவர்களைத் திருப்தி செய்யவேண்டும் கடப்பாடு இவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

அபரக்கிரியைகளின் பொதுநிலைப் பண்பாக உள்ள தொன்றனையும், அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுவதன் அவ சியத்தையும் இதுவரை கவனித்தோம். இனி அவற்றை ஒழுங்கு முறைப்படி சற்று விரிவாக நோக்குவோம்.

## உத்கிராந்திக் கிரியை

தேகத்தை விட்டு உயிர் கிளம்புதல் சார்பாக அவ் விறுதிக்கட்டத்திற்கு செய்யப்படுங்கிரியை. உத்கிராந்தி - கிளம் பிப் போதல். உயிர் பிரிய இருக்கும் ஒருவர் அகப்புறத்தூய்மை யுள்ளவராயும், சிவத்தியானமுள்ளவராயும், தன்னாலியலுமளவு தானதருமஞ் செய்த திருப்தி உள்ளவராயும் இருக்க வேண்டும் என்பது விதி. அந்நிலையிலும் அவருக்குப் போதுமான அளவு அறிவுத்தெளிவும் உடல் வலுவும் இருக்கக்கூடுமானால் அதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரியவற்றை அவரே தாமாகச் செய்யக் கடவர். அது இல்லாத பட்சத்தில் அவர்க்காக மற்றொருவர் அவற்றினைச் செய்யக் கடவர். இவ்வகையில் விசேடதீட்சையாளர் சார்பில் முறைப் படியான சிவபூசையும், சமயதீட்சையாளர் சார்பில் திருமுறைப் பாராயணத்துடன் சிவமந்திர செபமும் இடம்பெற வேண்டு வனவாம்.விபூதிதாரணமும் சிவமூலமந்திர செபமும் எல்லோர்க் கும் இன்றியமையாதனவாகும்.

**சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயே னுன்னை**
**எங்குற்றாய் என்ற போதால் இங்குற்றேன் என்கண் டாயே.**

– அப்பர் தேவாரம் –

நற்றவா உனை நான்மறக்கினுஞ்சொல்லுநா நமச்சிவாயவே.

– சுந்தரர் தேவாரம்.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

– பட்டினத்தார் பாடல்.

என இங்ஙனம் திருமுறைகள் இக்கிரியை உண்மைக்கு இடந் தந்துள்ளன. இக்கிரியைப் பண்பே இனிமேல் நிகழ விருக்குங் கிரியைகளின் போக்கை மட்டிடுதற்குஞ் சிறந்த கருவியாய் அமையும். செத்தவர் எப்படியாவது சிவலோகஞ் சேரவேண்டும் என்பதே பொது அபிப்பிராயமும் ஆசையு மாகும்.

## அந்தியேஷ்டி

அந்திய + இஷ்டி, அந்திய காலத்திற் செய்யுங் கிரியை. இஷ்டி-கிரியை. இறந்தவரின் தேகத்திற்குப் பிரேதம் என்ற சொல் பிரத்தியேகமாக வழங்கும். உடலோடு உயிர் வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் அவ்விரண்டுக்கு மிடையிலிருந்த பிரிக்கமுடியாத செறிவின் முறைமையை ஆதாரமாகக் கொண்டு உடல் விட்டுப்போன உயிரின் நன்மைக்காவனவற்றை இங்கே விடப் பட்ட அவ்வுடலில் வைத்துச் செய்யுங் கிரியைகள் அந்தி யேஷ்டி எனப்படும். இதன் விரிவுகளைக் கவனிக்குமுன் இது சம்பந்தமான மற்றொன்று இங்கு இடம்பெற வேண்டியுள்ளது.

## சாதாரணமான நம்மவர்க்கு

அந்தியேஷ்டிக் கிரியை செய்யப்படுவதில் அவரவரு டைய சமயாசார ஒழுக்கநிலை பிரதானம் பெறும். நிலை வேறுபாடு பலதரமாயிருக்குமாயினும், ஒரு பரவல் நோக்கில் வைத்து அது இருவகையில் அடக்கப்படுகிறது. விசேடதீட்சை, நிருவாண தீட்சை, ஆசாரிய அபிஷேகம் என்பனவற்றில் குறைந்த பட்சம் ஒன்றிரண்டாவது பெற்றுள்ளவர்களின் நிலை ஒருவகை. சமயதீட்சை மாத்திரம் பெற்றுள்ளவர்களின் நிலை ஒருவகை. முந்திய வகையினர்க்கு அவர் பிரேதத்தின் சார்பாக நடைபெறவேண்டுங் கிரியைகள் அனைத்தும் ஒரே தொடர்பாக அவர் இறந்த அதே நாளில் நடந்து முடியும். அவர் இல்லத்தில் பிரேத சுத்திக்கான சாதாரண கிரியையும், மயானத்தில் அவரு டைய **அத்துவாக்களைச் சோதனை செய்து** அவருக்கு நேரடி யான ஆத்ம சுத்தி வருவித்தற்குரிய விசேட நிர்வாணக் கிரி யையும் நடைபெற்று அவர் சிவாக்கினியில் தகிக்கப்பட்டுச் சிவமாவார். **இவ்வெல்லாக் கிரியைகளும் ஒரே கூட்டாக அந்தி யேஷ்டி** என்ற பெயரில் அடங்குவன.

சமய தீட்சை மட்டுமுடைய சாதாரணமானவர்க்குப் பொதுவாகச் சமயாசாரத்தரம் குறைவாயிருப்பதாலும், இவர் களிற் பெரும்பாலார் சமயாசார ரீரியாக விலக்கப்பட்ட சில காரியங்களையும் (மது மாமிசாதி) தழுவுஞ் சுபாவ முடையாரா யிருப்பதாலும், அவர்களுக்கு இவ்வந்தியேஷ்டிக் கிரியையாகிய ஒரே கிரியை இரண்டு கூறாக்கப்பட்டு இறந்த அன்று நடப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவக்கிரியை எனவும், பின்பு முப்பத்தோராம் நாள் நடப்பது **அந்தியேஷ்டிக் கிரியை** எனவும் நடைமுறையில் இருந்து வருகின்றது. எந்தக்கிரியையும் **விடப்பட்ட தேகத்தில்** வைத்தே எவர்க்கும் நிகழவேண்டியது. ஆனால் நம்மவர் தகுதிக்குறைவு, குறைந்த பட்சம் முப்பதுநாட் காலக்கழிவு வேண்டி நிற்கின்றது. அதுவரை பிரேத தேகத்தை வைத்திருக்க முடியாமையால் சவக்கரியையோடு அதைத் தகித்துவிட்டு, **பிறகு 31 ஆம் நாள் 'புத்தலிகா'** என்ற ஒரு தேகம் தர்ப்பையினால் புதுவதாகப் படைத்து, அதுவே இறந்தவரின் சொந்தத் தேகமாகப் பாவித்து அந்தியேஷ்டி என்றதற்குரியன வெல்லாஞ் செய்து முடித்து முடிவில் அப் **'புத்தலிகாவையும் தகித்துவிடும்'** வழக்கம் நம்மவர்க்கிருத்தலின் தாற்பரியம் இதுவேயாகும்.

இவ்விளக்கத்தின் பிரகாரம்,

| **அவர்களுக்கு** | **நம்மவர்க்கு** |
|---|---|
| 1. ஒரே சூர்ணோற்சவம் | இரு சூர்ணோற்சவம் |
| 2. ஒரே தகனம். | இரு தகனம். |
| 3. ஒரே அஸ்திசஞ்சயனம் | இரு அஸ்திசஞ்சயனம் (சாம்பலள்ளல்) |
| 4. ஒரே நாட்கிரியை | இரு நாட்கிரியை. |
| 5. பத்துநாள் ஆசௌசம். | முப்பது நாள் ஆசௌசம் |
| 6. சிராத்தக் கிரியைகள் பத்து | சிராத்தக் கிரியைகள் நாளில் நாளாவட்டம் ஒன்றிரண்டு. எல்லாம் ஒருமித்துமுப்பத்தோராம் நாளில் |
| 7. ஒரே பிரேதசுத்தி | இரு பிரேதசுத்தி. |

நடைபெற வேண்டியிருக்கும் வேறுபாடு தெரிகிறது. சமய தீட்சை மட்டுமுள்ளவர்களிலும் முறையான சமய ஆசார சுத்தமுள்ளவர்கள், தொடர்பான ஒரேநாள் அந்தியேஷ்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியை பெறத் தகுதி உடையோராகலாம். ஆனால் அவர் களும் பந்துமித்திரத் தொடர்பு காரணமாக மது மாமிசமுள்ளா ரோடும் பந்தி போசனங் கொள்பவராயிருக்க வேண்டுதலின் அவ்வாய்ப்பை இழக்கின்றனர். பந்துமித்திரர் எல்லோரும் ஒரே வகையான சுத்தபோசனிகளாகுஞ் சைவர்களாய் இருக்கும் காலத்தில், இவ்வேறுபாடுகள் இல்லாதொழியலாம் என நம்புதற் கிடமுண்டு.

இனி, இக்கிரியை சம்பந்தமான விரிவுகளைக் கவனிக்கலாம்.

ஒருவர் இறந்ததும் உடனடியாக அவர்க்கு நிகழவேண்டுவது பிரேதசுத்தியாகும். ஒன்றாயிருந்த உடலும் உயிரும் தம்மிற் பிரிந்தமைபற்றி இரண்டும் தனித்தனி தோஷமடைந்துள்ளன என்பதே கொள்கை. அதனை முன்னிட்டுப் பிரேதசுத்தி நிகழும். சிவதீட்சை, சிவாலய வழிபாடு, சிவத்தியானம், சந்தியாவந் தனக்கிரமம் என்பவற்றைக் கைக்கொண்டொழுகிய ஒருவருக் குச் சிவகும்ப தீர்த்தத்தினாலேயே பிரரேதசுத்தி நிகழவேண்டும். அதன்பொருட்டு இறந்தவர் இல்லத்து முற்றத்திற் பந்தலிட்டுச் சிவகும்பபூசை நிகழும். நடுவிற் சிவகும்பமும், சுற்றிவர எட்டுத் திக்கிலும் திக்பாலகர் கும்பங்களும் தாபித்துச் சிவாக்கினி வளர்த்துச் சிவகும்பபூசை நிகழும்.

## சூர்ணோற்சவம் – சுண்ணமிடித்தல்

ஸ்நானத் தூய்மைக்குச் சுண்ணம் இன்றியமையாதது. அறுகும் மஞ்சளுமிட்டு இடித்தெடுக்குஞ் சுண்ணம் பொற்சுண் ணமாகும். இப்பொற்சுண்ணம் தயாரிக்கும் நிகழ்ச்சி ஆலயங் களில் தீர்த்தோற்சவத்திலன்று சுவாமி பேரிலும் நடைபெறுவ தாகும். அதற்கென்றே அமைந்திருக்கின்றது திருவாசகத்தில் திருப்பொற்சுண்ணம் என்ற பகுதி. கோயிலிற் சூர்ணோற்சவத் தில் அது படிக்கப்படுவது போல இங்கும் அது படிக்கப்படும். ஆனால் சுவாமிக்குப் பொற்சுண்ணஞ் சாத்திய பின்பே தீர்த்த மாடல் நடைபெறும். எங்களுக்குச் சிவகும்பம் தீர்த்தமாட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பே பொற்சுண்ணஞ் சாத்தி மீளவும் நீராட்டு பாவனையில் கும்பநீர் தெளிக்கப்படுதல் சர்வசாதாரணமாக நடைபெறு கின்றது. எங்களிலும் விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரிய அபிஷேகம் உடை யாருக்குச் சுண்ணஞ் சாத்தியபின் நீராட்டும் வழக்கமே உண்டு. சிவகும் பத்தினால் நீராட்டுமுன், சாதாரண சமய தீட்சையாளர்களாகிய நமக்குப் பொற்சுண்ணஞ் சாத்துதற் கேற்ற அளவு தூய்மையில்லை என்ற விளக்கத்தினால் தான் இவ்வேறுபாடு காட்டப்படுகிறதாயிருக்க வேண்டும்.

இவ்விஷயத்தில், சுவாமிக்குச் செய்வதுபோலப் பிரேதத் துக்குஞ் செய்யலாமோ? செய்தாலும் சுவாமி சூர்ணோற்சவத்திற் படிக்கப்படும் திருப்பொற்சுண்ணம் இங்கு சவத்தின் முன்னிலை யிலும் படிக்கப்படுவது தகுதியோ? என்ற ஆசங்கைகள் எழுதவ துண்டு. அபரக்கிரியைகள் பற்றிக் கூறும் சைவபத்ததிகளிற் சிலவற்றில் சூர்ணோற்சவம் சொல்லப்படவில்லை என்பது ஒரு சாட்டாகாது. சைவபூஷணம் என்ற நூலில், அபரக்கிரியையில் பேரீதாடனம் (மேளத்தில் தட்டுதல்) என்ற கிரியை மிக விரிவா கச் சொல்லப்பட்டிருக்கிறது. அகோர சிவாசாரியர் பத்ததியில் பேரீதாடனம், சூர்ணோற்சவம் இரண்டும் அபரக் கிரியா விதியிற் கூறப்பட்டுள்ளன. வழக்கத்தில் பேரீதாடனம் சூர்ணோற்சவக் கிரியைக்கு முன்னோடியாக உள்ளதொன்றே. ஆதலால் சூர் ணோற்சவம் அபரக்கிரியை க்கும் உள்ளதேயாம்.

இனி, கிரியாகிரம ஜோதிகை என்னும் அகோர சிவாசாரிய பத்ததியில் அபரக்கிரியைக்குச் சூர்ணோற்சவவிதி சொல்லு கையில், **'உலூகளே ஓம் ஹாம் ப்ருதிவ்யை நம: முசலே ஓம் ஹாம் மஹா மேரு பர்வதாய நம:'** என்ற மந்திரம் பிரயோகிக்கப்பட்டுள் ளது. இம்மந்திரம். **'வையகமெல்லாம் உரலதாக மாமேரு வென்னும் உலக்கை நாட்டி'** என வரும் திருப்பொற் சுண்ணப் பாடலின் பொருளையே கொண்டுள்ளது. மேலும் தொடர்ந்து அம்மந் திரத்தில், **'ஹரித்ரா சூர்ணீ குர்யாத்'** என வரும் பகுதி, குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே பாடலில், **'மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி ..... ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே'** என வரும் பகுதியின் பொருளே பொருளாகக் கொண்டுள்ளது. இத்தன்மையால், **'திருப்பொற் சுண்ணம் படிக்க'** என நேரடியாக விதி சொல்லப்படாவிடினும் திருப்பொற் சுண்ணம் படித்தல் அபரக் கிரியாபத்ததிக்குச் சம்மதமேயாதல் தெளியப்படும்.

இனி, சுவாமிக்கு முன் படிப்பதைச் சவத்தின் முன் படிப்பதா? எனக்கிலேசிப்பதிலும் அர்த்தமில்லை. சுவாமி பூசைக்குதவும் சிவமந்திரங்களைச் சவக்கிரியையிலும் உபயோகிக்கப் பத்ததிகள் விதித்துள்ளதனாலும், சுவாமி தோத்திரமாகிய தேவாரங்கள் சவக்கிரியைக்கும் அநுமதிக்கப்பட்டிருத்தலினாலும், திருப்பொற்சுண்ணப் பாடல்களும் அதில் இடம்பெற அநுமதிக் கப்படுதலில் ஒருவித தவறுமில்லையாகும். அன்றியும், அப் பாடல்கள் தரும் **சாந்தமான இசையின்பமும், உள்ளகக் கிளர்ச் சியும்** அக்கிரியையிற் சம்பந்தப்படும் **அனைவர்க்கும் புனர்வாழ் வளிப்பது போலாகும் புதுமையையும்** எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் அப்பாடற் பொருளாக அமையும் **சிவலோகக் காட்சி களும் அங்குள்ளார் உரையாடல்களும், ஆரவாரங்களும்** இறந்த சீவன் சிவலோகமே சேர்ந்துவிட்டது என்ற தெம்பை, அதைப் பிரிந்து கவலையுறுவார்க்குத் தரும் அற்புதத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அத்தெம்பு தற்காலிகமானதாயினுங் கூட, அந்த அவசரத்தில் அதன் தரம் சொல்லொணா மகிமை வாய்ந் ததாம். இவ்வாற்றால் சவக்கிரியைகளில் திருப்பொற்சுண்ணப் பாடல்களின் சேவை மிகப்பெரிதென்றே கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் சிவகும்பதீர்த்த ஸ்நானமும் பொற்சுண்ணஞ் சாத்திக் கும்பநீர் தெளித்தலும் பிரேத சுத்திக்கிரியையின் பிரதான அம்சங்களாம். இத்தொடர்பில் நிகழும் எண்ணெய் அரப்பு முதலிய திரவிய ஸ்நானமும், பிரேதத்துக்கு விபூதி தரித்தலும் பிரசித்தமானவை. இவ்வகையிற் சுத்தி செய்யப்படும் பிரேதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடையில் ஏற்றி மயானங்கொண்டு செல்லப்படுதல் விதியாகும். பச்சை மரந்தறித்துப் பாடைகட்டுதல் முறை என்றும் அம்மரமும் யாகத்துக்குரிய மரமாயிருந்தால் விசேடமென்றுங் கொள்வர். இப்படியாக எடுத்துச் செல்லப்பட்டு மயானத்தில் பிரேத தகனஞ் செய்யுமளவும் சமயதீட்சை மட்டுமுள்ள சாதாரணர்களாகிய எங்களுக்கு முதல் நாட்கிரியையாகும். விசேட தீட்சை முதலாயின உடையார்க்கு மயானத்தில் வைத்து விசேட **அந்தியேஷ்டியோ, நிர்வாண அந்தியேஷ்டியோ** முடிந்த பின்பேதகனம் நிகழும்.

## அஸ்தி சஞ்சயனம் – சாம்பலள்ளல் – காடாற்றுதல்

தகிக்கப்பட்டவரின் எலும்பையும், சாம்பலையும் முறையான சம்ஸ்காரங்களுடன் எடுத்துப் புண்ணிய தீர்த்தத்திற் சேர்த்தல் இதன் பண்பாகும். தகிக்கப்பட்டவர் **எலும்பு மேனியில் முழு உருவமாக** இருக்கிறார் என்ற பாவனையோடு முன் பிரேத ஸ்நானஞ் செய்தவாறே, அங்கும் அவருக்கு ஸ்நானஞ் செய்து சிவமந்திரங்களை உச்சரித்துக்கொண்டு முறையே முழந்தாள், மார்பு, நெற்றி, சிரசு என்ற இடங்களின் எலும்புகள் பிரதானமாக எடுக்கப்படும். அவ்விடத்தை ஆக்கிரமித்திருக்கக் கூடிய பூத பைசாசங்களின் திருப்திப் பொருட்டு பழம், ரொட்டி, இளநீர் முதலிய பொருட்கள் பலியாக இடப்படும். அவரைத் தீயிட்டுத் தகித்தமை பற்றிய தோஷத்துக்கு இது சாந்தியாக அமையும். இதற்காக நிலமும் தகிக்கப்பட்டதற்குச் சாந்தியாகவும் இனி, ஒருகால் நிலங்குளிர்வித்து நவதானியம் விதைக்கப்படும். விதைக்கப்பட்ட தானியங்கள் முளை கொண்டு செழிக்கு மளவுக்கு நிலங்குளிர வேண்டும் என்பது விதி. **இக்கிரியைக்குக் காடாற்றுதல் என்ற பெயர்** வழங்க வந்தது இதனாலேயாம். பிரேத சரீரத்தோடு உயிர்க்கிருந்த தொடர்பு பற்றிச் சரீரத்தில் வைத்துச் செய்தவற்றின் பலன் உயிர்க்காயது போல எலும்பில் வைத்துச் செய்வனவும் உயிர்க்கேயாம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் அவசியமானது. **பெரியபுராணத்துப் பூம்பாவை வரலாற்றில் வைத்து இவ்வுண்மை விளக்கப்பட்டிருத்தல் காணலாம்.**

## எட்டாம் நாட்கிரியை (எட்டு)

தகனத்திற்கு முன்பே அந்தியேஷ்டி நிகழப்பெறாத சாதாரணர்கள் சார்பில் நடைபெறுங்கிரியை இதுவாகும். இப்பெயரில் இது பத்ததிகளிற் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆனால் அவற்றில் வரும் பிரபூதபலி என்ற கிரியைக்குச் சமானமாக இது இடம்பெறுதல் காணலாம். நம்மவர்க்குள் இது பிரபல்யமாயிருப்பதால் இதை விசாரித்தல் தகும்.

அந்தியேஷ்டி செய்து பிரேததகனம் முடித்துக் கொண்டவர் சார்பில், அன்றே அவர் இறந்த இடத்தில் சிவகும்பந்தாபித்துப் பூசித்து அதன் அயலில் கல் அல்லது செங்கல் அமைத்து, அதில் இறந்தவரின் உயிர் சாந்நித்தியமாய் இருப்பதாகக் கண்டு தினசரி காலை மாலை ஜலம், அன்னம், இளநீர் ஆகியன வைத்துத் தூபதீபசகிதம் பூசித்துவரவேண்டும். இதன் ஆரம்பத்திற்குப் **பாஷாணத் தாபனம்** என்று பெயர். இப்பாஷாண பூசை 10 நாள் தொடர்ந்து நடைபெற்றுப் பத்தாம் நாள் பாஷாணம் உரிய சம்பிரதாயப்படி விசேஷ அலங்கார வைபவங்களுடன் எடுத்துச் செல்லப்பட்டுத் தீர்த்தத்தில் இடப்படும். இது **பாஷாண உத்தாபனம்** எனப்படும். **கல்லெடுப்பு என வழங்கப்படுவது** இந் நிகழ்ச்சியே. இக்கல்லெடுப்பு நேரத்துக்குமுன் அப்பாஷாணத்தின் முன்னிலையில் உணவுப் பண்டங்கள் சகலமும் பெருமளவிற் படைத்துத் தூபதீப நைவேத்திய உபசாரங்களுடன் கூடிய விசேட பூசை நடைபெறும். இப்பூசைக்குப் பிரபூதபலி என்று பெயர். பத்ததிகளிலுள்ளபடி இக்கிரியையின் வரலாறு இது வாகும்.

சாதாரணர்களாகிய நம்மவர்க்கு உடனடியாக அந்தியேஷ்டி முடியாக் குறையினாலே மேற்காட்டியவாறு இக்கிரியை செய்யும் வாய்ப்பில்லையாயிற்று. அதனால் எமக்குப் **பாஷாணஸ்தாபனம்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உத்தாபனம்** இரண்டும் அந்தியேஷ்டியில் சுட்டபின் சீக்கிரமாக முடிக்கும் ஒரு சிறு கிரியையாகப் பின்போடப்பட்டுள்ளது. இதனை நோக்கி, இதற்கொரு மாற்று வழியாம் பாங்கில், எங்கள் இல்லங்களிலும் இறந்தவர் கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் **நீர்க்கலசமும் இளநீரும் வைத்து அழுதுந்தொழுதும் வணங்கும்** வழக்கமும் எட்டாம் நாள் உண்பனவும், தின்பனவும், பருகுவன வுமான பண்டங்களைப் பெருமளவில் தயாரித்துப் படைத்துக் கற்பூரங் கொளுத்திப் பூசிக்கும் வழக்கமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாற்றால் எங்கள் சார்பில் நிகழும் **'எட்டு'** வைப வம் அபரக்கிரியா விதியிற் காணும் **பிரபூதபலியின்** பிரதியேயாம். **பலி** என்ற கருத்திற்கிணங்க அன்று படைத்தவற்றில் ஒரு பகுதி யைப் பேயும் பிசாசும் ராட்சசருங் கூட அநுபவிக்குமாறு சந்தி யிற் கொண்டு சென்று கழித்துவிடும் வழக்கமுமிருத்தல் குறிப் பிடத்தக்கதாகும்.

## அந்தியேஷ்டி

நிர்வாண அந்தியேஷ்டி, விசேட அந்தியேஷ்டி, சமய அந்தி யேஷ்டி என அந்தியேஷ்டியில் மூன்று வகையுண்டு. முன்னைய இரண்டும் உயர்தீட்சையாளர்க்குரியவை. சமய அந்தியேஷ்டியே சாதாரண சமயதீட்சையாளர்க்குரியது. இவர்களுக்குரிய சாமா னிய மண்டபக் கிரியைகள் அவர்களுக்குமுரியவை. அவர்களுக் குரிய அத்துவசோதனை கலாசுத்தி காரியங்கள் எங்களுக் கில்லை. எங்களுக்குத் **தத்துவபூசை மட்டுமே உண்டு. சம்பந்தப் பட்ட உயிரானது அபரக்கிரியையின் இறுதியாக வருஞ் சபீண்டீகரணம் என்னுங் கிரியையின் பின், தன்தகுதிக்கேற்ற அளவு சிவகதியில் மேல்நிலை அடைதற்காகவும், தன்வாழ்நாளில் அதுசெய்து வந்த சமயக்கிரியைகளில் அவ்வப்போது ஏற்படக் கூடியதாயிருந்த குறை களை நிறைவாக்குவதற்காகவும்** இச்சமய அந்தியேஷ்டி செய்யப் படுகின்றது. இதற்கேற்றவாறு இவ்வந்தியேஷ்டியில் சக்திகும் பபூசை, தசாயுதபூசை, பஞ்சகவ்யபூசை, தத்துவ பூசை, திக்பா லர்பூசை, சிதாவாஸ்துபூசை, சிவாக்கினி காரியம், சிவகும்பபூசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன நடைபெறும். இக்கிரியைகளின் ஒழுங்கில் அவ்வுயிர் மேல்கதியடைதற்கு ஏதுவான தகுதிப்பாட்டை வருவித்ததற்காக வேண்டுவனவெல்லாம் மந்திரக்கிரியா ரூபமாகச் செய்து, முடிவில் **அதனைச் சிவாக்கினியிற் சேர்த்து விடுதலாகிய நடை முறைக்கிரமம்** அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. இவற்றில் விசேட முக்கியத்துவமுள்ள சில அம்சங்களைக் கவனித்தல் பயனுடையதாகும்.

## சிதாவாஸ்து பூசை

சிதா என்பது பிரேதத்தைத் தகிக்கும் விறகுப்படுக்கை. வாஸ்து என்பது தகனத்துக்குத் தெரியப்பட்ட இடம். அந்தி யேஷ்டி மண்டபத்தில் தென்கிழக்குப் பாகம் இதற்கென ஒதுக் கப்படும்.

இந்த அந்நியேஷ்டிக் கிரிகைகள் உண்மையான பிரேதத் திலும் அதன் முன்னிலையிலுமே நடைபெறற்பாலன என்பதை முன்னே கண்டோம். சமயதீட்சை மட்டுமுடையார்க்கு முப்பது நாள் முன்பாகவே தகனம் முடிந்துவிட்டமையால், இப்பொழுது அப்பிரேத சரீரத்துக்குப் பிரதியாக மற்றொன்று வேண்டும். அதற்காகவே சிதாவாஸ்து பூசையில் **'புத்தலிகா'** என்ற பொருள் இடம் பெறுகின்றது. புத்தலிகா என்பது இறந்தவரின் சரீரத் துக்குப் பிரதியாகத் **தர்ப்பையினாற் சமைக்கப்படும் பிரதி சரீரமாகும்.** அதை, முன் பிரேத சுத்திப் பொருட்டுச் செய்தனவெல்லாஞ் செய்து, ஒரு சிறு பாடையிற் கிடத்தி விறகுப் படுக்கையில் வைத்துக் கொண்டே சிதாவாஸ்துபூசை செய்யப்படும். விசேட அந்தியேஷ்டி, நிர்வாண அந்தியேஷ்டியாளர்களை மயானத்தில் கொண்டு சென்று அந்தியேஷ்டி செய்யும் வழக்கம் இதனால் ஏற்பட்டதேயாம். **இச்சிதாவாஸ்து கிரியை,** சமய தீட்சையாளர்க்கு இறந்த நாளில் நடந்த கிரியையின் தொடர்ச்சியேயாதலின் அங்கு நடைபெற்ற சூர்ணோற்சவத்தை முதற்செய்தே இங்கும் தொடங்கும். பிரேத சரீரத்தில் அன்று செய்த கிரியைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தலிகாவில் இங்கு நடக்கும் கிரியைக்குமிடையில் வேறு பாடுண்டு. அங்கு சிவகும்ப தீர்த்தத்தினால் ஸ்நானஞ் செய் விக்கப்பட்டுச் சிவாக்கினியினால் தகிக்கப்பட்ட அளவே நடை பெற்றது. **(இங்கு புத்தலிகாவில்)** சிவாக்கினியின் சிவத்துவப் பிரகாசம் நாடீசந்தான மூலம் ஏற்படுதல் உண்டு. அதனால் அன்று நிகழ்ந்த பிரேதசுத்தியை விட இது பிரபாவம் மிக்கதா கின்றது. இனி, இறந்துபோன உயிரைச் சிவாக்கினியிற் சேர்த் தலும், பின் சிவத்தில் சேர்த்தலும் அங்கில்லை. இங்கு தான் இடம் பெறும்.

## தத்துவபூசை

அந்தியேஷ்டி மண்டபத்தில் தென்கீழ்த்திசையில் சிதாவாஸ் துவுக்குப் பக்கத்தில் இருபத்தைந்து அறைகள் உண்டாக ஒரு ஸ்தண்டிலமிட்டு, அவற்றில் ஐந்துநிறப்பொடிகள் பரப்பப்படும். இந்நிறங்கள் ஐம்பூதங்களைக் குறிப்பவாகும். ஒவ்வோர் பூதப்ப குதியிலும், அவ்வப் பூதத்தைச் சார்ந்த கலைகளும், அவ்வ வற்றின் அதிதெய்வங்களும் பூசிக்கப்படும். தத்துவ விளக்க அட்டவணையில் இது பின்வருமாறு அமையும்.

| பொடி | பூதம் | கலை | அதிதெய்வம் |
|---|---|---|---|
| மஞ்சட்பொடி | பிருதிவி(மண்) | நிவிர்த்திகலை | பிரமா |
| பச்சைப்பொடி | அப்பு(நீர்) | பிரதிஷ்டாகலை | விஷ்ணு |
| சிவப்புப்பொடி | (தேயு(தீ) | வித்தியாகலை | ருத்திரன் |
| கறுப்புப்பொடி | வாயு(வளி) | சாந்திகலை | மகேஸ்வரன் |
| வெண்பொடி | ஆகாயம்(வெளி) | சாந்தியதீதகலை | சதாசிவன் |

இத்தத்துவ பூசையின் தாற்பரியமாவது: சம்பந்தப்பட்ட உயிரின் தத்துவ விரிவு இயலுமளவு ஒடுக்கப்பட்டுவிட்டது. இனி அதுதன் தகுதிக்கேற்பச் சிவத்துவச் சார்பில் தனக்கேற்குமள வுக்கு உயர்கதி பெறலாம் என்பதே.

இவ்விவ்வகையில் அந்தியேஷ்டிக் கிரியைகள் நடந்து இறுதிக் கட்டத்தில் புத்தலிகா தகனஞ் செய்யப்படும். இதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் ஓரிடத்தில் எங்களுக்கு இருதகனம் எனக் குறிப்பிடப்பட்ட தாம். அந்தியேஷ்டியைக் குறிப்பிடுகையில் **'தருப்பை சுடுதல்'** எனச் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ளல் பெரும்பான்மை.

இவையெல்லாம் முடிந்த பின்பே எமக்குப் பாஷாண ஸ்தாபனமும், இறுதி நாளாய் விட்டபடியால், கையோடே பாஷாண உத்தாபனமும் நடைபெறும்.

இதுவரை விபரிக்கப்பட்ட இவ்வளவும் அபரக்கிரியையில், பிரேதசரீரம் சம்பந்தப்பட்ட வரையில், அதனை முன்னிலை யாகக் கொண்டு நிகழ்ந்தனவாகும். இனி இவற்றின் தொடர்பாக நடைபெறுவன எல்லாம் நாம் முன் கவனித்தவாறு **இறந்துபோன உயிரின் பிரேதத்தன்மை நீக்கி அது பிதிரர்களின் சகாயத்தால் தன் தேவைகள்** நிரம்பப்பெற்று மேல்கதியிற் செல்லுமாறு கருதிச் செய்யப்படுவனவாம்.

அக்கிரியைகள் **நக்னதானம்** முதல் **சபிண்டீகரணம்** இறுதி யாகப் பலவாகும். சபிண்டீகரணமும் முடிந்தபின்பே அதற்கு மேல்கதிப் பேறென்பது ஆகமக் கொள்கை.

இப்பகுதிக் கிரியைகள் அனைத்தும் பொதுவில் **சிராத்தம்** எனப்படும். இறந்தவர் ஒருவரின் ஈடேற்றத்தை இங்கிருப்பவர்கள் பெரும் விஷயமாகக் கருதி இயன்ற அளவு கூடுதலான சிரத் தையுடன் இவற்றைச் செய்தல் வேண்டும் என்பது இப்பெயர்ப் பொருள் தரும் விளக்கமாம். **சிராத்தம் - சிரத்தையுடன் செய்யப் படுவது** என்பர். முன் ஆரம்பத்திற் காட்டியவாறு பிதிரர்களே இச் சிராத்தக் கிரியைகளில் மிகுதியாக இடம்பெறுவர். தானங்களும் மிகுதியாக இடம்பெறும். இன்றைய நம் வழங்குமுறையில் இவையனைத்தும் **வீட்டுக்கிரியைகள்** என்ற பெயரில் அடங்கும்.

எங்கள் வீட்டுக்கிரியைகளில் புரோகிதர்கள் இடம்பெறு வார்கள். புரோகிதர்களாகிய ஐயர்மாரை அழைத்து அவர்கள் மூலமாகவே எல்லாக்கிரியைகளும் நடைபெறுதல் பிரசித்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வெல்லாக் கிரிகைகளிலும் **புரோகிதர்களிடத்தில் பிதிரர்கள் ஆவாஹனஞ் செய்யப்படுதல் ஒரு** சிறப்பம்சமாயிருக்கும். அவர்கள் அப்போதைக்குத் தாம் பிதிரர்கள் என்ற பாவனையுடனிருந்து நாம் வழங்கும் தானங்களை ஏற்றுத் திருப்தியடைந்து, அவ்வ கையால், **இறந்தோர்களுக்கு உதவ இருப்பவர்களாகிய மூலப்பிர திகள் திருப்தியடையும்** நிலையை உருவாக்குகிறார்கள். சிராத்தக் கிரியைகள் எல்லாவற்றிலும் அவற்றை நடத்துவிக்குங் கர்த்தா திருப்தியோ என வினவுதலும் அவற்றை நடத்தும் புரோ கிதர்கள் திருப்தி என்று சொல்லிக் கொள்ளுதலும் நிகழ்தல் குறிப் பிடத்தக்கதாகும்.

இச்சிராத்தக் கிரியைகளில் **ஏகோதிஷ்டம்** மட்டும் **பிதிர் ஆவாஹனத்திற்கு** விலக்காகும். அக்கிரியையில் அமரும் புரோ கிதரில் இறந்ததாகிய **பிரேதத்துவ சம்பந்தமான** உயிரே ஆவா கிக்கப்படுகிறது. அதன் பிரேரத்துவம் முற்றாக அகலுதற்கு உபகாரமாக, ஏகோத்திட்டத்தில் அமரும் புரோகிதருக்கு எல்லா வகையிலும் கூடுதலான தரமும், தொகையுமான பொருள்கள் பெருமளவிற் தானஞ் செய்யப்படும். இந்த ஏகோதிட்டத்தை ஏற்பவர் இது காரணமாக **ஒரு வருஷகால ஆசௌச** முடையாரா யிருப்பர் எனவும் அக்காலத்தில் அவர் **சமயக்கிரியைகள்** எதிலும் பங்குபற்றுதற்கு அருகதையற்றவராவர் எனவும், அவர் **புண்ணிய தீர்த்த யாத்திரை பண்ணுதல்** மூலமாகவே அவருடைய ஆசௌச தோஷம் சரியாக நிவிர்த்தியாகும் என்றும் கொள்ளப்படும். இங்ஙனமாதலால் இதை நடத்துவிக்குங் கருத்தா தமது சக்திக்கு இயலுமான அளவு முயன்று அவர்க்கு ஆகவேண்டிய சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியவர் ஆகிறார். சிரார்த்தங்களுள் **மகாசிரத்தையுடன் நடத்தவேண்டிய பெருஞ் சிராத்தம்** இதுவாகின்றது. இனி, இச்சிராத்தக் கிரியை களின் சிறப்பம்சங்களைத் தனித்தனியாக முறையே நோக்கி மேற்செல்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்னதானம்

இறந்தவருக்கு ஏற்படக்கூடிய ஆடையில்லாத குறையை நீக்குதற்பொருட்டுச் செய்யப்படுவது. நக்னம் - நிர்வாணநிலை. அதனுடன் அவருடைய பசிதாகத்துக்கும் இது சாத்திய மளிப்பதாகக் கொள்ளப்படும். உயர் தீட்சையாளர்க்கு இது பிரேத தகனம் முடிந்த கையோடே செய்யப்படுவது.

## இடபதானம்

எருதுக்குச் சிறப்புச் செய்து அதனைப் பூசித்துத் தானஞ் செய்தல்: இறந்தவர் சார்பில் இருக்கக் கூடியதான தர்ம பலன் களை, இன்னும் அவர்சார்பில் உளதாக வைக்காது, இடபத்தின் மூலம் சிவனிடத்தில் சேர்த்துவிடுதல் இதன் நோக்கமாகும். இறந்தவர் தம்வாழ்விற் செய்தனவாகிய தானதர்மங்கள் ஒவ் வொன்றும் அவர், நான் எனது என்ற உணர்விற் செய்தன வாகலின் அவை மேலும் அவரோடே ஒட்டிக்கிடந்து மேலும் மேலும் தம்பயனாகிய பிறப்புக்களைக் கொடுத்தல் கூடும். அது அவர் அடைய வேண்டிய சிவகதிப்பேற்றுக்குக் குந்தகமாம். இந் நிலையைத் தவிர்த்தற்கு ஒரே ஒருவழி அவற்றைச் சிவனிடத்திற் சேர்த்துவிடுதல்தான். நான், எனது அற்ற நிலையிற் செயல் களைச் செய்பவருக்கு இப்படியொரு தேவை ஏற்படாது. இந் நோக்கில், சாதாரண சிவபூசை, அடியார் பூசையிலுங்கூட அதனதன் பலனைச் சிவனிடத்திற் சேர்த்துவிடும் நிலை கிரியை முகமாக உண்டு. இச்சைவஞான உண்மையின் அடிப்பாடாக இச்சிராத்தக்கிரியை அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கதாம். இக்கிரியை சூத்திர நூல்களில் மிகவிரிவாகச் சொல்லப்படும். ஆனால், அங்கு இதன் விபரமும் விளக்கமும் வேறு. இச்சைவ ஞான விளக்கம் அங்கில்லை. அங்குள்ளபடியே இவற்றைக் கொள்வது வைதிகம். கிரியைகள் பெயரளவில் ஒன்றாயி ருப்பினும் வைதிகத்துக்குஞ் சைவத்துக்குமிடையில் இத்தகைய வேறுபாடுகள் பெரும்பான்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏகோதிஷ்டம்

புரோகிதரிற் பிரேதசரீர சம்பந்தமான உயிரை ஆவாகனஞ் செய்து தானஞ் செய்யும் சிராத்தம் இதுவாகும். இதுபற்றி முன்னுங் கவனித்தோம். இதை ஏற்கும் புரோகிதரை, **'ஏகதட்டர்'** என்று சாதாரண வழக்கிற் கூறுவதுண்டு. சிலர் சிலரைச் சில நேரத்தில் **'**அவர் ஒரு ஏகதட்டர்' என்று பரிகாசமாகக் கூறும் பொதுசன வழக்கம் இச்சிராத்தப் பயிற்சியால் ஏற்பட்டதே யாகும். இந்த ஏகோத்திஷ்டத்துக்கு விதிக்கப்பட்ட தானங்கள் இருபத்துநான்கு. அவை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| பவித்திரம் | பாதுகை | யோகபட்டம் | |
| பூணூல் | தண்டு | குடை | |
| கமண்டலம் | கௌபீனம் | குல்லா | |
| ஜபமாலை | விபூதிப்பை | மேலங்கி (போர்வை) | |
| வஸ்திரம் | நெய் | சமையல், உணவுப் பாத்திரங்கள் | |
| மோதிரம் | வெண்ணெய் | தானிய வகைகள் | |
| பொன் | பசு | சர்வாலங்கார தாசிகள் | } அடிமை |
| இரத்தினம் | பூமி | தாசர்கள் | |

## மாசிகங்கள்

மாசாமாசம் இறந்த திதியிற் செய்யப்படுஞ் சிராத்தம் மாசிகம் எனப்படும். இது முதல்வருடம் முழுவதும் நடைபெற வேண்டியது. மேற்குறித்த ஏகோதிஷ்டத்தோடு, முதல் மாசிகம் முடிவுற்றதாகக் கருதப்படும். எனவே மாசத் திதிக்கணக்கில் எஞ்சியிருப்பது பதினொன்று. இவற்றுடன் இடைக்கால மாசிகங் களாக நான்கு சேர்த்து எல்லாமாக 15 மாசிகங்கள் கொள் ளப்படும். இடைக்கால மாசிகங்கள் நான்கும் வருமாறு:

1. ஊனமாசிகம் - ஏதோதிஷ்டம் முடிந்து 27 ஆம் 30 ஆம் நாட் களுக்கிடையிற் செய்வது.
2. ஊனதிரிபட்ச மாசிகம் - அத்தொடர்பில் 40 ஆம் 45 ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஊனஷாண் மாசிகம்- அவ்வாறே 170 ஆம் 180 ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.

4. ஊன ஆப்திக மாசிகம் - அவ்வாற்றால் 350 ஆம் 365 ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.

இந்த இடைக்கால மாசிகங்களுக்கு மட்டும் திதி நியமம் கொள்ளப்படுதலில்லை. செய்யும் தினம் ஒரு சுபதினமாயிருந் தாற் சரி. இம்மாசிகங்கள் பதினைந்தும், இறந்தவர்க்கு வாழ்க் கைச் சார்பிலிருக்கக் கூடிய பற்றுக்களை இயலுமளவு நீக்கி வைக்கும் நோக்கமாகச் செய்யப்படுவன. இப்பதினைந்து மாசி கமும் நிறைவுற்றபின் சபிண்டீகரணம் என்பதோர் கிரியை யுள்ளது. இதுவும் நிறைவுற்ற பின்பே குறித்த உயிர் சிவகதிக் காளாகும் என்பர். இந்நோக்கில், ஒருவர் இறந்து ஒரு வருட முடிவிலேயே சபிண்டீகரணம் நிகழவேண்டியது. ஆனால், அவ்வ ளவுக்கு அதைச் செய்தற்குரிய கர்த்தா நிலைத்திருத்தல் பற்றி யெழுஞ் சந்தேகத்தை முற்கொண்டு இச்சபிண்டீகரணத்தையும் ஏகோதிஷ்டம் முதலியன நடந்த அன்றே (எங்களுக்கு 31) செய்தல் வழக்கமாகிவிட்டது. அதற்காக, அதற்கு முன்னோ டியாக நிகழ்தற்குரிய 15 மாசிகங்களையும் அவ்விடத்தில் ஒருங்கே செய்து விடுதலும் வழக்கமாயிற்று. முன்னெச்சரிக் கையாக அப்படிச் செய்தாலும், மேலும் கிரமந்தவறாமல் மாசா மாசம் மாசிகஞ் செய்தே வரல் வேண்டும் என்பது விதி.

## தடுமாற்றங்கள் சில

ஏகோதிஷ்டம் என்றால் ஏக + உத்திஷ்டம்: ஏக -ஒன்று; உத்திஷ்டம் உத்தேசிக்கப்பட்டது. அதாவது ஒன்றையே உத்தே சித்துச் செய்யப்படுவது எனப் பொருள்படும். மற்றும் சிராத்தக் கிரியைகளில் விநாயகபூசை, சிவகும்பபூசை, பிதிர் ஆவாகன பூசை என்பவற்றுக்கும் இடமுண்டு. அது போலாகாது இங்கு இறந்ததாகிய உயிர் ஒன்றுக்கே நேரடியாக இது நிகழ்த லால் இது ஏகோதிஷ்டம் எனப்பட்டது என்பர். சூத்திரங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி சைவ பத்ததிகளிலுஞ் சரி ஏகோதிஷ்டத்தைத் தொடர்ந்து மாசிகம் இடம் பெறுகின்றது. முதலாவது மாசிகம் ஏகோதிஷ்டக் கணக்கில் விடப்படுவதாக அங்குஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நோக்கில் ஏகோதிஷ்டத்துக்கும் மாசிகத்துக்கும் அந்த ரங்கத் தொடர்பு இருக்க வேண்டுதல் இயல்பே. அதற்கேற்றாற் போல்,

'கிரியாக்ரம ஜோதிகை' என்ற அகோரசிவாசாரிய பத்ததியில் ஏகோதிஷ்டஞ் சொல்லி முடிவில், 'இவ்வாறு செய்த பதினொராம் நாளிலும், மாசாமாசம் நாற்பத்தைந்தாம் நாளிலும் ஆறாம் மாசத்திலும் வருஷாந்தத்திலும் பதினைந்து ஏகோதிஷ்ட சிராத் தஞ் செய்க' என்றும்,

திரு. சி.சுப்பிரமணிய தேசிகர் எழுதிய 'சைவக்கிரியைகள்' என்ற நூலில், மாசிகங்கள் பற்றிக் கூறும் பகுதியில், 'இவை களும் இறந்தவரைமட்டுங் குறித்துச் செய்யப்படுவனவாதலால் ஏகோதிஷ்டங்களேயாகும்", என்றும் குறிப்பிட்டிருத்தல் காண லாம்.

எங்கள் சார்பில் இன்று நடைமுறையில் உள்ளதை அவதா னிக்கையில் ஏகோதிஷ்டக் கிரியைக்கும் மாசிகக் கிரியைக்கு மிடையிற் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுண்டு. ஏகோதிஷ்ட மென்றால், இறந்தவரின் பிரேதத்துவத் தொடர்பை நீக்குவது. அவரது பிரேதத்துவத்தைப் புரோகிதரில் ஆவாஹித்துத் தூய்மை செய்துகொள்வது என்ற விளக்கம் சூத்திர நூல்களில் உள்ளது. அருணாசலசாஸ் திரிகள் பதிப்பித்துள்ள ஆபஸ்தம்ப ஸ்மிரு தியிலும் அவ்வாறேயுள்ளது. அதற்கியைந்தாற்போல், சைவ பத்ததியாகிய கிரி யாக்ரம ஜோதிகையிலும், 'ஏகோதிஷ்டமாவது தேவ காரியங்களில்லாமல் மரித்தவரைப் பரிசுத்தஞ் செய்வது' என்ற வசனங் காணப்படுகின்றது. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள், ஏகோதிஷ்ட விஷயத்தை அதிகதரஞ் சுருக்கமாகச் சொல்லி அக்கிரியையின் சுவரூபத்தைச் சொல்லாமலே விட்டிருக் கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளைகளிற் சிலர் சிலரை 'ஏகதட்டர்' என்று பரிகாசம் பண்ணும் தன்மையை அவதானிப்பதிலிருந்து நாம் சிந்திக்க வேண்டியது உளது. யார் தமக்கு எதைச் செய்தாலும், அதாவது தூஷணையோ, பூசனையோ எது பண்ணினாலும், எதிர்க்கும் ஆற்றலில்லாமல் ஏற்றுக் கொண்டிருப்பவரைத்தான் நம்மவர் 'ஏகதட்டர்' என்று பரிகசிக்கிறார்கள். கிரியையில் சம்பந்தபடும் 'ஏகோதிஷ்டர்' க்கு நடப்பனவற்றிலும் இத்தன்மை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. அவர் தலையில் எண்ணெய் வைக்கிறார்கள் எலுமிச்சம்புளி வைக்கிறார்கள் ; அரப்புக்கூட வைக்கிறார்கள். முடிவில் அவரைப் போக விட்டுச் சாணமும் தெளிக்கிறார்கள் அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். எங்கள் சூழலில் நிகழும் ஏகோதிஷ்டங்களில் இப்படி நிகழ்தல் காணப்படும். இந்த ஏகோதிஷ்டர் பண்பே, குறித்த பரிகாசபாத்திரமாகிய ஏகதட்டர் பண்புமாயிருத்தலினால் இந்த வழக்கம் சமுதாயத்தில் நெடுக இருந்துள்ளதென்பதற்கு ஐயமில்லை. ஸ்மிருதியில், இங்ஙனம் எண்ணெய், சிகைக்காய் முதலியன அவருக்கு வைக்கும் செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. பிரேத தேகசுத்தி என்ற கருத்து நிலைக்கு இது பொருத்தமாயும் இருக்கிறது. ஆனால், சைவபத்ததியாகிய கிரியாக்கிரம ஜோதிகையிலாவது, சைவக்கிரியைகள் என்ற நூலிலாவது ஏகோதிஷ்டருக்கு எண்ணெய், அரப்பு வைக்குஞ் செய்தி சொல்லப்படவேயில்லை. இனி ஏகோதிஷ்டந்தான் மாசிகமென்றால், மாசிகக் கிரியையிலும், இப்படி எண்ணெய், அரப்பு முதலாயின வைக்கும் வழக்கம் இருக்கவேண்டுமே' அன்றியும் மாசிகத்தில் பிண்டமிட்டுத் தர்ப்பணம் பண்ணும் நிகழ்ச்சியுண்டு. ஏகோதிஷ்டத்தில் அது இல்லை.

இந்நிலைமைகளை நோக்குகையில், எங்களுக்குரிய ஏகோதிஷ்டமும் மாசிகமும் சம்பந்தப்பட்ட வகையில் ஏதோ சில தடுமாற்றம் இருப்பதாகத் தெரிகிறது. இது மேல் விசாரணைக் குரியதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதகும்ப சிராத்தம்

சோதகும்பம் - உலகத்தோடு கூடிய பாத்திரம்; அதாவது நீர்ப்பாத்திரம். இறந்த உயிருக்குரிய முக்கியகுறை தாகம் எனக் கொண்டு இறந்த அன்றே தகனம் முடிந்ததும் அவர் கிடந்த இடத்தில் தண்ணீர் வைக்கும் வழக்கம் இத்தானத்தின் முன் னோடி நிகழ்ச்சியாகும். வருடம் முழுவதுமே இத்தேவைப் பொருட்டு நீர் நிறைந்த பாத்திரம் தானஞ் செய்ய வேண்டு மென்பது கொள்கை. அது இயலாமைக்காகச் சபிண்டீகரணத் தின்முன் இத்தானஞ் செய்தல் பிரதானமாகக் கருதப்பட்டு வருகிறது.

## சபிண்டீகரணம்

இக்கிரியை சபிண்டி என்றாவது சவுண்டி என்றாவது சுருங்கிய பெயரால் நம்மவரிடை வழங்கும். பிண்டங்களின் மூல மாக இறந்தவரான உயிரைப் பிதிரர்களுடன் சேர்த்தல் சபிண் டீகரணம் எனப்படுகிறது. பிண்டம் என்பது மாவைக் குழைத் திடும் உருண்டை. இறந்த உயிரின் நலநோக்காளர்களாகிய பிதிரர்களைப் பற்றி ஏலவே கவனித்தோம். அவர்களைப் பிரீதிப் படுத்தும் நோக்கமாகவே முன்னைய கிரியைகள் பெரும்பாலும் நடைபெற்றன. இனி, அப்பிதிர் தேவர்களோடு உயிரைச் சேர்த்தல் இக்கிரியையினாற் கருதப்படுகிறது. அதன்மூலம், இறந்த உயிர் தன் பிரேதத்துவதோஷம் முற்றாக நீங்கிப் பிதிர்த் துவத்தை அடையினும் அடையும்; அல்லது தேவத்துவமடை யினுமடையும்; தனக்குத் தகுதியுண்டேல் சிவத்துவத்தையும டையும் என்பதே கொள்கை.

இக்கிரியையில் பிதிரர்களோடு தேவர்களும் ஆவாகனம் பெறுவர். எல்லாமாக 8 புரோகிதர்கள் இக்கிரியைக்குத் தேவைப் படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *தேவர் பொருட்டு இருவர்* | - | *நந்தி, மகாகாளர்* |
| *பிதிரர் பொருட்டு மூவர்* | - | *ஸ்கந்தர், சண்டர், கணாதீசர்* |
| *அதிதி அப்யாகதர் இருவர்* | - | *ஆரேனும் அப்போது அவ்விடம் வந்தவராக உள்ளோர்.* |
| *நிமித்தர் ஒருவர்* | - | *இறந்த உயிரின் பொருட்டு நியமிக்கப்படுபவர்.* |

*சபிண்டிக்கிரியையில் இவர்கள் எண்மரும் அமர்த்தப் படும் ஒழுங்கு கவர்ச்சிகரமானது. தேவர் இருவரும் மேற்குப் பக்கத்தில் கிழக்கு முகமாகவும், பிதிரர் தெற்கில் வடக்கு முக மாகவும், நிமித்தர் கிழக்கில் மேற்கு முகமாகவும், மற்ற இரு வரும் நிமித்தருக்கு வடக்கே மேற்கு முகமாகவும் அமர்த்தப் படுவர். இவர்களுக்கு ஆக வேண்டிய உபசாரங்கள், பூசைகள், தானங்கள் முடிந்தபின் சபிண்டீகரணம் இடம்பெறும்.*

*வாழையிலையில் மேற்கு ஓரமாக மூன்று பிண்டங்கள் தர்ப்பையின் மேல் தனித்தனி இடம்பெறும். கிழக்கில் தனியாக ஒரு பிண்டம் தர்ப்பையின் மேல் அமையும். இப்பிண்டம் சற்று நீளமானதாய் அந்தங்கள் சற்று வளைந்து மற்றப் பிண்டங் களைத் தீண்டுவதாய் இருக்கவேண்டும். குறித்த மூன்று பிண்டங் களிலும் முறையே ஸ்கந்தர், சண்டர், கணாதீசர் என்ற பிதிரர் மூவரும் ஆவாகிக்கப்படுவர். கிழக்குப் பிண்டத்தில் இறந்த உயிரே அவாகிக்கப்படும். பிதிரர்களை ஆவாகிக்கும் போதும் பூசிக்கும் போதும் முறையே ஸ்கந்தரைக் குறித்து* **'அஸ்மத் பித்ரே நம'** *என்றும், சண்டரைக் குறித்து* **'அஸ்மத் பிதாமஹாய நம'** *என்றும், கணாதீசரைக் குறித்து* **'அஸ்மத் ப்ரபிதாமஹாய நம'** *என்றும் மந்திரிக்கப்படும்.* **பித்ரே - பிதாவுக்கு, பிதாமஹாய - பேரனுக்கு, ப்ரபிதாமஹாய - பாட்டனுக்கு** *என்பது அர்த்தம். கிழக் கிலுள்ள நிமித்திகரைக் குறித்து* **'ஓம் சிவகோத்ரஜாதாய, சிவ பூதாய தீக்ஷ நாம யுக்தாய பித்ரே நம'** *- சிவகோத்திரத்திற் பிறந்த வரும் இறந்து சிவமாந்தன்மையைச் சார இருப்பவரும் தீக்ஷா நாமமுள்ளவருமாகிய பிதாவுக்கு வணக்கம் - என்று மந்திரித்தல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இப்படியமைக்கப்பட்ட பிதிரர்கள் மூவருக்கும் நிமித் தருக்கும் நைவேத்திய பூசை உபசாரங்களெல்லாம் கர்த் தாவாற் செய்யப்படும். கந்தத்துக்காக இவர்களுக்கு மஞ்சள் சாத்திப் பத்திரபுஷ்பங்களும் சாத்தப்படும். முடிவில், நிமித்தப் பிண்டத்தில் சாத்தப்பட்ட பத்திரத்தையெடுத்துப் பிதிரர்கள் பிண்டத்திற் சேர்த்தல் மூலம் இந்த நிமித்தர் பிதிரர்களோடு ஒன்றானார் என்று பாவிக்கப்படுகின்றது. இது சைவ சிராத்தத்திற் சபிண்டீகரண முறையாகும்.

நிமித்தப் பிண்டத்தை மூன்று பகுதியாக்கி, பிதிரர் பிண்டங்களுடன் தனித்தனி சேர்க்கும் முறையும் ஒன்றுண்டு. அது வைதிகத்துக்கு; சைவத்துக்கன்று.

குறித்த இவ்வொழுங்கே சமயதீட்சையாளர்களுக்கும், விசேட தீட்சையாளர் முதலியோர்க்கும் பின்பற்றப்படுவது. ஆனால், உயர் தீட்சையாளர்க்கு தேவர், பிதிரர் சார்பில் உள் ளார் பெயர்கள் மட்டும் வேறு. அவர்களுக்குத் தேவர் சார்பில் அநந்தர், உருத்திரர் என்போரும், பிதிரர் சார்பில் ஈசர், சதா சிவர், சாந்தர் என்போரும் இடம்பெறுவர்.

மேற்காட்டிய விபரத்தில் நாம் கவனித்த பிதா, பிதா மஹர், ப்ரபிதாமஹர் மூவரும் தந்தைமரபு குறித்தவர்கள். கிரியை செய்யும் ஒருவர் (கர்த்தா) தமது தந்தைக்காவது, அவரது சகோதரர்க்காவது சபிண்டி செய்கையில் இந்த முறையை அநுசரிக்கலாம். இனி, தாய் அல்லது அவரது சகோத ரங்களைக் கருதிச் செய்கையிலும் இதுவே முறை. இங்கு இடம் பெறும் தேவர்களும் பிதிரர்களுமே அதற்குமுரியவர்கள். ஆனால் பிதா, பிதாமஹர், ப்ரபிதாமஹர் என்ற பெயர்களுக்குப் பதிலாக மாதா, மாதாமஹீ, ப்ரமாதாமஹீ என்பன இடம்பெறும். இப்படித் தாய் மரபு, தந்தைமரபு இரண்டுக்கும் பொருந்தாத சந்தர்ப்பத்தில் இந்த ஒழுங்கு முறை பின்பற்றவராது. உதார ணமாக, கணவன் மனைவிக்குச் சபிண்டி செய்கையிலும், ஒரு வன் தன் சகோதரனுக்குச் செய்கையிலும், மேற்கூறியவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மரபில் மூவருக்கு அல்லது தந்தைமரபில் மூவருக்குப் பிதிரர்களை கருதும் நிலை பொருந்தாது. அந்நிலையில், பிதிரர் மூவர்க்குப் பதிலாக ஒருவரையே கருதி ஒரே பிண்டமேயிட வேண்டும் என்பர். இதற்கு ஏகோதிட்ட விதானம் என்று தனியான பெயருண்டு.

இங்ஙனம், நிமித்தர் (இறந்த உயிர்) பிதிரர்களோடு ஒன்றாக்கப்பட்டு விட்டமையால் இனி மாசாமாசம் நிகழவிருக்கும் மாசிகங்களில் அவருக்குத் தனிப்பிண்டம் வேண்டியதில்லை. அவரையும் பிதிரர்களுடன் ஒன்றாகவே கொண்டு மூன்று பிண்டத்துடன் மாசிகக்கிரியை முடிக்கலாம்.

## ஆப்திக சிராத்தம்

முதலாவது வருஷ முடிவில் இறந்த திதியிற் செய்யப்படும் சிராத்தம்: இதில் மேற்காட்டியவாறு நிமித்தருக்குப் பிண்டமோ தானமோ வேண்டியதில்லை. இதுவே அபரக்கிரியைகளின் பூர்த்தியாகக் கருதப்படும்.

## வருட சிராத்தம்

சிராத்தக் கிரியைகளின் தொடர்பு இடையறாதிருக்கச் செய்வதற்காகவும், பிதிரர்களை இடையறாத திருப்திநிலையில் வைத்துக் கொள்வதற்காகவும், வசிக்குமிடங்களில் மந்திரக் கிரியை வாசனையை ஏற்படுத்துமுகமாகவும், வருடாவருடம் இறந்த திதியிற் செய்யப்படுவது வருட சிராத்தம் எனப்படும்.

## மஹாளயம்

வருடத்தில் புரட்டாசி மாசத்து அபரபக்கம் (அமாவாசைக்கு முன் 15 நாள்) பிதிரர்க்கு விசேட காலம் என்னும் கருத்துண்டு. அக்காலத்தில் அவர்களின் திருப்தி வேண்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படும் சிராத்தம் மஹாளய சிராத்தம் எனப்படும். மற்றும் சிராத்தங்களில் ஏற்படும் குறைநிறைகளுக்கு இது சாந்தி யாக அமையும். மஹாளயம் - பேரொடுக்கம். ஆலயங்களில் அர்த்த யாம பூசை போல அபரக்கிரியையில் இது இடம்பெறும்.

## அமாவாசைத் தர்ப்பணம்

அமாவாசை நாளில் விரதமிருந்து பிதிர் திருப்திக்காகப் எள்ளுந் தண்ணீரும் இறைத்தல்: தந்தை வர்க்கம், தாய் வர்க்கம் இரண்டினுக்கும் இது நன்மை தருவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அபரக் கிரியைகளும் நாங்களும்

சீவன் சீவத்தன்மைகள் கெட்டுச் சிவத்தன்மை அடையச் செய்தலே அபரக்கிரியைகளின் பண்பும் பயனும் என்பது மேற் கண்ட கிரியை விபரங்களாற் புலனாகின்றது. நாம் ஒவ்வொரு வரும் இக்கிரியைகளுக்குத் தகுதியாகும் நிலையில் நம்மை வைத்துக் கொள்ள வேண்டுவதன் அவசியத்தை இக்கிரியைகள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்குரிய அடிப்படைத் தகுதி சிவதீட்சையும், சந்தியாவந்தன அநுஷ்டானகிரமமும் இயலுமளவுக்குக் கூடுதலான சமயாசார சுத்தியுமாம்.

மண்மூடிக் கிடக்கும் இரும்பைக் காந்தம் வலிக்காது. செழும்பு மண்டிக் கிடக்கும் பாத்திரத்துக்கு மெருகு பூசினாற் பிடிக்காது. மேற்குறிப்பிட்ட சமயாசார சுத்தமில்லாத நிலையில் உயிருக்குச் செய்யும் அபரக்கிரியைகளும் அத்தன்மையனவே ஆகிவிடும்.

எவரெனினும் இறந்தவருக்குஅபரக்கிரியை செய்தேயாக வேண்டும் என்ற கொள்கை, சைவத்தில் நியதியாய் இருக்கிறது. அது **சமய சம்பிரதாயமாக மட்டுமல்ல இன்றியமையாத சமயக்கடமை** யுமாய் இருப்பதால் அதற்குரிய தகுதியை **நாமே நாமாக நம்மில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்** என்பது சொல்லாமலே அமையும். இறந்தவர்களாகிய நாம் நன்மையடைய வேண்டுமென்று கருதி இருப்பவர்கள் அருந்தி வருந்தி நமக்காகச் செய்யுங் கிரியைகள் வீண்போதல் கூடாதல்லவா!

இறந்தவர்களைக் கருதி இக்கிரியைகளைச் செய்வார்க் கும் அதற்குரிய தகுதிப்பாடு இன்றியமையாததே. அவரும் அதற் கேற்ற அடிப்படைத் தகுதியாகிய சிவதீட்சை, சந்தியா வந்தன அநுஷ்டானம். இயலுமளவு சமயாசாரசுத்தி என்பன உள்ளவராய் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிரியைகளைச் செய்விக்கும் பொருட்டாக நம்மால் நியமிக்கப்படும் குருக்கள்மாரும், புரோகிதர்களும் கூட அதற்கேற்குமளவு ஆசாரசீலர்களாயிருக்க வேண்டியதும் அவசியமேயாம். **சிவபூசை, அக்கினிகாரியம், வேதபாராயணம்** என்ற அநுசரணைகள் உள்ள குருக்கள்மாரும் புரோகிதர்களுமே இதற்குரியவர் ஆவர். மேற்கண்டவாறு, இக்கிரியைகளில் மிகுதியாக இடம்பெறுவது தானம். **தானத்துக்கு வரையறவான ஒரு இலக்கணமுண்டு.** உரிய தகுதிவாய்ந்த ஒருவரை வரவழைத்துச் செய்யுங் கொடையே **தானமெனப்படும்.** ஏதும் தேவை கருதிவந்தவருக்குத் தகுதி நோக்காது கொடுப்பது **தருமம் எனப்படும்.** அபரக்கிரியைகளின் போதுந் தருமத்துக்குப் போதிய இடமுண்டு. அது வேறு, இது வேறு. இடபதானம், சோதகும்பதானம் முதலாகிய தானங்களைச் செய்யும்போது ஏற்பவருடைய தகுதியைக் கண்டிப்பாக அவதானித்தே செய்தல் வேண்டும். உரிய தகுதியுள்ளோர் கிடைக்காத பட்சத்தில் ஒரு தர்ப்பையை வைத்து, ஆசாரியலட்சணம் வாய்ந்த ஒரு நற்புரோகிதராக, அல்லது தாம் வழிபடும் ஒரு ஆலய மூர்த்தியாகப் பாவித்துத் தியானித்துத் தம்மியல்புக்கேற்ற முறையில் வழிபட்டுத் தானத் திரவியங்களை அதன்முன் படைத்து நேர்த்தி செய்து கொண்டு அத்திரவியங்களைக் கோயிலுக்கே கொடுத்துவிட வேண்டும் என்னும் விதியுமுண்டு. **தானம் என்பதைத் தகுதியற்றவர் கையிற் கொடுத்தலே பாபம் என்பர்.** தகுதியற்றவனுக்குத் தானங் கொடுப்பவர் வனாந்தரங்களிலே **மந்திகளாய்ப் பிறந்து** அலைவார்கள் எனச் சீவகசிந்தாமணியில் ஒருகருத்துண்டு. **அக்கினிகாரியம் வேதபாராயண** மாதியன இல்லார்க்குத் தானங் கொடுப்பவர் **நரகத்துன்பத்துக்காளாவர்** என்கிறது **நாரத பக்தி சூத்திரம்.** தாம் வருந்தி முயன்று செய்யுந் தானம், தரவேண்டிய பலனைத் தராமை மட்டுமன்றித் **தமக்கே தீங்கும் விளைப்பதெனின்,** தானங் கொடுக்கப்படுவோரின் தகுதி விஷயத்தில் எவ்வளவு கவனஞ் செலுத்தப்பட வேண்டுமென்பதை உணர்தல் நம் கடனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொடுக்கப்படும் பொருளளவு மிகச்சிறிதாயினும் அது தக்கவன் கையிற் கொடுக்கப்படுமானால் அது அளவிறந்த பய னைத் தரும் என்பது தமிழ்நீதி.*

- கைப்பொருள்

தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறி தாய்ப்போர்த்து விடும்.

~ நாலடியார் ~

*இது இங்ஙனமாதல், பிரேதக்கிரியையைக்* **கொள்ளி வைத்தல்** *என்றும் அந்தியேஷ்ஷயைத்* **தர்ப்பை சுடுதல்** *என்றும் சிராத்தத்தை* **அரிசி கொடுத்தல்** *என்றும் அவற்றின் பெயர் வழக்கை இலகுபடுத்திக் கொள்வது போல, இக்கிரியைகளைச் சர்வ மானியமாகவோ சிரத்தைக் குறைவாகவோ நடத்துதல் விரும்பத்தகாததாகும்.*

*இனி, செத்தவரெல்லாங் சிவலோகஞ் சேர்வாரோ? இவைகள் யார் யாரோ ஏதேதோ சுயநல நோக்கமாக வகுத்த சம்பிரதாயங்கள் என்ற அபிப்பிராயமும், சம்பிரதாயத்துக்காக ஏதோ நடந்தாற்சரி என்ற திருப்தியும் ஒரோவோர் கோணங்களில் நிகழ்வதும் ஏதோ உண்மைதான். ஒரே மண்டபத்தில் ஒரே வேளையில் ஒன்பது பத்து அந்தியேஷ்ஷ ஒருமிக்க நடைபெறும் நிலைக்குரிய காரணங்களில் இதுவுமொன்றாயிருக்கின்றது. இவ் விளக்கம் துர்அதிர்ஷ்டவசமானது.*

*சிவலோகமடைவதற்கும் உரிய தகுதிப்பாடு ஒன்று உண் டென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், எல்லோருஞ்* **சிவலோகஞ் சேர்தலே மனித வாழ்விலட்சியமாம்.** *அன்றியும், ஒவ் வொருவரும் தத்தம் தகுதிப் பிரகாரம் ஒவ்வோர் காலத்தில் சிவ லோகம் அடைந்தே தீர்வர் என்பது* **சைவசித்தாந்த முடிபுமாம்.** *சைவசமய அநுபவ நிலையில் பாவனைக்கு முக்கிய இடமுண்டு. கருதப்படும் இலக்கு உண்மையானதெனில் பாவனை உடன் பலன் தராவிடினும் உரிய காலத்திற் பலன்தரும் என்பது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவக்கொள்கையாகும். **சிவோகம் பாவனை** செய்பவர் எடுத்த முதலெடுப்பிலேயே சிவமாய் விடுவர் என யாருங் கொள்வ தில்லை. எனினும், உயிர் சிவமாதல் நியதமான ஒரு உண்மை யாய் இருத்தலை முற்கொண்டு சிவோகம் பாவனை நடை பெறுவது போல்வதே இதுவுமாம்.

ஒரே உயிர் பலதடவை பிறந்து பிறந்து இறக்கலாம். இறக்கும் ஒவ்வொரு தடவையும் அது **சிவலோகஞ் சேர்கிறது, சிவலோகஞ் சேர்கிறது** என்று அதன் பொருட்டுத் தகுதியான மற் றொருவர் செய்யும் பாவனை ஒவ்வொன்றும் அது மந்திரக் கிரியா பாவனையாயிருத்தலினால் அந்த உயிரின் சிவத்துவப் பேற்றுக்கு உரிய காலத்தில் உதவுதல் தப்பாது. அந்த உயிர் தன்போக்கில் சிவத்துவத்துக்கான நெறியில் முயல்கின்ற குறிக்கப்பட்ட ஒரு கட்டத்தில், இப்பாவனைகள் அனைத்தும் அதன் பேற்றுக்கு அணைதுணையாய் நின்றுதவும் என்பதே அபிப்பிராயமாகும்.

அன்றியும், இறந்த உயிர் தன் மறுபிறப்பிற் போய்க் கொண்டிருக்கும் போதிலும், அங்கு அதற்கு விளையவிருக்கும் **சுகபோக நிலைகளுக்கு,** இப்பாவனைப் பலன் பெருமளவிற் கை கொடுத்துதவும் என்ற நம்பிக்கையும் **சைவ அனுபவத்தில்** இடம் பெற்றிருத்தல் அறிதற்பாலதாம்.

உயிரோடிருப்பவர் பற்றிய கடமைகளிலும் பார்க்க இறந் தோர் பற்றிய கடமைகள் சைவத்தில் மிகப் பிரதானமாகக் கருதப்படுவதன் தாற்பரியம் இதுவாகும்.

இறந்த உயிர் ஒன்று,

1. சிவலோகமே சேர்ந்து விடுதல் **முடிவான பயன்.**

2. இடைப்படும் பிறப்புக்களில் சுகபோக நலங்கள் அதி கரிக்கப் பெறுதல் **தற்காலிகபயன். இவ்விரண்டுக்கும் உரியது அபரக்கிரியை** என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**அநுபந்தம் 1.**

# சிவாலய உற்சவங்கள்

ஆலயபூசை விழாக்களில் நைமித்தியம் என்ற பிரிவில் உற்சவங்கள் அடங்கும். இந்த உற்சவ நிகழ்ச்சிக்குப் பின்னணி யான சித்தாந்தப் பொருள் விளக்கமொன்றுண்டு. உற்சவ நிகழ்ச் சியின் வெவ்வேறு பகுதிகளில் வைத்து அதனை அவதானித்தல் பொருந்தும்.

உற்சவங்களில் அலங்கார உற்சவம், பிரமோற்சவம் என இருவகையுண்டு. ஆலய கும்பாபிஷேக தினத்தை இறுதியாக வைத்து அல்லது ஒரு தெய்வீக மேன்மையுள்ள நட்சத்திர நாளை இறுதியாக வைத்து பத்து, பதினைந்து அல்லது இரு பத்தைந்து நாட்கள் இராவேளையில், சுவாமியை வீதிவலமாக எழுந்தருள வைத்தல் இருவகை விழாக்களுக்கும் பொதுப் பண்பாகும். இவற்றில் கொடியேற்றமும் இரதோற்சவமுமின்றி விசேட அபிஷேக பூசையுடன் சுவாமியை வீதியுலாவாக எழுந்தருள வைத்தல் அலங்கார உற்சவம் எனப்படும். இங்கு நாங்கள் பிரதானமாக அவதானிக்க வேண்டுவது பிரமோற்சவம் பற்றியேயாம்.

கொடியேற்றம், திருவிழா, தேர், தீர்த்தம், கொடியிறக்கம் என்ற ஐந்து அம்சங்கள் பிரமோற்சவத்தில் உள. இவ்வைந்தும் சிவபெருமான் உயிர்களின் பொருட்டுச் செய்யும் பஞ்சகிருத்திய நிலையை எண்ணி உபாசித்து, வழிபடும் முகமாகச் செய்யப் படுவனவாம்.

கொடியேற்ற நிகழ்ச்சியின் தத்துவம் சிருஷ்டி பற்றியது என்பர். சிவபெருமான் தன் ஆணையாகிய சிவசக்தியின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரை உலகவாழ்வுக்குத் தயார் செய்து வைத்தல் சிருஷ்டியின் தாற்பரியமாகும். அதற்கிணங்க, உயிரைக் குறிப்பதாகிய வெண்புடவை, ஒரு அந்தத்தில் குறிக்கப்பட்ட ஆலய நந்தியின் உருவம் எழுதப்பட்டுப் பாசத்தைக் குறிப்பதாகிய தர்ப்பைக் கயிற்றுடனும், சிவசக்தியைக் குறிப்பதாகிய வெண் கயிற்றுடனும் மேலிருந்து கீழாக முறுக்கி அமைக்கப்படுகின்றது. இவை மூன்றிற்கும் ஆதாரம் சிவபெருமானே என்ற உண்மைப் பிரகாரம், சிவத்தைக் குறிப்பதாகிய தம்பத்தில் இவை சுற்றிச் சூழ்ந்து அமைகின்றன.

முத்திப்பேற்றுக்கு முன் உயிர் உடலோடு கூடிப்பிறந்திறந்து வாழ்ந்து கொண்டுவரும் வாழ்க்கைத் தொடர்ச்சி முழுவதும் பெத்தநிலை எனப்படும். இந்நிலையில் சிவனுடைய சக்தியானது திரோதானசக்தி என்ற பெயரில் உயிரோடு உடனாக நின்று அது தன் மலப்பேறுகளாகிய அநுபவங்களைப் பெறும்படி ஊட்டிக்கொண்டிருக்கிறது. இந்த சித்தாந்த அநுபவநிலையே கொடி மரத்தில் பிரதிபாதிக்கப்படுகின்றதாகும்.

உற்சவ காலத்தில் கொடியேற்ற நிகழ்ச்சியைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாவாக எழுந்தருளும் விழாக்கள் நிகழும். இவையனைத்தும் சிவன் தான் சிருஷ்டித்தவற்றைக காத்தல் என்ற அருள்நிலையின் அறிகுறியாவன. உயிர்களின் பொறிபுலன்களுக்கு எட்டாமல் அம்பாலாயிருக்குஞ் சிவன், விதம் விதமான மூர்த்தங் (வடிவம்)களை மேற்கொண்டு மண்ணுலகில் வரும் செய்திகள் எங்கள் திருமுறைகளில் கேட்கப்படுகின்றன.

"வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியி னுரிதோலார்"

– சம்பந்தர் தேவாரம்

"பந்தித்த வெள்விடையைப் பாயஏறிப்
படுதலையில் என்கொலோ ஏந்திக்கொண்டு"

"பொன்தீ மணிவிளக்குப் பூதம்பற்றப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே" – அப்பர் தேவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகள் அனைத்திலும் இப்படி வருவன அனந்தம். இவை யெல்லாம் சிவன் உயிர்களைக் காத்து ரட்சிக்குங் கருணையால் நிகழ்வனவே. இத்தெய்விகஞான உண்மையின் விளக்கமாகவே திருவிழாக்கள் நடைபெறுகின்றன. திருவிழாவில் நாளுக்கு நாள் வெவ்வேறு வாகனங்களும் விதம் விதமான சுவாமி மூர்த்தங் களும் இடம்பெறுதல் குறிப்பிடத்தக்கதாகும்.

திருவிழாப் பட்சம் முடிவுறும் தினத்துக்கு முதல்நாள் இரதோற் சவம் நடைபெறுகின்றது. இது சங்காரமாகிய அழித்தல் தொழி லைக் குறிப்பதென்பர். சிவபிரான் பூமியெனுந் தேரேறி மேருவை வில்லாகவும் அக்கினியை அம்பாகவும் விஷ்ணுவை அம்பு நுதியாகவுங் கொண்டு முப்புரமெரித்தார் என்ற செய்தி பிரசித்த மானது. பிரபஞ்சத்தைப் படைத்துக் காத்து வரும் சிவன் உயிர் களின் நன்மைக்கு வேண்டும் போது அவற்றை அழித்து விடுதலுண்டென்கிறது சித்தாந்தம். இவற்றுக்கிணங்கச் சிவன் **தேரேறும் நிகழ்ச்சி, அழித்தல்** என்ற கிருத்தியத்தையே குறிப்ப தாகக் கொள்ளப்படும்.

அடுத்து வரும் தீர்த்த நிகழ்ச்சி அருளலைக் குறிப்பதாகும். உயிர்க்கெனப் படைத்துக் கொடுக்கப்பட்ட தனு, கரண, புவன, போகம் என்னும் நால்வகையினதான பிரபஞ்சம் அழித்தொழிக் கப்பட்ட பின், அத்தொடர்பு நீங்கிய உயிர் சிவனருளில் மூழ்கிச் சிவானந்தமாகிய பேரின்ப அநுபவத்தை எய்துவதாகும். இந்தப் பேருண்மையே தீர்த்த நிகழ்ச்சியால் உணர்த்தப்படுகின்றது. கிணறோ, குளமோ, கேணியோ, கடலோ ஒன்றன் நீரை மந்திர சகிதமான கிரியையினாற் புனிதமாக்கி, அதில் இருக்கக்கூடிய சிவசக்தியைப் பிரகாசிக்கச் செய்து அதில், **திருவிழாவில் முக் கியஸ்தராகிய அஸ்திரதேவரை** முழுக்காட்டி, சுவாமியை மூழ்கிய தாகச் செய்து அந்நீரில் அனைவோரும் மூழ்குதல் நடைமுறை யிலுள்ள தீர்த்தவிழா நிகழ்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தாஉன் அடியேனை அன்பா லார்த்தாய்
அருள் நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்" - அப்பர் தேவாரம்
"ஆர்த்தபிறவித் துயர்கெட நாமார்த் தாடுந்
தீர்த்தன்"

- திருவாசகம்

*என வரும் சைவஞான உண்மையின் அடிப்படையில் இந் நிகழ்ச்சி இடம்பெறுகின்றது.*

*தீர்த்தவிழாவன்று இரவில் கொடியிறக்கல் வைபவம் நடைபெறும். மேற்கண்ட நால்வகை அம்சங்களிலும் பஞ்சகிருத்தியத்தில், நான்கை அவதானித்தோம். அவற்றில் எஞ்சியுள்ளது மறைத்தல்.* **மறைத்தல் தொழில் காத்தல் தொழிலோடு உடனாய் எண்ணப்படுதல் பெரும்பான்மை.** *அவ்வகையால் தீர்த்தத்துடன் ஐந்தொழில் உபாசனை வழிபாடு முடிந்ததாகக் கருதப்படும்.*

*ஐந்தாவதாகிய அழித்தல் தொழில் முடிந்ததும்,* **பாசம் சிவன் சந்நிதியிலும், ஆன்மா சிவனருளிலும், சக்தி சிவனிடத்திலும்** *ஒடுங்கச் சிவம் ஒன்றே எஞ்சி நிற்பதாகும் என்பது சித்தாந்த உண்மை. இவ்வுண்மையின் அடிப்படையில்,* **"கொடியிறக்கல்'** *என்ற நிகழ்ச்சியில் கொடிமரத்தைச் சார்ந்திருந்த ஆன்மாவாகிய புடவையும், சக்தியாகிய வெண்கயிறும், பாசமாகிய தர்ப்பைக் கயிறும் அதிலிருந்து பிரிக்கப்பட்டுக் கொடிமரம்* **தனியே தானாய் நிற்கும் நிலை துலக்கப்படும்.**

*சிவசக்தியினுதவியினால் உயிர் பாசத்தின் தொடர்பு பெற்று நின்றநிலை கொடியேற்றத்தில் பிரதிபாதிக்கப்பட்டது. அதற் கெதிர், அவை மூன்றும் ஒடுக்கமுற்றுப்போனநிலை கொடியிறக் கத்தில் பிரதிபாதிக்கபட்டது என்க. வெளிப்பாட்டு நிலையில் அவை சிவனிடமேயிருந்தனவாதல் போல, ஒடுக்க நிலையிலும் அவை மூன்றும் அவனிடமே சேர்ந்தன என்ற உண்மைக்கிணங்க கொடியிறக்கக் கிரியையின் பின் புடவையும் கயிறுகள் இரண்டும்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கோயில் மூலமூர்த்தியின் சந்நிதியிற் சேர்க்கப்படுதலுங் கருதத் தக்கதாகும்.*

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேஇடம்; ஒன்று மேவிடில். ஒன்று
ஒளிக்கும்; எனினும் இருளடராது; உள் உயிர்க்கு உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர். அருள் கூடும்படி கொடிகட்டினனே.

– 'கொடிக்கவி', உமாபதி சிவாசாரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## அநுபந்தம் 2.

# வழிபாடு
## (தொடர் விளக்கம்)

அப்பர் சுவாமிகளின் திருவங்கமாலை தெரிவிக்கும் கருத்து முழுவதும் பொறிகளை நெறிப்படுத்தல் என்ற தலைப்பில் அடங்கும். நெறிப்படுத்தல் என்பது வழிப்படுத்தல் என்றாகும். அங்ஙனம் பொறிகளை வழிப்படுத்தும் உயிரின் செயல் வழிபாடு எனப்பெயர் பெறுகின்றது. வழிபாடு - வழிப்படுதல் என்றால், எதன் வழிப்படுதல் என்ற கேள்விக்கிடம் உண்டு. சைவத்தில் அதற்குப் பொருத்தமான பதில் உண்டு. சமண பௌத்தங்களில் அதற்கு, விடை இல்லை. அதாவது "எதன்" என்ற கேள்விக்கு நேர்விடையாக, "இதன்" என்று சுட்டுதற்கு உரிய தான ஒரு உள் பொருளின் ஒப்புதல் அவற்றின் கொள்கையில் இல்லை. அதனால், அவர்கள் பொறிபுலன்களால் நேரும் உபத்திரவங் களை இல்லாமற் பண்ணுவதற்கு வழி என்ன என்ற சிந்தனையின் சார்பில் அவைகளை இயங்கவிடாமற் பண்ணுதல் தான் ஒரே ஒருவழி என்றார்கள். இது எதிர்மறையான உபாயம், மனோ தத்துவ இயல்புக்கு மாறான உபாயம். இதனால் சுமுகமான பலனுக்குப் பதில் விமுகமான பலன் விளையக்கூடும் எனக் கண்டு சைவம், அதற்கெதிர் உடன்பாட்டு நெறியான உபாயத் தையே தழுவுகின்றது. பார்க்கிற கண்கள் சிவனைப் பார்க் கட்டும்; கேட்கிற் செவிகள் சிவன் புகழ் கேட்கட்டும் என இவ் வகையில் எதன் வழிப்படுதல் என்ற வினாவுக்குச் சிவன் வழிப் படுதல் என்றமையக் கூடிய விடையைச் சைவம் தன்னிடத் திற் கொண்டுள்ளது. உயிர் உண்மை, கடவுள் உண்மை என்ற இரண்டையும் தன் அடிப்படை உண்மைகளில் ஒன்றாகச் சைவம் ஏற்றுக்கொண்டுள்ளமை ஒன்று. அதற்கும் மேலாக, கடவுள் உயிர்க்குயிராய் அந்தர்யாமியாய் என்றும் இருந்து கொண்டிருத் தல் ஒன்று. ஆக, இருநிலைகளுஞ் சைவத்தின் சிறப்பியல்பு களாய் உள்ளவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவில் உயிருக்கு உயிராகச் சிவம் உண்டு; இது உள்முகத்தில் ஆன்மாவின் ஐம்புல உணர்வுகளுக்குத் திருப்தி தரும் போக்கியப் பொருள்களும் உண்டு; இது புறமுகத்தில். இதனால் ஆன்மாவுக்கு உள்ளுறவு வெளியுறவு என்ற இரண்டிற் கும் இடமுண்டு. ஆனால், ஆன்மா தன் கன்ம அநுபவங் காரண மாக வெளி உறவிலேயே மும்முரமாய் இருப்பது வழக்கம். இருந்தும், வெளி உறவாகப் போக்கியப் பொருட்களின் வழிப் பட்டு இருக்கும் விஷயத்தில் அதிருப்தி, ஏமாற்றம், ஓரோர் கட்டத்தில் அலுப்பு, அருவருப்புக் கூட ஆன்மாவுக்கு நிகழ்ந்து கொண்டே இருக்கும். இருந்தாலும் அதனுடன் இருக்கும் திரோ தான சக்தி (மறைப்புச் சக்தி) அவைகளில் அழுத்தம் ஏற்படாத வாறு, தற்காலிகத் தேவை நோக்கில் அவ்வுணர்வுகளை அவ்வப் போதே மறக்கப் பண்ணிவிடும். இது மறைத்தல் என்ற சிவன் செயலைச் சாரும். என்னதான் செய்த போதிலும் போக்கியங்கள் (அநுபவப் பொருள்கள்) பற்றிய உறவு சார்பான ஒருவித வெறுப்புத்தன்மை ஆன்மாவின் ஆழ்நினைவில் (Sub - conscious state of mind) பதிந்து வருதல் தவறாது. காலா காலமாக இடம் பெற்று வரும் இவ்வித பதிவுகள் உரிய காலத்தில் இப்போக் கியப் பொருள் பற்றிய உறவை ஒரேயடியாக நிராகரிக்கும் நிலையையுங் கொண்டு வந்துவிடும். அது ஆத்மீகத்தில் ஒரு உயர் நிலை. அதன்பிறகு உயிருக்கு உள்முக உறவாகிய சிவன் உறவே நிலைபெறும். அந்நிலையில், உயிர் முழுமூச்சாகச் சிவன் வழிப்பட்டுவிடும். அதாவது, சிவன் திருவுளம் அறிந்து அதன் வழியே செயற்படும். அப்போது, இந்த வழிபாடு என்பது ஞான உயர்நிலைப் பண்பாகிய "இறைபணி நிற்றல்" என்ற அளவுக்கு உயரும்.

இப்படி ஒருநிலை உயிருக்கு வந்தேயாகும் என்பதை மற் றொரு வகையிலும் நிதானிக்கலாம். அஃதாவது, உயிருக்குள்ள இருவகை உறவுகளில் சிவனோடு உள்ளதாகிய உறவு இயற்கை. போக்கியப் பொருளோடு உளதாகும் உறவு செயற்கை. செயற்கையாய் உள்ளது எதுவும் ஒருநேரம் விட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும். இயற்கையாய் உள்ளது ஒருபோதும் விட்டு நீங்காது, என்ற நியாயப்படி போக்கியப் பொருள் சார்பான உறவு உரிய காலத்தில் விட்டகன்றே போம். சிவனோடு உள்ள தொடர்பு வரவரத் தொடர்ந்துவரும் என்பது உணரக்கூடியது. வழிபாடு என்பதன் அந்தரங்கப் பொறுதி இத்தகையதாம்.

இனி, கன்மானுபவ நோக்கில் உயிர் புறப்பொருள் உறவில் மிக மும்முரமாய் இருக்குங் காலத்திலுங் கூட, தற்செயலாய் ஏற்படும் கஷ்டங்கள், விபத்துகள், இழப்புக்கள், நோய்பிணி, பஞ்சம், பட்டினிகள் முதலானவை மலிவான ஒரு நிலையிலாவது சிவன் உறவைத் தொடும்படி நிர்ப்பந்தித்துக் கொண்டே இருக்கும். இயல்பாகவே சிவன் உயிரிடத்தில் அந்தர்யாமியாய் (உட்புகுந்து இருப்பவனாய்) இருப்பதன் விளைவு இதுவாகும். இதனால்தான், அகிலம் அளாவிய அளவிற் பார்க்கையில் எங்கெங்கும் உள்ள எவ்வெச் சமூகமும் தன்தனக்கு உரிய ஏதேனும் ஒருவகையில் கடவுள் நினைவும் தொடர்பும் உள்ளதாய் இருக்கிறது என்பதும், சிலபகுதிகளில் மிக அநாகரீகமான காட்டுமிராண்டித்தனமான சமயநிலை இருத்தலும் உண்மை நிகழ்வே அன்றி மூடநம்பிக்கை நிகழ்ச்சி அல்ல என்பதும் அறிதல் நலம்.

ஆகவே வழிபாடொன்றே எந்நிலையிலும் ஆன்மாவுக்கு ஒரே வழி ; லௌகீகத்துக்கும் அதுவே வழி ; ஆத்மீகத்துக்கும் அதுவே வழி ; இயல்பான வழி ; மாற்றீடு இல்லாத தனி வழி என அறிவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுபந்தம் 3.

# சைவவிவேகம்

### (தொடர் விளக்கம்)

பாசப் பொருள்களைப் பரப்பி வைத்துக் கொண்டே பூசை செய்வதில் அவதானிக்கக் கிடக்கும் இயற்கை விஞ்ஞானத் தொடர்பொன்று கரிசனைக்குரியது. இது சைவ விவேகத்தின் மிகத் துடியான ஒரு அம்சம் ஆதலும் கருதத்தகும்.

மாயைப் படைப்பாகிய பாசப்பொருள்கள் எவையும் தாமாகத் தோன்றியவை அல்ல. அனைத்தும் சிவன் படைப்புக்கள். பொருள்கள் தோறும் அமையும் விசித்திரப் பண்புகளும் அவற்றின் ஆற்றலும் மனித அறிவின் மதிப்பீட்டுக்கு வெகுதூரம் அப்பால் ஆனவை. பாலின் மாதுரியத்தையோ, தீபத்தின் காந்தியையோ, மலரின் பரிமளத்தையோ மனிதன் ஆக்கலாமென மதிப்பார் ஆர்? "செய்வோனின்றிச் செய்வினை இல்லை". பாலோ, தீபமோ, மலரோ தாமாகத் தம் பண்புகளை ஆக்கக் கூடும் உணர்வுடைப் பொருள்கள் அல்ல. மனிதனும் அவற்றை ஆக்குவான் அல்லன் என்பது வெளிப்படை ஆதல் பற்றி, அவை அனைத்தும் தெய்வீகச் சார்பால் ஆனவை, தெய்வீகமானவை என்றே துணியப்படும். காலங்கடந்த அனுபவக் காட்சியில் துணியப்பட்ட உண்மை இது. "பூவினுள் நாற்றம் நீ, தீயினுள் திறல் நீ" என்பது போல் வரும் இலக்கியச் சான்றுகள் பல.

> நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
> நின் தண்மையுஞ் சாயலுந் திங்கள் உள
> நின் சுரத்தலும் வண்மையும் மாரி உள
> நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள
> நின் நாற்றமும் ஒண்மையும் பூவின்உள
> நின் தோற்றமும் அகலமும் நீரின்உள
> நின் உருவமும் ஒலியும் ஆகாயத்துள
> நின் வருதலும் ஒடுக்கமும் மரத்தின்உள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பரிபாடல் நான்காஞ் செய்யுள் திருமுறைக் காலத்துக்கும் முற்பட்ட ஒன்று. இந்த நிலைமை பிரமமே பிரபஞ் சமாய்ப் பரிணமித்தலால் நேர்ந்தது என்று சொல்லும் ஏகான்ம வாதம். பிரபஞ்சத்தைத் தனக்கு ஆதாரமாகக் கொண்டு பிரமம் விரிந்ததால் இந்நிலை நேர்ந்தது என்னும் விஷிட்டாத்து வித வாதம். சைவம் இவ்விரண்டினையும் ஒப்புவதில்லை. **சித்தாகிய பிரமம் சடமாகிய பிரபஞ்சமாய்ப் பரிணமித்தல் சாத்தியமாகாது.** நிராதாரமாகிய பிரமம் பிரபஞ்சத்தை ஆதாரமாகக் கொண்டு விரியும் என்பதற்கு வகை இல்லை. பின்னை என்னெனில்,

**ஸ தத் ச்ருஷ்ட்வா தத் அநுப்ராவிஷத்**
**தத் அநுப்ரவிஷ்ய சத் ச நியத் ச அபவத்**

"பிரமமே பிரபஞ்சத்தை மாயையில் இருந்து தோற்று வித்து அதிற் புகுந்து **'த்'** என்ற உயிர்களிலும் **'தியத்'** என்ற பாசம் பொருள்களிலும் உள்ளிருந்து இயக்குகிறது" என்ற தைத் திரிய உபநிஷதக் கருத்து நிலையே இதுபற்றிய சைவத்தின் கருத்துநிலை. இங்ஙனம் மாயையிலிருந்து தான் படைத்தவற றுள் தானும் ஒருவகையிற் புகுந்திருக்கும் பிரமத்தின் நிலை அந்தர்யாமித்துவம் எனப்படும். அந்தர்யாமித்துவம் உட்புகுந்து உலாவும் இயல்பு. பிரமத்தின் இதே இயல்பு சுவேதாஸ்வதர உபநிஷத்திலும் கூறப்பட்டிருக்கிறது. இவ்வுபநிஷதங்களின் பொருளோ அப்பர் சுவாமிகளின் "இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி" என்று தொடங்கும் நின்ற திருத்தாண்டகப் பொருளாகவும் அமைந்திருக்கிறது. இவ்வுண்மையின் சார்பிற் பார்க்கும்போது சாதாரண ஆய்வியல் அறிவுக்கு அப்பாலாய் இருக்கும் பொருட் பண்புகள் அனைத்தும் பிரமம் உலகப் பொருள் தோறும் புகுந் திருப்பதன் பிரதிபலிப்புகள் ஆதல் தெரிகிறது.

மேலும்பூசையில்,பாசப் பொருள்களைப் பரப்பி வைத்துக் கொண்டு ஒவ்வொன்றிலும் நீர்விட்டுப் பூவால் தொட்டுப் பூவைச் சுவாமி பாதத்தில் மந்திரசகிதமாக இடுவதைப் பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் தாற்பரியம் என்ன? பொருள் தோறும் பிரதிபலிக்கும் விசேஷ பண்புகளில் சிவத்தின் இருப்பையே கண்டுகண்டு அத் தாட்சியோடு அவற்றைச் சுவாமிக்கு அர்ப்பணித்தல் என்பதே தாற்பரியமாம். சிவபூசையில் இடம்பெறும் ஒரு முக்கிய நிகழ்ச்சி இதனை விளங்க உதவும். சிவபூசை செய்வோர்,

மூர்த்திக்குச் சந்தனஞ் சாத்தும்போது,

1. **'லம்' ப்ருதிவ் யாத்மனே கந்தம் சமர்ப்பியாமி** எனவும், மலரிறைக்கும் போது,
2. **'ஹம்' ஆகாசாத்மனே புஷ்பை: பூஜயாமி** எனவும், தீபம் சுற்றும் போது,
3. **'ரம்' அக்னியாத்மனே தீபம் தர்சயாமி** எனவும், தூபம் காட்டும் போது,
4. **'யம்' வாய்வாத்மனே தூபம் ஆக்ராபயாமி** எனவும், அமுதை ஊட்டும் போது,
5. **'வம்' அம்ருதாத்மனே அம்ருதமயம் மஹா நைவேத்யம் நிவேத யாமி** எனவும் மற்றும் உபசாரங்களைச் செய்யும் போது,
6. **'ஸம்' ஸர்வாத்மனே சர்வோபாசார பூஜாம் ஸமர்பயாமி** எனவும், சொல்லிக்கொண்டு பூசிப்பர். இவை தமிழில் முறையே,

1. பிருதிவித்தன்மை விளங்க இருக்கும் உனக்கு பிருதிவியின் விசேஷ குணமான மணமுள்ள சந்தனத்தைச் சமர்ப்பிக் கிறேன்.
2. ஆகாசத்தன்மை விளங்க இருக்கும் உன்னை ஆகாச குணச் சார்பாய் இருக்கும் பூக்களினால் பூசிக்கிறேன்.
3. அக்கினியின் தன்மை விளங்க இருக்கும் உனக்கு வெம்மை, பிரகாசம் என்ற குணச் சார்பாய் இருக்கும் தீபாலாத்தி சுற்றுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வாயுவின் தன்மை விளங்க இருக்கிறவனாகிய உனக்குப் புகை, மணம் என்ற குணச் சார்பாய் இருக்கும் தூபம் காட்டுகிறேன்.

5. அன்னத்தின் தன்மை விளங்க இருக்கிறவனாகிய உனக்கு சீவனச் சத்துமயமான அமர்தகுணச் சார்பாய் இருக்கும் நைவேத்தியத்தை நிவேதிக்கிறேன்.

6. எல்லாவற்றின் தன்மையும் விளங்க இருக்கிறவனாகிய உனக்கு எல்லா விசேஷ குணச் சார்பாயும் உள்ள எல்லா உபசாரங்களையுஞ் சமர்ப்பிக்கிறேன் - என அறியப்படும்.

பூசையிற் பாசப் பொருள்களை வைத்துக்கொண்டு பொறி புலன்களைச் சிவன்பால் செலுத்துவது என்ற செயல் தத்துவப் பின்னணியோடு கூடிய அர்த்தமுள்ள செயல் என இவ்வகையாற் கண்டுகொள்ள இருத்தல் ஒன்று ; மற்றச் சமயங்களில் இப்படி விளங்கி நிகழும் பூசை நடைமுறை இல்லாமை ஒன்று, என இவ்விரண்டும் உள்ளன. இது சைவ விவேகம் ஆதலை இனிது காட்டும்.

இன்னும், சந்தர்ப்ப அனுசாரமாகச் சைவவிவேகம் என்ற தோரணையில் மற்றொரு முக்கிய கருத்துப் பற்றியும் இங்குச் சிந்தித்தல் தகும். இந்நாளிற் பலரும் பலதடவையும் வெளி யிடும் அக்கருத்தாவது, பண்டைய மனிதர் இயற்கையை வழி பட்டார்கள் என்பது. இக்கருத்தை முன்வைப்போர் இயற்கைப் படைப்புக்களாகிய மரம், மலை, அக்கினி, பாம்பு என்பவற்றை மரநோக்கில், மலைநோக்கில், அக்கினி நோக்கில், பாம்பு நோக்கில் தான் அவர்கள் வழிபட்டார்கள் எனக் கருதுவதாகத் தெரிகிறது. இதுவரை நாம் கண்ட விளக்கங்களின் பிரகாரம் அப்படிக் கருத அவகாசமே இல்லை. அத்துடன் வழிபாடு என்றதன் சொற்பொருள் இருக்கும் நிலைக்கும் அது ஒவ்வாத தாகும். மரத்தின் வழிப்படுதற்கோ, மலையின் வழிபடுதற்கோ அக்கினியின் வழிப்படுதற்கோ, பாம்பின் வழிப்படுதற்கோ ஆத்மாவுக்கு என்ன அவசியம் இருக்க முடியும்? என்பது இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழும் ஆசங்கை. இதற்கு நேர்விடை அசாத்தியம். எனவே, அவர்கள் வழிபட்டது இயற்கையை அல்ல; இயற்கையினூடு பொங்கும் அழகு, ஆற்றல் என்பனவற்றால் நினைவுறுத்தப்பட்டு, அவற்றில் அந்தர்யாமி ஆகி, அந்த அழகு, ஆற்றல் என்பவற்றின் மயமாய் நமக்கு ஆத்மீகத் தொடர்பு உள்ளதுமான தெய்வீகத்தையே அவர்கள் வழிபட்டார்கள். அவ்வகையில் அவர்களின் வழிபாடு சார்ந்த விசேட அம்சம் ஒன்றை அவதானித்தல் அவசியமாம். இன்றைய நாங்கள் தெய்வ மூர்த்தம் ஒன்றில் தெய்வத்தைக் கண்டு வழிபடுவதற்குப் பதில் அவர்கள் மூர்த்த அறிகுறியான அங்க அவயங்கள் எதுவுமே இல்லாத இயற்கைப் பொருள்களிலேயே தெய்வத்தைக் கண்டு வழிபட்டிருக்கின்றார்களே. அது அவர்கள் சார்பில் பாராட்டப்படுதற்குமாம் ஒரு மகிமை எனலாம். உண்மைகள் என்பவை எப்போதும் உள்ளவை. அதன்படி, பொருள்கள் தோறும் தெய்வீக நிலை உண்மையைக் கண்டு பூசிக்கும் பாங்கு இன்றுளதெனில் அது அன்றும் இருந்ததே ஆகும் எனத் துணிதலே நேர்மை ஆம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுபந்தம் 4.

# முப்பொருளும் பூசையும்

### (தொடர் விளக்கம்)

பால், பழம், நீர், பூ, அக்கினி, நைவேத்தியம் ஆகிய பாசப் பொருள்கள் "அசத்" அவற்றிற் பல்வேறு குணாதிசயங்கள் நிகழ அந்தர்யாமியாய் அவை தோறுறையுஞ் சிவம் "சத்" மேற்கண்ட வாறு பூசித்தோர் பெறும்பேறு அசத்திலிருந்த சத்தை அடைத லாகும். அசத்தைக் கண்களால் நோக்குதல், நன்மையற்றதை நோக்குதலாம். அது சார்ந்த சத்தைக் கண்களால் நோக்குதல் நன்மையைக் கண்களால் நோக்குதலாம். பூசை சம்பந்தப்பட்ட மணியோசை சங்கோசை முதலியவற்றை வெறுமனே சத்தச் சலசலப்பு மாத்திரத்திற் கேட்டல் அசத்தைக் கேட்டலாகும். அவற்றில் அநுகரணமாயிருக்கும் "ஓம்" ஒலியை உற்றுணர்ந்து கேட்டல் சத்தைக் கேட்டலாகும். வாத்திய இசை பாடலிசை முதலியவற்றை வெறுமனே கருவி இசை குரலிசை மாத்திரத்திற் கேட்டல் அசத்தக் கேட்டலாம். அவற்றின் நுண்ணமைதியாகிய பண்ணமைதியைக் கேட்டல் சத்தைக் கேட்டலாம். என விரித்து விளங்க நிற்றலின் இவ்விரு உபநிஷதப் பகுதிகளும் பூசை யுண்மைக்குப் பின்னணிக் கீதம் இசைப்பனவாதல் பொருத்த மேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அநுபந்தம் 5.**

# பூதசுத்தி
## (தொடர் விளக்கம்)

குறித்த "பீஜம்" ஒவ்வொன்றும் "உத்காதம்" எனப்படும். உத்காதம் என்றால் "நீக்குதல்" என்று பொருள். குறித்த பிருதிவி மந்திரத்தில் ஐந்து தரம் "உத்காதம்" இருத்தல் பிருதிவி சார்ந்த ஐவயையான அசுத்த மாயாகுணங்களும் நீக்கப்படுதற்கறி குறியாம். இவ்வாறே, அடுத்து வரும் மந்திரங்களில் நான்கு மூன்று இரண்டு ஒன்று என்ற எண்ணிக்கையிலான பீஜங்கள் இருத்தல் அதுவது சம்பந்தப்பட்ட பூதம் ஒவ்வொன்றற்குமுரிய அத்தனை அத்தனை அசுத்த குணங்களும் நீக்ப்படுதற்கு அறி குறியாம். இவ்வகையில் இறுதியாக ஆகாசம் என்ற பூதமும் அதன் அசுத்த மாயாகுணமாகிய சத்தமும் நீக்கப்பட்டொழிந் ததும் அசுத்த தத்துவங்களைச் சார்ந்ததும் அநித்தியமானதும் வியாபகங் குறைந்ததுமான பூதாகாயத்தின் சம்பந்தம் நீங்கித் தேகம் சுத்ததத்துவங்களைச் சார்ந்ததும் நித்தியமானதும் வியாப கத்திற் கூடியதுமான பரமாகாசத்தில் விடப்பட்டதாகும். இனி, அத்தேகம் பூசைத் தொழில் மேற்கொள்ளத் தகுதியாயிற்று என்பது அர்த்தம்.

அன்றியும் இங்ஙனம் பூதசுத்தி நிகழ்த்தும் போது அது செய்பவர் பின்வரும் அட்டவணையிற் காணும் விதமாக ஒவ் வோர் பூதத்தையும் அவ்வவற்றிற்குரிய சகல அம்சங்களோடும் இருப்ப தாகத் தியானித்துக் கொண்டே அவ்வம் மந்திரங்களை உச்சரிப்பர். அவ்வகையிற் பிருதிவியாகத் தியானிக்கும் தியா னம் முடிந்ததும் தன்னை முறையே அப்பு மண்டலம், அக்கினி மண்டலம், வாயு மண்டலம், ஆகாச மண்டலம் என்பனவாகப் பாவித்துத் தியானிக்கும் ஒழுங்குண்டு. இவ்வொழுங்கில், பௌதிக விஞ்ஞானம் கூறும் திண்மம் (Solid), நீர்மம் (Liquid),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி (energy), வாயுத்தன்மை (pervasive), வெளி (space) என்ற மூலப்பண்புகளுக்கச் சமதையான தொடர்பொன்று இருப்ப தாகத் தெரிகின்றது. அத்துடன், இவை தூலத்திலிருந்து ஒன்றுக் கொன்று சூக்மமாய்ப் போகும் நிலையை அவதானிக்கையில் முக்கியமான மற்றோருண்மையும் புலனாகின்றது. தூலத்தி லிருந்து சூக்குமக் கிரமமான பரிணாமத்திற் பொருள்களின் ஆற்றல் படிபப்படியாக மிகுகின்றது என்பர். குறிக்கப்பட்ட ஒரு அளவு தண்ணீரால் அசைக்கப்பட முடியாத ஒரு இயந்திரத்தை தேயளவு தண்ணீரிற் கிளம்பும் நீராவி அசைப்பதைக் காண் கிறோம். பூதசுத்தியின் போது மேற்கண்டவாறு தேகத்தை அதி தூலமான பிருதிவி நிலையிலிருந்து அதிசூக்குமமான ஆகாச நிலைக்கு மாற்றுதல் மூலம் பூசிப்பவரின் ஆத்மீக ஆற்றல் விருத் திக்கான உபாயம் வெகு இலாவகமாகக் கையாளப்படும் விவே கமிருத்தல் குறிப்பிடத்தகும்.

பூதசுத்தி அட்டவணையை அடுத்த பக்கம் பார்க்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதசுத்தி அட்டவணை

**ஆக்கம் க. சொக்கலிங்கம்**

| பீஜம் | பூதம் | நிறம் | தன்மை | வடிவம் | அடையாளம் | அதிபதி | காரணேஸ்வரர் | கலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஹ்லாம் | பிருதிவி | பொன் | திண்மம் (solid) | நாற்கோணம் | வச்சிரம் | சத்தியோஜாதர் | பிரமா | நிவிர்த்தி |
| ஹ்வீம் | அப்பு | வெண்மை | நீர்மம் (Liquid) | அர்த்த சந்திரன் | தாமரை | வாமதேவர் | விஷ்ணு | பிரதிஷ்டை |
| ஹ்றூம் | தேயு | சிவப்பு | ஆற்றல் (energy) | முக்கோணம் | சுவஸ்திகம் | அகோரர் | உருத்திரன் | வித்தை |
| ஹ்யைம் | வாயு | கறுப்பு | வியாபகம் (pervasive) | அறுகோணம் | ஆறுபுள்ளி | தற்புருஷர் | மகேசர் | சாந்தி |
| ஹௌம் | ஆகாசம் | படிகம் | வெளி (Space) | சூனியம் (cipher) | பிந்து | ஈசானர் | சதாசிவர் | சாந்தியதீதை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அநுபந்தம் 6.**

# பூதசுத்திப்பலன் சார்பான உதாரண விளக்கம்

*தேவாரத்தில்:*

மண்ணதனி லைந்தை மாநீரி னான்கை
வயங்கெரியின் மூன்றைமா ருதத்தி ரண்டை
விண்ணதனி லொன்றை விரிக திரைத்
தண்மதியைத் தாரகை டம்மின் மிக்க
எண்ணதனி லெழுத்தையே ழிசையைக் காம
னெழிலழிய வெரியுமிழ்ந்த விமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே.

- திருத்தாண்டகம், அப்பர் தேவாரம்.

*பரிபாடலில்:*

முந்தியாங் கூறிய வைந்த னுள்ளும்
ஒன்றனிற் போற்றிய விசும்பு நீயே
இரண்டி னுணரும் வளியு நயே
மூன்றி னுணரும் வளியு நீயே
நான்கி னுணரும் நீரு நீயே
ஐந்துடன் முற்றிய நிலனு நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபந்தம் 7.

# சுத்தியின்றி சித்தியில்லை
## (தொடர் விளக்கம்)

மற்றும் மற்றும் விஷயங்களைப் போலவே அசுத்தம் என்பதிலும் தூலத் தன்மை சூக்குமத் தன்மை என்ற இரண்டும் இருத்தல் சகஜம். புற உடலிற் காணப்படும் வியர்வை முதலான அழுக்குகள் தூல அழுக்கு எனப்படும். அவ்வகையே உடலுள் இருக்கும் மாயாவிகாரம், மலமயக்கம், தன்முனைப்பு, ஆசாபா சங்கள் முதலியன சூக்கும அழுக்கு எனப்படும். மனிதன் செய்யும் எந்தச் செயலும், சாப்பிடுதல் கூட, இவ்விருவகை அழுக்கும் நீக்கிச் செய்யப்பட்டால்தான் செயல் உண்மைப் பலனளிக்கும் என்பர். வியர்வை நாறும் மேனியோடிருந்து உண்பதை விட, நன்றாகக் கழுவித்துடைத்து சுகந்தமும் பூசிய மேனியோடு இருந்து உண்பதில் சுவையும் திருப்தியும் அதிகமாய் இருத்தல் நன்கறிவோம். புற அழுக்கு நீக்கும் அள வில் இப்படியிருக்கும் திருப்தியும் சுவையும் மேற்குறித்த அக அழுக்கும் நீக்கப்பட்டிருந்தால் மேலும் அதிகரித்தல் அனுப வஸ்தர் வாயிலாக அறியப்படும். கோயிலில் ஆக்கிச் சுவா மிக்குப் படைத்து உண்ணுஞ் சோறுகறிகள் சுவைமிக்கவை என்ற பொதுசன அபிப்பிராயமே இதற்கு நிதர்சனமாகும்.

கோயிற் பூசைக்கெனச் சமைக்க வருவோர் விசேஷமாகப் பெண்கள், அதற்கெனப் பிரத்தியேகமான கவனத்துடன் தூல அழுக்கு நீக்கி, உடுக்கும் உடை கூட உடனடியாகத் தோய்த்து உடுத்துக் கொண்டு சந்தியாவந்தனம் கட்டாயமாகச் செய்து விபூதிக் குறிப்பொலிவோடு கோயிலும் கும்பிட்டுக் கொண்டு புறவிசாரத்திற் செல்லாத மன ஒடுக்கத்துடன் இருக்கும் அவ்வ கையால் சூக்கம அழுக்கும் ஓரளவேனும் நீக்கியிருந்து சமையல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் துப்புரவுப் பண்பே அதற்குக் காரணம் என அறிதல் தகும். எனவே லௌகிக விஷயத்தல் சிலவேளை சோர்வு பட்டாலும் ஆத்மீக விஷயமான ஆலய பூசை வழிபாட்டு நடை முறைகளில் தூல அழுக்கு நீக்கத்திற் செய்வதிலும் பார்க்கக் கூடிய சிரத்தையுடன், சூக்கும அழுக்கு நீக்கஞ் செய்யப்பட்டாக வேண்டும் என்பது விதி. கோயிற் சந்நிதிகளிற் சைவானுட்டானக் களை ததும்பும் அறிகுறிகள் இல்லாமல் யாரேனும் நிற்க நேர்ந்தால், "இவர் இன்றைக்குக் குளியாமலே வந்துவிட்டார் போலும்" என அவரைப் பற்றி மற்றவர்கள் சந்தேகிப்பதுண்டு. குளித்திருந்தால் சந்தியாவந்தனம் செய்து அனுட்டானம் பண்ணி யிருப்பார் என்ற அனுமானப் பிரமாண மூலம் இவ்விசாரம் நிகழ் கிறது. சூக்கும அழுக்கு நீக்கத்திற்கு ஒரேயொரு சாதனம் சந் தியாவந்தனமாம். கோயிற் கிரியையில் எசமானனாய்த் தர்ப்பை தரிப்போருக்குப் புண்ணியாகம் பண்ணிய தீர்த்தம் கொடுத்துப் பருகச் செய்வது பலரும் அறிவர். மந்திரமோதிச் சுத்திகரிக் கப்பட்ட நீர் புண்ணியாக தீர்த்தம். அது சூக்கும அழுக்கு நீக் கத்தை உறுதிப்படுத்துவற்காகத் தான் கொடுக்கப்படுகின்றது. எனவே, முன்னமே சந்தியாவந்தனம் மூலமான சூக்கும அழுக்கு நீக்கம் செய்யாதவருக்கு இதுவும் உரிய அளவிற் பலன்பட வகையில்லை. வயிற்றிலழுக்கு நீக்கியபின் செய்கிற வைத்திய சிகிச்சை தான் சரியாகப் பலனளிக்கும். அது போல்வதே இதுவும். எனவே, முயன்று செய்யும் செயல் ஒன்று பலன் படாதிருக்கும் நிலையை விரும்பும் போக்கு எவருக்கும் இருக்க முடியாது. ஆதலால் சுத்தியின்றிச் சித்தியில்லை என்ற கருத்து இவ்விஷயத்திலும் வற்புறுத்தல் பெறும். சந்தியாவந்த னத்தில் இடம்பெறும் பிராணாயாமம், அகமர்ஷணம் ஆசமனம், மந்திர உச்சாடனம், மூலமந்திர செபம் என்பன பிரத்தியேகமாகச் சூக்ம அழுக்கு நீக்கச் சாதனங்கள் என்பதைச் சைவராய் உள்ளோர் நீள நினைந்து நெடுக அனுட்டிக்கக் கடமைப்பட்டுள்ளனர் என லாம். கிரியைகளில் எசமானர்களாய் உள்ளவர்கள் போலவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிற் பணியாளர்கள், அதாவது மாலை கட்டுவோர், மடைப் பள்ளி வேலை பார்ப்போர், சமயாசமய ஊழியர்கள், தீபந் தாங்கு வோர், குடைபிடிப்போர், திருவாடுதண்டு தாங்குவோர், தமிழ் வேதம் ஓதுவோர், பஜனை புரிவோர், வாத்தியம் இசைப்போர், புராணபடனஞ் செய்வோர் அனைவருமே இக் சூக்கும் அழுக்கு நீக்கிச் சாதனமாகிய சைவானுட்டான அனுசரணைக்குக் கட்டுப் பட்டவர்களாதல் அவசியத்திலும் அவசியமாம்.

கோயிலில் தெய்வீக சாந்நித்யம் விளங்கும் விஷயம் ஐயரையும் அவர் பண்ணுங் கிரியையையும் மட்டும் பொறுத் திருப்பதில்லை. ஆலய வளாகத்துள் உலாவுவோர் அனைவரும் அதற்கு உத்தரவாதிகள் ஆவர். இவர்களது சூக்கும அழுக்குச் சார்பிலெழுஞ் சார்ச்சிச் சலன அலைகள் கிரியைப்பண்புகள் பலன்களை மட்டுமல்ல, கிரியை செய்பவரையே பாதிக்கக்கூடும் ஆபத்துண்டு. பௌதிக விஞ்ஞான ரீதியாகவே உணரப்படக் கூடிய உண்மை இதுவாகும். இன்றைய பொதுநல நோக்குச் சார்பான மனதாபிமானத் தன்மை, சகிப்புத் தன்மைகள் எப்படியும் இருக்கலாம். ஆனால், ஆலய பூசைப் பண்பையும் பலனையும் பாதிக்கும் அளவுக்கு அவற்றை அனுசரிப்பதில் நியாயத்திற்கு இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுபந்தம் 8.

# சிவோகம் பாவனை

## (தொடர் விளக்கம்)

இடைநாடி, பிங்கலாநாடி, சுழுமுனை நாடி என நாடிகள் மூன்று. மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என ஆதாரங்கள் ஆறு. படைப்பின் போதே மிக நுணுக்கமாகப் பொருத்தி வைக்கப்பட்டு இருக்கும் தெய்வ சக்தி ஆகிய விந்துவின் துளி ஒன்று. ஆதாரங்கள் தோறும் கீழிருந்து மேலாக முறையே 4,6,10,12,16,2 இதழ் கொண்ட தாமரைகளாய் விரியக்கூடிய முடிப்புக்கள் ஆறு. இத்தனையும் பூசை வழிபாட்டுக்கு ஆதாரமாக நம்முடலின் உட்பகுதியில் அமைந்துள்ள விசித்திர சாதனங்கள். இவை உடலின் உள்ளே தான். ஆனால் அன்னமயகோசம் என்னும் வெளி உடலின் உட் பாகத்தில் அல்ல: அதற்கும் உள்ளாக வெறுங் கண்ணுக்கோ கருவிகளுக்கோ புலப்படாததாய் இருக்கும் பிராணமயகோசம் என்ற பகுதியில் உள்ளவை அவை. அதனால் பிராணன் எனப் படும் மூச்சை நெறிப்படுத்துதல் மூலமே அவற்றின் பலனைப் பெற்றுக் கொள்ளுதல் சாலும்.

நமது மூக்குத் தொளைகளில் இடபக்கத் தொளையோடு சம்பந்தமுள்ளது இடை நாடி. வலதுபக்கத் தொளையோடு சம் பந்தமுள்ளது பிங்கலா நாடி. இவ்விரண்டுக்கும் நடுவாக முது குத் தண்டோடு ஒட்டி இருப்பது சுழுமுனை நாடி. சாமானிய நம் நிலையில் எழுந்தமானத்துக்கு மூச்சை உள்வாங்கி, எழுந்த மானத்துக்கு அதை வெளிவிடுகிறோம். இவ்வியவகாரத்தில் உட் புகும் மூச்சைப் போல் ஒன்றரை மடங்கு வெளியேறிக்கொண்டு இருக்கிறது. யோக மாத்திரைக் கணக்கில் இதை 8:12 விகிதம் என்பர். இது இப்படி இருத்தல் பற்றியும் அதனால் உயிருக்கு நேரும் பாதிப்புப் பற்றியும் சாமானிய நிலையில் யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியார். "பன்னிரண்டானையைப் பாகன் அறிந்திலன்" என்று பரிகசிப்பர் திருமூலர். இந்த ஒழுங்கீனத்தைச் சமன்செய்து மூச் சிற் சமநிலை ஏற்படுத்தி அதன் அபாரமான ஆற்றலைத் தியான வழிபாட்டுக்குச் சாதகம் ஆக்குதலே பிராணாயாமத்தின் நோக் கமாகும். அவ்வகையில், உள்ளிழுத்த மூச்சை உனடியாக வெளிவிடாமல் அடிவயிற்றில் அதை நிறுத்தி வைத்திருந்து கிரம முறைப்படி சிறிது சிறிதாக வெளிவிடும் பயிற்சி முறை ஒன்று உண்டு. அம்முறைக்கு இணங்க, இடைநாடியில் மட்டும் மூச்சை உள்வாங்க வேண்டும். அதற்கு "பூரகம்" என்று பெயர். வாங்கிய மூச்சை அடிவயிற்றில் தடுத்து வைக்க வேண்டும். இது "கும் பகம்" எனப்படும். கும்பகத்தின் பின் குறித்த ஒழுங்குமுறைப்படி மூச்சு வெளிவிடப்படும். இதற்கு "இரேசகம்" என்று பெயர். இது சரியாகக் கையாளப்படுவதன் மூலம் இழுத்த மூச்சில் குறைந் தது 1/3 பங்காவது தங்க வைக்கலாம். அதன்மூலம் மேலதிக விரயமான மூன்றில் ஒன்றைச் சமன் செய்யலாம். ஆனால் ஒரு தடவை கும்பித்து ஒரு தடவை இரேசிப்பதால் மட்டும் இது பூரணப்பட்டு விடாது. ஏனெனில், "காற்றுக்கு வேலி அடைக்க முடியாது" என்பது தெரிந்த விஷயம் தானே! நாம் பூரிக்கும் போதும் கும்பிக்கும் போதும் அதில் ஒரு சிறு பகுதியாவது நம்மை அறியாமல் நழுவி இரேசகமாகிக் கொண்டே இருக்கும். அக்குறையை நிரப்ப உதவுமாறு 16 தரம் பூரித்து 64 தரம் கும்பித்து 32 தரம் இரேசிக்க வேண்டும் என்ற ஒரு கணக்கு உண்டு. மேற்கண்டபடி வெளிவிடும் மூச்சோடு உள்வாங்கும் மூச்சுக்குள்ள விகிதாசாரம் 12:8, தாவது 1:2/3 ஆகிறது. அதன்படிக்கு 16 தரம் சுவாசித்தால் உள்ளே சேரக்கூடியது 16x2/3=10 2/3 ஆகும். 64 தரம் கும்பித்தால் உள்ளே தங்கக் கூடியது 64x1/3=21 1/3 ஆகும். இவ்விருவகை யாலும் உள்ளே சேமம் 10 2/3+ 21 1/3 = 32 மாத்திரை ஆகும். இவ்வளவு சேமமான பின் 32 மாத்திரை மட்டும் இரேசித்தால் மூச்சு நிலையில் சமன்பாடு ஏற்படும். பயற்சி வலுவினால் இச்சமன் பாடு உறுதிபெறும் போது, நடுநாடி ஆகிய சுழுமுனை நாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திறக்கும். திறந்ததும், உள்உள்ள பிராணன் தன் வழக்கமான பாதையை விட்டுச் சுழுமுனை நாடி வழி மேல்ஏறும். அந்தச் சூழ்நிலை அதுவரை சோம்பிக் கிடந்த பிந்து சக்தியைத் தட்டி எழுப்புவதால் அது மண்டலித் தெழுந்து குண்டலினி சக்தியாய் மேல்ஏறும். அங்ஙனம் குண்டலினி சக்தி மேல்ஏறுவது பற்றிய உணர்வெழுச்சி நிலை பற்றிச் சித்தர்கள் தரும் விளக்கங்கள் சுவாரசியமானவை.*

**ஆடுபாம்பே சுழன்றாடு பாம்பே** ~ பாம்பாட்டிச் சித்தர்.

**மூலத் தெருவினில் ஓர் பாய்ச்சல் அந்த**
**முச்சந்தி வீதியில் ஓர் பாய்ச்சல்**
**மேலைத் தெருவினில் ஓர் பாய்ச்சல் பரி**
**வேடிக்கை பார்க்கலாம் ஞானப் பெண்ணே**

– வாலைஆனந்தர்

*மூலத்தெரு - மூலாதாரம். முச்சந்தி - ஆக்ஞை; மேலைத்தெரு - பிரமரந்திரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுபந்தம் 9.

# அர்ச்சனை

## (தொடர் விளக்கம்)

ஆலய அன்றாடக் கிரியைகளில் அதிக இடத்தைப் பிடிப் பது அர்ச்சனை. சுவாமிக்கு அபிஷேகஞ் செய்து அலங்கரித்து ஆசமனீயம், அர்க்கியம், பாத்தியம் கொடுத்து நைவேத்தியம் பண்ணித் தீபாராதனை செய்து மந்திரசகிதம் மலர் தூவிப் பஞ் சாலாத்தி எடுத்துத் தோத்திரம் பாடி முடிப்பது என்ற அவ்வள விற்கும் ஒரு தொகுதிப் பெயராய் இருப்பது அர்ச்சனை. இவ்வ கையில் பூசை என்ற சொற்பொருள் நிலைக்குச் சமனானது அர்ச் சனை. பூசகரை அர்ச்சகர் என்பது பிரசித்த வழக்கு. குறித்த நிகழ்வுகளுக்குள் மந்திரமோதி மலர் தூவுதல் என்ற நிகழ்ச்சிக்கு மட்டும் தனியுரிமை உள்ளதாக அர்ச்சனை என்ற சொல் வழங் கப்படுதலும் ஒன்று. அதற்கும் வேறாக, தனிப்பட்ட முறையிற் பக்தர்கள் பழம், பாக்கு, வெற்றிலை, வாசனைத் திரவியம், கற்பூரம் என்பன கொடுத்துச் செய்விக்கும் ஒரு சிறு கிரியையே அர்ச்சனை என வழங்குதலும் மற்றொன்று. இங்ஙனம் அர்ச் சனை என்ற ஒரே சொல் மூவேறு நிலைப்பட்ட பொருளு ணர்த்துஞ் சொல்லாய் இருந்தும் குறித்த மூன்றாவது பொருள் சுட்டும் நிலை அளவிற்கு இச்சொற் பொருள் வழக்காற்றில் மட்டுப்பட்டுத்தப்பட்டுப் போயிருக்கிறது. இதன் தன்மை பற்றிய உண்மை நோக்கில் இதுவும் கால, சிரம சிக்கனத்துக்காகச் சிறிய அளவிற் குறுக்கி அமைக்கப்பட்ட ஒரு பூசையாயிருத்தல் பரமரகசியம். அஃதிருக்க,

கோயிலில் வேளைக்கு வேளை விரிவான பூசை நடந்து கொண்டிருக்கையில் பிரத்தியேகமாக இப்படி ஒன்றும் நடை முறையில் இருப்பது ஏன்? என்ற ஆசங்கையும் விடுவிக்கப்பட வேண்டியதே ஆம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் நோக்கில் பொது நோக்கு, சிறப்பு நோக்கு என இருவகையிருத்தல் தத்துவரீதியான ஒரு உண்மை. சகலரையும் ஒரே நோக்காக நோக்கி அருள் புரியும் அவரது நிலை பொது நோக்கு நிலை ஆகும். அந்நோக்கில் அவரவர் கன்ம மல போகங்கள் ஒவ்வொருவருக்குத் தவறாமல் கிடைக்கும். தனக்கே முற்று முழுதாகத் தம்மை அர்ப்பணித்து விட்டு லௌகிக பலன் கருதாது ஆத்மிகப் பலன் மட்டும் கருதியிருக்கும் மெய்யன்பர் களைச் சிவன் நோக்கும் நோக்குச் சிறப்புநிலை நோக்காகும். பிரத்தியேகமாக அவரவரின் ஆத்மீகநிலை உயர்விற்கு வழிசெய் தல் அதன் பலனாயிருக்கும். "கடவுளே கடைக்கணித்தருள்", அடியேனைக் குறிக்கொண்டருள் "என்னையும் ஒருவன் உளன் என்று கருதி இறையிறை திருவருள் காட்டாய்" என்றிங்ஙனம் நம் திருமுறை ஆசிரியர்களும் பிறரும் வேண்டிக் கொள்வது இச் சிறப்பு நோக்கையேயாம். இதன் பலப்பேறு வெகுவிரைவில் நிகழும் என்பது மெய்யன்பர் வாக்கால் அறியப்படும்.

**தன்னையே சரண் என்றெழு வார்க்கெல்லாம்**
**பின்னையென் னார் பிரானார்** அடிகளே

என்ற அப்பர் சுவாமிகளின் அருளிப்பாடு கருதத்தகும். இவ்வகை நோக்கினால் ஆத்மீகப் பேறு மட்டுமன்றி அன்றாடத் தேவைப் பேறுகள் கூடக்கேளாதிருக்கவுமே சிவனால் அருளப்பட்டதற் கான அத்தாட்சிகள் நாயன்மார் வரலாற்றில் இருத்தல் கண்கூடு. திருவள்ளுவர் அரசன் நோக்கில் பொதுநோக்கு, வரிசையாய் நோக்கும் நோக்கு என இரண்டிருத்தலைக் குறிப்பிட்டிருப்பதே சிவன் நோக்கில் அவ்விருவகையும் இருத்தலுக்கு நிதர்சனமாம். அரசனுக்குத் திருவள்ளுவர் கொடுத்த பெயரே இறை என்பது. அண்டத்துக்கு இறைவனான சிவனால் நியமிக்கப்பட்டுப் பிண்ட மாகிய மனிதலோகத் தலைவனாய் இருப்பவன் அரசன் என்பது வள்ளுவர் கருத்து. ஆதலால், இது உண்மை நிதர்சனமே ஆகும். இறைவனின் பிரதிநிதி அரசன் அத்தொடர்பில், இறைவனுக்கு உளவாம் இருநோக்கும் அரசனுக்கும் அமைந்தன எனக் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதல்லால் அரசனுக்கு அவ்விரு நோக்கும் இருப்பதற்குக் காரணம் வேறு காண்டல் இயலாததாகும்.

தத்துவஞானக் காட்சியொடு பட்டதாய் உள்ள இவ்விருவகைச் சிவன் நோக்கின் அடிப்படையிலேயே ஆலயத்தில் எல்லார்க்கும் பொதுவான ஒரு பூசையும் அதையடுத்து அவரர்க்குச் சிறப்பான அர்ச்சனை என்ற மற்றொரு பூசையும் அமைத்திருக்கும் பாங்கை அறிதல் சுவாரசியமானது. ஒவ்வொரு அர்ச்சனையிலும் அர்ச்சகர் தனித்தனியாக இன்ன நட்சத்திரத்தில் பிறந்த இன்ன பெயர் உள்ளவருக்கு இன்னது சித்தியாகும் பொருட்டு எனச் சுவாமிக்கு அறிவித்தலின் தாற்பரியம் குறிக்கப்பட்டவர் பேரில் சுவாமியின் சிறப்பு நோக்கை அறிமுகப்படுத்தல் என அறிதல் வேண்டும். எல்லாம் அறியும் சுவாமிக்குத் தெரியாது என்றா? இவர் விடுத்து விடுத்துச் சொல்லல் வேண்டும் என்ற ஆசங்கைக்கு இங்கே இடமில்லை. சுவாமிக்கே சரணராய் விட்ட மெய்யியலாளர் விஷயத்தில் அது சொல்லாமலும் அமையலாம். அவரல்லாத நம்மவர் விஷயத்திற் சுவாமியின் சிறப்பு நோக்கை அறிமுகப்படுத்துதலுக்குச் சொல்லித் தான் ஆகவேண்டும்.

இனி இந்த அர்ச்சனையும் பூசையின் பிரதான நோக்குப் போல ஆத்மீகப் பேற்று நோக்கில் நிகழ்வது என அறிதல் தகும். அர்ச்சனைப் பெயரில் என்ன நடைபெறுகின்றது என்பதை நோக்குதல் மூலம் அது இனிது புலனாகும். பக்தர் ஒருவர் அர்ச்சனைக்குச் சென்று பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாசனைத் திரவியம், கற்பூரம், காசு என்பவற்றை ஐயர் வசம் ஒப்புவிக்கிறார். இப்பொருட்கள் ஒவ்வொன்றும் குறித்த பக்தனின் நிலையைச் சுவாமிக்கு அறிவிக்கும் அறிகுறிப் பொருள் ஆகும் பாங்கிலேயே உபயோகமாவது அர்ச்சனையின் யதார்த்தநிலை. முதலில் கோத்திரம், நட்சத்திரம், பெயர் என்பவற்றைச் சுட்டி அவனைச் சுவாமிக்கு அறிவிக்கும் ஐயர் அவன் கொடுத்த பழத்தை நிவேதிக்கையில் அவனுள்ளம் பழம் போற் பக்குவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவேண்டு மாற்றையும், வெற்றிலை பாக்குச் சுருளை அர்ப் பணிக்கையில் அவனை மயக்கி வருத்தும் மாயாவிசாரமான ஆசாபாசச் சுருள்களை அவன் நீங்கி நிற்கவேண்டுமாற்றையும், தேங்காயை உடைத்து நிவேதிக்கையில் தேங்காய்ச் சிரட்டை போல் கடினமாய் அவனைப் பந்தித்திருந்த அவனது மலத் திணிவு உடைந்து தேங்காயின் உட்பாகம் போல அவனது ஆன்மா தூய வெண்மையான சுத்த சைதன்யமாய் ஆகவேண்டு மாற்றையும், காசை அர்ப்பணிக்கையில் அவன் தன்னுடைமைகளைத் தனக்கென்று இல்லாமல் சுவாமிக்கெனவே அர்ப்பணிக்கும் விநயத்தையும் ஐயர் சுவாமிக்குத் தெரிவிப்பவர் ஆகின்றார். இவ்வகையிற் பக்குவி ஆக்கி அவனை ஆண்டருள வேண்டும் என்று சுவாமியின் சிறப்பு நோக்கை அவன் பக்கம் திருப்புதற் காக உணர்வுருக்கமாக மந்திரமோதி மலரிறைத்துப் பூசிக்கிறார். முடிவில் அவன் கொடுத்த கற்பூரத்தைக் கொளுத்தி அவனது ஆத்துமா ஞானசோதியாய்ப் பிரகாசிக்கும் நினைவை எழுப்பும் பாங்கில் அவன் கண்டு தரிசிக்கும் படியாக தீபாராதனை பண்ணி முடிக்கின்றார். அத்தீபத்தை அவனே தொட்டுத் திருப்பி கொள் ளவும் செய்கிறார். அதன்மேல் விபூதி, சந்தனம், தீர்த்தம், வில்வம், அர்ச்சனை செய்து எடுத்த பொருள்கள் என்பவற்றை அவன் கையில் கொண்டுவந்து அளிக்கிறார். அவற்றுக்குப் பொது பெயர் "பிரசாதம்". பிரசாதம் என்ற பெயர் சுவாமி கருணைக்கு உரியது. அதனால், ஐயர் பிரசாதமும் கொடுத்தார் என்றால் தாம் வேண்டிக் கொண்டதற்கிணங்கச் சுவாமியின் கருணை அவனுக்குக் கிடைக்கின்றதாக அறிவித்துக் கொள்கிறார் என் பதே தாற்பரியம். இனி, அர்ச்சனைப் பிரசாதம் வழங்குவதற் கென அனுபவ ரீதியாக வகுக்கப்பட்டிருக்கும் இடத்தைப் பொறுத் தும் அர்ச்சனையின் அந்தரங்கப் பலன் அறியப்பட இருத்தல் சுவாரசியமானது. விதிமுறைப்படி ஸ்தம்ப மண்டபத்தில் இருக் கும் நந்தியின் முன் வைத்தே அது வழங்கப்பட வேண்டி இருக்கும். அந்த நந்தி வேறெங்கும் திரும்பாது ஒரே நேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையாகச் சுவாமியையே பார்த்துக் கொண்டிருப்பது. அவ்வகையில், வேறெப் பராக்குமின்றிச் சிவனையே நோக்கி இருக்கும் மெய்ந் நிலை பெற்ற சுத்தான்மாவின் அறிகுறியாய் உள்ளது அது. எனவே, அதன் முன்னிலையில் வைத்துப் பத்த னுக்கு அர்ச்சனைப் பிரசாதம் வழங்குதலின் அர்த்தம், சுவாமி உன் உள்ளத்தையும் உடைமைகளையும் ஏற்றுக்கொண்டார், இனி நீ சுத் தான்மா ஆகிவிட்டாய் என அறிவிப்பதாக அமை கிறது. அர்ச்சனை என்பதின் யதார்த்த நிலையான உட்பொரு ளும் அறிகுறிப் பொருளும் இதுவாகும். சைவஞான தத்துவ உண்மையின் அடிப்படாக, கிரியை வகையிலான ஆன்ம சுத்திச் சாதனமாக அர்ச்சனை அமைந்திருக்கும் நயம் போற்றத்தகும்.

செய்பவர், செய்விப்பவர் என்ற இருவர் நோக்கும் குறித்த உண்மையில் ஒரே முகமாக ஒன்றி நிற்கும் பட்சத்தில் மேற் கூறிய பேறு கிடைத்தல் தவறாது. ஆனால், அவரவர் தகுதியைப் பொறுத்தும் நோக்கைப் பொறுத்தும் பலன் வேறுபடுதலும் கூடும். தற்போதைய பொதுமனப் போக்கில் அன்றாட வாழ்க் கைக் குறைவு நிறைவுகளைச் சரிக்கட்டுவதே அர்ச்சனைப் பலன் என்ற விளக்கமே பரவலாக இருப்பதாகத் தெரிகின்றது. அவ்வகையில் மேற்கூறிய காமிய பூசை வகையில் இதுவுஞ் சாரும் எனக்கண்டு அது ஆபத்தர்மமாக ஒப்புக் கொள்ளப்பட்ட வாறு இதையும் ஆபத்தர்மமாக ஒப்புக் கொள்ளலாம். ஆனால், அர்ச் சனை நோக்கு ஒருதலையாகக் காமியமல்ல, ஆத்திகமே என்ற உண்மை அறிந்து கடைப்பிடிக்கப்பட வேண்டியதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுபந்தம் 10.

# மந்திரம்
## (தொடர் விளக்கம்)

மந்திரம், பாவணை, கிரியை என்ற மூன்றும் பூசையின் பிரதான அங்கங்களாம். இவற்றில் மந்திரம் என்பது பூசையிற் பெரும் பகுதியில் இடம் பிடித்துக் கொண்டிருப்பது. ஆலயங்களிற் பிரதிஷ்டையாய் இருக்கும் மூர்த்திகளே மந்திரமூர்த்திகள். அதாவது மந்திர நியாசங் காரணமாக சிலாவடிவ நிலையிலிருந்து மூர்த்தி நிலைக்கு மாற்றம் பெற்றவைகள். பூர்வ ஆசிரியர்களால் அவற்றில் நியாசம் பண்ணப்பட்டிருக்கும் மூர்த்தியில் மந்திரசக்தி மங்காமல் இருக்கும் அளவுக்கே கோயிலில் தெய்வ சாந்நித்தியம் இருப்பதாகும். அதனால், மந்திர நியாசஞ் செய்யப்பட்ட மூர்த்திகளை மந்திரத்தினாலேயே அர்ச்சித்தல் வேண்டும். அவற்றுக்கு நிகழும் நித்திய நைமித்தியங்கள் மந்திர சகிதமான கிரியைகளாகவே இருக்க வேண்டும் என்பது நியதி.

## மந்திரம் வந்த வகை

மந்திரங்கள் மனித ஆக்கங்கள் அல்ல. அவை தெய்வப் படைப்புக்கள். சிவலோகத்திற் சதாசிவ புவனத்தில் வாழுஞ் சுத்தான்மாக்கள் ஆகிய மந்திரேஸ்வரர், மந்திரமகேஸ்வரர் என்பவர்களால் தரிசிக்கப்பெற்று அவர்களாலேயே பூவுலகுக்குத் தரப்படுபவைகள். சிவலோகத்தில் அத்தகையோர் இருப்பது பற்றிச் சிவாகமங்கள் விரிவாகச் சொல்லும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நொடித்தான் மலைத் திருப்பதிகத்தில்,

**மந்திர மாமுனிவர் இவனாரென்ன எம்பெருமான்**
**நந்தமா ரூரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வரும் பாடல் ஆகமத்துக்கும் மேலாக நமக்கு உதவற் பாலது. கைலையை அடைந்தபோது தன்னைச் சுட்டி "யார்" என்று அங்கிருந்த மந்திரேஸ்வரர்கள் கேட்க. "இவன் நமது ஆரூரன்" என்று கைலாசபதி மொழிந்ததாக இப்பாடல் ஒரு நிகழ்ச்சிச் சித்திரம் தீட்டியுள்ளது. சுந்தரர் கைலை சென்றபோது அங்கு மந்திரேஸ்வரர் இருந்தமைக்கு இது நிதர்சனமாம்.

ஒவ்வோர் மந்திரமுஞ் சிவசக்தியின் ஒவ்வோர் அம்சம். குறித்த மந்திரரேஸ்வரர்கள் மூலம் அவ்வச் சக்தி அம்சங்கள் ஒலிவடிவாக மாற்றம் பெற்றுப் பூவுலகுக்கு வருகின்றன. ஒளியை (உரு) ஒலியாகவும், ஒலியை ஒளியாகவும் மாற்றுகிற இன்றைய அணுவிஞ்ஞானத்துக்கு முன்னோடியாய் உள்ள தெய்வீக மய மான ஒரு பரம விஞ்ஞானமாக இது அமைந்திருப்பதாகக் கொள் ளலாம். அவ்வகையால், பூவுலகத்தில் உள்ள முனிவர்கள் தம் அகச்செவியால் கேட்டுப் பிறருக்கு அறிவித்தபடி நாங்கள் கேட் கும் ஒவ்வோர் மந்திரமும் ஒவ்வோர் தெய்வசக்தி அம்சத்தின் பிரதிநிதியாம். உச்சாரணக் கிரமப் பிரகாரம், அதாவது யதாத் தமான உச்சரிப்பு விதிகளுக்கு அமைய, ஒரு மந்திரம் உச்சரிக் கப்படுகையில், உச்சரிப்பவர் நாவில் உச்சரிக்கப்படுஞ் சூழலில் தெய்வ சக்தி பிரசன்னமாகிறது. இது அனுபவக் காட்சி. இத்த கைய மந்திர ஒலிகள் பூமியை அடையும்போது அவற்றை ஏற்குந் தகுதி இருஷிகளுக்கே உளதாகும். அத்தகைய இருஷிகள் வாயி லாகவே உபதேசக் கிரமமாக அவை ஏனையரும் அறியும் அள வுக்கு வருகின்றன. அவர்கள் நிறைமொழி மாந்தர் என்றும் அவர்கள் வாயிலாக உபதேசிக்கப்பெற்று உலகில் நிலவும் மந்திரங்களின் மகிமையே அவர்கள் பெருமைக்கு உரைகல்லாம் எனவும் தெரிவிப்பர் திருவள்ளுவர்.

## மந்திரார்த்தம்

இனி, மந்திரம் என்றால் மறை, இரகசியம் என்று பொருள். பொது நோக்கில் அதன் பொருள் எல்லாவகை இரகசியங் களுக்கும் உரித்துடையது. ஆயினுஞ் சிறப்பு நோக்கில் ஆத்மிக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்விக இரகசியங்களுக்கே அது முன்னுரிமை பூண்டதாகும். இது ஒரு காரணம். பூதான்மா முதலான ஆன்ம நிலைகளை அறுவகையாகப்பகுத்து விளக்குஞ் "சர்வஞானோத்தரம்" என்ற ஆகமம். (பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, சீவான்மா, மந்திரான்மா, பரமான்மா.) இதற்கேற்ப, உள்ளார்ந்த உணர்வு பூர்வமான ஆத்மிக விளைவினாற் சிவாசாரியத் தகுதி பெற்ற உயிர்களை மந்திரான்மா எனக்குறிப்பிடுதல் மற்றொரு காரணம். இவ்விரு காரணங்களாலும் பூசையில் மந்திரம் முதன்மை பெற்றிருத்தல் கண்கூடு, யசுர் வேதத்தில் மந்திரம் "பிராஹ்மன்" என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. மந்திர விளக்கம் பற்றிய வேதப் பகுதிகள் "பிராஹ்மணங்கள்" எனப்பட்டதும், மந்திரக் கிரியைகளுக்கு உரியவராகத் தெரியப்பட்டோர் பிராஹ்மணர் எனப்பட்டதும் இதனாலேயே ஆம்.

## மந்திர உபயோகம்

உயிர் ஒவ்வொன்றிற்கும் மந்திரத் தொடர்பு இயல்பானது: தத்துவ ரீதியில் ஆனது. தத்துவ ஞானத்தின்படி, உடல் சார்ந்து வாழும் உயிர் தன் ஆன்ம ஈட்டத்துக்கும் அனுபவத்துக்கும் வழியாகக் கொள்ளும் அத்துவாக்கள் ஆறில் முதன்மையாக உள்ளது மந்திராத்துவா எனப் பெயர்பெறும். இந்த இயற்கைச் சம்பந்தத்தினாலேயே முற்குறிப்பிட்டவாறு உயிருக்கு ஒரு நிலையில் மந்திராத்மாவாகும் நிலை உளதாவது எனக் கொள்ள வேண்டும். இன்னும், இதனாலேயே சர்வசாமானிய வாழ்க்கைத் தேவைகளின் நிறைவேற்றங் குறித்து அறிவொழுக்க ஆசாரங் குறைந்த சாமானியர்களிடத்திற் கூடப் பேய் ஏவுதல், பேய் ஓட்டுதல், பில்லிசூனியம் போன்ற செயல்களைச் செய்தல், மோஹனம், சீவகரணம், மாரணம் முதலிய தந்திரங்கள் செய்தல், நோய் ஆக்குதல் நீக்குதல் போன்ற மந்திர சாதனைகள் என்பன பிரசித்தமாக இருந்து வருகின்றன என்பதும் அறியத் தகும். இவற்றுக்கான வழிவகை விளக்கங்கள் அதர்வ வேதத்தில் நிறைய உள. திருமந்திரம் நாலாம் தந்திரத்தில் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் திருவம்பலச் சக்கரம் என்னும் பகுதியில் 947 - 1002 வரை ஆன மந்திரங்களில் முறையே தம்பனம், மோகனம், உச்சாடனம், மாரணம், வசியம், ஆகர்ஷணம் என்ற மந்திர வித்தைகள் பற்றிய விளக்கம் கூறப்படுகிறது. வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளாத பௌத்தம், இஸ்லாம், சமணம் முதலாய சமயங்களிற் கூட மந்திரசாதனை பிரபல்யமாய் இருத்தல் கண்கூடு.

இவ்வகையில் பொதுமக்கள் கலை எனத்தக்க நிலையில் இருக்கும் மந்திரக் கலையைச் சைவம் சாமானியமானவையும் தீங்கு கலந்தவையுமான லௌகிகத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் மந்திர வித்தையாகப் பிரதானப்படுத்தாமல், திருவருட்பேறு அளிக்கத்தக்க தபம், செபம், தியானம், பூசைவழிபாடு, கோயிற் கிரியைகளுக்கே உரியனவாக்கி உயர்பெறும் பலனாகிய ஆத்மிக ஈடேற்றத்துக்கு வழி அமைத்து வைத்த திறம் போற்றத்தகும். இவற்றுக்காக அமையும் மந்திரப் பயிற்சி உபாசனாவித்தை எனப்படும்.

## மந்திர கவனம்!

மந்திரங்கள் தெய்வீகமானவை: ஆற்றல் மிக்கவை: உடனுக்குடன் பலன் தருபவை. கூப்பிட்ட குரல் கேட்டவன் "ஏன்" என்று கொண்டு உடன் தோன்றுவது போலப் பிரயோகிக்கப்பட்ட மாத்திரத்தே உரிய தெய்வ சக்தியை முன்னிலையாக்கிக் கைம்மேற் பலன் தருபவை: தீமையைப் போக்கி நன்மையை ஆக்குபவை. ஆனால், உபாசனை மார்க்கத்தை அனுசரியாத வரும், உச்சாரணக் கிரமம் பயிலாதவரும் உச்சரிக்கையில் அவை பலன் தரமாட்டா. அத்தகையோரால் நேரக்கூடும் தவறுகளையொட்டி விபரீத பலன்களையும் விளைக்கக் கூடியவை அவை. "மந்திரங்களோடு விளையாடக்கூடாது" என்பர் விஷயம் அறிந்தோர் நெருப்பொடு விளையாடுதல், பாம்போடு விளையாடுதல் போல இது ஆபத்துக்கும் இடமாகும் என்பது அவர்களின் அனுபவக்காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உச்சாரணக் கிரமம்

மந்திரம் ஒவ்வொன்றும் சிவசக்தியின் பல்வேறு அம்சங் களில் ஒவ்வொன்றின் பிரதிநிதி என்றோம். அவ்வுண்மையை ஒட்டி அவ்வம் மந்திரங்களால் பிரதிநிதிக்கப்படும் தெய்வீக சக்தி நிலைகளை அவற்றிற் பரிச்சயம் உள்ள தியான யோகிகள் வாயி லாக அறிந்து நாளிலும் பொழுதிலும் அவற்றைப் பூசித்துப் பக்தி பண்ணிக் கொள்ளவேண்டும். அப்பக்தி உணர்வுடனே அவ்வம் மந்திரங்களைக் குறில், நெடில், அளபெடை என்ற ஒலிக் கிரமங் களுக்கு ஏற்ப உச்சரித்தும் வரவேண்டும். தகுதி யான குருவின் உதவியுடன் இவ்வகையில் நீண்டபயிற்சி உடை யோரே மந்திர உபாசகர் ஆவர். மந்திரங்கள் சுயமாகப் படித்தறியும் பொருள் கள் அல்ல: உபதேசக் கிரமமாக அறியப்படுபவை என்ற விளக் கம் இன்றியமையாதது.

இனி, அவ்வகைத் தியானயோக முதிர்ச்சியினால் மனம் இறந்த (அமநஸ்க) நிலையில் நின்று ஒளிவடிவாகவும் நாதமய மாகவும் மந்திரங்களை அறியும் அனுபவ நிலையில் வைத்துப் பழத்தின் சுவையினாற் பழம் அறியப்படுவது போலவும், மணியின் ஓசையினால் மணி அறியப்படுவது போலவும், குறித்த ஒளிர சனை நாதரசனைகளினால் மந்திர அதிதேவதை அறியப்படும். அந்த அனுபவ நிலையில் நின்று, சம்பந்தப்பட்ட மந்திரங்களை உச்சரிக்கையில் மணியின் ஓசை அலைகளும் நீரின் அலை களும் ஒன்றை ஒன்று மேவி அலைவது போல மந்திர நாதம் மூலாதாரத்தில் இருந்து துவாத சாந்தம் வரை அலை அலை யாகப்பரவும் அனுபவத்தை மனக்காட்சியாகக் கண்டு, பயின்று வருதல் உச்சாரணக்கிரமம் எனப்படும். பூசை நியமங்களில் 'ஆவாஹனம்" என்ற கிரியை இப்பயிற்சி இன்றி அமையவே அமையாது என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசாத மந்திரம்

ஆவாஹனம் என்பது பூசைக் கிரியாம்சங்களில் முதற் கிரியை ; 'அழைத்தல்' என்பது அதன் பொருள். அதாவது மனம் கடந்த நிலையில் விளங்கும் தெய்வ சைதன்யத்தைப் பூசைக்கு முன்னிலையாய் இருக்குங்கும்பத்திலோ பிம்பத்திலோ இயந் திரத்திலோ கொணர்ந்து அமர்த்துதல் ஆகும். கிரியைகளின் போது சிவாசாரியர்கள் பன்னீர் தெளித்து அஷ்ட கந்த புஷ்பங் களை இரு கைகளையும் ஒன்றாகப் பிடித்து அடக்கித் தொப் பூழின் கீழேயுள்ள மூலாதாரம் முதல் மேலேயுள்ள துவாத சாந் தம் வரை படிப்படியாக உயர்த்திக் கொண்டுபோய்த் துவாத சாந்தத்தில் நிறுத்தி வைத்துத் தியானித்துப் பின் படிப்படியாக இறக்கி நெற்றி நடுவிலும் நாசி நுனியிலும் இருதயத் தானத் திலும் தரித்துத் தரித்துத் தியானித்துக்கொண்டு கும்பத்திலோ பிம்பத்திலோ இயந்திரத்திலோ அப்புஷ்பங்களை இட்டு வணங் குவதைப் பார்க்கிறோம். இதுவே ஆவாகனம் பற்றிய புற நிகழ்ச்சி. இதற்கு அனுசரணையாக அமையும் அகநிகழ்ச்சி சுவாரசியமானது. இதற்குரிய மந்திரம், **'ஓம் ஹம் ஹாம் ஹௌம் சிவாயநம'** என்பது. இதுவே பிரசாத மந்திரம். இக்கிரியையின் போது இம்மந்திரம், மேற்கண்ட உச்சாரணக் கிரமமாக உச்சரிக் கப்பட வேண்டியது அத்தியாவசியகம். மூலதாரம் முதல் துவாத சாந்தம் வரை இம்மந்திரம், சம்பந்தப்பட்டவர் கருத்துக் கிணங்க 12, 16 அல்லது 24 கலைகளாகப் பிரிந்திசைக்கக் காணப்படும். அக்கலைகள் 'மேதாகலாதி உன்மனாகலாந்தம்" எனக் குறிக்கப் பெறும். புஷ்பாஞ்சலியை உன்மன கலையளவிற் உயர்த்திய சிவாச்சாரியர், இம்மந்திர உச்சாரணத்தினால் பரவும் நாத அலைகளால் உந்தப்பட்டுச் சிவம் பொன்னொளி மயமாகத் தமது புஷ்பாஞ்சலியிற் பிரவேசித்ததாகக் காண்கிறார். மீளக் கீழிறக்கையில் நெற்றி நடுவில் கோடி சந்திரப் பிரகாசம் அள வான அமிர்த மயமாய் வெண்ணிற ஒளியாய் அது அகில மெல் லாம் வியாபிக்குமாறு கண்டு தியானித்துப் பின் அவ்வொலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைகள் தமது சுவாசத்தால் தள்ளுண்டு புஷ்பாஞ்சலியிற் சேர்த்து கொள்வதாகக் கண்டு தியானித்து அதன் மேல், தாம் புறத்திற்கும் பூசிக்கக் கருதும் மூர்த்தி தமது இருதயத்தில் இருப் பதாகக் கண்டு இருதயத்தானத்தெதிரே நிறுத்திக் தியானித்து அதன் பின்பே, அதனை முன்னிலையாய் உள்ள கும்பத்திலோ, பிப்பத்திலோ, இயந்திரத்திலோ சேர்க்கின்றார். இக்கிரியை, அவர் தம் அக மண்டலம் முழுவதையும் கசக்கிப் பிழிந்தெடுக் கும் கஷ்டசாத்தியமான ஒரு வேலை. கசறத்தெடுத்த வேலை எனிலும் பொருந்தும். இது சித்தியாவதற்கு உபகரிக்கும் பின்ன ணிச் சூழ்நிலை குறித்த உச்சாரணக் கிரமப் பயிற்சிச் சூழ்நிலை என்பது அறியத்தகும்.

## மந்திரப் பகுதிகள்

பூசையிற் பிரயோகமாகும் மந்திரமொன்று பொதுவான முப்பெரும் பகுதிகள் உள்ளதாய் இருக்கும். **1. பிரணவமும் பீஜமும், 2. தெய்வநாமம் அல்லது தெய்வ வீபூதி (மகத்துவம்) உணர்த்தும் பகுதி, 3. நம முதலாக உள்ள எழுவகை முடிவுகள்.** முதற் பகுதியிலுள்ள பிரணவம் என்பது எல்லா மந்திரங்கட்கும் முதலில் நிற்க வேண்டுவது. அது விநாயக வடிவம். அதற் கிணங்க எல்லாப் பூசை வழிபாடுகளிலும் விநாயகர் முதலில் இடம் பெறுவது போல எல்லா மந்திரங்களிலும் அது முதலிடம் வகிக்கின்றது. விநாயகத் தியானமின்றி தொடங்கும் எவ்வழிபாடும் நடந்தேறவும் மாட்டாது பலன் தருவது ஆகாது என்பது போல, பிரணவத்தை முதற்கொண்டு உச்சரிக்கப்படாத எம்மந்திரமும் உச்சரிக்கப் பட்டதும் ஆகாது; பலன் தருவதும் ஆகாது என்பர். அதனையும் உச்சாரணக்கிரமம் அறிந்து உச்சரிக்க வேண்டுதல் பிரதானம். அதன் உச்சாரணம் மூலாதாரம் முதல் ஆஜ்ஞை ஈறாக உள்ள ஆதாரங்கள் ஆறையும் தொடுத்து இழுத்துச் சுருட்டி வலித்துக் கொண்டு பிரமரந்திரம் வரை எட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. உ. ம என்ற அதன் உட்கூறுகள் புலப்பட உச்சரிக்கப்பட வேண்டும். ஆரம்பிக்கும் போது 'அ' மயமாய் அடிவயிற்று நரம்பு களையும் முடிக்கும் போது 'ம' மயமாய் உச்சி நரம்புகளையும் தாக்குவதாய் இருக்க வேண்டும்.

## பீஜமந்திரம் – முதற்பகுதி

பிரணவத்தை அடுத்தது **'பீஜம்'**. பீஜம் என்றால் விதை என்பது பொருள். ஒரு விருட்சத்துக்குரிய வளர்ச்சிச் சத்து முழு வதும் ஒரு விதைக்குள் அடங்கியிருப்பது போல உச்சரிக்கப் படும் மந்திரத்தின் மூலமாகிய தெய்வ சக்தியின் ஆற்றல் முழு வதும் அம்மந்திரத்துக்குரிய பீஜத்திலேயே அடங்கியிருக்கும் என்பர். இயந்திர இயக்கத்திற்கு இன்றியமையாச் சாதனமான 'பற்றறி" போல்வது இது எனவும் கூறலாம். **ஹம், ஹாம், ஹௌம், ஹ்றீம், ஹ்றாம், ஹ்றௌம், கம், காம், கைம்,** முதலானவாகப் பீஜங்கள் பல. ஒவ்வோர் பீஜம் ஒவ்வோர் மூர்த்தத்திற்குச் சிறப் பாகச் கொள்ளப்படுவது உண்டு. **'ஹம்' சிவபீஜம் 'ஹ்றீம்' சக்தி பீஜம் 'கம்' கணபதி பீஜம்** என்றாற்போலக் கொள்ளும் நிலை உண்டு. இப் பீஜங்கள் ஒவ்வொன்றும் இயற்கை ஒலிகள் ; பிரித் தறியவோ, பதப்பொருள் கொள்ளவோ இடந்தராதவைகள் என்பது இவை பற்றிய ஒரு புதிர். இப் பீஜங்களில் நான்கு, ஏழு எழுத்தொலிகளைத் தொகுத்து வைத்திருக்கும் பீஜங்களும் உள. 'ஹ்றீம்" என்ற மகாமாயாபீஜம் **'ஹ், ர், ஈ, ம்,'** என்ற நான் கெழுத்தும் பீஜமாகவும், **'க்ஷ்ம்யூம்'** என்ற சிந்தாமணிபீஜம் **'க், ஷ், ர், ம், ய், உ, ம்,** என்ற ஏழெழுத்துப் பீஜமாகவும் இருக்கும் நிலை கருதத்தகும். இங்ஙனம் நான்கு அல்லது ஏழு போன்ற தொகையான ஒலிகளை ஒரொலியாகப் பிணைத்து உச்சரிப் பதில் இருந்து பீஜாகாரங்களின் பயனைப் பற்றிய மற்றும் ஓர் உண்மை புலனாகும். பல ஒலிகளை ஓரொலியாக இணைத்து ஒலிப்பதன் மூலம் உடலிற் பல நரம்புகள் தொழிற்படுத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மூலம் ஆதாரங்கள் அசைத்து இயக்கப்பட அங்கங்குள்ள தெய்வீக சக்திகள் விளக்கமுறுதல் விசேட பலனாம். தெய்வ மகிமைகள் பற்றிய மந்திரங்கட்கு மட்டுமல்லாது சாதாரண பூத பௌதிக விஷயங்கள் பற்றிய மந்திரங்களுக்குமே பீஜங்கள் உள. **'லம்'** - பிருதிவி பீஜம்; வம் - அப்புபீஜம் - "றம்" தேயு பீஜம்; 'யம்" - வாயு பீஜம் ; 'கம்' - ஆகாச பீஜம் என உள்ளன. இதை நோக்குகையில் பொருள்கள் ஒவ்வொன்றும் பிரத்தியேகமான ஒலி விசேடங் களோடு கூடியவை எனவும், அவ்வப்பொருள்கள் இருக்குமிடந் தோறும் அவ்வவற்றினொலி நிகழ்ந்துகொண்டி ருக்கும் எனவும், இன்று பரவலாக அறியப்படும் விஞ்ஞான உண்மைக்கும் ஏற் புடைத்தாம் வகையில் பொருள்கள் தோறும் இருக்கக்கூடும் ஒலி களின் மூல அம்சமே, ஆகமங்களிற் பீஜம் எனப்பட்டது எனத் துணிதலும் பொருந்தும் எனத் தோன்றுகிறது.

## இரண்டாம் பகுதி

மந்திரமொன்றின் இரண்டாவது பகுதி, ஒன்றில் ஒரு மூர்த்தியின் நாமமாக அல்லது அதன் மகிமை விலாசங்களின் ஓரம்சமாக அமையும். **'ஓம் கம் விக்னராஜாய நம'** என்கையில் அது விநாயகரின் மகிமை விலாசம் குறிக்கும். இப்பகுதி மூர்த்தியின் பலவேறு மகிமை விலாசங்களைத் தொகுத்துக் கூறும் மாலாமந்திரம் ஆகவும் அமையும். பிரதானமாகச் சைவ வழிபாட்டு முறைகளிலும் சைவானுஷ்டானத்திலும் பெரும்பான் மையாக வழங்கும் சிவ மந்திரங்கள் பதினொன்று. அவை சம் ஹிதா மந்திரங்கள் எனப்படும். அவற்றில் **' ஈசானாய நம'** முத லிய ஐந்தும் பஞ்சப்பிரம மந்திரம் எனவும், **'இருதயாய நம'** முதலிய ஆறும் அங்க மந்திரம் எனவும் வழங்கும். ''ஈசான'' முதலிய ஐந்தும் சிவனது ஐவேறு மூர்த்தங்களைக் குறிப்பன. ஆதலின் அவை பஞ்சப்பிரம மந்திரங்கள் ஆயின. ''இருதய'' முதலிய ஆறும் சிவமூர்த்தத்தில் அமையும் அங்கங்களைக் குறிப்பன. அதனால் அங்க மந்திரம் எனப்படும். அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையில் ஆறாக இருப்பதால் 'ஷடங்க மந்திரம் எனப் படுவதும் உண்டு. ஷட் - ஆறு. ஆறங்கமாவன இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் என்பன.

## மூன்றாவது பகுதி

இனி, மந்திரமொன்றின் மூன்றாவது பாகமாக அமைவன மகாமந்திரங்கள் எனப்படும் அவை **'நம', 'ஸ்வாஹா', 'ஸ்வதா', 'வௌஷட்', வஷட்', 'பட்', ஹூம்'** என்பன . இவற்றில் ஏதேனும் ஒன்று இல்லாமல் ஒரு மந்திரமும் இல்லை. இவற்றில் அபார மான தெய்வீக ஆற்றல் நிரம்பி இருத்தல் அனுபவ சித்தம். இவையும் இயற்கை ஒலிகளே. பதப்பொருள் ஆய்வுக்கு இவை இடந்தரமாட்டா. ஆனால், ஒவ்வொன்றும் தன்னாற் கருதப்படும் இலக்கை எய்துவித்தலில் உத்தரவாதப் பொறுப்புள்ளது எனப் படும். அவ்வகையில், 'நம' பிரார்த்**தனையாய்ப் பேறு தரும். 'ஸ்வாஹா' பிரார்த்திக்கப்பட்ட தேவதைக்குத் திருப்தி ஏற்படச் செய்யும். 'ஸ்வதா' நம்பிக்கையை, கவர்ச்சியை ஊட்டும். 'வௌஷட்' குறித்த தேவதையை வழிபடுவோர்க்கு அனுக்கமாக்கும். 'வஷட்' தேவதையை மயக்கும். 'பட்' இடையூறுகளை அழிக்கும். 'ஹூம்' தனித்தும் ' ஹூம் பட்' என முன்னையதுடன் சேர்ந்தும் செயலைத் துரிதப்படுத்தும். அத்துடன் எதிர்பக்கத்தால் நிகழும் அழிவைத் தடுக்கவும் உதவும்.** சிங்கமுகாசூரன் போரில் சுப்பிரமணிய சுவாமி சிங்கமுகன் தலைகளையும் கைகளையும் வெட்ட வெட்ட அவை மீண்டும் மீண்டும் முளைத்துத் தொந்தரவு பண்ணும் நிலையை இல்லாமல் செய்வதற்கு அவர் "ஹூம்" மந்திரத்தையே பிரயோகித்ததாகக் கச்சியப்பர் தரும் கருத்து ஒன்றுண்டு. சாமா னிய வியவகாரங்களிலும் ஏவப்பட்டோரைத் துரிதப்படுத்திச் செயலில் இறங்க விரும்புவோர் 'உம்' என உரப்புதல் கண் கூடு. பிள்ளைகள் செய்யும் குறும்புத் தொழிலைத் தடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார் **'உம்'** எனலும் கண்கூடு. இவை அந்த மந்திரப் பிரயோ கத்தின் வழிவழியாக, சாமானிய நடைமுறயில் இடம்பெற வந்தன எனல் தகும். சைவ அனுஷ்டானத்தின் ஆசமன மந்திரங்களாக உச்சரிக்கப்படுபவைகள், **'ஆத்ம தத்வாய ஸ்வதா', 'வித்யா தத்வாய ஸ்வதா', 'சிவ தத்வாய ஸ்வதா'** எனத் தத்துவ சுத்தி ஏற்படுதலை நம்பகமாக்கும் வகையில் **'ஸ்வதா'** உடன் இணைத் திருக்கக் காணலாம்.

சைவக்கிரியைகளில் இடம்பெறும் மற்றொரு மந்திரத் தொகுதி **பஞ்சகலா மந்திரம்** எனப்படும். குண்ட மண்டபம் இட்டுச் செய்யும் கிரியைகளிலும் தீட்சை அனுட்டானக் கிரியைகளிலும் இவை விசேடமாக இடம்பெறுவன. **'நிவர்த்தி', பிரதிஷ்டா', 'வித்தியா' 'சாந்தி', சாந்தியதீதா'**, என இவை இவை பெயர் பெறும். **'ஓம் நிவீர்த்தி கலாயை நம'** என்பது முதலாக இவை உச்சரிக்கப்படுதல் காணலாம். இவ்வைந்தும் சக்தி வியாப கத்தின் ஐந்து கூறுகளைக் குறிக்கும்போது **சக்தி கலைகள்** என்றும், சக்தியால் வியாபிக்கப் பெற்ற மாயையின் பகுதிகளைக் குறிக்கும் பொது **சக்தி அதிட்டித கலைகள்** எனவும் பெயர் பெறும். கலை - பகுதி அல்லது கூறு. இவற்றின் சைவசித்தாந்தப் பின்னணி விசாரித்து அறியத்தகும்.

## காயத்ரி மந்திரம்

மந்திரம் என்ற முறையில் இந்து சமயம் சார்ந்த எல்லாப் பிரிவினர் இடையிலும் பரவல் வழக்கில் இருந்து கொண்டி ருக்கும் ஒரு மந்திரம் காயத்ரி ஆகும். ஆனால், அம்மந்திரம் குறிக்குந் தேவதை எது என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. "ஸ்மிருதி" மதத்தவர் அது சூரியனைக் குறிக்கும் என்பர். வைஷ்ணவ மதத்தார் அது நாராயணனைக் குறிக்கும் என்பர். சைவம் இவ்விரு கருத்துக்களையும் ஏற்பதில்லை. பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாவம் உடையதாயினும் சூரியன் கிரகம் என்றால் கிரகமே தான். அவ்வகையில் அது சடப்பொருள் வகையிற் சேரும். ஆதலின், அதை சித்துப் பொருளாய், தேவதையாகக் கொள்ளு தற்கு இயைபில்லை. நாராயணன் பரப்பிரகிருதி என்ற கருத்துப் பிர பஞ்சம் பற்றிய சைவசித்தாந்த விளக்கிற்கு ஏற்புடைய தாதல் இல்லை. சூரியனைத் தேவதை எனக்கொள்வோர்களின் அறியா மைக்கு இரங்கி அப்பர் சுவாமிகள்,

> "அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்
> அருக்க னாவா னரனுரு வல்லனோ
> இருக்கு நான்மறை ஈசனை யேதொழும்
> கருத்தி னைநினை யார்கள் மனவரே"

எனக் கூறி உண்மையை விளக்கியதுண்டு. வைஷ்ணவராகவே பிறந்து "விஷ்ணுதத்தர்" என்ற பெயரோடு இருந்து பூர்வ புண் ணிய வசத்தினாற் சக்திநிபாதம் பெற்றுச் சிவமகிமை உணர்ந்து "ஹரதத்தர்" எனப் பெயரையும் மாற்றிக்கொண்டவராகிய ஹர தத்த சிவாசாரியார் சிவபரத்துவத்தை நிரூபிப்பதற்கு எடுத்துக் காட்டிய இருபத்தொரு ஏதுக்களில் முதலாவது ஏதுவாக, "காயத்ரீ வல்ல பத் வாத்" - "சிவன் காயத்ரி நாயகனாய் இருப் பதால்" எனக் கூறியதும், மாதவச் சிவஞான சுவாமிகள் என்ற சைவஞான மகாமேதை, **"உயர் காயத்திரிக்கு உரிப்பொருள் ஆதலின்"** எனத் தமிழில் அதனை வழி மொழிந்து கொண்டதும் உண்டு. இவற்றினுக்கு ஏற்புடைத்தாம் வகையிற் சூரியனைத் தனக்கு உருவாகக்கொண்டு அதன் உயிராய் இருக்குஞ் சிவனே அம்மந்திரம் குறிக்குந் தேவதை எனச் சைவங்கொண்டிருக் கின்றது. அது பற்றியே சிவசூரியன் என்ற வழக்கும் சைவத்தில் இடம் பெறலாயிற்று. சைவ சந்தியாவந்தனக் கிரியையில் மந்திர செபங் செய்யும் ஒழுங்கில் ஐந்தாவதாக, **"சிவசூர்யாய நம:"** என்ற செபிக்கப்படுதல் பிரசித்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருக்" வேதத்திலும், "கிருஷ்ண யசுர்" வேதத்திலும், 'சுக்ல யசுர்" வேதத்திலும், "சர்ம" வேதத்திலும், பிருகதாரண்யம் முதலிய உபநிடதங்களிலும் இடம்பெற்று வெகு பிரசித்தி உற்ற தாகிய இம்மந்திரம்,

தத்சவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந : பிரசோதயாத்

என்றுள்ளது. இதில் வரும் "பர்கோ" - (பர்க:) என்ற சொல் லுக்குப் பொருள் கொள்வது பற்றிய வேறுபாடே இது குறிக்குந் தேவதையைப் பற்றி அபிப்பிராயபேதம் நிகழ ஏதுவாயிற்று என்பதை அறிதல் நலம். அத் தொடர்பில் இந்த மந்திரச் சொற் பொருளை முதலில் நோக்க வேண்டும். **"தேவஸ்ய: -** விளங்கு கிற, **"சவிது:"** - சூரியனது மத்தியில் இருக்கிற, **"ய : பர்க"** - எந்தச் சிவன், **"ந:"** - எங்களது, **"திய:"** - புத்தியை, **"பிசோத யாத்"** - ஏவுகின்றாரோ, **'தத்'** - அந்த, **'வரேண்யம்'** - உயர்ந்த வரை, **'தீமஹி'**- தியானிக்கிறோம், என்பது இதன்பொருள். 'நிருக்தம்" என்னும் வேதாங்க நூலின் பாஷ்யத்திலும், "மந்திர தீபிகை" என்ற மற்றொரு நூலிலும் இவ்வாறே இம் மந்திரத் துக்குப் பொருள் விளக்கஞ் செய்யப்படுகின்றது. இருந்தும் **'பர்க:'** என்ற சொல்லுக்கு "ஒளி" என்ற பொருளும் இருத்தலை ஆதாரமாகக் கொண்டு **'சவிது: பர்க:'** எனச் கூட்டிச் **'சூரியனது ஒளியைத் தியானிக்கிறோம்'** என்று சிவபரத்துவக் கொள்கை இல்லாதார் பொருள் கொண்டனர். அது பொருந்துமாறு இல்லை. எங்஗னமெனில், சூரியன் ஒளி கண்ணொளியைத் தூண்டுவதே அன்றி அறிவைத் தூண்டுமாறு இல்லை. சைவ சித்தாந்தத்தின் பிரகாரம் ஆன்ம அறிவைத் தூண்டுவது ஒளி முதலிய சடப் பொருள் அல்ல; ஆன்மாவிடத்து உள்ளிருந்தியலும் சிவமே அறிவைத் தூண்டுவது எனல் முடிவான உண்மை. அதற் கிணங்க, "பர்க:" என்ற சொல்லுக்குச் சிவம் என்ற பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதே உண்மை விளக்கத்திற்கு ஒத்ததாகும். அத்துடன் 'பர்க:' என்ற சொல் காரணப் பெயராய் ஒளியை உணர்த்தும் அதேவேளை காரண இடுகுறிப் பெயராய்ச்சிவனை உணர்த்து தலும் தவறாது. "அடிமரம்" என்ற வடமொழி நிகண்டில் சிவன் பெயர்கள் நிரல்படுத்தப்பட்டபோது "பர்க:" என்ற பெயரும் சேர்க்கப்பட்டிருக்கக் காணலாம். இனி, இத்தொடர்பில் மற்று மொன்று கருதத்தகும். "இருக்" வேதத்தின் மூன்றாம் மண்டலத் தில் இடம்பெறும் இம்மந்திரப் பொருள் "சர்ம" வேதமுடிவில் உள்ள "மைத்திர ஆரணீய " உபநிடதத்திலும் இவ்வாறு விளக் கம் பெற்றிருப்பதன் மூலம் மூவேதங்களின் முதலும் முடிவும் தம்முள் ஒத்துச் சிவபரத்துவத்தை நிலை நிறத்தி உள்ளன என்பது அதுவாகும். இன்னும் இது பற்றிய நுட்ப விரிவு விளக் கங்கள் சிவசிறீ ச. குமாரசுவாமிக் குருக்கள் தொகுத்துள்ள "வைதிக சந்தியாவந்தன விதி" என்னும் நூலில் காணத்தகும்.

மேலும் சிவன் சூரிய மண்டல மத்தியை இடமாகக் கொண்டு பிரகாசிப்பவன் எனல் சைவஞானத்தில் தேக்கெறியும் ஓர் உண்மை என்பது சைவஞானக் களஞ்சியமாகிய கந்த புராணத்தில் ஒருதரம் போல் இருதரம் இது நிலையிட்டு உரைக் கபட்டதால் அறியவரும்.

'விரிந்த பல்கதி ருடையதோர் வெய்யவ னடுவுட்
பொருந்தி வைகிய கண்ணுதற் பரமனே போன்றான்'. எனவும்

'மாறிலா வருக்க னாப்பண் வயங்கிய பரம னேபோல்
ஆறுமா முகத்து வள்ளல் அலங்குளைப் புரவி மான்றேர் ஏறினான்'.

எனவும் வருவன காண்க. சிவபூசை ஆரம்பத்திற் சூரியபூசை விதிக்கப்பட்டிருத்தலும் இதற்கு ஆதாரமாம். காயத்ரி மந்திரம் பற்றிய இத்தனை விரிவும் வற்புறுத்துவது என்னவெனில் வேத மந்திரமாகிய காயத்ரி மந்திரம் சிவபரத்துவம் உணர்த்துஞ் சிவகாயத்ரி மந்திரமே என்பதும், சைவரென்று இருப்போர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானமாக ஆசாரியத்துவம் பெறுவோர், அது சூரிய மந்திரம், நாராயண மந்திரம் என்னும் பிராந்தி இன்றி, அது சிவமந்திரமே எனத் தாராளமாக உணர்ந்து ஓதி உய்யலாம் என்பதுமேயாம். அத்துடன் பழந்தமிழருஞ் சூரிய வழிபாடு செய்தனர் என்னும் போது அவர்கள் வெறுமனே கிரக நோக்கிற் செய்யவில்லை . அதாவது அவர் வழிபாடு இயற்கை வழிபாடன்று, சிவவழிபாடே என்பதுமாம்.

எங்கள் ஆலய பூசைக் கிரியைகளில் ஒவ்வொரு மூர்த்திக்கும் தனித்தனி காயத்ரி மந்திரங்கள் சிவாகமங்களால் வகுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் இம்மந்திரத்தில் உள்ள **'வித்மஹே', 'தீமஹி', 'திய:' 'பிரசோதயாத்'** என்ற நான்கு மந்திரச் செல்வாக்குச் சைவத்தில் எவ்வளவு அழுத்தம் பெற்றிருக்கின்றது என்பதை அறிய உதவும்.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்

இலக்கிய கலாநிதி பண்டிதமணி
**மு. கந்தையா பி.ஏ.**
ஏழாலை, யாழ்ப்பாணம், இலங்கை.

மந்திர சக்தி வாய்ந்த ஞானநிமிர்த்தமான கிரியைகள் பற்றி வட மொழியிலும், தென் மொழியிலும் அனேக நூல்கள் உண்டு. அவற்றை ஆராய்ந்து, சைவக் கிரியை சித்தாந்த விளக்கில் விளக்கம் செய்யப்பட் டிருக்கின்றன. இதன் ஆசிரியர் பண்டிதர் திரு. மு. கந்தையா பி.ஏ. அவர் கள் மும்மொழி வல்லவர்; அவர் பொழுது தவப்பொழுது; அவர் வாழ்க் கை சமய வாழ்க்கை; அவருடைய அறிவுச் செல்வம் 'பயன்மரம் உள் ளூர்ப் பழுத்தாற்று'; பல்வேறு இடங்களில் சித்தாந்த வகுப்பும், புராண வகுப்பும் நடாத்தி வருபவர்; இவ்வாறாயதோர் 'ஊருணி'யைக் காண்டல் அரிது! அரிது!

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

வேதந்தழுவிய வைதீகக் கிரியைகள் போலன்றி, சைவக்கிரியை- யகள் ஆகம நெறியை முக்கியமாக பின்பற்றுபவை. ஆகமாந்தம் எனப் படும் சைவசித்தாந்தம் உலகம் போற்றும் உயர்ந்த தத்துவம். சைவத் தமிழருக்கு பெருமை தரும் இத்தத்துவத்தை சைவரகள் அறிந்திருக் கவேண்டியது அவசியம். பண்டிதர் அவர்களின் இந்நூல் இதற்கு மிகவும் துணைபுரிகின்றது. மிக்க பயனளிக்கின்றது. திருமுறை விளக் கங்களும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன.

சைவசித்தாந்த கலாநிதி
சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம்

பாரதி பதிப்பகம் - 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 021 2223081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org